தமிழ்ச் சாசனங்கள்

ஆராய்ச்சிக் குறிப்புரைகளுடன்.

2258

(சென்னைப் பல்கலைக் கழகத் வித்துவான், கீழ்க்கலைத் தேர்வுகளுக் குரியது.)

உரையாசிரியர்,

வித்துவான் வ. தங்கையா நாடார் அவர்கள்

(Senior Tamil Pandit, St. John's High School, Palayamkottai)

பென்ட்லெண்ட் அச்சகம், பாளையங்கோட்டை.

August 15, 1949.

விலை ரூ. 3—0—0

1670.

சாசனங்களாவன, அரசனது ஆணை போன்ற நிலையான செய்திகளைக் குறிப்பது; அவை பெரும்பாலும் கல்லில் செதுக்கப்படுவதால் 'கல் வெட்டுகள்' என்றும் பெயர் பெறும். கோயில் சுவர்கள், கற்பாறைகள், மலைக்குகைகள், வெற்றித் தூண்கள், மண்டபங்கள், படிமங்கள், கடுகற்கள் முதலிய வற்றில் தமிழ்க் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. செப் பேடுகளெல்லாம் கல்வெட்டுகளின் படிகளே யாதலின், அவைகளும் கல்வெட்டுகள் என்றே பெயர் பெறத் தக்கனவாம். தமிழ்நாட்டில் பிராகிருதம், சமஸ்கிருதம், தமிழ் முதலிய பல மொழிகளில் எழுதப்பெற்ற கல்வெட்டுகளை அங்கங்கே காணலாம். அவைகளில் சில கல்வெட்டுகள் செய்யுள் வடிவத்திலும், சில கல்வெட்டுகள் உரைநடையி லும், வேறு சில கல்வெட்டுகள் அவை இரண்டும் கலந்தும் காணப்படுகின்றன.

இக் கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் பழங்கால முதலே தோன்றியுள்ளன என்பதற்குப் பல சான்றுகள் உள. சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றியதாகக் கருதப் படும் தொல்காப்பியம் என்னும் இயற்றமிழ் இலக்கண நூலில் போர்க்களத்தே வென்று பட்ட வீரர்களுக்குக் கல் லெடுத்தலும், அக்கல்லில் அவர்தம் வீரச் செயல்களைப் பொறித்து நடுதலும், அதற்குக் கோயிலெடுத்து வணங்கு தலுமாகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. அத் தொல்காப் பியத்தின் வழியாகத் தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலை யிலும் இச்செய்திகள் பல வெண்பாக்களால் விரித்துக் கூறப்பட்டுள்ளன.

முற்காலத்தில் போர்வீரர்களின் வெற்றிகளை யன்றி, அவர்தம் கொடைச் சிறப்பும் கல்லில் பொறிக்கப்பட்டன என்பதைப் புறநானூற்றுப் பாடலொன்று குறிப்பாகக் காட்டுகின்றது. அகநானூற்றுச் செய்யுளொன்றிலும்,

'ஆடவர்,
பீடும் பெயரும் எழுதி அஃதொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'

என வரும் அடிகளால், அக்காலத்து நடுகற்களில் போர்வீரர்

களது பெருமைக்குக் காரணமான கல்வி, தறுகண், புகழ் மூதலியனவும் எழுதப்பட்டு வந்தன என்பது விளக்கமாகின்றது.

இவ்வாறு தடுகற்களாகத் தோன்றிய ஆதித் தமிழ்க் கல்வெட்டுகள் பல்லவர் காலத்தி லிருந்து தான் வளர்ச்சியுற்றன. அவர்களும் முதலில் தாங்கள் பேசிவந்த பிராகிருத மொழியில் சாசனங்களை எழுதிவந்தனர்; பின்னர் வடமொழியிலும், கி பி. ஆறும் நூற்றாண்டு முதல் தமிழ் மொழியிலும் அவர்தம் கல்வெட்டுகள் தோன்றலாயின அக் கல்வெட்டுகள் மூன்று கூறுபாடுகளை யுடையன. முதலில் அக்காலத்து அரசனது பெருமை கூறப்பெற்றிருக்கும்; பின்னர் இன்னின்னார் இன்னின்ன அறத்தின்பொருட்டு இன்னின்ன பொருட்களைக் கொடுத்தனர் என்பன போன்ற செய்திகள் காணப்படும். முடிவில் அவ்வறத்தின் பாது காவல்பற்றிக் கூறும் காப்பு நிலை குறிக்கப்பெற்றிருக்கும். அவைகளின் தொடக்கத்திலும் முடிவிலும் எதாவது ஒரு வடமொழிச் சுலோகத்தைப் பெற்றிருப்பது முண்டு. பல்லவர் காலத்திலே தோன்றிய மகாவலி வாணராயர் கரண்டை, இராசகேசரி யில் ஒரு வடமொழிச் சுலோகத்தைக் கொண்டிருப்பது இதற்குச் சான்று பகரும்

பல்லவர் காலத்திற்குப்பின் தஞ்சைச் சோழமன்னர்களும், பிற்காலப் பாண்டிய மன்னர்களும் சாசனங்கள் எழுதிவைக்கும் பழக்கத்தை யுடையவர்களாயிருந்தபடியால் பிற்காலத்தில் சாசனங்கள் பலவகையிலும் வளர்ச்சியுற்றன. தமிழ்நாட்டின் இடைக்கால வரலாறு, அவர்கள் காலத்திய சாசனங்களின் வாயிலாகவே அறியக் கூடியதாயிருக்கிறதென்னின், சாசன வளர்ச்சி அவர்கள் காலத்தில் எவ்வாறிருந்ததென்பது சொல்லாமலே விளங்கும். முதலாம் இராசராசசோழன் காலத்திலிருந்துதான் அரசனது போர்வென்றிகள், ஆட்சிச்சிறப்பு, கொடை முதலியவற்றைக் கூறும் மெய்க்கீர்த்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

'தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீ ரடியால்
எழிலராசர் செய்தி இசைப்பார்'

என்பது, சாசனங்களின் தொடக்கத்தில் செய்யுள் வடிவில் காணப்பெறும் மெய்க்கீர்த்திக் குரிய இலக்கணம். இவ்விலக்

கணம் வெண்பாப்பாட்டியல் என்றும் விசயநந்திமாலையில் கூறபடுகிறது. மெய்க்கீர்த்தியின் இலக்கணத்தைக் கூறும் வேறு நூல்கள் பண்ணிருபாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல் முதலியனவாகும்.

இச் சாசனங்களாலும், சானங்களில் அமைந்த மெய்க் கீர்த்திகளாலும் உண்டான பயன்கள் பலவாகும். நாம் கேட்கும் பாரம்பரியக் கதைகள், படிக்கும் இலக்கியங்கள், காணும் கலை நுட்பங்கள் ஆகிய இவைகளின் மூலம் தோன்றும் வரலாற்றை வரிசைப்படக் கூறுவது சாசனங்களே. சாசனங்கள் நாட்டு வரலாற்றைக் கூறும் நோக்கத்தோடு எழுதப்பட வில்லையாலும், அவைக ளின்றேல் இன்றைய நம் நாட்டு வரலாறு இத்துணை விரிவாக எழுதப்பட் டிருக்காது என்பது வெளிப்படை. இலக்கியங்களும், கலைகளும் உண்மை வரலாற்றுடன் கற்பனைகள் பொதிந்தவை; வரிசைப் பட அமையாதவை; அவற்றுள் உண்மை இது, அவைகளின் வரிசை இது என்பதைச் சாசனங்கள் நமக்குப் புலப்படுத்து கின்றன. சாசன ஆராய்ச்சியால் போந்த பயன்களைக் கூற வந்த உயர்திரு சதாசிவ பண்டாரத்தாரவர்கள் "புராணமும் கல்வெட்டுமும்" என்ற அவரது சொற்பொழிவில் பின்வரு மாறு கூறியுள்ளார்:—

"கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகள் எல்லாம் வெறும் கற்பனைச் செய்திகள் அல்ல; பயனற்ற செய்திகளு மல்ல. அவை அனைத்தும் நம் முன்னோர்களுடைய உண்மை வரலாறுகளை யுணர்த்தும் பழைய வெளியீடுகளே. சேர சோழ பாண்டிய ராகிய முடியுடைத் தமிழ்வேந்தரும், பல்லவரும், குறுநில மன்னரும், பிற தலைவர்களும் புரிந்த அறச் செயல்களும், வீரச்செயல்களும், அன்னோர் செய்துகொண்ட உடன்படிக்கைகளும், அக்கால அரசியல் முறைகளும், போர் நிகழ்ச்சிகளும், பழைய தலைவர்களைப் பற்றிய செய்திகளும், மண்டலம் - வளநாடு - கோட்டம் - நாடு - கூற்றம் என்பவற்றின் வரலாறுகளும், பல ஊர்களின் உண்மைப் பெயர் களும், முற்கால வழக்கங்களும், சமயநிலையும், மற்றும் பல அரிய நிகழ்ச்சிகளும் நம் நாட்டுக் கல்வெட்டுகளாலும் செப் பேடுகளாலும் கன்கு அறியக்கிடக்கின்றன. சுருங்கச் சொல் லுமிடத்து, நம் நாட்டின் பழைய சரித்திரவுள்ளவாறு உணர்ந்து கொள்வதற்குத் தக்க கருவியாயிருப்பன கல் வெட்டுகளும் செப்பேடுகளுமேயாம்"

இத்தகைய பெருமை வாய்ந்த சாசனங்களை நம் மூன்னோர்கள் பலவிதமாகப் பாதுகாத்து வந்தனர். கல்வெட்டு களுக்கு எண்ணெய் பூசுவதும், அவைகளை அவ்வப்போது கவனித்துக் கொள்வதும் பண்டைய கோயில் மேற் பார்வையாளரின் கடமைகளாயிருந்தன. அவர்கள், கல்வெட்டு களுக்குச் செப்புத்தகடுகளில் படி எடுத்து வைத்திருந்தனர். பழுதுற்ற கோயில்களை இடித்துக் கட்டுவதற்கு முன்னர், அவைகளிலுள்ள கல்வெட்டுகளை ஓலைகளில் எடுத்து எழுதி, கோயில் கட்டி முடிந்ததும் ஊர்ச்சபையோர் மேற் பார்வையில் மீண்டும் அவைகளை அந்தந்த இடங்களில் செதுக்கு வித்து வந்தனர். 'திருமண்டப மிழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி' (12) 'ஸ்ரீவிமானம் இழித்துவதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி' (15) என வருவன இதனை வலியுறுத்தும்.

ஆனால் தமிழ்நாட்டில் அந்நிய ராட்சி ஏற்பட்ட காலத்தில், இச்சாசனங்களைப் பாதுகாக்கவேண்டுமென்பதைத் தமிழ் மக்கள் மறந்தனர். அவைகளின் அருமை பெருமைகளும் அவர்களுக்கு விளங்காமல் போயிற்று. இங்கிலீயில் சென்மானிய தேசத்தவரான டாக்டர் உல்சு என்னும் பெரியார் இந்தியாவிற்கு வந்து, இந்திய கோயில்களிலுள்ள சாசனங்களின் பெருமைகளை உணர்ந்தார். அக்காலத்தில் ஆங்கில அரசு பிரதிநிதியாயிருந்த ரிப்பன் பிரபுவிடம் அதைப்பற்றிப் பேசி, அவரது உத்தரவு பெற்று அங்கங்கேயுள்ள கல்வெட்டுகளைத் தொகுப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் ஏற்பாடு செய்தார். துவக்கத்தில் அவர்தாமே உடனிருந்து இவ்வாராய்ச்சியை நடத்தினர். உயர்திரு து அ கோபிநாதராவ், வி. வெங்கையா முதலியவர்களைத் தமது ஆராய்ச்சிக்குத் துணையாகக் கொண்டு, அவர்களையும் அதில் ஈடுபடும்படிச் செய்தார். நாளடைவில் பலர் இத்துறையில் படிந்து பணி செய்வாராயினர். அதன் பயனாக ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டன. தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதிகள் என்ற பெயரோடு இதுவரை பத்துத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் முதல் மூன்று தொகுதிகள் டாக்டர் உல்சு துரையவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்புடனும், குறிப்புரைகளுடனும் கூடியனவாகும்

சென்னைப் பல்கலைக் கழகத்தார் இக் கல்வெட்டுகளில் இருபது கல்வெட்டுகளைத் தேர்ந்தெடுத்து வித்துவான் தேர்

வுக்குப் பாடமாக வைத்துள்ளனர். அவைகள் தோன்றிய காலத்தை — பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம் என மூன்றுகப் பிரிக்கலாம். தீக்காலிவல்லம் கோயில் சாசனம் முதலிய நான்கும் (12-15) பல்லவர் காலத்திலுள்ளன; அவற்றுள் மகாவலி வணராயர் சாசனம் (13) இரண்டாம் நந்திவர்மன் காலத்திலும், தீக்காலிவல்லம் கோயில் சாசனம் (12) மூன்றும் நந்தி வர்மன் காலத்திலும், ஏனைய இரண்டும் பல்லவ ராட்சிக்குட்பட்ட வாணராயராலும் ஏற்பட்டனவாகும். எனவே, அவை நான்கும் கி. பி. 8 ஆம், 9 ஆம் நூற்றாண்டிலுள்ளன என்பது வெளிப்படை. அவற்றுள் பழமையானது மகாவலி வாணராயர் சாசனம். இது கி. பி 779 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. மற்ற சாசனங்களுக்கும் இதற்கும் அமைப்பில் பெரிதும் வேறுபாடு காணப்படுகிறது. இது 'ஓம் நமச்சிவாயம். ஸ்வஸ்தி ஸ்ரீ' என்று தொடங்குகிறது; முடிவும் ஒரு வடமொழிச் சுலோகத்தைக் கொண்டுள்ளது. வாணராயர் குலப்பெருமையும், அவர்கள் 'வடுகவழி பன்னீராயிரம்' என்ற பகுதியை ஆண்ட செய்தியும், அவர்களுக்குத் தலைநகர் 'வாணபுரம்' என்பதும் இதனால் அறியக் கிடக்கின்றன.

தீக்காலிவல்லம் கோயில் சாசனம், வாண மஹாதேவியார் சாசனம் இரண்டும் (12,15) புதுப்பிக்கப்பட்டனவை என்பது, 'திருமண்டப மிழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி', 'ஸ்ரீவிமானம் இழித்துவதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி' என்று அவைகளில் வரும் தொடர்களால் விளங்குகிறது. பல்லவர் இராச்சியம், பல கோட்டங்களாகவும், நாடுகளாகவும், ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. தீக்காலிவல்லம், படுஹூர்க்கோட்டத்து மீயாறுநாட்டிலுள்ள தோர் ஊர். 'வன்னிபெடாகிய இரணவிக்கிரமச் சதுர்வேதிமங்கலம்', 'காவிரிப்பாக்கமாகிய அவனிநாராயணச் சதுர்வேதிமங்கலம்' எனச் சில ஊர்களின் பெயர் மாறுபட்டிருப்பதற்கு அரசியல் மாற்றமே காரணமென்று தெரிகிறது. அரசன் செய்யும் தருமத்தை முதலில் அரசனையிலுள்ள ஒருவர்குறிப்பிட அது இரண்டாவதொருவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு கடைபெற்ற தென்பதும், தானம் கொடுக்கப்பட்ட ஊரின் பெயர் மாற்றப்பட்டதென்பதும் தீக்காலிவல்லம் கோயில் சாசனத்தால் புலப்படுகின்றன. கோயிலுக்கு நில மட்டுமன்றி,

திருநுந்தா விளக்குகளும் நிவந்தமாகக் கொடுக்கப்பட்ட தென்பது மாதவக் கிரமவித்தன் சாசனத்தாலும் (14), வாண மஹாதேவியார் சாசனத்தாலும் தெரிகிறது. மெய்க்கீர்த்தி களின்றியும் சாசனங்கள் எழுதுவதுண்டு என்பதற்குப் பல்லவர் காலத்துச் சாசனங்களும், பாண்டியர் காலத்துச் சாசனங்களில் பராக்கிரம பாண்டிய தேவர் சாசனமும் (19) வாலக்காமயர் சாசனமும் (20) சான்றுகளாகும்.

ஸ்ரீ ராஜராஜன் கிணறு முதலிய பதினேரு சாசனங்களும் (1-11) தஞ்சைச் சோழ மன்னர் காலத்தி லேற்பட்ட சாசனங்களாகும் இவை கி. பி. 10, 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியன. முதலாம் இராசராசன், கங்கை கொண்ட சோழன், இராசாதிராசன், இராசேந்திரதேவன், வீராசேந்திரன், முதற் குலோத்துங்கன், விக்கிரமச் சோழன் ஆகிய இவர்கள் இக்காலத்தி லாண்டனர். இவர்களில் இராசராசன் காலத்துச் சாசனங்கள் இரண்டு; இராசேந்திர தேவன் காலத்துச் சாசனங்கள் இரண்டு; முதற் குலோத்துங்க சோழன் காலத்துச் சாசனகள் மூன்று. இவர்கள் ஒவ்வொருவர் காலத்துச் சாசனங்களிலும், அவரவர்களுடைய வெற்றி, ஆட்சிமுறை முதலியவற்றைக் குறிக்கும் மெய்க்கீர்த்திகள் அமைந்துள்ளன.

இவ்வாறே, பாண்டிய மன்னர்களில் வீர பாண்டியன், பராந்தக பாண்டியன், அரிகேசரி பராக்கிரம பாண்டியன், பராக்கிரம பாண்டியன் என்னும் குலசேக பாண்டியன் என்பவர்களின் சாசனங்களும், அவர்கள் காலத்தில் விசயநகர மன்னர் ஆட்சிக்குட்பட்டுச் சோழ நாட்டை ஆண்டுவந்த வாலக்காமயர் சாசனமும் இறுதி ஐந்து சாசனங்களாக (16-20) அமைந்துள்ளன. இவை கி. பி. 12 முதல் 16 ஆம் நூற்றாண்டிற்குட்பட்ட காலத்தில் ஏற்பட்டனவாகும். இவைகளில் பராக்கிரம பாண்டிய தேவர் சாசனமும், வாலக்காமயர் சாசனமும் மெய்க்கீர்த்தியின்றி யமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

இச் சோழ பாண்டியர் காலத்துச் சாசனங்களால் அறியக்கூடும் உண்மைகள் பல உள்ளன. அவைகளின் தொடக்கம், 'ஸ்வஸ்தி ஸ்ரீ', 'சுபமஸ்து', 'சுபமஸ்து. ஸ்வஸ்தி ஸ்ரீ' என்பன போன்ற மங்கல மொழிகளைக் கொண்டுள்ளது; முடிவு,

சிவன்கோயில் சாசனமாயின் 'பந்மாதேவஸ்வர மனைத்' என்றும், விஷ்ணு கோயில் சாசனமாயின் 'வைஷ்ணவ மனை' என்றும் அமைந்துள்ளது 'சைவ அடியார்கள் காப்பார்களாக' 'வைணவ அடியார்கள் காப்பார்களாக' என்பது அவற்றின் பொருளாகும். இவை சாசனங்களின் 'காப்பு நிலை' எனப்படும். பிற்காலத்துச் சாசனங்களின் இறுதியில் தன்மம் காத்தார் அடையும் பயனும், அழித்தார் அடையும் தண்டனையும் கூறப்பட்டுள்ளன. "இத் தன்மத்துக்கு அகுதம் பண்ணினவன் உண்டாஞல் கங்கைக் கறையிலே கோவதையைக் கொன்ற பாவத்திலே போகக்கடவராகவும்" என்பது வாலக் காமயர் சாசனத்தின் இறுதி வாக்கியம்.

'ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு உயிக ஆவது' (1) 'ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு யிக ஆவது, நான் இருநூற்று நாற்பத்திரண்டிஞல்', 'சகர்யாண்டு எண்ணூற்றெழுபதாவது', முன்னுள் இரண்டாவதின் எதிர் இருபத்து மூன்றுவது முதலுக்கு', 'இருபத்து எட்டாவதின் எதிராவது', 'சகாப்தம் தசாக இதன் மேல் செல்லா நின்ற பிலவ ஸம்வத்ஸரத்து கும்பஞாயற்று பூர்வ பக்ஷத்து பூறுணையும் ஆதித்த வாரமும் பெற்று மகத்து நான்' என வருவன சாசனங்களில், அவை தோன்றிய காலம் குறிப்பதில் பல முறைகள் கையாளப்பட்டு வந்திருக்கின்றன வென்பதைப் புலபடுத்துகின்றன

சாசனங்களில் காணும் மெய்க்கீர்த்திகள் அந்தந்தக் காலத்து அரசர்களது வெற்றிகள், ஆடசி முறை முதலியவற்றைத் தெரிவிக்கின்றன. முதலாம் இராசராசன், இராசேந்திரன் முதலியோர் புதிதாகச் செயித்த நாடுகளை அறிய, அவர்கள் மெய்க்கீர்த்திகள் பெரிதும் உதவி புரிகின்றன. காம்பிலி, கோப்பம், கூடல் சங்கமம், கலிங்கம் முதலிய இடங்களில் நடந்த போரைப்பற்றிய விரிவான செய்திகள் அந்தந்த அரசர்களின் மெய்க்கீர்த்திகளில் கூறப்பட்டுள்ளன. ஆனல் சோழ மன்னர் மெய்க்கீர்த்திக்கும், பாண்டிய மன்னர் மெய்க்கீர்த்திக்கும் ஒரு பெரிய வேறுபாடு காணப்படுகிறது. சோழ மன்னர் மெய்க்கீர்த்திகளில் அந்தந்த அரசர்களின் வெற்றிகளே கூறப்படுகின்றன; பாண்டிய மன்னரோ, அவர்கள் வெற்றிகளோடு அவர்களுடைய முன்னோர்களின் அரிய செயல்களையும் சேர்த்துக் கூறியுள்ளனர்.

இராஜ மன்னர்கள் தங்கள் இயற் பெயர்களுக்கு முன் 'ராஜகேசரி', 'பரகேசரி' என்ற பட்டப் பெயர்களையும், பாண்டிய மன்னர்கள் 'மாறவர்மன்', 'சடைய வர்மன்' என்ற பட்டப் பெயர்களையும் வைத்து வழங்கி வந்தமையாகிய தொல்லை மரபு பல்லவ சாசனங்களில் காணப்படுகிறது. தந்தை இராசகேசரியாகவும் மகன் பரகேசரி என்றபட்டப்பெயரைக்கொண்டிருந்தான். முதலாம் இராசராசன் இராசகேசரி பட்டமும் பெற்றிருந்தான்; அவன் மகன் இராசேந்திர சோழன், 'பரகேசரி' என்று குறிப்பிடப்பட்டுள்ளான். பராக்கிரம பாண்டிய நெடுஞ் சடையனை, குலசேகரப்பாண்டியன் 'ஜடில வர்ம்மன்' (சடைய வர்மன்) என்று பெயர் பெற்றுள்ளான். இவை கொண்டு இரண்டு குடும்பின் பட்ட மெய்தியவன் இன்னான் என்று வரையறுத்து எனிதாகின்றது. இராசாதிராசன், வீரராசேந்திரன் இவர்க ளிருவரும் இராசகேசரி பட்டம் பெற்றமையால் எனவே இராதிராசனுக்குப்பின் 'பரகேசரி' பட்டம் பெற்றிருந்தவன் ஆண்டிருக்க வேண்டும் அவனே பரகேசரி இராசேந்திரதேவ னுவான் என்றறிக.

பஞ்சமடைந் காலத்தில் ஆறு மாதங்களளவும் தண்ணீர்ப் பந்தல்கள் வைத்து நடத்தப்பட்டு வந்தன வென்பது ஸ்ரீராஜராஜ தேவ சாசனத்தாலும், கோயில்களில் திருப்பதியங்கள் பாடப்பட்டன வென்பதும், அப்பொழுது உடுக்கை, கொட்டிமத்தளம் போன்ற இசைக் கருவிகள் வாசிக்கப் பட்டன வென்பதும் திருப்பதியம் சாசனத்தாலும் விளக்க மாகின்றன. சோழமன்னர்கள், கோயில்களுக்கே யன்றி கோயில்களில் ஆகாரிய போகத்தி லுள்ளவர்களுக்கும், அவர் குடும்பங்களுக்கும் நிவந்தங்கள் கொடுத்து ஆதரித்து வந்திருக்கின்றனர் என்பதை ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவன் சாசனம் புலப்படுத்துகின்றது இராசாதிராசன் காலத்து மணிமங்கலம் ஸபையோர் சாசனம், கோயில், பண்டாரத்திலிருந்து கூடன் வரம்புப் பழக்கம் அக்காலத்தில் இருந்த தென்பதைத் தெரிவிக்கின்றது கோயில்களுக்கு நிவந்தமாக நிலங்களே யன்றி வேறு தானியப் பொருள்களையும் கொடுத்து வந்தனர் என்பதை அதனால் பெருமான் கோயில் சாசனத்தால் அறிகின்றோம். தானம் கொடுத்ததற்கு மட்டுமன்றி, நிலம் விற்கப்பட்டதற்கும் சாசனங்கள் ஏற்பட்டன வென்பதற்குச் சிறு பழூர் ஸ்ரீ மகாதேவப் பத்திரம் என்னும் சாசனம் சான்றாயமைந்

துள்ளது. கோயில் விலங்கினைச் சாகுபடி செய்வதற்குக் கொடுத்த செய்தியை வில்லவராயன் சாசனம் தெரிவிக் கிறது.

சோழ இராச்சியம் பல மண்டலங்களாகவும், மண்டலம் பல வளநாடுகளாகவும், வளநாடு பல நாடுகளாகவும், நாடு பல கூற்றங்களாகவும், கூற்றம் பல ஊர்களாகவும் பிரிக்கப் பட்டிருந்தது சோழ மண்டலம், ஜயங்கொண்ட சோழ மண்டலம், அதிராசராச மண்டலம் முதலிய மண்டலங் களும், நித்த விநோத வளநாடு, குலோத்துங்க சோழ வள நாடு, இராசேந்திர சோழ வளநாடு, கூத்தநிய சிகாமணி வளநாடு முதலிய வளநாடுகளும், தென்கரை நாடு, வெங் கால நாடு, மாகணூர் நாடு முதலிய நாடுகளும், ஆவூர்க் கூற் றம், குன்றக் கூற்றம் முதலிய கூற்றங்களும், ஆவூர் முதலிய ஊர்களும் சோழர் சாசனங்களில் காணப்படும் மண்டலங் களும், அவைகளின் பிரிவுகளுமாகும். நாடுகளில் சில 'தனி யூர்' என்றும், 'சதுர்வேதி மங்கலம்' என்றும் அழைக்கப் பட்டன. ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலம், செயங் கொண்ட சோழ மண்டலத்துக் காவியூர்க் கோட்டத்திலுள் ளது. மண்டலங்களில் செயங்கொண்ட சோழ மண்டல (தொண்டை மண்டலம்) மட்டும் மூன்றிருந்தபடியே பல கோட்டங்களாகவும், நாடுகளாகவும், ஊர்களாகவும் பிரிக் கப்பட்டிருந்தது.

பாண்டிய இராச்சியமும் இவ்வாறு பல நாடுகளாகவும் ஊர்களாவும் பிரிக்கப்பட்டிருந்தமை அவர்கள் சாசனங் களால் அறியப்படுகிறது. வளநாடுகளும், சதுர்வேதி மங்க லங்களும் பிற்காலத்தில் ஏற்பட்டனவாய் அந்தந்தக் காலத்து அரசர்களின் பட்டப்பெயர்களை யுடையனவாய் அமைந்திருத் தல் குறிப்பிடத் தக்கது. இராசாதிராசன் காலத்தில், செயங் கொண்ட சோழ மண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டிலிருந்த மணிமங்கலமான இராஜ சூளா மணிச் சதுர்வேதி மக்கலம் என்னும் ஊர், முதற் குலோத் துங்க சோழன் காலத்தில், குலோத்துங்க சோழ வளநாட்டுக் குன்றத்தூர் நாட்டிலுள்ள மணிமங்கலமான பாண்டியன் இருமடி வென்கொண்ட சோழ சதுர்ப்பேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டிருத்தல் காண்க.

அக்கால அரசர்கள், அவர்கள் ஆட்சியின் காலத்திலேயே அவர்களுடைய மக்களுக்கும் இளவரசு பட்டம் கொடுத்து அரசராக்கியதாகத் தெரிகிறது. முதலாம் இராசேந்திரன் கி. பி. 1012 முதல் 1042 வரை சோழநாட்டை ஆண்டான். அவன் தன் மகன் இராசாதிராசனை கி. பி 1018 முதல் இளவரசுக்கினன் இராசாதிராசன், இராசேந்திரனுக்குப் பின் கி. பி 1042 முதல் 1052 வரை ஆண்டானையினும் சாசனங்களில் அவன் ஆட்சி கி. பி 1018 முதல் எண்ணப்பட்டு வந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும் அன்றியும் சோழ மன்னர்கள் தங்கள் நாடுகளின் பல பிரிவுகளையும் ஆளும்படி அவர்களுக்கு நெருங்கிய இனத்தவரையும், மக்களையும், பெயரர்களையும் நியமித்த செய்தி முதலாம் இராசேந்திரன், வீர ராசேந்திரன் முதலியோர் சாசனங்களில் காணப்படுகிறது

சோழ பாண்டியர் காலத்து அதிகாரிகளில் 'உடன் கூட்டத்து அதிகாரிகள்' குறிப்பிடத் தக்கவராவர். வரியிலார், புரவுவரி, பிரவுவரித் திணைக்களநாயகம், திருவாய்க் கேள்வி, திருமந்திரவோலை, திருமந்திரவோலைநாயகம் முதலிய அதிகாரிகளும் அக்காலத்தில் இருந்ததாகச் சாசனங்களில் காண்கின்றோம். இவர்களில் வரியிலார், வரிகளாக வரும் தொகையைக் கணக்கில் எழுதிக் கொள்வர் அரசிறை நீக்கிய ஊர்களிலிருந்து வருவதற்குரிய பிற வரிகளைக் கணக்கு வைப்பவர் 'புரவுவரி' என்றும், அவர்களுக்குத் தலைவராயிருப்பார் 'புரவுவரித் திணைக்கள நாயகம்' என்றும் அழைக்கப்பட்டனர். அரசன் திருவாய்மொழிந் தருளியதைக் கேட்டு திருமந்திர வோலை முதலியவர்களுக்கு அறிவிப்பவர் 'திருவாய்க் கேள்வி' என்றும், அரசன் ஆணை முதலியவற்றை எழுதியவர் 'திருமந்திர வோலை' என்றும், அவர்களுக்குத் தலைவராயிருப்போர் 'திருமந்திர வோலை நாயகம்' என்றும் அழைக்கப்பட்டனர். அரசியல் அதிகாரிகளுக்கு அரசன் பல பட்டப்பெயர்களை வழங்கி வந்ததோடு, தன் பட்டப்பெயர்களையும் அவர்கள் இட்டுக் கொள்வதற்கு உரிமையளித் திருந்தனன். மூவேந்த வேளான், தொண்டைமான், வாணகோவரையன், சேதிராயர், வாணாயர், விழுப்பரையன் என்பன அவற்றுள் சில பட்டப்பெயர்களாகும்.

அக்கால மன்னர்களுக்கு நிலவரியே யன்றி, பலவகைத் தொழில் வரிகளும் சுங்கவரி முதலியனவும் வருவாயாக வந்த தெனத் தெரிகிறது. குடிகள் செலுத்தி வந்த நிலவரி 'காணிக் கடன்' எனப்பட்டது அது ஆறிலொன்று என்பது, 'ஒரிலொன்று அவனியுட் கூறுகொள் பொருள்களும்' என 'இராசாதிராசன் மெய்க்கீர்த்தியில் வரும் அடியால் விளங்குகிறது. பகைவர் காட்டைச் செயித்துக் கொள்ளாக்கொண்ட. பொருள்களும், பலவகைத் தண்டப் பொருள்களும் அக்கால அரசர்களுக்குப் பிறவகையால் வந்த வருவாய்கள் என்னலாம். சிற்றயம், ஞலவை, உகவை முதலியன இறையிலி நிலங்களிலுள்ளவர்களிடம் வாகைப் பெற்ற வரிகளாகும். மன்றுபாடு, தண்டம், தூம்றம் முதலியன அக்காலத்தில் தண்மாசனததார் குற்றவாளிகளுக்கு விதித்த அபராதங்களாகும். கோயில் சம்பந்தமான சில குற்றங்களுக்குத் தண்டனையாகக் குற்றவாளிகளைக் கோயிலில் திருநுந்தா விளக்குப் போடுவதற்து ஏற்பாடு செய்தது மூண்டு

அக்காலத்தில் நிலங்கள் அளக்கப்பட்டும், அதனதன் தன்மைக் கேற்றவாறு பிரிக்கப்பட்டும் குடிகளிடம் நிலவரி வாங்கப்பட்ட தென்று அறிகின்றோம் நிலங்கள், அவைகளின் விளைச்சலுக் கேற்றவாறு நஞ்செய், புஞ்செய், காடு (தோட்டம்) என மூனருகப் பிரிக்கப்பட்டிருந்தன. கார், பசானம் என்பன நஞ்செய் நிலத்தில் விளையும் இரு போகு நெல்லைக் குறிக்கும். தழி, மா, வேலி என்பன அக்காலத்தில் நிலங்களை அளக்கும் நீட்டலளவைப் பெயர்கள். 'நிலம் ஒன் பதுமா மூந்திரிகையின் மூன்றுமா முக்காணி' (18) என வரும் தொடர் அக்காலத்தில் நிலங்கள் எவ்வளவு நுட்பமாக அளக் கப்பட்டிருந்தன வென்பதைக் காட்டும். வரி நீக்கப்பட்ட தான இறையிலி நிலங்கள் புதிய பெயர்களைக் கொண்டிருந் தன சைவ வைணவக் கோயில்களுக்குத் தானமாகக் கொடுக் கப்பட்ட இறையிலி நிலங்கள் 'தேவதானம்' என்றும், 'திரு விடையாட்டம்' என்றும், சைன பௌத்தக் கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் 'பள்ளிச் சந்தம்' என்றும், மடங் களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் 'மடப்புறம்' எனறும் அழைக்கப்பட்டன.

சோழர் காலத்தில் வழங்கியதாக வுள்ள நாணயமொன்று 'நற்காசு' என்று பெயர் பெற்றுள்ளது எனவே, அது பொன்

ஞல் செய்யப்பட்ட நாணய மென்பது வெளிப்படை. 'காண விலையிற் புடலை' (11) என வரும் தொடரில் 'காணம்' என்னும் பெயரும் அக்காலத்தில் வழங்கியதோரு பொற்காசையே குறிக்குமென்பர் நான்கு குன்றி எடை கொண்டது ஒரு காணம் (பொன்) என்றும், பத்துக் காணம் கொண்டது ஒரு காசு என்றும் இதற்கு வாய்பாடு கூறுவர். இனி, காய்ச்சி உருக்கிணைலும் அதன் மாற்று குறைபடாது என்று அரசியல் அதிகாரிகளால் ஆராய்ந்து உறுதி செய்யப்பட்ட தற்கு அடை யாளமாகத் துளையிட்டு வழங்கிய ஓரளவு எடையுள்ள பொன் 'துளைப்பொன்' என்று பெயர் பெற்றுள்ளது காண்க

நில அளவைகளைப் போல, பொருட்களை அளப்பதற்கு உபயோகித்து வந்த நிறுத்தலளவைகளும், முகத்தலளவைக ளும் இச்சாசனங்களில் காணப்படுகின்றன. மணி, பொன் முதலியவற்றை நிறுப்பதற்குத் துன்றி, மஞ்சாடி, கழஞ்சு ஆகிய நிறைகற்கள் உபயோகத்தி லிருந்தன. அவைகள் ஒழிந்த பொருட்கள் கஃசு, பலம் என்னும் எடைக்கற்களால் நிறுக் கப்பட்டன நெல், அரிசி, நெய், பால், உப்பு முதலியன அளப்பதற் கிருந்த பல அளவைகளில் செவிடு, ஆழாக்கு, உழ க்கு உரி, நாழி, தூணி(மரக்கால்), பதக்கு, தூணி, கலம் என்பன சிலவாகும். 'ஐ' என்பது நெல்லையும், 'ங' என்பது குறுணி யையும், 'சு' என்பது கலத்தையும், 'ஊ' என்பது இரு தூணியையும் குறிக்கும் எழுத்துக்களாகச் சாசனங்களில் வழங்கியுள்ளன. அருண்மொழித் தேவன் மரக்கால், இராச் ராசன் மரக்கால், ஆடவல்லான் மரக்கால், அருமொழி நங்கை மரக்கால் என்பன சாசனங்களில் கண்ட சில மரக்கால்களின் பெயர்களாகும்

சோழ மன்னர் காலத்தில் ஊர் தோறும் கிராமச் சபை கள் இருந்தன; இச்சபையினர், ஊர் பொதுமக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டனர் கிராமங்கள் சிறியதாயிருப்பின், இர ண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்து, அவைகளுக்குப் பொது வான ஒரு சபையை ஏற்படுத்தி ஆட்சி புரிந்து வந்தன ரென்று அறிகின்றோம் இச்சிறு கிராமங்களின் தொகுதியே பிற்காலத்தில் 'சதுர்வேதி மங்கலம்' என்ற பெயர் பெற்றது போலும். இச்சபையில் சம்வத்சரவாரியம், தோட்ட வாரி யம், ஏரி வாரியம் என்பன போன்ற சில உட் கழகங்களும் இருந்தன. அவை ஒவ்வொன்றும் தனித்தனி வேலைகளைச்

செய்து வந்தன. நியாயம் வழங்குவது, அற நிலையங்களைக் கண்காணிப்பது, நீர்நிலைகளைப் பாதுகாத்துப் பயன்படச் செய்வது, நிலபுலங்களைப் பரிபாலிப்பது, அரசனுக்குக் குடிகள் செலுத்த வேண்டிய நில வரியையும், பிற வரிகளையும் வாங்கி அரசாங்கப் பொருள் நிலையத்திற்கு அனுப்புவது போன்ற எல்லா வேலைகளையும் கிராமச் சபையினரே செய்து வந்தனர். கோயில் ஆட்சியும் இவர்கள் வசமே இருந்து வந்தது. சுருங்கக் கூறின், இவர்களே கிராம ஆட்சியைச் செய்து வந்தன ரென்னலாம். இவர்கள் கூடித் தங்கள் கடனமகளை நிறைவேற்றுவதற்கு ஊர்தோறும் பொது மன்றங்களிருந்தன; சில சமயங்களில் கோயில் மண்டபங்களும், பள்ளிக் கூடங்களும் சபை கூடுவதற்குப் பயன்பட்டன. சபையில் நிறைவேற்றும் தீர்மானங்களையும், பிறவற்றையும் எழுதி வைப்பவன் 'ஊரீகி கயணத்தான்' அல்லது 'மத்தியஸ்தன்' என்று அழைக்கப்பட்டான்.

அக்காலக் கோயில்கள் கருப்ப கிருகம், அர்த்த மண்டபம், இடை நாழிகை, மகா மண்டபம் முதலியவற்றையும், உயர்ந்த கோபுரங்களையும், சுற்றிலும் சிறு தேவதைகளுக்குக் கோயில்கள் அமைக்கப்பெற்ற திருச்சுற்றுமாளிகையையும், சுற்று மதில்களையு முடையனவாய்த் திகழ்ந்தன. திருவுண்ணாழிகையுள்ளார், ஸ்ரீ பலி கொட்டுவார், திருப்பள்ளித் தாமம் பறிப்பார், திருப்பதியம் பாடுவார் முதலிய திருப்பணியாளர்கள் கோயில்களில் இருந்து திருப்பணி செய்து வந்தனர்.

அக்கால அரசர்களுக்குக் காலாட் படை, குதிரைப்படை, யானைப்படை ஆகியவை இருந்தன; ஆனல் அவர்களுக்குத் தேர்ப்படை இருந்ததாகத் தெரிய வில்லை. காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தது, ஈழம் கொண்டது, கடாரம் கொண்டது போன்ற செய்திகளால் சோழ மன்னர்களுக்குப் பலம் பொருந்திய கப்பல் படைகளிருந்தன என்று தெரிகிறது.

இவ்வாறு இடைக்காலத் தமிழ்மக்களின் பழக்க வழக்கங்களையும், நாகரீக நிலையையும் அறியக்கூடும் இவ் விருபது சாசனங்களையும் சென்னைப் பல்கலைக் கழகத்தார் பி. ஏ.

தமிழ்ப்பாடத் தொகுப்பாக ஆங்கில முகவுரையுடனும், சிறு குறிப்புரையுடனும் 1920 ஆம் ஆண்டு வெளியிட்டனர். அத் தொகுப்பு இப்பொழுது மாணவர்களுக்குக் கிடைப்பது அரிதாகி விட்டது. அவைகளின் படிகளாக மாணவர்கள எழுதி வைத்துள்ள பாடங்களும் பாட பேதமிக்கு, சாசனங் களிலமைந்த பழம்பெருஞ் சொற்களையும் சொற்றொடர்களை யும் அறியக்கூடாத நிலையிலுள்ளன. அக் குறைகளை நீக்கி, சாசன ஆராய்ச்சியின் உண்மை நோக்கத்தை அறிவதற்கு இவ் வெளியீடு பேருதவி புரிகின்றது.

பல்கலைக் கழகத்தார் வெளியீட்டில் கண்டபடி ஒவ் வொரு சாசனத்திற்கு மூரிய ஆங்கில முகவுரையைத் தமிழில் மொழிபெயர்த்தும், அவைகளில் போந்த கால பேதத்தைத் தக்க சான்றுகள் காட்டி விளக்கியும், சாசனங்களின் துவக் கத்தில் வரும் மெய்க்கீர்த்திகளைச் செய்யுள் வடிவில் பிரித்து எழுதியும், உரைநடைப் பகுதியைச் சந்தி பிரித்துக் காட்டியும் இந்நூல் உரையாசிரியர், உயர்திரு: வித்துவான் வ. தங்கையா நாடார் அவர்கள் சாசனங்களின் மூல பாடத்தை அமைத் துள்ளனர். வரிதோறும் காணப்படும் அரும் சொற்கள், சொற்றொடர்கள் முதலியவற்றை அந்தந்தப் பக்கங்களில் ஆராய்ச்சிக் குறிப்புகளுடனும், வரலாற்றுக் குறிப்புகளுட னும் வெளியிட்டுள்ளனர். மாணவர்களுக்கு உதவியாக, இரு பது ஆண்டுகளுக்கு மேலாகவுள்ள வித்துவான் தேர்வுவினாக் களைப் பரிசோதித்து அரும்பெயர் அகர வரிசை, சாசனங்களின் எண், பெயர் இட முதலியவற்றின் வரிசை ஆகியவற்றை நூலின் இறுதியில் சேர்த்துள்ளனர். தேர்வில் வெற்றி பெற விரும் பும் மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் உதவுவ தன்றி, அன் னர் மேலும் இத்துறையில படிந்து ஆராய்ச்சி செய்வதற் கும் அவர்களைத் தூண்டு மென்பதற் கையமின்று.

இங்ஙனம்,
பண்டித S. வேதமாணிக்க நாடார்,
தமிழ்த் தலைமை யாசிரியர்.

பாளையங்கோட்டை,
15—8—1949.

பொருளடக்கம்.

	முன்னுரை	பக்கம் கு—யசு
1.	ஸ்ரீ ராஜராஜ கிணறு	1
2.	திருப்பதியம்	9
3.	ஸ்ரீராஜேந்திரசோழ தேவர் சாசனம்	13
4.	மணிமங்கலம் சபையோர் சாசனம்	25
5.	அமண்பாக்கம் சாசனம்	38
6.	கணவதிரல்லூர் சாசனம்	48
7.	பாக்கூர் சாசனம்	52
8.	சிறுபழுவூர் சபையோர் நிலவிக்கிய பத்திரம்	65
9.	வில்லவராயன் சாசனம்	77
10.	மணிமங்கலம் சபையோர் சாசனம்	88
11.	அருளாளப்பெருமாள் கோயில் சாசனம்	94
12.	திக்காலிவல்லம் கோயில் சாசனம்	103
13.	மகாவலிவாணராயர் சாசனம்	108
14.	மாதவக் கிரமவித்தன் சாசனம்	112
15.	வான மஹாதேவியார் சாசனம்	115
16.	அதவோடு தோட்டம் சாசனம்	118
17.	கன்னி பகவதியார் சாசனம்	124
18.	அரிகேசரி தேவர் சாசனம்	132
19.	பராக்கிரம பாண்டிய தேவர் சாசனம்	146
20.	வாலக்காயிர் சாசனம்	149
	அரும்பெயர் அகர வரிசை	i—vi
	சாசனங்களின் எண், பெயர், இடம் முதலியன பற்றிய வரிசை	1—4

தமிழ்ச் சாசனங்கள்.

(சென்னை, பல்கலைக் கழக கீழ்க்கலை, வித்துவான் தேர்வுகளுக்குரியது).

---

1. ஸ்ரீ ராஜ ராஜ கிணறு. *

முகவுரை

செங்கல்பட்டு தில்லாவிலுள்ள மாமண்டூரை யடுத்த உக்கல் என்னுங் கிராமத்தில் இப்பொழுது அழிந்த நிலையிலிருக்கும் விஷ்ணுகோயிலின் மேலைச்சுவரில் இச்சாசனம் காணப்படுகிறது. இராசகேசரி வர்மன் என்னும் இராசராச தேவனுடைய ஆட்சியின் இருபத்தான்பதாவது ஆண்டில் அவன் பெயரால் அவனது வேலைக்காரனை கண்ணன் ஆருான் என்பவன் உக்கலுக்கு அருகில் அமைத்த கிணற்றையும் தொட்டியையும் பற்றியது இது.

இச் சாசனத்தின் முற்பகுதியில் இராசராசன் போர்ச் செயல்களோத் தெளிவாகக் கூறும் அவனது மெய்க்கீர்த்தி †

---

* ஸ்ரீராஜராஜன்: இப்பெயர் இராசகேசரி முதலாம் இராசராசனைக் குறிக்கும். இவன் சுந்தரசோழன் எனனும் இரண்டாம் பராந்தகனுக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்தவன்; கி. பி. 985 முதல் 1014 வரை சோழநாட்டை ஆண்டான். இவன் பெயரால் அமைக்கப்பட்ட கிணறும், அக்கிணறுபற்றிய சாசனமும் 'ஸ்ரீ ராஜ ராஜ கிணறு' என்று அழைக்கப்பட்டன. இச்சாசனம் தென்னிந்திய சாசனத்தொகுதிகளில் மூன்றாவது தொகுதியைச் சேர்ந்தது.

† மெய்க்கீர்த்தி: சீர் நான்காய் இரண்டடித் தொடையால் அரசன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியும், முடிவில் அவன் வரலாறு சொல்லியும், அவன் மனைவியுடன் வாழ்க எனச் சொல்லியும், அவன் இயற்பெயர் மூன்னர் ஆண்டு சிறக்க என்று கூறியும் முடிப்பது. இதன் இலக்கணம் பன்னிருபாட்டியல், வச்சணந்தி மாலை முதலிய நூல்களில் காணப்படுகிறது. சோழ மன்னர் தங்கள் மெய்க்கீர்த்திகளில் தத்தம் வெற்றிகளையே முன்னராகக் கூறுவர். பாண்டிய மன்னரோ, தங்கள் வெற்றிகளுடன் தங்கள் முன்னோர்களின் அருஞ் செயல்களையும் உடன் சேர்த்துக் கூறுவர்.

அமைத்துள்ளது; பிற்பகுதியில் கண்ணன் ஆருரான் அமைத்த கிணற்றுக்கு அருகிலுள்ள தண்ணீர்ப் பந்தலிலிருந்து தண்ணீர் வார்த்தல் முதலிய பணிகளைச் செய்பவர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்பட்டு வந்த நெல் முதலிய விபரம் கூறப்படுகிறது.

இச் சாசனம் எற்பட்ட காலம் கி. பி. 1014ஆம் ஆண்டு என்னலாம்.

இராசராசன்; மெய்க்கீர்த்தி

ஸ்வஸ்தி ஸ்ரீ —
திருமகள் போலப்[1] பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்[2]
காந்தளூர்ச் சாலைக்[3] கலமறுத் தருளி

இராசராசன், இராசேந்திர சோழன் என்பவர்கள் மெய்க்கீர்த்திகளில் அரசனுடன் அவன் தேவியும் வீற்றிருந்தாள் என்ற செய்தி காணப்படவில்லை.

ஸ்வஸ்தி ஸ்ரீ: இது சாசனங்களின் தொடக்கத்தில் மங்கலமாக வரும் வடமொழித்தொடர். 'ஸ்வஸ்தி' என்றும் சில சாசனங்களில் வரப் பெறும். ஸ்வஸ்தி — சுவஸ்தி.

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்: இது இராசராசன் கல்வெட்டுகளின் தொடக்கமாக வரும் தொடர். இவ்வாறு இராசேந்திர சோழன் கல்வெட்டுகள் 'திருமன்னி வளர இருநில மடந்தையும்' என்று தொடங்கும். இம்முறையை முதல் முதல் அமைத்துக் காட்டியவன் இராசராசனே யாகும்.

திருமகள் - இலக்குமி: செல்வத்திற்குத் தலைவி. இத்தொடர் இங்கு இராசராசன் செல்வப் பெருக்கைக் குறித்தது. பெருநிலச் செல்வி—பூதேவி. பூமியைத் தெய்வமாகக் கூறுதல் மரபாதலின், இத்தொடர் இராசராசன் நாட்டுப் பரப்பைக் குறித்தது. திருமகள், நிலமகள் இருவரும் திருமாலின் தேவிகள்; திருமகளையும் நிலமகளையும் தனக்கேயுரிமை பூண்டவன் என்பதால், இராசராசன் திருமாலின் அம்சம் என்று குறித்தவாறு காண்க.

மனக் கோள் — யாவரும் அறியும்படியாக.

காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி: இத்தொடருக்குப் பலரும் பலவாறு பொருள் கூறுவர். காந்தளூர் என்பது, திருவனந்தபுரத்தின்

வேங்கை நாடுங் கங்க பாடியும்
கடிகை பாடியும் நுளம்ப பாடியும்[4]
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்

ஒரு பகுதியான 'வலியசாலை' என்றும், அச்சாலையில் உண்ணவேண்டியவர்கள் இத்தனை என்று உண்கலம் வரையறுத்த செய்திலை, 'கலமறுத்தல்' என்றும் கூறுவர் ஒரு சாரார். சாலை = அறச்சாலை; கலம் = உண்கலம்; அறுத்தல் - வரையறுத்தல். இனி மற்றொரு சாரார், காந்தளூர்ச்சாலை திருவனந்தபுரத்தை யடுத்த மேலைக் கடற்கரையிலுள்ள ஒரு துறைமுகமென்றும், அதிலுள்ள சோன் மாக்கலங்களை அழித்த செய்தியே 'கல மறுத்தல்' என்றும் கூறுவர். கலம் = மரக்கலம்; அறுத்தல் - அழித்தல்.

இராசராசன் காந்தளூர்ச்சாலையில் தன்னை எதிர்த்த சேர மன்னனையும் அவனுக்குத் துணையாக வந்த 'அமரபுஜங்கன்' என்னும் பாண்டியனையும் வென்றான் என்று வரலாறு கூறுவதால், பின்னர் கூறிய பொருளே பொருத்தமாகத் தெரிகிறது.

வேங்கை நாடு: இது கீழைச் சாளுக்கிய ராட்சியின்கீ ழிருந்த கோதாவரி, கிருஷ்ணை சில்லாக்கள் அடங்கிய பிரதேசம். இதனை 'வேங்கி நாடு' என்றும் கூறுவர். இராசராசன் இதற்கு 'வேங்கை மண்டலம்' என்று பெயரிட்டான். கங்க பாடி: இது மைசூர் இராச்சியத்தின் தென்கீழ்பாலுள்ள பகுதியாகும். காவிரிக் கரையிலுள்ள தலைக்காடு இதற்குத் தலைநகர். கங்க அரசர்கள் இதனை ஆண்டு வந்தனர். இராசராசன் இதற்கு 'முடிகொண்ட சோழ மண்டலம்' என்று பெயரிட்டான்.

தடிகைப் பாடி: இதனைத் 'தடிகை வழி' என்றும் கூறுவர். இது மைசூர் சில்லாவின் பகுதிகளைக் கொண்டது. நுளம்ப பாடி: இது கங்கபாடியை யடுத்ததும், மைசூருக்கு வட திசையின்கண்ணுள்ளதும், நுளம்பர் என்ற பல்லவர் கிளையினரால் ஆளப்பட்டு வந்ததுமான நாடு. இராசராசன் இதற்கு 'நிகரிலி சோழ மண்டலம்' என்று பெயரிட்டான்.

குடமலை நாடு: இதனைக் 'குடகு நாடு' என்பர். இக்காட்டில் அரண்மிகுந்த இடம் உதகையாகும். இராசராசன் உதகையை அழித்து குடகு நாட்டை வென்றான். கொல்லம் = கொல்ல நாடு: இது மேல்கரை நாடுகளைச் சேர்ந்தது. கலிங்கநாடு: இதனைக் குலூத நாடு என்றும், இது மகேந்திர மலையைத் தன்னகத்தே கொண்டது என்றுங் கூறுவர்.

மூரட்டொழில் சிங்கள ரீழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
மூந்ரீர்ப்[5] பழந்தீவு பன்னீரா யிரமும்
தின்டிறல் வென்றித் தண்டாற்[6] கொண்டதன்
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதகை[7] விளங்கும் பாண்டே[8] செழியரை

மூரட்டொழில் - மூரண் + தொழில்; வலிய போர்த் தொழிலை யுடைய (warlike) என்பது. ஈழ மண்டலம் - இலங்கை நாடு; இது சிங்களவர் நிறைந்த நாடாதலால் 'சிங்கள ரீழ மண்டலம்' என்று சிறப்பிக்கப்பட்டது. இதனை அக்காலத்தில் ஆண்டவன் 'மகிந்தன்' என்னு மரசன். இராசராசன் அவனை வென்று இந்நாட்டிற்கு 'மும் முடிச் சோழ மண்டலம்' என்று பெயரிட்டான்.

இரட்ட பாடி: இது இராஷ்டிர கூடர் என்ற சேவந்தர் ஆண்ட பகுதியாகும். இதனைத் 'தக்கண தேசம்' (Deccan) என்றுங் கூறுவர். கி. பி. 975ல் இவர்கள் வலியைத்தொலைத்து மீண்டும் மேலைச் சாளுக்கியர் இங்கு தங்கள் ஆட்சியை நிலை நிறுத்தினர். அவருள் மூதல்வன் இரண்டாம் தைலபன் என்னும் ஆகவ மல்லன் ஆவன்; அவன் இராசராசனை வென்றதாகக் கூறுவர். அதற்கு ஆதாரமில்லை. இரட்ட பாடி ஏழரை இலக்கம் என்பது, இரட்டபாடி நாட்டின் வருவாய்த் தொகையைக் குறிக்கும் என்பர். இலக்கம் — இலட்சம். இவ்வாறே 'பழந்தீவு பன்னீராயிரம்' என்பதற்கும் பொருள் கொள்க.

பழந்தீவு: இலட்சத்தீவு (Laccadives), மாலைத்தீவு (Maldives) முதலிய தீவுகளைக் குறிக்கும். இவை கடல் நடுவண் இருப்பதால் 'மூந்நீர்ப் பழந்தீவு' என்று சிறப்பிக்கப்பட்டன. மூந்நீர் — கடல்.

தின்டிறல் வென்றி — வெற்றியைத் தரும் வலிமை மிக்க: தண்டு - சேனை (Army).

தன்னெழில் - தனது வலிமை; ஊழியுள் எல்லா யாண்டும் - ஊழி காலத்து எல்லா ஆண்டும்.

தொழுதக - தொழுதற்குத் தக்கபடி; இனி 'தொழுதகை' என்று பாடமோதி, இராசராசன் உதகையைக் கொண்ட வரலாற்றைக் குறிப்பர். தொழுதகை - தொழு + உதகை. யாண்டே - எவ்விடத்தும். செழியர் - பாண்டியர்.

தெகுகொள் தோராச தேசரி வர்மரான[9]
உடையார் ஸ்ரீராசராச தேவர்க்கு[10] யாண்டு -

செய்தி

உயிசு ஆவது, ஜயங் கொண்ட சோழ[11] மண்டலத்துக்

தேகு கோள் : வெற்றிகொண்ட; கோ - போராசன்; ராசகேசரி வர்மர்: இது இராசராசனுக்குரிய பட்டப்பெயர். சோழ அரசர்கள் தங்கள் இயற்பெயர்களுக்குமுன் இராசகேசரி, பரகேசரி என்ற பட்டப் பெயர்களை மாறிமாறித் தரித்து வந்தனர். அதாவது இராசகேசரி முதலாம் இராசராசன் மகன், பரகேசரி இராசேந்திர சோழன் என்று அழைக்கப்பட்டான். இவ்வாறே பிற்காலத்துப் பாண்டிய மன்னர்களும் மாறவர்மன், சுடையவர்மன் என்னும் பட்டப்பெயர்களை மாறி மாறித் தரித்து வந்தனர். இம் முறைகளினால் இன்ன அரசருக்குப் பின் இன்ன அரசர் பட்ட மெய்தினர் என்பதை எளிதில் அறிந்துகொள்ள முடிகிறது. வர்மன் - அரசன்.

உடையார்: சோழ அரசர்கள், சாசனங்களில் பெரும்பாலும் உடையார்' என்றே குறிக்கப்படுவர். இது இறைவனுக்குரிய பெயர். அரசரும் தெய்வ அமிசமுடையவராதலின் 'உடையார்' எனப்பட்டனர். சில சாசனங்களில் அவர்கள "சக்கரவர்த்திகள்" என்றும், 'கோகேசர் இன்மை கொண்டான்' என்றும் குறிக்கப்பட்டுள்ளனர். 'திரிபுவனச் சக்கரவர்த்திகள்' என்று அழைக்கப்பட்டது, இராசேந்திரனுக்குப் பிற்பட்ட காலத்திலாகும். ஸ்ரீராசராச தேவர்க்கு யாண்டு - இராசராச தேவர் ஆட்சியின் ஆண்டு; ஸ்ரீ என்பது, சில விசேடித்த பெயர்களுக்குமுன் அதன் சிறப்பைக் குறிப்பதற்கு வழங்கும் ஒரு வட சொல். திரு என்பது அதற்கு நேர் தமிழ் மொழி பெயர்ப்பு.

இதுவரை சொல்லப்பட்டது இராசராசன் மெய்க்கீர்த்தி. இதில் இராசராசன் கந்தளூர்ச்சாலை கலமறுத்தது, வேங்கை நாடு, கங்கபாடி, தடிகைபாடி, நுளம்பபாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்க நாடு, இரட்டபாடி, பழந்தீவு, பாண்டிய நாடு ஆகியவற்றை வென்றது முதலிய போர்ச்செயல்கள் குறிக்கப்பட்டுள்ளன.

யாண்டு உயிசு ஆவது: இருபத்தொன்பதாவது ஆண்டு; இது இராசராசன் ஆட்சியின் இறுதி ஆண்டாகும்.

ஜயங்கொண்ட சோழ மண்டலம்: சயங்கொண்ட சோழன் என்பது இராசராசனுக்குரிய பட்டப் பெயர்களில் ஒன்று: அப்பெய

காலியூர்க் கோட்டத்துத் தனியூர் உசாலாகிய ஸ்ரீ விக்கிரமா பரணைச் சதுர்வேதி மங்கலத்தின் மேலைப் பெருவழியில் ஸ்ரீ ராஜராஜதேவர் திரு நாமத்தால் [12] இணையர் தொட்டியும் சமைப்பித்தான் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் பணிமகன்,

---

ரால் தொண்டை நாடு 'சயங்கொண்ட சோழ மண்டலம்' எனப் பட்டது.

இராசராசன் காலத்திலும், அவன் மகன் இராசேந்திரன் காலத் திலும், சோழ இராச்சியம் ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டி ருந்தது. அவை சோழ மண்டலம், சயங்கொண்ட சோழ மண்டலம் (தொண்டை நாடு), இராசராச சோழ மண்டலம (பாண்டிய நாடு), முமுடிச் சோழமண்டலம் (இலங்கை நாடு), முடிகொண்ட சோழ மண்டலம் (கங்கவாடி), நிகரிலி சோழ மண்டலம் (துளம்ப பாடி), வேங்கை மண்டலம் (வேங்கி நாடு), மலை மண்டலம (சேர நாடு), அநிராசராச மண்டலம் (கொங்கு நாடு) என்பன. ஒவ்வொரு மண் டலமும் பல வள நாடுகளாகவும், ஒவ்வொரு வள நாடும் பல நாடுக ளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. நாடுகளில் சில கூற்றங்கள் என வும் வழங்கி வந்தன. ஒவ்வொரு நாடும் சில தனியூர்களாகவும, பல சதுர்வேத மங்கலங்களாகவும பிரிக்கப்பட்டிருந்தன. தொண்டை மண்டல மட்டும் பழைய முறைபடி இருபத்து நான்கு கோட்ட களாகவே பிரிக்கப்பட்டிருந்தது.

காலியூர்க் கோட்டம்: தொண்டை மண்டலத்து இருபத்து நான்கு கோட்டங்களுள் இது ஒன்று. தனியூர் உசால்: தலைட்சியை யுடைய பெருநகர்; இது பல சிற்றூர்களைக் கொண்டிருக்கும (A Village forming its own subdivision).

ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலம்: இது ஒரு தனியூர் உசால; சயங்கொண்ட சோழ மண்டலத்திலுள்ள காலியூர்க் கோட் டத்தைச் சேர்ந்தது. சதுர்வேதி மங்கல மென்றமையால், இது அந்தணர் குடியிருக்கு மிடமென்பது வெளிப்படை. இவ்வூர் இப் பொழுது உக்கல் என்ற பெயரோடு தொடர்பட்டு சிலாவிலுள்ள மாமண்டூர்யத்துக் காணப்படுகிறது.

மேலைப் பெரு வழியில் - மேற் றிசைக்கண் ணுள்ளதான பெரும் பாதையில்.

திரு நாமத்தால் - பெயரால்.

சமைப்பித்தான் - அமைத்தவன்; பணிமகன் - வேலைக்காரன்.

சோழ[11] மண்டலத்து தென்கரை நாட்டு நித்தவிநோத வள நாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் கண்ணனூரான். இவனே பூரீராஜராஜ கிணற்றில்[13] தொட்டிக்கு நீர் இறைப் பார்க்கு அருமொழிதேவன்[14] மாக்காலால் நிசதம் நெல் ஜ

சோழ மண்டலம்; இது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி சில்லாக் களைத் தனபால் கொண்டது; சோழ இராச்சியத்தின் ஒன்பது மண் டலங்களில் ஒன்று; இராசேந்திர சிங்க வளநாடு, இராசாச்ரய வள நாடு, நித்த விநோத வளநாடு, சத்தினிய சிகாமணி வளநாடு, உய்யக் கொண்டான் வளநாடு, அருண்மொழித் தேவ வளநாடு, கோளாந்தக வளநாடு, இராசராச வளநாடு, பாண்டிய குலாசனி வளநாடு என ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வள நாடுகளின் பெயர்களெல்லாம் இராசராச சோழனின் இயற்பெயரும் பட்டப் பெயர்களுமேயாம்.

தென்கரை நாடு: இது நித்த விநோத வளநாட்டின் மற்றொரு பெயர் என்ற கருத இடம் தருகிறது. நித்த விநோத வளநாடு: நித்த விநோதன என்ற இராசராசன பட்டப்பெயரால் பெயர் பெற்ற வளநாடு இது; இது சோழ மண்டலத்தைச் சேர்ந்தது.

ஆவூர்க்கூற்றம்: வளநாட்டின் பிரிவான நாடுகளில் சில கூற் றங்கள என்றும் அழைக்கப்படுமாதலின், இது நித்த விநோத வள நாட்டின ஒரு கூறு என்னலாம்.

கூண்ணனூரான்: இராசராசனுடைய பணிமகன்; இவன் இயற் பெயர் கண்ணன என்பது. இவனுக்குச் சொந்தவூர் சோழ மண்ட லத்துத் தென்கரை நாட்டு நித்தவிநோத வளநாட்டு ஆவூர் கூற்றத் திலுள்ள ஆவூராகும். ஆவூர் என்பதே ஆரூர் என்று மருவி, இவன் 'கண்ணன ஆரூரான்' என்று அழைக்கப்பட்டான் போலும். இராச ராசனது ஆட்சியின இருபத்தொன்பதாவது ஆண்டில் அவன் பெய ரால் பூரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலம் என்னும் பெருநக ரினை மையப் பெருவழியில் இவன ஒரு கிணறும் தொட்டியும் அமை த்து அதிலிருந்து கால்நாறும் நீர் வார்ப்பதற்கு ஏற்பாடு செய்தான என்று தெரிகிறது.

அருமொழி தேவன் மாக்கால்: இராசராசன் இயற்பெயர் அருண் மொழித தேவன் என்பது. அப்பெயரால் அவன் அரண்மனை மாக் கால 'அருண் மொழிதேவன மாக்கால்' எனப்பட்டது. அதற்கு மற்றொரு பெயர் 'இராகேசரி மாக்கால்' என்பது.

உ ஆக, திங்கள் சு க்கு வெல் ஜ டை [illegible] ம், பூரீ ராஜ ராஜன் தண்ணீ ரட்டுவார்க்கு நிசதம் வெல் ஜ உ ஆக, திங்கள் சு க்கு வெல் [16] டை [illegible] ம், இப்பந்தலுக்கு குசக்கலம் இடுவார்க்கு திங்கள் க க்கு வெல் [15] [illegible] ஆக, திங்கள் சு க்கு வெல் [15] சு [illegible] ம், பூரீராஜராஜன் கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதத்துக்கும் ஆட்டாண்டுதோறும் புதுக்குப்புறமாக வைச்ச வெல் [15] உ [illegible] ; ஆக ஜ சுயசு [illegible]. இந்த வெல்லுக்கு இவன் பக்கல் இவ்வூர் ஸபையோம் இறை திரவியமும் கிரய திரவியமும் கொண்டு இறை இழிய்ச்சி.....

(பாட பேதம்) 1. போல் 2. மனக்கொள்க் 3. காந்தளூர்ச்சாலை

தொட்டிக்கு..... ஆக ஜ சுயசு [illegible] - தொட்டிக்கு நீர் இறைப்பார்க்கு நாளொன்றுக்கு 2 குறுணியாக 6 திங்களுக்கு 30 கலம் வெல்லும், நீர் அட்டுவார்க்கு நாளொன்றுக்கு 2 குறுணியாக 6 திங்களுக்கு 30 கலம் வெல்லும், குசக்கலம் இடுவார்க்கு திங்கள் ஒன்றுக்கு இரு தூணியாக 6 திங்களுக்கு 4 கலம் வெல்லும், ஆண்டு தோறும் புதுக்குப்புறம் செய்வார்க்கு 2 கலம் 2 தூணி வெல்லுமாக மொத்தம் 66 கலம 2 தூணி வெல். நிசதம் - நாள்தோறும்; ஜ - படி; ங - குறுணி; திங்கள் மாதம்; [illegible] - கலம்; அட்டுவாரி - வாரப்பார்; குசக்கலம் இடுவாரி - பானை வனைக்கு கொடுக்கும் குயவர்; உ - 2 தூணி அல்லது 8 குறுணி.

கிணற்றுகீதும் தொட்டிகீதும் சேதத்துகீதும் - கிணறு தொட்டி ஆகியவைகளின சேதத்துக்கு. ஆட்டாண்டுதோறும் - ஆண்டுதோறும்; புதுகீதுப்புறமாக-பழுது பாரப்பதற்காக; வைச்ச-குறித்த.

இவன் பக்கல் - கண்ணனூரானிடத்து; இவ்வூர் ஸபையோம்: பூரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலமென்னும் பெருங்கர் சபையினர் இவர்கள் பொது மக்களால் ஆண்டுதோறும் தெரிந்தெடுக்கப்பட்ட ஐம்பெரும் குழுவினராவர். குளம, தோட்ட முதலிய பொது விடயங்கள் இவர்களை மேற் பார்வையில் இருந்து வருதன. ஊராட்சபையில் கடைபெறுவனவற்றை எழுதுபவன் 'மத்தியஸ்தன்' எனப்பட்டான. 'கணக்கன்' என்று அவனை அழைப்பதுமுண்டு.

இறை திரவியம் - வரிப்பொருள்; கிரய திரவியம் - கிரயப் பொருள. இறை - வரி (Revenue); இறையிழிய்ச்சி - வரியின்றியாக்கி (having exempted from taxes).

4. நளம்ப பாடியுக் கழலை பாடியும் 5. முன்னீர்ப் 6. கண்டூர்க்
7. கொழுதலை 8. யாண்டெட 9. ஸ்ரீ கோ ராஜகேஸரி வர்மரான
10. ஸ்ரீ ராஜராஜ தெவர்க்கு 11. சோள 12. திருநாமத்தால்க்
13. ஸ்னைற்றில்த் 14. அருண்மொழித்தேவன் 15. வெல்லு.

---

2. திருப்பதியம்.

முகவுரை

திருப்பதியம் = திருப்பதிகம்; அதாவது தேவாரம். தஞ்சை இராசராசேசுவரர் கோயிலில் தேவாரம் பாடுதற்கு ஏற்பட்ட சாசனம் 'திருப்பதியம்' என்று பெயர் பெற்றது. இது தஞ்சாவூர் இராசராசேசுவரரால யத்து வடக்குச் சுற்று புறச் சுவரின் வெளிப்பக்கத்தில் காணப்படுகிறது.

இதில் இராசராசசோழனது ஆட்சியின் இருபத்தொன்ப தாவது ஆண்டுக்கு முன்பிருந்தே தஞ்சை இராசராசேசுவரர் கோயிலில் திருப்பதியம் பாடுதற்கு நியமிக்கப்பட்ட நாற்பத் தெட்டு பேர்களுக்கும், உடுக்கை, கொட்டிமத்தளம் தட்டும் இருவருக்கும் காள்தோறும் கொடுக்கப்பட்டு வந்த நெல் † முதலிய விபரம் கூறப்படுகிறது. கோயில்களில் தேவாரம் பாடும் வழக்கம் இராசராசன்காலத்தி லிருந்தே இருந்துள்ள தென்று இதனால் தெரிகிறது.

இச் சாசனம் ஏற்பட்ட காலம் கி. பி. 1014 ஆம் ஆண்டு என்னலாம்.

இராசராசன்: மெய்க்கீர்த்தி.

ஸ்வஸ்தி ஸ்ரீ —

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்

---

* இது தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் இரண்டாவது தொகுதியின் மூன்றாவது பகுதியைச் சேர்ந்தது.

† ஒவ்வொருவருக்கும் காள்தோறும் மூன்று குறுணி நெல் கொடுக்கப்பட்டது.

ஸ்வஸ்தி ஸ்ரீ: இது சாசனங்களில் மங்கலம் குறித்து வரும் வட மொழித் தொடர்.

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்: இராசராசன் சாச னத்தில் வரும் மெய்க்கீர்த்தியின் தொடக்கம் இது.

கனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்[1]
காந்தளுர்ச் சாலைக்[2] கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியுங்
கிடுகை பாடியும் நுளம்ப பாடியுங்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற்[3] சிங்கள ரீழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
முந்நீர்ப்[4] பழந்தீவு பன்னீரா யிரமுங்
கிண்டிறல் வென்றிக் கண்டாற் கொண்டதன்
னெழிலிவ்வள வுடுபுரி யெல்லா யாண்டுங்
கொழுகுக விளங்கும் யாண்டே செழுநிலைத்
தகைகொள் கோராச கேசரி[5] வர்மரான
உடையார் ஸ்ரீராசராச தேவர்க்கு[6] யாண்டு —

காந்தளுர்ச்சாலைக் கலமறுத்தது: இதற்குக் கடற்றுறைக் கண்ணே தாகிய காந்தளூரில் உண்ணுறும் சாலைக்கண் நாடோறும் உண்பார் இத்துணையரென உண்கலங்களை வரையறுத்து எனப் பொருள் கொள்வர் ஆராய்ச்சியாளர். அவர் 'காந்தளுர்ச்சாலை கலமறுத்து' என்ற பாடம் தகுதியுடையதன்று என்பர்.

வேங்கை நாடு: இது கீழைச்சாளுக்கிய நாட்டிற்குத் தலைநகர் என்று கூறுவர் திரு. T. உலகநாதபிள்ளையவர்கள். கங்க பாடி: கங்கர் என்ற பல்லவ வகுப்பினர் ஆண்ட இடமாதல்பற்றி இது இப் பெயர் பெற்ற தென்பர்.

தடிகை பாடி: இது கங்கபாடிக்கும் நுளம்ப பாடிக்கும் இடையி லுள்ள சேரர் காடு; இதனைத் 'தடிகை வழி' என்றும் கூறுவர்.

குடமலை நாடு: இதனைக் கொங்காள்வார் என்னும் மரபினர் ஆண்டனர். கலிங்கம்: கோதாவரி யாற்றுக்கும் மகாநதிக்கும் இடையிலுள்ள நாடு; கீழைச் சாளுக்கியருக்கு வாழ்விடம்; இப்பொ ழுது வட சர்க்காரி விருப்பது.

இரட்டபாடி ஏழரையிலக்கம்: மகாராட்டிய வகுப்பினரான இராஷ்டிரகூடர் ஆண்ட இடம் இது என்பர். ஏழரையிலக்கம் என் றது, அந்நாட்டின் ஆண்டு வருவாய்; நாட்டின் வருவாயையும் உடன் சேர்த்துச் சொல்லுதல் பண்டை நாளைய வழக்கு போலும்.

இராசகேசரி வர்மன், இராசராசன்: இவை இராசராசனுக்குரிய பட்டப்பெயர்கள்; இவனது இயற்பெயர் 'அருண்மொழித் தேவன்' என்பது.

செய்தி

இருபத்தொன்பதாவது வரை உடையார் ஸ்ரீ ராஜராஜீ ஸ்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜதேவர் நுதித்த பிடாரர்கள் நாற்பத் தெண்மருமும். இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும். இவர்களிலே நிலையாய்க் கொட்டிமத்தளம் வாசிப் பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்க்குப் போல் நிசதம் நெல்லு முக்கூறணி நிவந்தமாய் ராஜசேலரியோ டொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தே பெறவும். இவர்களில் செத்தார்க்கும் அரு நோய் போனார்க்குங் கலிமாறி அவ்வவர்க்கு அடுத்த முறை

இருபத்தொன்பதாவது வரை - இருபத்தொன்பதாவது முடிய; உடையார் - சுவாமி: ஸ்ரீ ராஜராஜீஸ்வர முடையார்க்கு - தஞ்சை இராசராசேசுவர சுவாமிக்கு.

திருப்பதியம் - திருப்பதிகம், தேவாரம். விண்ணப்பம் செய்ய - பாட; உடையார் ஸ்ரீராஜராஜதேவர் - இராசராச சோழன்; நுதித்த - ஏற்படுத்திய; பிடாரர் - இசைவல்லார் (musicians); பிடாரர் எண் பது, பிற்கால நாலாயிரம் பாம்பு பிழைப்பாரைக் குறிக்கும் பெயராக வழங்குதலின், அது பட்டாரகரின் மருஉப் பெயராகிய படாரர் போலும் என்று கருதுவர் திரு L உலகநாதபிள்ளையவர்கள்.

உடுக்கை, கொட்டி மத்தளம்: இவை இரண்டும் அக்கால இசைக் கருவிகள்; தஞ்சை இராசராசேசுவர ஆலயத்தில் தேவாரம் பாடும் போது இசைக்கப்பட்டன வாசிப்பான் - இசைப்பான்.

போல் - பேர் போராக; நிசதம் - நாள் ஒன்றுக்கு (per day); முக்கூறணி - மூன்று குறணி; நிவந்தம் - வேலைகூலி.

ராஜசேலரியோ டொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்கால்: இராசசேகரி, ஆடவல்லான் இரண்டும் இராசராசன் காலத்து முகத் தலளவைகள்; இராசசேகரி, அரண்மனை அளவை; இதற்கு 'அருண் மொழித்தேவன் மரக்கால்' என்றும் பெயர் உண்டு. ஆட வல்லான், இராசராசேசுவர ஆலயத்து அளவை. அக்காலத்தில் கோயிலுக்கும், காட்டுநிற்கும் கணிக்கணி அளவைகள் இருந்தன. ஒக்கும்-ஒக்கான (which is equal to); உடையார் உள்ளூர்ப் பண்டாரம்: அரசன் நகரகத்துக் களஞ்சிய சாலை (city treasury); உடையார்-இராசராசன்.

அநுதேசம் போனார் - ஊர்விட்டுப் போனவர்; அநுதேசம் - அயல் தேசம். தலைமாறு - பதிலாக (instead); அடுத்த முறை கடவார் - நெருங்கிய இனத்தவர் (the nearest relation).

கடவார் அங்ஙெல்லுப் பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்பவும். அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் தாக்தாம் [illegible] அல்லாது வீடில் யோக்யராயிருப்பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அங்ஙெல்லுப் பெறவும். அவ்வவர்க்கு அடுத்த முறை கடவாரின்றி யொழிலில் அந்த நியாயத்தாரே யோக்யராயிருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய இட்டு, இட்ட அவரே அவ்வவர் பெறும் படிநெல்லுப் பெறவும். ஆக இப்படி உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது. பாலன் திருவாஞ்சியத் தடிகளான ராஜராஜ பிச்சனை சதாசிவனுக்கு நிசதம் நெல்லு மூக்குறுணி.

விண்ணப்பம் செய்பவும் - முறையாகப் பாடவும்; யோக்யர் - தகுதியுடையவர்; ஆளிட்டு - தெரிந்தெடுத்து; ஒழிலில் - நீங்கினால்.

அந்த நியாயத்தார் - *நியமனம் செய்பவர்* (incumbents of such appointments). இட்டு - ஏற்படுத்தி; அவ்வவர் பெறும் படி நெல்லு - அவரவர் பெறும் படிநெல்.

உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருவாய் மொழிந்தபடி: இராசராசதேவர் கட்டளைப்படி; அதாவது தஞ்சை இராசராசேசுவர் கோயிலில் திருப்பதியம் படிக்கும் நாற்பத்தெட்டு பேர்களும், நிலையாய் உடுக்கை, கொட்டி மத்தளம் வாசிப்போர் இருவரும் ஆக ஐம்பதின்மரும் நாள் ஒன்றுக்குத் தனித்தனி மூக்குறுணி நெல் கூலியாக உன்னூர்ப் பண்டாரத்திலே ஆடவல்லான என்னும் மரக்காலால் பெறவேண்டுமென்பதும், அவர்களில் செத்தார்க்கும் அணைமேதசம் போனார்க்கும் பதிலாக அடுத்த முறை கடவார் அங்ஙெல் பெற்றுத் திருபபதியம் பாடவேண்டுமென்பதும், அடுத்த முறை கடவார் தகுதியில்லாவிடில் தகுதியுடையவரைத் தெரிந்தெடுத்து திருப்பதியம் பாடி அங்ஙெல் பெறச்செய்ய வேண்டுமெனபதும், அடுதத முறை கடவார் இல்லையாயின நியாயத்தாரே தகுதியுடைய வேற்றவரை நியமித்துத் திருப்பதியம் பாடி அங்ஙெல் பெறச்செய்ய வேண்டுமென்பதுமாகும்.

கல்லில் வெட்டியது: அரசன் சொல்ல கல்லில் வெட்டியது என்பதால், அக்காலத்தில அரசன் கட்டளை கல்லில் வெட்டப்பட்டு யாவரும் அறியும்படி இருக்கும் எனபது. அதுவே பிறகாலத்தில "கல்வெட்டு' எனப்பட்டது போலும்.

பாலன் திருவாஞ்சியத் தடிகள்: இவர் பெயர் ராஜராஜ பிச்சனை சதாசிவன் என்பது. திருப்பதியம் பாடிய நாற்பத்தெண்மரில் இவர் ஒருவர். இவரைத் திருவாஞ்சியத்தடிகள் எனபதால், இவர் திருவாஞ்சியம் சிவன் கோயிலிடத் தள்ளவர் என்று தெரிகிறது. இக்கோயில் தஞ்சாவூர் சில்லா நானிலம் காவூர்காவில்லுள்ளது.

(இப்படி அந்த ஐம்பதுமே பார்களின் பெயர்களும் வெட்டப் பட்டுள்ளன.)

(பாட பேதம்) 1. மணக்கொன்க் 2. சாலை 3. மூட்டெழிற் 4. முன்னீர்ப் 5. கோராஜகேஸரி 6. ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு 7. பண்டாரத்தேய்.

---

3. ஸ்ரீ ராஜேந்திரசோழதேவர் சாசனம். *

முகவுரை

ஸ்ரீ ராஜேந்திரசோழதேவர் என்றது, இராசராசன் மகனை பராகேசரி முதலாம் இராசேந்திரசோழனைக் குறிக்கும். அவன் பெயரால் செய்யப்பட்ட தானத்தைப் பற்றிய சாசனம் 'ஸ்ரீ ராஜேந்திரசோழதேவர் சாசனம்' என்ற பெயர் பெற்றது. இச் சாசனம் தஞ்சை இராசராசேசுவர சுவாமி பெரிய கோயில் நடுவிடத்து மூலதானத்தின் தெற்குச் சுவரில் காணப்படுகிறது.

இராசேந்திர சோழன், தன் ஆட்சியின் பத்தொன்ப தாம் ஆண்டு, இருநூற்று நாற்பத்திரண்டாம் நாள் அக்கோயி லில் பூசை செய்து வந்த உடையார் சர்வசிவ பண்டிதற்கும், அவருடைய சிடர்களுக்கும் ஆசாரியபோகமாக ஆண்டுதோ றும் கொடுத்துவந்த இரண்டாயிரம் கலம் நெல்லைப்பற்றி இது கூறுகின்றது. இராசேந்திரனுடைய ஆட்சியின் 12 ஆம் ஆண்டுக்கும், 17 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் அவன் கொண்ட வெற்றிகளைக் கூறி, அதனால் அவனது வர லாற்றை அறிய வைத்திருப்பதே இச் சாசனத்தின் முக்கிய செய்தியாகும்.

இச் சாசனம் எற்பட்ட காலம் கி பி. 1030 ஆம் ஆண்டு என்னலாம்.

---

* இச் சாசனம் தென்னிந்திய சாசனத்தொகுதிகளில் இரண் டாவது தொகுதியின் முதற்பகுதியைச் சேர்ந்தது.

இராசேந்திரன்: மெய்க்கீர்த்தி

ஸ்வஸ்தி ஸ்ரீ —
திருமன்னி வளர மிருநில மடந்தையும்
போர்ச்சயப்[1] பாவையுஞ் சீர்த்தனிச்[2] செல்வியும்
தன்பெருந் தேவிய ராகி யின்புற
நெடிதிய லூழியு ளிடைதுறை நாடும்
தொடர்வன[3] வேலிப் படர்வன வாசியும்

ஸ்வஸ்தி ஸ்ரீ: இது சாசனங்களில் மங்கலம் குறித்து வரும் வடமொழித் தொடர்.

திருமன்னி வள: இது இராசேந்திர சோழன் மெய்க்கீர்த்தியின் தொடக்கமாக வரும் தொடர். இலக்குமி அமர்ந்து விளங்க என்பது இதன் பொருள். அதாவது, செல்வம் நிரம்பி வள என்பது.

இரு நில மடந்தையும் - பூதேவதையும் (goddess of the great earth). 'பெருநிலச் செல்வியும்' என இராசராசன் மெய்கீர்த்தியில் வந்திருத்தல் காண்க.

போர்ச்சயப் பாவையும்-போரில் வெற்றியைத் தரும் தேவதையும் (goddess of victory in battles). சீர்த்தனிச் செல்வியும் - கீர்த்தியில் ஒப்பற்ற தேவதையும் (the matchless goddess of fame); சீர் - கீர்த்தி; தனி – ஒப்பற்ற.

தன்பெருந் தேவிய ராகி இன்புற : காடு, வெற்றி, புகழ் இவை களைத் தனக்குரிய தேவியாகக்கொண்டு இன்பமடைய.

ஆரம்ப காலப்போர் — வரி: 4-7.

இடைதுறைநாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கடக்கம் இவைகளைக் கொண்ட செய்தி இராசேந்திரனுடைய மூன்றாம் ஆண்டு சாசனமுதலே காணப்படுகின்றது. ஆதலின் இவை இராசேந்திரன் ஆட்சியின் ஆரம்ப காலப்போர் எனப்பட்டன.

இடைதுறைநாடு: இதனை 'இடைதுறைநாடு இரண்டாயிரம்' என்றும் கூறுவர். இதுவடக்கே கிருஷ்ணை நதிக்கும், தெற்கே தங்கபத்திரை நதிக்கும் இடைப்பட்ட சம வெளியாகும். தற்கால இரோய்ச்சூர் சில்லாவை இப்பகுதியாகக் கூறலாம். ஊழியுள் நெடிதி இயல் - ஊழிகாலம் வரை நிலையாகவுள்ள.

வனவாசி: இது தொடர்ந்த காடுகளை அரணைக்கொண்டது; தக்கணத்தின் தென்மேற்குக் கோடியிலுள்ள குந்தளநாட்டின் தலை நகர். இப்பொழுதுள்ள கன்னடநாடே பண்டைக் குந்தளநாடா

சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும்
கண்ணற் கருமுரண் மண்டினைக் கடிக்கழும்
பொருகடல் ஞாலத் தரசரிற் முடியும்
ஆங்கவர் தேவியர் சோகந்தெறின் முடியும்
முன்னவர் பக்கற் றென்னவர் வைத்த
சுந்தர முடியு மிந்திர னாரமும்
தெண்டிரை யீழ மண்டல மூழுவதும்

கும். தொடர்வன வேலிபடர் - தொடர்ச்சியாகவுள்ள காட்டரணை யுடைய.

கொள்ளிப் பாக்கை: இதனைக் 'கொள்ளிப் பாக்கை எழுராயிரம்' என்றும் கூறுவர். இது ஐதராபாத்துக்கு கற்பக்கைத்து வடக்கிலுள்ள 'கூல் பாக்' எனலும் இடமாகும். சுள்ளிச் சூழ்மதில்- சுற்றிலும் சுள்ளிமரங்களை மதிலாகவுடைய. சுள்ளி - ஆச்சா மரம்; நாழல் மரம் எனினுமாம்.

மண்டினைக் கடிக்கும்:- இது ஆதியில் இராஷ்டிர கூட வேந்தர் களுக்கும், பின் மேலைச் சாளுக்கிய மன்னர்களுக்கும் தலைநகரமா யிருந்த 'மான்ய கேடம்' எனும் நகரமாகும். நண்ணற் கருமுரண் - நெருங்குதற்கு அரிய வலிய மதிலையுடைய.

ஈழப்போர் — வரி: 8-12.

ஈழமென்பது, இலங்கை நாடு; இது கடல் நடுவ ணுள்ளது. இராசேந்திரன காலத்தில் ஈழநாட்டை ஆண்ட மன்னன் ஐந்தாம் மகிந்தன். அவன் இராசேந்திரனை எதிர்த்து, போரில் தோற்றனன். அவனுடையதும், அவன் தேவியருடையது மாகிய முடிகளையும், ஆடை ஆபரணங்களையும, பொனமணிகளையும இராசேந்திரன் கைப் பற்றினன்; அன்றியும், சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் பாண்டிய மன்னர் ஈழமன்னரிடம் கொடுத்து வைத்திருந்த சுந்தர முடியையும், பாண்டியர் குலத்திலே நெடுங்காலமாக இருந்துவந்த இந்திர ஆரத்தையும் அவனிடமிருந்து எடுத்துக்கொண்டான். இறுதியில, ஈழ மண்டல முவழுதும் சோழர் வசமாயிற்று.

பொருகடல் ஈழம் - இலங்கைத் தீவு; எழில் - அழகு; முடியும் கிரீடமும்; முன்னவர் - ஈழத்தரசர்; தென்னவர் - பாண்டியர்.

எறிபடைக் கோளன் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலுத்
தொல்பெருங் காவற் பல்பழந்[9] தீவும்
செருவிற் சினவி யிருபதத் தொருகால்
அரசுகளை கட்ட பரசு ராமன்
மேவருஞ் சாந்திமத் தீவாண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்

மலைநாட்டுப் போர் — வரி: 13-20.

மலைநாடு என்பது, மலையும் கடலும் சூழ்தரப் பரசுராமனால் ஆதியில் அமைக்கப்பட்ட இட மென்பர்; இதனைச் 'சாந்திமத்தீவு' என்றும் கூறுவர். பழந்தீவும் இதனுள் அடங்கும். கார்த்தவீரர்ச் சாலை, இதன் கடற்றலைநகர்ப் பட்டினங்களில் ஒன்று. இராசராசனால் செயிக்கப்பட்ட இந்நாட்டில், அமைதியை நிலைநாட்டுதற்கு இராசேந்திரன் படை எடுத்துச் சென்றான். சோனை வென்று, அவனது முடியையும் மாலையையும் கவர்ந்தான்.

எறிபடைக் கோளன் - சேரமன்னன்; எறிபடை - எறி ஈட்டி போன்ற படைகள்; முறைமையிற் சூடும் - பரம்பரையாக அணியும்; குலதனம் - குலத்திற்குரிய செல்வம்; அஃதாவது கிரீடம். செங்கதிர் மாலை - செங்கதிர்போல் ஒளி விடும் முத்துமாலை; செங்கதிர் - சூரியன்.

சங்கதிர் வேலைத் தொல்பெருங் காவல் - சங்கினங்கள் அதிருகின்ற கடலாகிய பழம் பெருங் காவலையுடைய; அஃதாவது, கடலைத் தனக்கு அரணாகவுடைய என்பது. பல் பழந்தீவு: இலவு மேலைக் கடலில் உள்ள 'பழந்தீவு பன்னீராயிரம்' என்பது.

செருவிற் சினவி..... சாந்திமத் தீவு: போரில் கோபித்து இருபத்தோரு தலைமுறையாக அரசகுலத்தை அழிப்பதையே விரதமாகக் கொண்ட பரசுராமன் இருந்துவந்த சாந்திமத்தீவு என்பது.

செரு - போர்; கால் - தலைமுறை; கட்டுதல் - பிணித்தல்; மேவரும் - வீற்றிருந்த; அரண் கருதி யிருத்திய - பாதுகாப்பு என்று கருதி வைத்த.

பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளிர்த்த சயசிங்க னளப்பரும் புகழொடு[10]
பீடிய விரட்ட பாடி யேழுரை
யிலக்கமு நவநிதிக்[11] குலப்பெரு மலைகளு
விக்கிம வீரர் சக்கரக் கோட்டமு

மேலைச் சாளுக்கியப் போர் — வரி: 21-24.

மேலைச் சாளுக்கிய நாடு என்பது, இரட்டபாடி ஏழரையிலக்கத்தைக் குறிக்கும்; இந்நாட்டை ஆண்டுவந்த ஐந்தாம் விக்கிரமாதித்தனுடைய தம்பியான செயசிங்கன் முன்னர் இழந்த நாடுகளை சோழர் வசமிருந்து மீட்க முயன்றான். இதனால் இராசேந்திரன் இவனை 'முயங்கி' என்னுமிடத்தில் எதிர்த்துப் போரிட்டான். போரில் தோல்வியுற்ற இவன், பயமும் பழியுமுண்டாக புறங்காட்டி ஓடி ஒளிந்தான். இவன் நாடும், நவநிதிக் குவியல்களும் இராசேந்திரன் வசமாயின.

பயங்கொடு பழிமிக - பயத்தோடு பழியுமுண்டாக. முயங்கியில் முதுகிட்டு - முயங்கி என்னுமிடத்தில் புறங்காட்டி; முயங்கி என்பதை, பல்லாரி சில்லாவிலுள்ள 'உச்சங்கி துர்க்கம்' என்பர்; ஐதராபாத்து சமத்தானத்திலுள்ள "மாஸ்கி" என்பாருமுளர். முயங்கி, முசங்கி என்றும் வழங்கும்.

செயசிங்கன்: இவன் கி. பி. 1015 முதல் 1042 வரை மேலைச் சாளுக்கிய மேன்தனாக இருந்தான். பீடியல் - பெருமை மிகுந்த; நவநிதிக் குலப்பெரு மலைகளும் - நவநிதிக்குவியல்களாகிய மிகப் பெரு மலைகளும்.

கங்கை கொண்டது — வரி: 25-46.

கங்கை கொண்ட தென்றது, கங்கை நீரைக்கொண்டு வந்ததைக் குறிக்கும். இராசேந்திரன் தான் புதிதாக அமைத்த நகரையும், கோயிலையும், ஏரியையும் புனிதப் படுத்துவதற்கென்று கங்கைநீரைக் கொண்டு வர வடநாடு சென்றான்.

சக்கரக் கோட்டம்: இது விசாகப்பட்டணம் சில்லாவுக்கு மேற்கில் மத்தியமாகாணங்களிலுள்ள பஸ்தர் (Bastar) சமத்தானத்தின் தலைநகரான இராசபுரத்திற்கு எட்டு மைல் தூரத்திலுள்ள 'சித்திர கோட்டா' என்னும் ஊராகும். இதில் பலம் பொருந்திய வீரர் பலர் இருந்தனர் போலும். விக்கிரமம் - வலிமை.

முதிர்பட[12] வல்லி மதுரை மண்டலமும்
காமிளட வஜள இய[13] ரமணக் கோணையும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி யாதிரக ரகணவயிற்[14]
சந்திரன் மெல்குலத் திந்திர ரதனை[15]
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனக் தொடுகிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை[16] யொட்ட வியையும்[17]

மதுர மண்டலம்: இது ஒரிசாவிலுள்ள மதுபன் என்னும் சிறிய சமத்தானத்தை யொட்டிய பகுதியாகும். இதில் பழம் பெருங் கோட்டைகள் இருந்ததாகத் தெரிகிறது. முதிர்பட - முதிர்பட்ட, பழமையான; வல்லை - கோட்டை.

ரமணக்கோணம்: இது சில கிராமங்கள் இடையிடையே யமைந்த பெருநகர். கரம் - கிராமம்; இடைவலி-இடையிடை யமைந்த.

பஞ்சப்பள்ளி: பஞ்சவர் பள்ளி கொண்ட இடமென்பர். இங்கு வில்வீரர் பலர் இருந்தனர்! இய வீரர் - வில்வீரர்.

மாசுணி தேசம்: மாசுணி - பாம்பு; நாக வமிசத்தவர் ஆண்ட தேசமாதல் பற்றி இது இப்பெயர் பெற்றது போலும். இது வயல் கள் நிறைந்த இடம். பாசடை - பசுமையான இலை. பழன - வயல். ஆதி நாகரவையில் - ஆதி நாகனில் உடந்த போரில்; இது இந்திரதன ஆண்டுவந்த கோசல நாட்டிற்குத் தலைநகர். அயர்வில் - சோர்வில்லாத; வண் - சிறந்த. அகளை - இடம், எழுதுரு.

சந்திரன் தொல்குலத் திந்திரதன் - பழங்காலமாயுள்ள சந்திர குலதலை மதானறிய இந்திரதன் எனபது. இவன இராசேந்திரன ஆதிநகர் எனனுமிடத்தில் எதிர்த்தி, இவன இனதவரோடு தப்பவிடாது பிடிததான்; இவனது பலதனக் குவியலகளைக் கொன்னெகாண்டான். முடிவில் இவன ஆண்ட ஒட்டவிசயமும், கோசல நாடும் சோழர் வசமாயிற்று.

களம் - போர்க்களம்; கிளை - மனைவி மக்கள் முதலியோர்.

குவையும் - குவியலும்.

கிட்டரும் செறிமிளை - நெருங்குவதற்கரிய செறிந்த காவற்காடு; ஒட்ட விசயம் - ஒட்டராதேசம்.

பூசுவர் சேருஞற்[18] கோசலர்[19] நாடும்
தண்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணற[20] நாக்கித்
திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிர் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகழற் சங்கு வொட்டல்மகி பாலனை[21]

பூசுவர் - அந்தணர்; கோசல நாடு - இது ஒட்டமீதசத்துக்குப் பகுதியுள்ள தெனிகாசலம் அலல்து மகாநிகாசலம் எனறு கூறப் படும் பூமியாகும்.

வெம்னை - கொடியபோர்.

வண்டுறைசோலை - வண்டுகள் தங்கும் பூஞ்சோலை; தண்டபுத்தி: இதனைப் பீகார் என்று சிலரும், பீஹார் எனறு வேறு சிலரும் கருது கினறனர். இது ஒட்டதேசதத்திறகும வங்காளத்திற்கும் மத்தியில், சுவர்ணகோல நதிக்கு இருகரையிலுமுள்ள நாடாக இருத்தல் வேண டும். தண்டநாயகன ஒருவனுக்குச் சொந்தமானதுபற்றி 'தண்ட புத்தி' எனப்பட்டது போலும. இராசேந்திரன காலத்தில் இந்நில தனமபாலன எனபவன ஆண்டான.

முரண் அற - வலிமை கெட.

திக்கு அணை கீர்த்தி - நானகு திசையிலும் பொருந்திய கீர்த்தி.

தக்கண லாடம்: வங்காளததின் ஒரு பாகம்; இது அக்காலத தில் 'ராடா' (Radhas) எனற பெயர பெற்றிருநதது. இராஜேந்திரன் இதனை ஆண்டான.

மா இழிந்து ஓட - குதிரையின்னமும் இறஙகி ஓட.

தங்காத சாரல் - தணபடாது பெயயும மழை. வங்காள மத்தியப் புதுப் பழகுகு வருகாளதனைக குறிக்கும. இதனால் கோவிநத சநதனின் பலபலவை ஆண்டான.

தொடுகழல் சங்கு வொட்டல் மகிபாலன்: இவன பதுமனூர முரணடின துவகசததில உதகலாடதனை ஆண்டுவநத பாலவமச சதது அரசனவான. தண்டபுத்தியை யாண்ட தனமபாலனுட, தக்கணலாடதனைத யாண்ட இராஜேந்திரனும, வங்காளதனை யாண்ட கோவிந்த சந்தனும் இவனுட்சிக் குட்பட்டு ஆண்டுவந்தனர். போர்க்

வெஞ்சமர் வளாகத்[22] தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர்ப்பண் டாரமும்
நிக்கில மெடுங்கட லுக்கிர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற்[23] கங்கையும்
அலைகடல் கடுவுட் பலகலஞ் செலுத்திச்

களத்தில் இராசேந்திரனுடைய சேனையின் ஆரவாரத்தைக் கேட்ட இவன் எல்லாவற்றையும் விட்டு ஓடினான். இராசேந்திரன் இவனுடைய யானைகளையும், பெண்டிர் பண்டாரத்தையும் எடுத்துக்கொண்டு கங்கைக்கரையை அடைந்தான். தொடுகழல் சங்கு வொட்டல் - வீரக்கழலையும சங்காதத்தையும் உடைய.

வளாகத்த - இடத்தை; ஒண்டிறல் - ஒண்திறல், மிக்க வலிமை யுடைய; பெண்டிர் பண்டாரம் - பெண்களின் ஆடையாபரணங்கள்; நிக்கில மெடுங்கடல் — முத்துக்களையுடைய பெரியகடல்; அழகிய கடல் எனினுமாம்.

வெறிமலர்த் தீர்த்தத்து எறிபுனற் கங்கையும்: வெறிமலர் - வாசனைமிக்க தாமரை முதலிய மலர்கள்; தீர்த்தம் - புனித நீர்; அலை யாகமோதி வீசப்படும் நீர் தாமரை மலர்களுக்கிடையில் தனித் தனியே தீர்த்தங்களாயின என்பது. எறிபுனற் கங்கை - மோதி வீசப்படும் கங்கை நீர்.

கடாரம் கொண்டது — வரி: 47-67.

கடாரம் என்பது, மலையாத் தீபகற்பத்தின் தென்பகுதியின் மேல்கரையின்கண் உள்ள 'கெடா' என்று வழங்கப்பட்டு வரும் இடமேயாகும். இது வடமொழியில் 'கடாஹம்' என்றும், தமிழ் மொழியில் 'காழகம்', 'கடாரம்' என்றும் வழங்கும். இதனை யாண்டவன் 'விசயோத்துங்க வர்மன்' என்பவன்.

இராசேந்திரன் கடலில் பலகலம் செலுத்திக் கடாரம் சென்று முதலில் விசயோத்துங்கவர்மனை வாளைகூடி, அவனது யானையையும், நிதியையும், வித்யாதரத் தோரணம் முதலியவற்றையும் கவர்ந் தான். அதன் பின்னர் ஸ்ரீவிசயம், பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், மாப்பப்பாளம், மேவிலிம்பங்கம், வளைப்பந்தரு, தலைத்தக்கோலம், மாதமர் விங்கம், இலாமூரிதேசம், மாசக்கவாரம், முதலிய ஊர்களைப் பிடித்தான். இறுதியில் கடாரம் முழுவதும் அவன் வசமாயிற்று.

கலம் - மரக்கலம்.

சங்கிராமவிஜயோத்துங்கவர்மன்[26]
ணகிய கடாரத் தரசினை[26] வாகையும்
பொருகடல் குழ்பக் களிபொடு மகப்படுத்
தாரிணமயிற் பிறக்கிய பருநிதிப்[27]பிறக்கமும்
ஆர்த்தவ னகநகர்ப்[27] போர்த்தொழில் வாசலில்
விச்சா திரத்தோ ரணமு மொய்த்தொளி[28]
புனைமணிப் புதவமுங் கனைமணிக் கதவமும்
றினைநீர் விடயமுங்[29] துறைநீர்ப் பண்ணையும்[30]
வண்மலை யூரொயிற் றெண்மலை யூரும்

சங்கிராமவிஜயோத்துங்கவர்மன் - கடாரத் தரசன் பெயர்; வாகை - வெற்றி; பொருகடல் குழ்பக் களி - பொருகின்ற கடல் போல் குழங்கும் மத்தகக் களி.

உரிமையிற் பிறக்கிய பருநிதி - முறையாகச் சேர்த்த பெருஞ் செல்வம், பிறக்கம் - குவியல் (heap).

ஆர்த்த - கழுத்து; அகநகர் - தலைநகர்; போர்த் தொழில் வாசலில் - போர்செய்யும் வழியிடத்து.

விச்சாதிரத் தோரணம் - போர்த்தொழில் வாசல் வளைவின் பெயர்; மொய்த்த ஒளிபுனை - செறிந்த பிரகாசம் பொருந்திய; புதவம் - கதவு.

கீர் விடயம்: சுமத்திரா தீவிலுள்ள 'பாலம்பாங்' என்னும் இராசதானியாகும். கீர் - திரு; விசயம் - நாடு; அதாவது திருநாடு என்பது; விச்சாதிரத் தோரணம், புனைமணிப்புதவம், கனைமணிக்கத வம் றினை நீர் விடயம் என்றுகொள்க.

துறைநீர்ப்பண்ணை: நீர்த்துறைகளையுடைய பண்ணை என்பது; இது சுமத்திராதீவின் கீழ்கரையிலுள்ள பணி (pani) அல்லது பனை (panei) என்னு மூராகும்.

வண்மலை யூரொயிற் றெண்மலை யூர்: வளிய மலையூ என்னும் நதியை அரணாகக்கொண்ட பழமையான மலையூர் என்பது. இது சுமத்திரா தீவின் கீழ்கரையி லிருந்தது என்று சிலரும், மேல்கரை யிலிருந்தது என்று வேறு சிலரும், மலேயா தீபகற்பத்தின் தென் பகுதியில் இருந்தது என்று மற்றோரும் கூறுகின்றனர். ஜம்பி (Jambi)என்னும் நாடே, இது என்று டச்சு ஆராய்ச்சியாளர் கூறுவர்.

ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை யிலங்கை சோகமும்
கோப்புறு[31] நிறைபுனல் மாப்ப[32] பாளமும்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்
வினைப்பந் தாருடை[33] வளைப்பந் தாரும்[34]
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமும்
தீதமர்[35] பல்வினை[36] மாதமர்[37] லிங்கமும்
கலாமுதிர்[38] கடுந்திற லிலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மாநக்க[39] வாரமும்

மாயிருடிங்கம்: மலேயா தீபகற்பத்தின் மத்தியபாகத்தில் கடலை யடுத்துள்ளது. ஆழ்கடலகழ் - ஆழமான கடலாகிய அகழி.

இலங்கா சோகம்: மலேயா தீபகற்பத்தில், 'கெடா' என்னு மிடத்திற்குத் தெற்கேயுள்ளது. கலங்கா வல்வினை - நிலை கலங்காத வன்மையுடைய.

மாப்பபாளம்: இது மகாவமிசத்தில் 'பப்பாளமா' என்று குறிக்கப்பட்டுள்ளது. இது 'க்ரா' பூசந்திக்குப் பக்கத்தில் இருந்தது.

மேவிலிம்பங்கம், வளைப்பந்தாரு: இவை இருந்த இடம் இப் பொழுது தெரியவில்லை. காவலம்புரிசை - காவல் நிறைந்த கோட் டையையுடைய; வினைப்பந்தாரு - வளைப்பந்தாலையடுத்த ஒரு சிற்றூர் போலும்.

தலைத்தக்கோலம்: இரேக்க ஆசிரியரான தாலமி என்பவர் இதனை 'தகோலா' என்று குறித்துள்ளார். இது 'கரா' பூசந்திக்குத் தெற்கே, மலேயா தீபகற்பத்தின் மேல் புறமாக இருந்தது. இப் போது 'தகோபா' (Takopa) என்று வழங்கப்படுவது இதன தலைக ராகும். கலைத் தக்கோர் - கலைவல்லார்.

மாதமர் லிங்கம்: மலேயாவின் கீழ்பிரதேசத்தில் 'க்வாண்டன்' நதியின் முகத்துவாரத்திலுள்ள தெமிலிங்(Temiling)அலலது தெம் பலிங் (Tembeling) என்று சொல்லப்படுமி இடமாகும். தீதமர் வல் வினை - தீமை நிறைந்த கொடியவினை.

இலாமுரி தேசம்: இது சுமத்திரா தீவின் வடபகுதியில் உள்ள காடாகும். இதனை 'லாமுரி' எனறும், 'லம்ப்ரி' (Lambri) எனறும கூறுவர். கலா முதிர் - கலை நிரம்பிய; கடுந்திறல - மிக்கதிறலை.

மாநக்கவாரம்: இது இப்பொழுது 'நிக்கோபார் தீவு' என்று வழங்குகிறது. தேனக்க வார் பொழில் - தேனிறைந்த தீண்டசோலை.

தொடுகடற்[10] காவற்[11] கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பர
கேசரி வன்ம ரான[12] உடையார்
ஸ்ரீராசேந் திரசோழ தேவர்க்கு யாண்டு -
செய்தி

யகூ ஆவது, நாள் இருநூற்று நாற்பத்திரண்டினுல் உடை யார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் கங்கைகொண்ட சோழ புரத்துக் கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் தி ருமாளிகையில் வடபக்கத்து தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தானஞ் செய்தருளா இருந்து, உடையார் ஸ்ரீ ராஜராஜ ஈஸ் வரமுடையார கோயிலில் ஆசார்ய போகம நம் உடையார்

தொடுகடல் காவல் - ஆழமான கடலாகிய காவலையுடைய; கடு முரண் - கடிய மூர்க்கக் குணமுடைய.

மா பொரு தண்டு - பெரும் போரைச் செய்யும் சேனை.

யாண்டு யகூ ஆவது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினுல்: 19ஆம் ஆண்டு, 242ஆம் நாள் எனபது. சாசனங்களில நாள் குறிக் குமபோது பெரும்பாலும அகனாலப் பிறபகுது ஆடசியன ஆணடு குறிபபது வழகக மம. சில சாசனஙகளில ஆட்சியன ஆணடோடு நாளும உடன குறிககப்பட்டிருக்கும. அப்படிப்பட்ட சாசனங்களில இவவும ஒனறு.

கங்கை கொண்ட சோழபுரம்: இராசேந்திரசோழன் அமைத்த பெரிய நகரம். இதைப் புனிதபபடுத்த நீர் கொணடுவருவதற்கே அவன வடநாட்டு யாதிரை செய்து பல நாடுகளைச் செயித்தான். இஃது, இப்பொழுது திருசிராப்பளளி சிலலாவிலுள்ள உடையார் பாளையம தாலுகாவில சிறு ஊராகக காணப்படுகிறது.

கோயிலினுள்ளால் - அரணமனையினுள்; முடிகொண்ட சோழன் திருமாளிகை - இராசேந்திரன் பட்டப்பெயர்களில் 'முடிகொணட சோழன்' என்பது ஒன்று. அப்பெயரால் கட்டிய அரணமனை இது வாகும.

தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி: இராசேந்திரசோழன் அரண மனைப் பூஙகாவனதனைச சுற்றியிருந்த கல்லூரி (That College which surrounds the King's flower garden).

தானம் செய்தருளா இருந்து - தருமம் செய்து; ஆசாரிய போகம் - ஆசாரியராகவிருந்து அநுபவிக்கும் செல்வம்.

ஸர்வ்வ சிவ பண்டிதனைசய்வ் வாசார்ய்யர்க்கும், இவ்வுடையார் சிஷ்யருமம் பிரசிஷ்யருமாய் ஆர்ய்ய தேசத்தும், மத்திய தேசத்தான் கௌட தேசத்தான் உள்ராய் போக்யாயிருப்பார்க்கே ஆட்டாண்டுசோறும் இத்தேவர் கோயிலில் ஆடவல்லா னென்னும் மாக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச்சளவாக இரண்டாயிரக் கலசெல்லு ஆட்டாண்டு தோறும் சந்திராதித்தவல் பெறத் திருவாய் மொழிந்தருளத் திருமந்திரி ஓலை செம்பியன் விழுப்பரையன் எழுத்திலை...த் திருவாய்க் கேழ்விப்படி கல்லில் வெட்டித்து இது. இவ்வம்

உடையார் சர்வசிவ பண்டிதர்: 'உடையார்' என்ற பெயர் கடவுளுக்கும், கடவுளேயொத்த அரசருக்கும், கடவுளடியார்க்கும் வழங்கும் பெயராகக் காணப்படுகிறது. சர்வசிவ பண்டிதர் தஞ்சைப் பெரிய கோயிலில் பூசைசெய்து வந்தவர். இராசேந்திரனுக்கு ஆசானியராய் இருந்தார். இவரும், இவருடைய சீடர்களும் எந்த காட்டிலிருந்தாலும் ஆசானிய போகமாய்க் கொடுக்கும்படியாக ஆண்டு தோறும் இரண்டாயிரம் கலம் நெல் அளப்பதற்கு இராசேந்திரன் தன் ஆணைமனையில் இருக்கபடியே ஆணை பிறப்பித்தான்.

இவ்வுடையார் சீஷ்யரும் - சர்வசிவபண்டிதருடைய சீடரும்; பிரசீஷ்யருமாய் - சர்வசிவபண்டிதர் சீடர்களின் சீடர்களுமாய்.

ஆர்ய்ய தேசத்தும், மத்திய தேசத்துத்தான், கௌட தேசத்துத்தான் - ஆரியதேசம், மத்திய தேசம், கௌட தேசம் என்பது. இவைகளில் சர்வசிவபண்டிதருடைய சீடர்களிருந்தனர்.

இத்தேவர் கோயிலில் - இராசேந்திர சோழதேவர் ஆணைமனையில்; நிறைச்சளவாக - நிரம்பிய அளவில்; சந்திராதித்தவல் - சந்திரன், ஆதித்தன் உள்ள காலமளவும்; ஆதித்தன - சூரியன்.

திருவாய் மொழிந்தருள - கட்டளையிட; திருமந்திரி ஓலை - திருமந்திர ஓலை, அரசன் ஆணையை எழுதுபவன். ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் கட்டளையை ஓலையில் எழுதி வாசித்தவன் செம்பியன் விழுப்பரையனெவான்.

திருவாய்க் கேழ்விப்படி கல்லில் வெட்டித்து: இதனால் அக்காலத்தில் அரசன் தானம் செய்தருளுமுறை விளக்கப்பட்டது. அஃதாவது, தான் செய்யக் கருதும் தானத்தை அரசன் சொல்ல, திருமந்திரவோலை முதலில் அதை எழுதுவான். பின் அது வாசிக்கப்பட்டு அம்முறையே கல்லில் வெட்டப்படும் என்பது.

சுத்துள்ள சைய்வ்வ ஆசார்ய்யர்களே, இத்தன்மம் சகிக்க.

(பாட பேதம்) 1. பொற்சயப் 2. சிர்த் தசிச் 3. தடர்வனை 4. சூழ்மதின் 5. பாக்கழும் 6. அனாசர் 7. தெலியர் 8. எழில் 9. பலபழச் திவும் 10. புகழொடும் 11 சவதெதிக் 12. ..... 13. வள 14. ஆதி சரணவயில் 15. இந்திரதனை 16. செறிமினை 17. ஒட்ட வினைதியழும் 18. சேர்சற் 19. சோசலை 20. மூரணைகத் 21. மயிபாலனை 22. வினாசத் 23. தெறி புனல்க் 24. பங்ம 25. தனாசனை 26. பெருனெதி 27. அகனகர் 28. மொய்த்தொளிர் 29. விசையழும் 30 பன்னையும் 31. காப்புற 32. மாப்பப் 33. வினைப்பந்நறுடை 34. வனைப்பந்நறுறை 35 திதமா 36. வல்வினை 37. மாதமர், மதமா 38 கலாழுதிர்த் 39. மானக்க 40. தொடு கடற்க் 41 காவல்க் 42. பாதேலரி பங்மானை.

---

4. மணிமங்கலம் சபையோர் சாசனம் *

முகவுரை.

மணிமங்கலம் என்பது ஓர் ஊர். அவ்வூர்ச் சபையினரால் ஏற்பட்ட சாசனம், 'மணிமங்கலம் சபையோர் சாசனம்' எனப்பட்டது. இது செங்கல்பட்டு சில்லா, காஞ்சிவரம் தாலூகாவிலுள்ள மணிமங்கலம் என்னுமூர் இராசகேசரிபால சுவாமிகோயில் மூலதானத்தின் வடக்குச்சுவரிலும், மேற்குச் சுவரிலும் காணப்படுகிறது.

முதலாம் இராசேந்திரனுடைய மகன் இராசாதிராசன், சேர நாடு, சாளுக்கிய நாடு, பாண்டிய நாடு, கங்கநாடு, இலங்கை நாடு, பல்லவ நாடு, கன்யாகுப்ஜம் ஆகியவற்றை ஆளுவதற்கு அவன் இனத்தவனையே பிரதிநிதிகளாக ஏற்படுத்திய செய்தியும், இலங்கைப்போரைப்பற்றிய விரிவான செய்தியும், பலாரி சில்லாவிலுள்ள காம்பிலி என்னுமிடத்திலிருந்த சாளுக்கிய மன்னர் மாளிகையை அழித்த செய்தியும் இதில் காணப்படுகின்றன. மணிமங்கல மூர் சபையினர், கோயில் பணத்தி

இவ்வம்சத்துள்ள சைய்வ்வ ஆசார்ய்யர்களே - இந்தப் பரம்பரையில் தோன்றிய சிவாச்சாரியார்களே என்பது; அதாவது, கோயில் ஆசாரியர்களை விழித்தபடி.

இதன்மம் - இந்த தருமம்; சகிக்க - காக்கக் கடவர்.

---

* இச் சாசனம் தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் மூன்றாவது தொகுதியின் முதலாம் பகுதியைச் சேர்ந்தது.

விருந்து நூறு காசு கடன் வாங்கி, அக்கடனுக்கு வட்டி யாக அவ்வூரிலுள்ள சில நிலங்களைக் கொடுத்த செய்தியை இது கூறுகின்றது. இராசகேசரிவர்மன் என்னும் இராசாதி ராசன் ஆட்சியின்† இருபத்தான்பதாம் ஆண்டு, தனு ஞாயிற்று (in the month Dhanus) பூர்வபட்சத்து (bright fort night) துவிதியையும் (the second Tithi) புதன் கிழமை யும் கூடிய திருவோண நாளில் (the day of Sravana) இது கடைபெற்றது.

எனவே, இச் சாசனம் ஏற்பட்ட காலம் கி. பி. 1046 ஆம் ஆண்டு, திசம்பர்த் திங்கள் மூன்றாம் நாள் ஆகும்.

இராசாதிராசன் : மெய்க்கீர்த்தி

ஸ்வஸ்தி ஸ்ரீ —
திங்களேர் தருதன் பொங்கல்வெண் குடைக்கீழ்
நிலமக னிலவு மலர்மகட் புணர்ந்து
செங்கோ லோச்சிக் கருங்கலி கடிந்து
தன்சிறிய தாதை யுந்[1]திருத் தமையனுங்[2]

---

† இராசாதிராசன், இராசேந்திரனுக்குப்பின் கி. பி. 1018 முதல் 1053 வரை சோழநாட்டை ஆண்டான்.

ஸ்வஸ்தி ஸ்ரீ: இது சாசனங்களில் மங்கல மாகவரும் வடமொ ழித் தொடர்.

திங்களேர்தரு - திங்களையொத்த; இவன் சாசனம் 'திங்களேர் தரு', 'திங்களேர் பெறவளர்' என்ற தொடக்கம் உடையன. தன் பொங்கல் வெண்குடை - தனது மாலை தொங்கவிடப் பெற்ற வெண் கொற்றக் குடை. 'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும், கொங்கலர்தார்ச் செண்ணி குளிர்வெண் குடை போன்றிவ், வங்கண் உலகளித்தலான்' என்ற சிலப்பதிகார அடிகள் இங்கு நினைக்கற் பாலன.

நிலமகள் நிலவு: பூதேவனை தங்க; மலர்மகள் புணர்ந்து - இலக்குமி கூடியிருந்து; செங்கோலோச்சி - ஆட்சிபுரிந்து; கருங்கலி கடிந்து - துன்பம் நீக்கி; தன் சிறிய தாதை: இவன் பெயர் இங்கு குறிக்கப்படவில்லை; இரண்டாம் இராசேந்திரன் மெய்க் கீர்த்தியில், 'தன் சிறிய தாதையாகிய எறிவளி கங்கைகொண்ட சோழனை' என்று காணப்படுகிறது. திருத்தமையன்: இவன் பெயர், வீராராஜேந்திரன்

குறிகொடன் னினங்கோக் கலோயு[3] னெறியுணர்
தன்றிருப் புதல்வர் தம்மையுந் துன்றெழில்[4]
வானவன் வில்லவன்[5] மீனவன் கங்க
னிலங்கையர்க்[6] கிறைவன் பொலந்தழற்[7] பல்லவன்
கன்னகுச் சியர்கா வலனெனப்[8] பொன்னணி
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர்புக
ழாங்கவர்க் கவர்கா டருளிப் பாங்குற[9]
மன்னுபல் லாழியுட்[10] டென்னவர் மூவருள்

மெய்க்கீர்த்தியில் 'அரும் பெறற் றமயனை மூன் வந்தான் யிரும்புவி புகழ் இராசராசனென் றெருளின்மணி மூடிசூட்டி' என்று குறிக்கப் பட்டுள்ளது. இவன் பெயர் 'ஆள வந்தான்' என்பாரு மூளர்.

குறிகோள் - பெயர் பெற்ற, இளங்கோக்கள் - தம்பியர்; இவர் கள் பெயர் இராசேந்திரன் மெய்க்கீர்த்தியில் மும்முடிச்சோழன், வீரசோழன், மதுராந்தகன், பராந்தகன் என்று குறிக்கப்பட்டுள்ளன.

நெறியுணர்தன் திருப் புதல்வர் - அரசியல் நெறியுணர்ந்த தன் மக்கள்; துன்று எழில் - அழகமைந்த.

வானவன் - சோழமன்னன்; வல்லவன் - சாளுக்கிய மன்னன்; மீனவன் - பாண்டிய மன்னன்; கங்கன் - கங்கபாடி மன்னன்.

இலங்கையர்கி கிறைவன் - இலங்கை மன்னன்; பொலங்கழல் - பொன்னலான வீரக்கழல்.

கன்னதச்சியர் - கன்யாகுப்ஜம் என்னும் இடத்தவர்; காவலன் - அரசன்.

பொன்னணிசீ சுடர்மணி மகுடம் சூட்டி - பொன்னலழகு செய்த மணிகள் பதித்த மகுடம் சூட்டி என்பது. படர்புகழ் - புகழ் பெற்ற.

ஆங்கவர்கீத அவர் நாடருளி: தன் சிறியதாலை, தலையன், புதல்வர் ஆகிவர்களுக்கு சோழர், சாளுக்கியர், பாண்டியர், கங்கர், இலங்கையர், பல்லவர், கன்னகுச்சியர் என்பவர்களின் நாட்டை ஆளும்படிச் செய்து என்பது. பாங்குற - சிறப்பாக.

மன்னுபல் லாழி - நிரம்பிய பல ஆண்டில்; தென்வர் மூவர் - இலங்கையர், சோழர், பாண்டியர் ஆகிய மூவர்.

மானை பாணன் பொன்முடி யாழ்[11]
பருமணிப் பசுந்தலை பொருகளத் தரிந்து
வாளை விபகழல் வீரகே ளனது
முனைவயிற் பிடித்துத் தனது வாரணக்[12]
கதக்க ளிற்றினு[13] ளுதைப்பித் தருளி
அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன்
கொற்றவெண் குடையுங் கற்றைவெண் கவரியும்
சிங்கா தனமும் வெங்களத் திழந்துதன்
முடிவிழுத் தலைவிரித் தடிதளர்ந் தோடத்
தொல்லை[14] முல்லையூர்த் துரத்தி யொல்கலில்
வேணாட் டரசைச் சேணாட் டெடாதுக்கி

மானைபாணன் ..... அரிந்து: மானைபாணன - மான்தசை ஆபரணமாக வுடையவன். இது பாண்டியர்களுக்கும், இலங்கை மன்னருக்கும் பொதுவாக வழங்கப்பட்ட பெயர். இப்பெயரையுடைய இலங்கை மன்னன் ஒருவன இராசாதித்தனால தலை கொய்யப்பட்ட செய்தி இதுவாகும்.

வாளாவிய கழல் - நீண்ட அகன்றகழல்; வீரகோளன் - இவன் சோழ நாட்டை ஆண்ட மன்னன்.

முனைவயில் - போர்முனையிடத்து; வாரணக் கதக்கு களிறு - 'அத்திவாரணம்' என்னும் பெயரையுடைய கோபமிகுந்த யானை என்பது; இது சோழமன்னனுக் குரியது. உதைப்பித்தருளி - காலால் தலையை இடறச் செய்து; இவ்வாறு தலை இடறப்பட்டவன் வீரகோளனாகும்.

அந்தமில் - முடிவில்லாத; சுந்தரபாண்டியன்: இவன் இராசாதித்தனுக்குத் தோற்று தன் வெண்கொற்றக் குடை, வெண்கவரி, சிங்காதனம் முதலியவற்றை யிழந்தான். சோழன் இவனை பின் தொடர்ந்து துரத்த, இவன் தலைவிரி கோலமாய் முல்லையூர்வரை யோடி ஒளிந்தான். வெங்களம் - போர்க்களம்.

முடிவிழ - கிரீடம் கீழே விழ.

தொல்லை முல்லையூர் - பழமை தாங்கிய முல்லையூர்; ஒல்கல் - பின் வாங்குதல்.

வேணாட் டரசைச் சேணாட் டெடாதுக்கி: இக்காலத்தில் மலைநாடு பலபகுதிகளாகப் பிரிந்து, ஒவ்வொரு பிரிவும் தனித்தனி அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அவ்வாறு பிரிந்த பகுதிகளில் வேணாடு

மேவுபுக ழிராமகுட மூவர்கெட மூளிச்சு
மிடல்கெழூ[15] வில்லவன் சூடார்மடிக் கொண்டுதன்
காடுவிட் டோடிக் காடுபுக் கொளிப்ப
வஞ்சியம் புதுமலர் மலிந்தாங் கெஞ்சலில்
வேலைகெழு காந்தளூர்ச் சாலை[16] கலமறுத்[17]
தாகவ மல்லனு மஞ்ச கேவுதன்[18]
தாங்கரும் படையா லாங்கவன் சேனையுட்[19]

ஒன்று. இராசாதிராசன் தன் மலாடப்போரின் தொடக்கத்தில் வேணாட்டைத் தாக்கி, அதன் அரசனை வின்னைகத் தேற்றினான். சேணாடு - சுவாக்கம்.

இராமதட ழுவர் கெட முனிந்து: இராமகுடமென்பது, எலி மலைக்குப் பக்கத்திலே யிருந்த ஒரு சிறு இராச்சியமாகும். அவ்வி டத்தில் ஆண்டுவந்த அரசர்கள் மூவரிக வமிசத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் கண்டார் கார்வர்மன் ஒருவன்; அவனுக்கு மற்றொரு பெயர், 'இராமகுட மூவர் திருவடி' எனபது. அவனுடன் இராசாதி ராசன் போர்செய்து, அவனை அழித்தான். இனி, இத்தொடரை 'இரா + மகுடம எனப் பிரித்து 'மகுடமிழந்த இலங்கையரசன், வீரகே ரளன, சுந்தரபாண்டியன ஆகிய மூவர்' எனறு பொருள் கொள்வாரு முளர். முனனர் கூறியவற்றால், அது பொருந்தாமை காண்க.

மிடல்கெழு வில்லவன் - வலிமை மிக்க சேரன்; வில்லவன் - வில்லைக் கொடியாக வுடையவன். தொடிமடி கோண்டு - வயிறு மடித் துக்கொண்டு; இராசாதிராசன், சேரன் ஒருவனை வயிறுமடித்துக் கொண்டு ஓடும்படி செய்தான் என்றபடி.

வஞ்சியம் புதுமலர் மலைந்து - வஞ்சிமாலை சூடி; எஞ்சலில் - ஒய்வில்லாத.

வேலை கெழு - கடல் மோதும்; காந்தளூர்ச் சாலை கலமறுத்து - காந்தளூர் அறச்சாலையில் உண்ணவேண்டியவர்கள் இத்தனைபேர் என உணகலம் வரையறுத்தி.

ஆகவமல்லனு மஞ்சுகேவுதன்: 'ஆகவமல்லனும் அஞ்ச, கேவு தன்' எனபது. கேவுதன், ஆகவமல்லன் படைத் தலைவர்களில் ஒரு வனாகலாம்.

தாங்கரும் படையால் - சோழனது எதிர்ப்பதற்கரிய படைவலி யால்; அவன் சேனை - ஆகவமல்லன் படை.

கண்டப் பயனும் கங்கா தரனும்
வண்டமர் கனிற்விறடு மடியத் தின்டிறல்
விருதர்[20] விக்கியும் விசயா தித்தனும்
கருமூரட் சாங்க மய்யனு[21] முதலினர்
சமர பீருவொத் தோடைய விரிசடர்ப்
பொன்றே டைக்கரி[22] புரவியொடும் பிடித்துத்[23]
தன்ற டையிற் சயங்கொண் டொன்னர்
கொள்ளிப் பாக்கை யுள்ளெரி மடுப்பித்
தொருதனித் தண்டாற் பொருகட லிலங்கையர்[24]
கோமான் விக்கிர மபாகுவின் மகுடமும்

கண்டப்பயனும் கங்காதரனும்: இவர்கள் இருவரும் ஆகவமல்லன் படைத் தலைவர்கள். வண்டமர் கள்நிறைந்த மடியு: போரில் கண்டப்பயனும், கங்காதரனும் தங்கள் களிறுகளோடும் மடிய என்பது. வண்டமர் களிறு = மதக்களிறு.

விருதர் விக்கியும் விசயாதித்தனும்: ஆகவமல்லன் மக்களான விக்கிரமாதித்தனும், விசயாதித்தனும் என்பது. விருதர்-வீரமிக்கவர்; விக்கி - விக்கிரமாதித்தன்.

கருமூரட் சாங்கமய்யனும் = மிக்கவலிமையுடைய சாங்கமய்யன்; இவனும் ஆகவமல்லன் படைத் தலைவர்களில் ஒருவன். முதலினர் = விக்கிரமாதித்தன், விசயாதித்தன், சாங்கமய்யன் முதலியோர்.

சமரபீரு ஒத்து உடைய = சமரில் அச்சங்கொண்டு உடைந்தோட; சமரபீரு - சமரில் கொள்ளும் அச்சம். (Coward)

பொன் றொடைகீ கரி - அழகிய தெற்றிப்பட்ட முடைய யானை; புரவி - குதிரை.

தன்னுடையில் = தன் முயற்சியில்; ஒன்னர் = பகைவர்.

கொள்ளிப்பாக்கை: இது நிஜாம் இராச்சியத்துச் சிக்கந்தராபாத்துக்கு காற்பதாண்டு மைல் தூரத்திலுள்ளது; இக்காலத்தில் இது சாளுக்கிய ராட்சியின்கீழ் இருந்தது.

ஒரு தனித் தண்டு - ஒப்பற்ற பெரும்படை; இலங்கையர் கோமான் விக்கிரமபாது: இவன் இயற்பெயர் காசிபன் என்பது; மகிந்தனுக்கு மகன். இராசேந்திரன் கி. பி. 1017-ஆம் ஆண்டு ஈழமண்டலமுழுவதையும் கொண்டு, மகிந்தனைச் சோழநாட்டில் சிறைப்

மூன்றனைக் குடைந்த[25] தென்றமிழ் மண்டல
மூழுவ தும்பிழந் தெழுகடல்[26] வீழும்
புக்கவிலங் கேச ரூகிய[27] விக்கிரம
பாண்டியன் பருமணி மகுடமும் காண்டகு
தன்ன வாக்கித்தன்[28] கன்னகுச் சியினும்[29]
ஆர்கலி யீழஞ் சிரிதென் றெண்ணி

பதுதி வைத்திருந்தான். அவன் மகன் காசிபனைச் சிங்களவர்கள் இரகசியமாக வளர்த்து, எற்றகாலத்தில் இலங்கையின் ஒரு பகுதியான உரோகண நாட்டிற்கு அரசனாக்கி 'விக்கிரமபாகு' என்ற பெயரோடு கி. பி. 1029-ஆம் ஆண்டு முடி சூட்டி வைத்தனர். அவன் இராசாதிராசன் படைகளால் வெல்லப்பட்டு, மூடியிழந்தான்.

மூன் தனைத்துடைந்த – முன்பு தனக்குத் தோற்ற; தென் தமிழ் மண்டலம் - பாண்டிய மண்டலம்; எழுகடலீழம் - ஆலெயெழும் கடல் சூழ்ந்த ஈழநாடு.

ஈழம் புக்க இலங்கேசனாகிய விக்கிரமபாண்டியன்: விக்கிரம பாண்டியன் தமிழ் நாட்டின் தென்பாகத்தை ஆண்டுவந்தவன். இவன் தன் நாட்டை இழந்து பகைவருக்குப் பயந்து இலங்கை நாட்டுக்கு ஓடி, அதை ஆண்டு வந்தான்; ஆதலால் 'ஈழம் புக்க இலங்கேசன்' என்று அழைக்கப்பட்டான் என்று தெரிகிறது. மகாவம்சத்தில் கூறப்படும் விக்கிரமபாண்டும், இவனும் ஒன்று என்பர். அவன் தன் பகைவருக்குப் பயந்து இலங்கையை விட்டுத் தூரவு நாட்டில் வந்து சிலகாலம் இருந்தான் என்றும், பின் தன் தந்தை மகாலானசிதது என்பவன இறந்த செய்தி கேட்டு மீட்டும், இலங்கை புக்கு தந்தை ஆண்ட உரோகண நாட்டை ஆண்டு வந்தானென்றும் மகாவம்சம் கூறும்.

இதனால் இக்காலத்தில் பாண்டிய சோள மன்னர்களும், இலங்கையரசர்களும் தங்களுக்குள் மணவினை செய்துகொண்டு உறவு பெற்றிருந்தனர் என்றும், அவர்கள் தங்கள் மூவருக்கும் பொதுவான எதிரியாயிருந்த சோழர்களை வெல்ல பொரிதும் முயன்றனர் என்றும் தெரிகிறது.

காண்டது – வெளிப்படையாக.

தன் கன்ன துச்சியினும் - தன்னுட்சிக் குட்பட்ட கன்யாகுப்ஜம் என்னும் நாட்டை விட.

ஆர்கலி - கடல்; ஈழம் - ஈழ நாடு; சீரிதென்று - சிறப்புடையது என்று.

உளங்கொளைக் காடு[30] தன் னுறவொடும்[32] புகுந்து
வினங்குமுடி கவித்த வீரசலா மேகன்
போர்க்களத்[32] தஞ்சித்தன் கார்க்களி றிழந்து
கவ்வையுற் றோடக்[33] காதலி யொடுங்கன்
றவ்வையைப் பிடித்துத்[34] தாயைமூக் கரிய
ஆங்கவ மானம் நீங்குதற் காக
மீட்டும்[35] வந்து வாட்டொழில்[36] புரிந்து
வெங்களத் துலந்த[37]வச் சிங்களத் தரசன்[38]
பொன்னணி முடியுங் கன்னான் வழிவந்
துரைகொ ளீழத் தரசரு கிய[39]நீ
வல்லவ மதனை ராசன்[40] மெல்லொளித்

உளங்கொளந்நாடு - உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த இலங்கை நாடு. தன் உறவோடும் - தன் இனத்தவரோடும்.

வினங்து முடிநவித்த வீரசலாமேகன்: இவன் கன்பாகுப்ஜத்தினின்றும் இலங்கைக்குச் சென்று, அரசைப் பிடித்து ஆண்டவன்; இலங்கையரசனாகிய விக்கிரமபாண்டு என்பவன் இவனோடு பொருது இவனால் தலை துணியப்பட்டான். மகா வமிசத்தில் ஜகதீபாலன் என்று கூறப்படுபவன், இவனே என்பர். இவன் போரில் இராசாதிராசனுக்குப் பயந்து, தன் யானையினின்றும் இழிந்து, பலர் பழிக்கப் புறங்காட்டி ஓடினனென்றும், சோழர்கள் இவன் தேவி, தமக்கை இருவரையும் சிறைப்படுத்தி, தாயை மூக்கரிந்து அவமானப் படுத்தினரென்றும், அவ்வவமானம் தாங்கமாட்டாத இவன், மீட்டும் வந்து வாட்போர் செய்து போர்க்களத்தே மாண்டான் என்றும் தெரிகிறது.

காற்கிளிறு - கரிய யானை; கவ்வை - பழிச்சொல்; காதலி - தேவி; அவ்வை - தமக்கை; அவமானம் - இழிவு.

வாட்டொழில் புரிந்து - வாட்போர் செய்து.

வெங்களத் துலந்தவச் சிங்களத் தரசன்: போர்க்களத்தே மடிந்த சிங்களத்தரசனான வீரசலாமேகன் என்பது.

கன்னான் வழிவந்து: கிருஷ்ணன் வம்சத்தில் தோன்றி என்பது. கன்னான் - கண்ணபிரான், கிருஷ்ணன்.

உரைகொள் - புகழ் பெற்ற; உறைகொள் என்று பாடமோதின் 'தங்கிய' என்று பொருள் கொள்க. ஈழத் தரசனாகிய சீவல்லவ மதனராசன்: இவன் கன்னான் வழிவந்து ஈழதேசத்து ஆட்சிபுரிந்

தடமணி முடியுங் கொண்டு வடபுலத்
திருகா லாவதும் பொருபடை நடாத்திக்[41]
கண்டான்[42] தினகான் காணன் கணவதி
வண்டலர் தெரியன் மதுசூ தனனென்[43]
றிணைப்பல வரைசனை [44]முனைவயிற் றாத்தி[45]
வம்பலர் தருபொழிற் கம்பிலி நகருட்
சிலைக்கியர் மாளிகை தகர்ப்பித் திளக்கமில்[46]
வில்லவர் மீனவர் வேள்குலச் சிலைக்கியர்[47]
வல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர்
சிந்தூ ரையணர் சிங்களர் பங்களர்

தவன். சீ வல்லவ மதனராசன் என்பது இவனது இயற்பெயர். இரா சாதிராசன் ஆட்சியில், இலங்கையர் கோமான் விக்கிரமபாகு, இலங் கேசனெகிய விக்கிரமபாண்டியன், வீரசலாமேகன், ஈழத் தரசனெகிய சீ வல்லவ மதனராசன் ஆகிய இலங்கை மன்னர் நால்வர் முடிகளும் கொள்ளப்பட்டன என்று தெரிகிறது.

வடபுலம் - வடநாடு; அஃதாவது, மேலைச் சாளுக்கிய நாடும், அதனைச் சார்ந்தனவு மாகும்.

இருகா லாவதும் — இரண்டாவது தடவையும்; பொருபடை - போர் செய்யும்படை.

கண்டான் .....நெனைப் பல வரைசனை: கண்டான் முதலி யோர் வடபுலத்தின் பகுதிகளை யாண்ட சிற்றரசர்கள். வண்டலர் தெரியல் - வண்டுகள் மொய்க்கப் பெற்ற மலர் மாலை. முனைவயின் - போர்க் களத்து.

வம்பலர் தருபொழில் கம்பிலி நகர்: புதிய மலர்களைத் தரு கின்ற சோலைகள் நிறைந்த கம்பிலி நகர் என்பது. இது பல்லாரி சில்லா, ஹொஸ்பெட் தாலூகாவிலுள்ளது. இப்பொழுது இதனைக் 'கம்பிலித் தோட்டம்' என்பர். இதில் சாளுக்கியர் மாளிகை யொன் றிருந்தது.

தகர்ப்பித்து - அழித்து; இளக்கமில் - இடக்கமில்லாத.

வில்லவர் - சேரர்; மீனவர் - பாண்டியர்; வேள்குலச் சிலைக் கியர் - கங்கர் குலத்துச் சாளுக்கியர்; வல்லவர் - பல்லவர் குலத்துச் சாளுக்கியர்; கோசலர் - கோசல நாட்டவர்; வங்கணர் - வங்காளத் தவர்; கொங்கணர் - கொங்கு நாட்டவர்; சிந்தூரர் - சிந்து நாட்ட வர்; சிங்களர் - சிங்கள நாட்டவர்; பங்களர் - பங்காள தேசத்தவர்.

அந்நிரர் முகலிய வரைசரிடு திறைகளும்
ஆறிலொன றவனியுட் கூறுகொள் பொருள்களும்
உகந்து[18]கான் மறையவர் முகந்துகொளக் கொடுத்து[19]
விசுவலோ கத்தும்[50] விளங்கமனு நெறிநின்
றசுவமே தஞ்செய்[51] தனைசுவீற் றிருந்த
சயங்கொண்ட சோழ னுபயர்ந்த பெரும்புகழ்க்[52]
கோவிரா சகேசரி வர்ம ரான[53]
உடையபார் நீராசாதிராச தேவர்க்கு யாண்டு.
உலகு ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து செங்

அந்நிரர் - ஆந்திரர்; அரைசரிடு திறைகளும்-சோர் முதலிய அரசர்கள் கொடுகின்ற கப்பங்களும் என்பது. இதனால இராசாதிராசன் ஆட்சியின் கீழ் சோர், பாண்டியர், வேள்குலச் சான்றோர்கள், வல்லவர், கொசலர், வங்கணர், கொங்கணர், சிந்துரர், சிங்களர், பங்களர், ஆந்திரர் முதலியோர் சிற்றரசராயிருந்து வரி செலுத்தினர் என்று தெரிகிறது.

ஆறிலொன்றவனியுட் கூறுகொள் பொருள்களும்: இராசாதிராசன் தன் குடிகளிடத்து ஆறிலொரு கடமை கொண்டான் என்பது இதனால் போதரும்.

உகந்து - பெற்று; 'முகந்து' என்றும் பாடம் கொள்வர். முகந்து கொள - பெற.

விசுவலோகம் - தேவலோகம்; விளங்கி - புகழுண்டாக; மனு நெறி நின்று - மனுவென்னு மரசன வகுத்த வழியே நின்று.

அசுவமேதம் செய்து - அசுவமேதம் என்னும் யாகத்தைச் செய்து; அசுவமேதம் என்பது, உத்தமமான குதிரையின நெற்றியில் அரசனது வீரம் முதலியவைகளை வரைந்த பட்டத்தைக் கட்டி பூமி பிரதக்ஷணம செயவித்து, பின யாக கிரியை செய்வது. இவகு அசுவம் தெய்வமாகக் கருதப்படும். இதனால் அரசன் ஏகசக்கிராதிபதி என்ற பெயர் பெறுவான்.

சயங்கொண்ட.....ராச கேசரிவர்மன்: சயங்கொண்ட சோழன், இராசகேசரி வர்மன் என்பன இராசாதிராசனுக் குரிய சிறபபுப் பெயர்கள்.

சயங்கொண்ட சோழமண்டலம் - சோழ இராச்யத்தின் ஒன்பது மண்டலங்களில் ஒன்றன தொண்டை நாடு.

காட்டுக் கோட்டத்து மாகறனார் நாட்டு, மணிமங்கலமான சதுர் சூளாமணிச் சதுர்வேதி மங்கலத்து மஹா ஸபையோம் எம்பூர் ப்ரஹ்ம ஸ்தானத்தே தநுசாயற்று பூர்வபக்ஷத்து த்விதியையும், புதன்கிழமையும் பெற்ற திருவோணத்து நாள்க் கூட்டக் குறைவறக் கூடியிருந்து பணிப்பணியால் பணித்த இவ்வூர் ஸ்ரீமத் த்வாராபதியான ஸ்ரீ காமக்கோடி விண்ணகர் ஆழ்வார்க்கு திருவமுதுக்கும் அர்ச்சனாபோகத்துக்கும் இத்

செங்காட்டுக் கோட்டத்து மாகறனார் நாட்டு: தொண்டைநாடு, சோழநாட்டினின்றும் சயஸிம்ஹனென்ற சோழ மண்டலமென்ற பெயர் பெற்று, பல கோட்டங்களாகவும், ஒவ்வொரு கோட்டமும் பல நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள், மாகறனார் நாடு செங்காட்டுக் கோட்டத்தைச் சேர்ந்தது.

மணிமங்கலம் - இதன் மற்றொரு பெயர் இராச சூளாமணிச் சதுர்வேதி மங்கலம் என்பது. மஹா சபையோம் - ஊர்ச் சபையினர்.

ப்ரஹ்ம ஸ்தானம் - வேதம் கற்பிக்கும் இடம்; எனவே, அக் காலத்தில் மாணவர் கல்வி கற்குமிடத்திலும் ஊர் சபை கூடும் வழக்கமிருந்ததென்று தெரிகிறது.

தநு நாயறு - தநுர்மாதம், மார்கழி மாதம் (Month of Markali=December — January). பூர்வபக்ஷம் - வளர்பிறை காலம்.

திருவோணம்: இருபத்திரண்டாவது நாள்.

கூட்டக் குறைவறக் கூடியிருந்து — சபை கூட்ட எல்லாரும் கூடியிருந்து. பணிப் பணியால் பணித்த - முறையாய்த் திருத்தொண்டு செய்யப்பெற்ற.

ஸ்ரீமத்: ஸ்ரீமதி என்பதன் ஆண்பாற்பெயர்; இது இறைவன் பெயருக்கும், இறைவனருள் பெற்றார் பெயருக்கும் முன் வழங்கும் மரியாதைச் சொல்.

த்வாராபதி: துவாரகைக்கு அதிபதி; கிருஷ்ணன் என்பது.

ஸ்ரீ காமக்கோடி விண்ணக ராழ்வார்: இது மணிமங்கலத்தார் கோயில் விஷ்ணுவின் பெயர். திருவமுது: நிவேதனவுணவு (Boiled rice offered to an idol or great person). அர்ச்சனாபோகம் - கோயில் அர்ச்சகர்களுக்கு விடப்படும் மானியம்.

இத்தேவர் பண்டாரம் - இக்கோயில் பணம்.

தேவர் பண்டாரத்தே நூறுகாசு பொலிசைக்கு கொண்டு, இக்காசு நூற்றுலும் வந்த பொலிசைக்கு இறைகாசுத்தூட்டாக இறையிழிக்கிக் குடுத்த நிலமாவது —

பெருநல்வதிக்கு வடக்கு, பாதிரிக்கழனி மேலைக் காலுக்கு கிழக்கு - விளை நிலங் குழி மூன்னூறும், பாதிரிக் கழனி நடுவிற்காலுக்கு மேற்கு-விளை நிலக் குழி இருனூரும், பெருநல்வதிக்கு தெற்கு, ஆலைமேட்டில் மனையறுதி வாய்க் காலுக்கு கிழக்கு - விளை நிலம் குழி நானூறும், இக்காலுக்கு கிழக்கு - விளை நிலம் குழி இருனூறும், தெந்திரிய மரத்தின் மேலைக்காலுக்கு மேற்கு - நிலம் குழி மூன்னூறும், சுண்டி

பொலிசைசித்து கொண்டு - வட்டிக்கு வாங்கி; பொலிசை - வட்டி (interest); இறைகாத்தூட்டாக-நிலவரி, குடி வரிகளை அநுபவிக்குமபடியாக (with the enjoyment of Revenue and Taxes); இறை - நிலவரி (Revenue); காசம் - குடிவரி (Taxes); இறை யிழிச்சி - வரி நீக்கி.

பெருநல் வதிதீந்த வடகீது: சாசனங்களில் நிலங்களுக்கு எல்லை கூறுங்கால் பெரும்பாலும் பெரும் வழிகளையும், வாய்க்காலையுமே கூறுவது வழக்கம். உதாரணமாக பெருநல்வதிக்கு வடக்கு, சுண்டிலேரி வதிக்குக் கிழக்கு என்றும், பாதிரிக்கழனி மேலைக்காலுக்கு கிழக்கு, நடுவிற்காலுக்கு மேற்கு, மனையறுதி வாய்க்காலுக்குக் கிழக்கு, நந்தவனத் தோட்டக்காலுக்கு மேற்கு, தெந்திரிய மரத்தின் மேலைக்காலுக்கு மேற்கு, பாலைவனறை வாய்க்காலுக்கு வடக்கு என்றும் வந்திருத்தல் காண்க. இனி, 'திருவையோத்திதேவர் நிலம் குழி இருநூற்றைம்பதுக்கு கிழக்கு' என்பதால் சிறுபான்மை அயலார் நிலமும் எல்லையாகக் கூறப்படும் என்று தெரிகிறது. வதி - வழி.

குழி: இது ஒரு நீட்டலளவை; தென்னாட்டில் 33 அங்குல நீள அகலமுள்ள இடத்தை ஒரு குழி என்பர்.

பாதிரிக் கழனி - பாதிரி மரத்தினையுடைய வயல்; கழனி - வயல்; மேலைக்கால் - மேலைப்பக்கத்துக் கால்; கால் - வாய்க்கால். நடுவிற்கால் - நடுவிடத்து வாய்க்கால்.

ஆலைமேடு: கருப்பஞ்சாறு எடுக்கும் ஆலையுள்ள மேட்டு நிலம் போலும். நந்தவனம் - பூந்தோட்டம்; தோட்டக்கால் - கிணற்றுப் பாய்ச்சலுள்ள கொல்லை நிலம். தெந்திரிய மரம் - தெந்திமரம், தேக்கு வகை. சுண்டிலேரி வதி: சுண்டிலேரிக்குச் செல்லும் வழி என்பது.

லெனி வதிக்கு கிழக்கு-யினை நிலம் குழி ஈராறும், பாவை நிறைவாய்க் காலுக்கு வடக்கு, திருவலோத்தி தேவர் நிலங் குழி இருபத்தைம்பதுக்கு கிழக்கு, - தடியிரண்டிநால் குழி இருபாறும் ஆகத் தேவர் நிலங் குழி இரண்டாயிரத்திருநூறுமை இறைகரத்தாட்டாக சந்திராதித்தவர் நிற்பதாக திருவழுதுக்கும் அச்சுதாபோகத்துக்கும் இறையிழிச்சி சிலாலேகை செய்து குடுத்தோம்

(பாட பேதம்) 1. சிறிய தாணதையையும். 2 தமையனையும். 3. தன்னிளங் கோக்களையும். 4. தன்றிய தெறுசில். 5. வல்லவன். 6 கங்கநிலங்கையற்கிறைவன். 7 புலங்கழல். 8 காவலனென. 9. பாங்குறு. 10. ..... 11. ஆராப். 12. தனத்திவாரணக். 13. கதக் களிற்று. 14. தொல்லைப். 15. விடல் தெழு. 16. காந்தளுச் சாலைக். 17. கலமறுப்பித். 18. மஞ்சதேதிவுக், மஞ்சதேதிவுக்தன். 19. சேனையிற். 20. விருதரை. 21. சாங்கமபனும். 22. பொன் னேடையங்கரி. 23. பிடித்து. 24. இலங்கையர். 25. உடைந்து. 26. எழ்கடல் 27. விலங்கேசுகிராகிய. 28 தன்னதாகிய. 29. கன் னக் குச்சியினும். 30. உளங்கொடன்றெடு. 31. உறவோடும். 32. பொருகளத். 33. கவ்வையிறனடிக். 34. பிடித்து, 35. மீண்டும். 36. விட்டெழுதில். 37. உலர்ந்த. 38. சிங்களத் தரைசன். 39. உறை கெள வீழத் தரைசனாகிய. 40. சிவல்லவன் மதனராஜன். 41.

சுண்டில் - தொட்டால்வாடி என்னும் ஒரு பூண்டு வகை. அப்பூண்டு அங்கு அதிகம் வளருதல் காரணமாக அவ்வேரி அப்பெயர் பெற் றது போலும். எரி - குளம்.

பாவைதுறை வாய்க்கால்: பாவை - பதுமை; துறை - நீர்த் துறை; அத்துறையில் சிறுகோயில் ஒன்று இருந்ததென்று கொள்ள வேண்டும். திருவலோத்திதேவர்: இவருக்கு மணிமங்கலத்தில் 250 குழி நிலம் இருந்ததென்று கூறப்படுகிறது.

தடி இரண்டிநால் - வயல் இரண்டாக; தடி - வயல்.

ஆகத் தேவர் நிலம் தூழி இரண்டாயிரத் திருநூறும்:- ஆகக் கோயில் நிலம் 2200 குழியும் என்பது. தேவர் நிலம் - கோயில் நிலம்.

சந்திராதித்தவர் நிற்பதாக:- சந்திர சூரியர் உள்ள காலமளவும். சிலாலேகை செய்து - கல்லில் எழுதி; சிலை - கல்; இலேகை - எழுத்து. குடுத்தோம் - (மணிமங்கலம் மகாசபையோம்) கொடுத் தோம் என்பது.

கடாரத்தி. 42 கண்டூர். 43. வண்டலூர் தெரியல் மதி சூதனறை னைப். 44. அமையனை. 45. பிடித்து. 46. சகப்பிச்தினை தமில். 47. வேளகுலர் சளுக்கியர். 48. மூசுத்து. 49. குடத்து. 50. விஸ்வ லோசத்து. 51. அஸ்வமெதஞ் செய். 52. பெரும்புகழ். 53. கொவி ராஜ கேஸரி வர்மான.

---

5. அமண்பாக்கம் சாசனம் *

முகவுரை.

அமண் பாக்கம் என்பது ஓர் ஊர்; அவ்வூரிலுள்ள சில நிலங்களைக் கொடுத்த செய்தி பற்றிய சாசனம் 'அமண் பாக்கம் சாசனம்' எனப்பட்டது. இது செங்கல்பட்டு சில்லாவி லுள்ள மணிமங்கலம் என்னும் கிராமத்து இராசகேசரிபெரு மாள் கோயில் உட்பிராகாரத்தின் தென்மேற்சுவரில் காணப் படுகிறது.

இதன் முற் பகுதியில் கொப்பத்துப் போரைப்பற்றிய விரிவான செய்தி கூறப்பட்டுள்ளது. அதாவது, இராசேந் திர தேவன் † எனனும் சோழ அரசன் இரட்ட மண்டலத் தின் மீது படையெடுக்க, அதை யாண்டு வந்த மேலைச்சாளுக் கிய குலத்தவனை முதலாம் சோமேசுவரன் என்னும் பெய ரையுடைய ஆகவமல்லன், அவனைக் கொப்பம் என்னுமிடத் தில் எதிர்த்துத் தோல்வியுற்றான்; அங்கு அவனுடைய படைத் தலைவர்கள் பலர் இறந்தனர் என்பது. பிற்பகுதியில், ஸ்ரீ இராசேந்திர தேவன் ஆட்சியின் நான்காவது ஆண்டு என்பத்திரண்டாவது நாள், இராச சூளாமணிச் சதுர்வேதி மங்கலம் என்னுமை மணிமங்கலத்து மகா சபையினர் அமண் பாக்கம் என்னுமை கிராமத்திலுள்ள சில நிலங்களை, அவர்கள் ஊர்க் கோயிலுக்குக் கொடுத்த செய்தி காணப்படுகிறது.

---

* இது தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் மூன்றாவது தொகுதியின் முதலாவது பகுதியைச் சேர்ந்ததாகும்.

† இராசேந்திர தேவன்: இவன் இராசேந்திர சோழனுக்கு மகன்; இராசாதிராசனுக்குத் தம்பி. இராசாதிராசன் ஆட்சிகாலத் தில் இவன் இளவரசனாக இருந்தான். அவன் கொப்பத்துப்போரில் இறந்ததும், சோழ இராச்சியத்திற்கு அரசனானான். கி. பி. 1052 முதல் 1064 வரை ஆண்டான்.

இச் சாசனம் ஏற்பட்ட காலம் கி. பி. 1015 ஆம் ஆண்டு †† எனலாம்.

இராசேந்திர தேவன்: மெய்க்கீர்த்தி.

ஸ்வஸ்தி ஸ்ரீ —

திருமாது புவியெனும் பெருமாது நிவர்தன்[1]
மாதே வியர்க ளாக மீதொளிர்[2]
வெண்குடை யுயர்த்துத்[3] தின்கலி பெயர்த்துத்[4] தன்
சிறிய தாதை யாகிய வெறிவலி[5]
கங்கை கொண்ட சோழனைப் பொங்கிதல்[6]
இருமுடிச் சோழ[7] னென்றும் பொருமுடன்
றன்றிருத் தம்பியர் தம்மூள் வென்றிகொள்

---

†† கொப்புத்துப்போர் ஆகவமல்லன் காலத்தில் (கி. பி. 1042-1068) நடைபெற்றதாலும், இராசேந்திரதேவன் ஆட்சியின் நான்காவது ஆண்டு கி. பி. 1055 - '56 ஆகலானும் இச் சாசனம் ஏற்பட்ட காலம் கி பி. 1015 என்றல் பொருந்தாது.

ஸ்வஸ்தி ஸ்ரீ: இது சாசனங்களின் தொடக்கத்தில் மங்கலமாக வரும் வடமொழித் தொடர்.

திருமாது புவியெனும் பெருமாதர்: இது இராசேந்திரதேவன் சாசனத்தின் தொடக்கமாக வரும் தொடர். அவனுடைய மற்றொரு சாசனம் 'திருமகள் மருவிய' என்று தொடங்குகிறது. திருமாது - இலக்குமி; புவியெனும் பெருமாது - பூதேவதை.

இவர், தன் மாதேவியர்க ளாக: திருமாது பூமாது ஆகிய இவர்கள் தனக்கு மாதேவியர்களா யிருக்க என்பது. மீதொளிர் வெண் குடை யுயர்த்து - மேலெழுந்து பிரகாசிக்கின்ற வெண்கொற்றக் குடையைத் தாங்கி என்பது. மீது - மேல். தின்கலி பெயர்த்து - கொடிய துன்பத்தை நீக்கி; கலி - துன்பம்.

தாதை - தந்தை; எறிவலி - பகைவர்களை எறிதலில் வலிமை மிக்க; எறிதல் - கொல்லுதல். கங்கை கொண்ட சோழன்: இவன் இராசேந்திர தேவனுக்குச் சிறிய தந்தை: அவனால் 'இருமுடிச் சோழன்' என்று பெயர் பெற்றவன். பொங்கிதல் - பொங்கு இதல், வீரஞ் செறிந்த.

பொருமுடன் றன்றிருத் தம்பியர்: மும்முடிச்சோழன், வீரசோழன், மதுராந்தகன், பராந்தகதேவன் என்பவர்கள்; இராசேந்திர

மும்முடிச்[8] சோழனெங் கெம்முனை யடுதிறற்
சோழ பாண்டிய னென்றுங்[9] கோழிமன்
றெடுகழல் வீர சோழனைப் படிபுகழ்[10]
கரிகால சோழ னென்றுங்[11] பொருதொழில்
வாள்வலித் தடக்கை மதுராந் தகனைச்[12]
சோழ கங்க னென்றுங்[13] தோள்வலி
மேவிகல் பாந்தக தேவனைச் சோழ[14]
வயோத்திய ராச னென்றும்[15]
இருகயத்[16] தன்பொடு கருது காதலருள்
இந்த லம்புக ழிராசேந்திர[17] சோழனை
உத்தம சோழ னென்றுங்[18] தொத்தணி

தேவன் தம்பியர் ஆவர். இவர்களுக்கு அவன் முறையே சோழ பாண்டியன், கரிகாலசோழன், சோழகங்கன், சோழவயோத்திய ராசன் என்று பெயரிட்டு, அங்கங்கே தனக்குப் பிரதிநிதிகளாக நியமித்தான். பொருமுரண் - பொருவதில் வலிமையுடைய. திரு - அழகு.

வென்றி - வெற்றி; தெம்முனை - பகைவர் போர்முனை; அடுதிறல் - அடுதலில் திறமைமிக்க; அடுதல் - அழித்தல்; கோழிமன் றெடுகழல் - கோழியூரில் நிலைபெற்ற வீரக் கழலணிந்த எனபது. கோழி - உறையூர்; மன்னுதல் - வாசம் செய்தல்; படிபுகழ் - நாடு புகழும்; படி - பூமி.

பொருதொழில் வாள்வலித் தடகீனை: பொருன்ற தொழிலில் சிறந்த வலிமைமிக்க பெரிய கையினையுடைய என்பது. பொருதல் - போர்செய்தல்; வாள் - சிறந்த; தோள்வலி மேவிகல் - தோள் வலிமை பொருந்திய.

இருகயத் தன்பொடு கருது காதலர்: மனத்தில் விரும்பி துணை செய்யும் மக்கள் என்பது. காதலர் - மக்கள்; அவர்கள் இராசேந்திர சோழன், முடிகொண்ட சோழன், சோழகோளன், கடாரங் கொண்ட சோழன், பலபுகழ் முடிகொண்ட சோழன், இரட்டபாடி கொண்ட சோழன் என்பவர்களாவர். இராசேந்திரன் அவர்களுக்கு முறையே உத்தமச்சோழன், விசயாலயன், சோழகோளன், சோழ சணகராசன், சுந்தரசோழன், சோழ கன்ன குச்சியராசன் என்று பெயரிட்டு உத்தியோகத்தி லமர்த்தினன்.

தலம் - பூமி; தொத்தணி மூனையவி ழலங்கல் - தொன்று

மூகையவி ழுலங்கன் முடிகொண்ட சோழனை
இகல்வேச லாலய னென்றும்[19] புகர்முகத்
தேழுபர் களிற்றுச் சோழ[20]கே சரியை
வார்சிலைச் சோழ[21] கேசர னென்றும்
திண்டிறற் கடாரம் கொண்ட சோழனைத்
தினகரன் குலத்துச் சிறப்படமர் சோழ[22]
சனக ராச னென்றும்[23] கனைகடற்
படிகொண்ட பல்புகழ்[24] முடிகொண்ட சோழனைத்
சுந்தர சோழ னென்றுஞ்[25] செந்தமிழ்ப்
பிடிக்களிற்[26] றியாட்ட பாடி கொண்ட
சோழனைத்[27] தொல்புவி யாளுடைச் சோழ
கன்னகுச் சிபரா ச னென்றும்[28] பின்னுக்கன்
காதலார்[29] காதலர் தம்முள் மேதகு
கதிராங் கனைகழல் மதுராந் தகனை
வெல்படைச் சோழ வல்லப னென்றும்[30]
மானச்[31] சிலைக்கைதோ ராணைச்சே வகனை[32]
விருசேன திர சோழ னென்றும்[33] பருமணிச்
சுடர்மணி[34] மகுடஞ் சூட்டிப் படிமிசை

தொட்டு அணியும் முகையவிழ்ந்த மாலை எனபது. முகை = மொட்டு; அலங்கல் = மாலை. இகல் - வலிமை; புகர்முகத் தேழூயர் களிற்று = புள்ளிகளையுடைய முகத்தினையுடைய ஏழு பெரிய களிறுகளைக் கொண்ட. புகர் = புள்ளி; வார்சிலை = நீண்ட வில்; தினகரன் குலம் = சூரிய குலம்; தினகரன் = சூரியன்; கனைகடல் படி = ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட உலகம் எனபது.

செந்தமிழ்ப் பிடிகளிற்று = செந்தமிழ்நாட்டுப் பிடியினது களிற்றினையுடைய; பிடி - பெண் யானை; களிறு = ஆண் யானை. இனி, 'பிடிகல்' எனப் பாடங்கொண்டு, தாங்கு கல் (the rock of support) என்று பொருள் கொள்வாரு முளர். காதலர் காதலர் - மகனுடைய மகன். மேதகு = மேலான; கதிராங் கனை கழல் = சூரியனைபொத்தவனைய், கனைக்கின்ற கழலினையுடைய; கதிர் = சூரியன்; கனைத்தல் = ஒலித்தல்; வெல்படை = வெல்லும் சேனை; மான் சிலைக்கை = பெரிய வில்லைத் தாங்கிய கை; ஓராணைச் சேவகன் = ஒரு யானை பலம் பொருந்திய வீரன்; ஆனை = யானை; சேவகன் = வீரன். பருமணிச் சுடர் = பெரிய முத்துக்கள் ஒளி விடும். படிமிசை = உலகில்.

நிகழ்ந ராளினுள் ளிகல்வேட்[35] டெழுந்துசென்
றெண்டிற லிரட்ட மண்டல மெய்தி
நதிகளும் காடும் பதிகளு மீசகம்
அழித்தனன் வளவனெனு [36]மொழிப்பொருள் கேட்டு
வேகவெஞ் சளுக்கி யாகவ மல்லன்
பரிபவ மெனக்கிதென் றெரிவிழித் தெழுந்து
செப்பருந் திறத்த[37] கோப்பத் தகலையிற்
சென்றெதி ரேன்றமர் தொடங்கிய[38] பொழுதவன்
செஞ்சா மாரிதன் குஞ்சர மூகத்தினுக்
தன்றிருத் துடையினுக்[39] குன்றுறழ்[40] புயத்தினுக்[41]
தைத்க வுக்[42]தன் னுடன்கனி றறிய
தொடுகழல் வீரர்கள் மடியவும் வணகபோ

நிகழ நாளினுள் - ஆட்சி நிகழும் காலையில்; இகல்வேட்டு - போரை விரும்பி; ஏண்டிறல் - வலிமை மிக்க; பதிகளும் - ஊர்களும்.

அழித்தன்ன.....கேட்டு: சோழன் இராட்டமண்டலத்தின் மீது படையெடுத்து அதை யழித்தான் என்ற செய்தியைச் சாளுக்கியனான ஆகவமல்லவன் கேட்டு. வளவன் - சோழன்; மொழிப் பொருள் - செய்தி.

வேகவெஞ் சளுக்கி - மிகக்கொடிய சாளுக்கிய மன்னன்; இங்கு ஆகவமல்லனைக் குறித்தது. பரிபவம் - இழிவு. எரிவிழித்து எழுந்து - எரிபோல் சீறி எழுந்து; எரி - நெருப்பு; செப்பருந் - செப்ப அரும், சொல்லுதற்கரிய; கோப்பத் தகலையில் - கொப் பம் என்னுமிடத்தில்; இது பேராறு என்னும் கிருஷ்ணை நதியின் கரையி லுள்ளது; அக்காலத்தில் ஒரு விசேட தலமாகக் கருதப் பட்டது.

எதிரேன்ற - எதிரே நின்று; அமர் - போர்; செஞ்சாமாரி - கூரிய அம்புத் தொகுதி; சரம் - அம்பு; மாரி - மழைத் தொகுதி; குஞ்சரம் - யானை; குன்றுறழ் புயம் - மலையொத்த பருத்த புயம்; உறழ் - போல, உவமையுருபு.

வகையால் - யானை, குதிரை முதலிய படை வகையால்; அக் காலத்தில் நாலுவகைப் படைகளில் தேர்ப்படை இருந்ததாகத் தெரியவில்லை; ஏனைய மூன்று படைகளோடு, கப்பல் படையுமிருந்

ஒருதனி[13] யுகேகம் பொருபடை வழங்கியும்
மொய்ம்பமர் சுருக்கி தம்பிசய சிங்கனும்
போர்ப்புலி கேசியுந்[14] தார்த்தச பன்மனு
மானமன் னவரின்[15] மன்ன டலியுகோ ணையனும்[16]
ஆனவண் புகழா[17] மாலையனுந் தேனிவர்
மட்டவி ழலங்கல்மொட் டையனுந் தெண்டிறல்
சன்னி நுளம்பனு மெனுமிவர் முதலினர்[18]
எண்ணிலி யரைசரை விண்ணகத் தேற்றி
வன்னிய ரோவனும் வயப்படைத் தானையும்
கொன்னவில் படைக்குண்ட மய்யனு மென்றின்[19]
வெஞ்சின வரைசரோ[50] டுஞ்சிச் சுருக்கி
குலகுல குலைந்து[51] தலைமயிர் விரித்து
வெந்நுற் றெறுளித்துப் [52]பின்னுற நோக்கிக்[53]

தனித்தன்மை தெரிகிறது; ஒருதனி - ஒப்பற்ற; வழங்கி - செலுத்தி; மொய்ம்பமர் - கொடிய போர்; போர்ப்புலகேசி - போரில் வல்ல புலிகேசி என்போன்; தார்த்தசபன்மன் - வெற்றிமாலையுடைய தச பன்மன் என்போன்; தார்-மாலை.

வண்புகழா - சிறந்த புகழினையுடைய; தேனிவர் மட்டவிழலங் கல் - தேன் சொரியும் மொட்டுகள் அவிழப்பெற்ற மாலை என்பது. இவர்தல்-நிரம்பி வழிதல்; மட்டு - மொட்டு. முதலினர் - முதலி யோர்.

எண்ணிலியரைசரை: கணக்கில்லாத அரசர்களை; அதாவது, கொப்பத்துப் போரில் சயசிங்கன், புலிகேசி, தசபன்மன், மண்டலிய கோஷையன் ஆனையன், மொட்டையன், சன்னிநுளம்பன் முதலிய கணக்கில்லாத அரசர் மடிந்தனர் என்பது. விண்ணகத் தேற்றி - கொன்று.

வயப்படை - வலிய படை; வயம் - வலிமை; கொன்னவில் படை - விசையினையுடைய வில் படை; என்றின - என்று சொல் லப்பட்ட; அக்காலத்தில் வில்லும் அம்பும் முக்கிய ஆயுதமாகக் கரு தப்பட்டதாகத் தெரிகிறது.

குலகுலதுலைந்து - பெருமை கெட்டு; குலங் குலை குலைத்து என் பாரு மூளர்; வெந்நுற்று - புறங்காட்டி; வெம் - மூதை. மின்னுற

கால்பரிக் தேரடி மேல்கடற் பாயத்[54]
தூத்திய பொழுதுச் செருக்களத் துவன்வீடு
சத்துருபயங் கான்கா பத்திரன் மூலன்[55]
பத்திர சாதி பகட்டனை சேகமும்
எட்டுநிரை[56] பரிகளு மொட்டக நிரைகளும்
வாகவெல் கொடிமுத லிராசபரிச் சின்னமும்[57]
ஒப்பில்சத்தி யவ்வைசான் கப்பையென் றிவர்முதல்
தேவியர் குழாமும் பாவைய ரீட்டமு
மினையன[58] பிறவு முனைவயிற் கொண்டு
விசையாபி டேகம் செய்துவதன் றிசைவயிற்[59]
சோர்ப்படை கடாத்திக் கார்க்கட லிலங்கையில்
விறற்படைக் கலிங்கர்மன் வீரசலா மேகனை
கட[60]களிற் றொடுபடக்[61] கதிர்முடி கடிவித்
திலங்கையர்க் கிறைவன் மாறு பரணன்[62]
காதலி நிருவனைக் களத்திடைப் பிடித்து

நோக்கி - பின் பக்கம் பார்த்து; பரிந்து - விரைந்து; மேல்கடல் - மேலைக் கடற்கரை; சேருக்களம் - போர்க்களம்.

பகட்டனைசேகமும்: அரசயானைகள் பலவும்; அவை சத்துரு பயங்கரன், கரபத்திரன, மூலபத்திரசாதி என்பன; ஆகவமல்லன் அவைகளைப் போர்களத்தேவிட்டுப் புறங்காட்டி ஓடினன். எட்டு நிரை - எட்டுவரிசை; எட்டுநடை என்பாரு முளர். பரி - குதிரை; ஒட்டக நிரைகளும் - ஒட்டகக் கூட்டங்களும்.

வாக வெல்கொடி முதல் - பன்றிக்கொடி முதலிய; வாகம் - பன்றி; இராசபரிச் சின்னம் - அரச சின்னங்கள். ஒப்பில் - விலை மதிப்பற்ற; சத்தியவை, சாங்கப்பை - இவர்வன் அரசன் மாதேவி யாராகும். இவர் முதல் - இவர்கள் முதலிய, தேவிர் குழாமும் - அரசமாதர்களும்; பாவையர் ஈட்டமும் - உயர்குலப் பெண்களும்; இனையன் பிறவும் - இவைகளும் பிறவும்; விசையாபிடேகம் செய்து - வெற்றிப் பட்டம் கட்டி; வயின் – இடம்.

கார்க்கடல் - கரிய கடல்; விறற்படைக் கலிங்கர்மன் வீரசலா மேகன் - வீரசலாமேகனிடம் கலிங்கர்படை யொன்றிருந்தமையின் இவ்வாறு அழைக்கப்பட்டான் போலும். மன் - தலைவன்.

கடகளிறு - மதயானை; பட - அழிய; கதிர்முடி கடிவித்து - முடியழிக்கச் செய்து. மாறுபரணர் காதலர் – மாறுபரணன் மக்கள். இவன் இலங்கை மன்னன். களம் - போர்க்களம்.

மாப்பெரும்புகழ் மிகவளர்த்த கோப்பரகேசரிவர்மரான[63] உடையார் ஸ்ரீ ராசேந்திர தேவர்க்கு யாண்டு - நாலாவது நான் அயிட ஐபங்கொண்ட சோழ மண்டலத்து செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு சாஞ சூளாமணிச் சதுருப்பெதி மங்கலத்து மஹா சபையோம், இவ்வாட்டை ஸிபதற சாயற்று அபரபக்ஷத்து அஷ்டமியும் வியாழக்கிழமையும் பெற்ற ரோஹிணி நாள் எம்மூர் ப்ரஹ்ம ஸ்தான மண்டபத்தே கூட்டக் குறைவறக் கூடியிருந்து எங் களூர் ஸ்ரீமத் த்வாராபதியான ஸ்ரீ காமக்கோடி விண்ணக ராழ்வார்க்கு குடுத்த நிலமாவது —

எங்களூர் தென்பிடாகை அமண்பாக்கத்து நிலம் கீழ் பாற்கெல்லை மண்ணிக்காலுக்கு மேற்கும், தென்பாற்கெல்லை மண்ணிக்காலுக்கு வடக்கும், மேல் பாற்கெல்லை அரைசங்

பரகேசரி வர்மர்: இது இராசேந்திரனுக்குரிய பட்டப்பெயர். இம்முறையில் இராசராசன் இராசகேசரி என்றும், இராசேந்திர சோழன் பரகேசரி என்றும், இராசாதிராசன் இராசகேசரி என்றும், அவனுக்குப் பின்வந்த இராசேந்திரதேவன் பரகேசரி என்றும் அழைக்கப் பட்டிருத்தல் காண்க.

ராஜ சூளாமணிச் சதுருப்பெதி மங்கலம்: இதன் மற்றொரு பெயர் மணிமங்கலம் என்பது. இது இப்பொழுதுள்ள செங்கல் பட்டு தில்லாவிலுள்ளது. மஹா சபையோம் - ஊர்ச் சபையினர்.

இவ்வாட்டை - இவ்வாண்டு. அதாவது, இராசேந்திரதேவன் ஆட்சியின் நான்காவது ஆண்டு; ஸிம்ஹ நாயற்று - ஐந்தாவது மாதம், ஆவணி மாதம் (Month of Avani = August—September); வியம் மம் - சிங்காசி; நாயற்று - சூரியகதியில் ஏற்படும் மாதம். அபர பக்ஷம் - தேய் பிறை காலம்; அஷ்டமி - எட்டாவது திதி; ரோஹி ணிநாள் - நாலாவது நாள்.

ப்ரஹ்ம ஸ்தானம் - வேதம் கற்பிக்கும் இடம்; கூட்ட - சபை கூட்ட; குறைவறக் கூடியிருந்து - எல்லாரும் கூடியிருந்து.

பிடாகை - உட்பிரிவுடையூர், சிறுகிராமம் (hamlet); கீழ்பாற் கெல்லை - கிழக்கு எல்லை; பாற்கு - பக்கம். அரைசங் குட்டம் -

குட்டத்துக்கும் கங்காதி யென்னும் புலத்துக்குக் கீழக்கும், வடமாற்கல்லே பழூஉ கக்கப்புத்தேரி கரைக்கு தெற்கும், இத்தேவர்க்கு முன்பு சிலாலேலைக பண்ணின நிலத்துக்கு தெற்கும் ஆக, இன் னாற்பாற்கெல்லேக்கும் கடுவுபட்ட நிலமும் ஓடையு முடைப்பும், மேனோக்கின மாமும், கீணோக்கின கிணறும் இன் னாற்பாற்கெல்லேக்கும் கடுவுபட்ட தெல்லாம் சேனபதிகள் ஜயங்கொண்ட சோழ ப்ரஹ்மாதிராஜர் தாயார் காமக்கவ்வையுள் பக்கல் ஸ்வம்கொண்டு சந்திராதித்தவற் இன் நிலத்துக்கு இறையிறுத்துக் குடுப்போ மாநோம் மஹா சபையோம். ஸபையுளிருந்து கரையிட்டுக் கரைபொந்து பணித்த காராம்பிசெட்டு காராயணக் கிரமவித்தனும், இரா பூர் சந்திரதேவ அத்தாழிக் கிரமவித்தனும், ஸஹஸ்ர மாத

அரச குட்டம்; குட்டம் - சிறு குளம். புலம் - நிலம்; ஏரி - பெருங் குளம்.

சிலாலேலைக பண்ணின - சிலையில் எழுதிக்கொடுத்த; சிலை - கல். உடைப்பு - ஓடைக் கரை; நீர் னிறுமாம். மேனோக்கின் - மேல் நோக்கி வளர்ந்த; கீணோக்கின - கீழ்நோக்கிக் குழிந்த. காமக் கவ்வையன்: இவன் சேனபதி சயங்கொண்ட சோழ பிர மாதி ராசருக்குத் தாய். பக்கல் - இடம்; ஸ்வம் கொண்டு - சொந்த மாகப் பெற்று.

சந்திராதித்தவர் - சந்திர சூரியர் (உள்ள அளவும்); இறை யிறுத்து - வரி நீக்கி; கரையிட்டு - கரை கண்டு; கரை - நிலபபகுதி (block of land); கரைபொந்து பணித்த - நிலதனைப் பார்வை யிட்டுக கூறிய; 'போந்து' என்பதன் குறுக்கமே 'டொந்து' போலும்.

காராம்பி செட்டு: விவசாயத் தொழிலுக்குரிய கருவி வியாபா ரம். அதைச் செய்து வந்தவன் 'காராம்பிசெட்டு காராயணக் கிரமவித்தன்' எனப்பட்டான். காராம்பி - எருது பூட்டி நீரிறைக்கும் கருவி வகை. செட்டு - வியாபாரம். கிரமவித்தன் - வேதத்தின் கிரம பாடத்தில் வல்ல பார்ப்பாரது பழைய பட்டப்பெயர். (Ancient Brahman title, as one skilled in the Krama method of reciting the Vedas).

வக் கிரமவித்தனும் பணிப்பணியால் பணிகேட்டு எழுதினேன் — இவ்வூர் ஊர்க்காணத்தான் அலங்காரன் சோமனேன். இவை என் எழுத்து.

(பாட பேதம்) 1. தக். 2. மீதொளி. 3. யுயர்த்து. 4. பெயர்த்து. 5. வெறுழ் வலிக். 6. பொங்கிகல். 7. இருமடி சோழனென்றும். 8. மும்மடி. 9. சோழபாண்டியனென்றும். 10. பழபுகழ்க். 11. கரிகால சோழனென்றும். 12. மதுரக்ககனை. 13. சோழங்க னெனறும். 14. சோள 15. வயோத்திய ராஜனென்றும். 16. துயரத் 17. புகழ் ராஜேந்திர 18 சோழனென்றும். 19.விசயாலயனென்றும். 20.சோழ. 21. சோழ கொளனென்றும். 22. சோள. 23. ஜனகராஜனென்றும். 24. பலபுகழ். 25 சோழனென்றும். 26. பிடிகல். 27. சோழனை. 28. ராஜனெனறும். 29. காதலர். 30. வல்லபனென்றும். 31. மான. 32. யொராணைச் செவகனை. 33. சோழனென்றும். 34 நெடு. 35. வெட்டெழுந்து. 36. வளவனென்னும். 37. திரத்த. 38. தடங்கிய. 39. தடையிலும். 40. குன்றுறள். 41. புயத்திலும். 42. தைய்க்கவும். 43. தொருதனி 44. புலக்கேசியும். 45. மன்னவரில். 46. மண்டலிக சோகனும. 47. புகழாளும். 48. முதலியர். 49. மய்யனு மென்றினன. 50. அணைசொடு. 51. குலகுலை குலைந்து. 52. வெனுற நெளித்துப். 53. நோக்கி. 54. பாய. 55. கரபத்திரமூல. 56. எட்டுதடை. 57. ராஜ பரிச்சந்தமும். 58. மெனையன. 59. விஜய அபிஷேகம செய்து தெற்றிசை வயிர்ப். 60. கடற். 61. ரூடு மகப்பட. 62. திலகயைகயற் கிறைவன் மாகாபரணக். 63. கோப்பர கெசரி பந்மராக.

பணித்த.....பணிப்படியால்: மகாசபையிலுள்ள காராம்பி செட்டு காராயணக் கிரமவித்தன், இராயூர் சந்திரதேவ அத்தாழிக் கிரமவித்தன், ஸஹஜண மாதவக்கிரமவித்தன் ஆகிய இவர்கள் பணித்த கட்டளையால்; பணி கேட்டு - அக்கட்டளையை அவர்கள் சொல்லக் கேட்டு.

ஊர்க்காணத்தான்: ஊர்ச்சபை நிகழ்ச்சிகளை எழுதும் எழுத்தாளன; இவனுக்கு 'மத்தியஸ்தன்' என்ற பெயரும் உண்டு. அமண் பாக்கம் சாசனத்தை எழுதிய காணத்தான், 'அலங்காரன் சோமன்' என்போன்.

6. கணவதிநல்லூர் சாசனம்.

முகவுரை.

கணவதி நல்லூர் என்பது, அதிராசராச மண்டலத்து வெங்கால நாட்டிலுள்ள ஒரு கிராமம். இராசேந்திரதேவன் இக்கிராமத்தைத் திருவாலீசுவரமுடைய சிவன்கோயிலுக்குத் தானமாகக்கொடுத்த செய்தி கூறப்படுவதால் இச்சாசனம் 'கணவதி நல்லூர் சாசனம்' எனப்பட்டது. இது திருச்சிறுப்பள்ளி சில்லாவைச் சேர்ந்த கரூர் என்னுமூரிலுள்ள பசுபதீசுவரர் கோயில் தெற்குச் சுவரில் காணப்படுகிறது.

கொப்பம் என்னுமிடத்தில் இராசேந்திரதேவன் ஆகவமல்லனுடன் போர்செய்த செய்தி இதில் குறிக்கப்பட்டுள்ளது. அவன் தன் ஆட்சியின் ஒன்பதாவது ஆண்டில் கணவதிநல்லூர் என்னும் கிராமத்தைத் திருவாலீசுவரமுடைய சிவன் கோயிலை ஏற்படும் செலவுக்காக கொடுத்த செய்தி இதன் பிற்பகுதியில் காணப்படுகிறது.

இச்சாசனம் ஏற்பட்ட காலம் கி. பி. 1020 ஆம் ஆண்டு† எனலாம்.

இராசேந்திரதேவன் : மெய்க்கீர்த்தி.

ஸ்வஸ்தி ஸ்ரீ —

திருமகள் மருவிய செங்கோல் வேந்தன்றன்

---

* இச்சாசனம் தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் மூன்றாவது தொகுதியின் முதற்பகுதியைச் சேர்ந்தது.

†. இராசேந்திர சோழன் மகன் இராசேந்திர தேவன்: இருவரும் பரகேசரி பட்ட முடையவர்கள். முன்னவன் ஆட்சி கி. பி. 1012-1044 வரை நிகழ்ந்தது; பின்னவன் ஆட்சி கி. பி. 1052-1064 வரை நிகழ்ந்தது. கொப்பத்துப்போர் ஆகவமல்லன் காலத்தில் (கி. பி. 1042-1068) நடைபெற்றதால், அப்போரைப் பற்றிக் கூறும் இச் சாசனம் இராசேந்திரதேவன் காலத்தினதாகவே இருத்தல் வேண்டும்; எனவே இராசேந்திரதேவன் ஆட்சியின் ஒன்பதாவது ஆண்டு என்பது, கி. பி. 1060-'61 என்று ஆகும்.

திருமகள் மருவிய.- இலக்குமி பொருந்தி இருக்கின்ற; செங்கோல் வேந்தன் - இராசேந்திரதேவன். 'திருமகள் மருவிய' என்ற தொடக்கம இராசேந்திர தேவனுடைய இரண்டாவது மெய்க்கீர்த்தியிலுள்ளது போலும்.

மூன்றேனெண் டிசை பிறைவா கை
மூன்னெதிர் சென்று இராட்டை பாடி
எழுசை யிலக்கமுங் கொண்டு எதிரமர்
பெறுது எண்டிசை நகம்பறை பதுகறங்கப்
போற்றங் கரைகொப் பத்துவங் கெதிர்த்த
ஆஹவ மல்லன் றன்பெருஞ் சேனை
யெல்லாம் படப்பொருது பாதது நிகழப்
பசும்பிண மாக்கி ஆங்கவ னஞ்சிப்
புற்க்கிட்டோ டலவன் ஆனையுங் குதிரையும்
பெண்டுபண் டாரமும் ஒட்டாத் தொடு
அகப்படப் பிடித்து திசையது நிகழ

தன்முன்னேன்: தன் தமையன், இராசாதித்தன். இவன் போற்றக்கரையிலுள்ள கொப்பமென்னுமிடத்தில் ஆகவமல்லனை எதிர்த்து, அவனால் கொல்லப்பட்டான். பின்னதுவாக - புறங்காட்ட.

முன்னெதிர் சென்று - பகைவர்க்கு முன்னே சென்று; இராசேந்திரதேவன் தன் தமையன் இறந்த போர்க்களத்திலேயே மூடி சூடி ஆகவ மல்லனை எதிர்த்து வென்றான்; வெந்நீடு - வென்றி, எதிரமர் பெறுது - எதிர்த்துப் போரிடுவா னின்றி; அமர் - போர்.

எண்டிசை நகம் - நாட்டின் எல்லாத் திசையும்; நகம் - பூமி, பறைது கறங்க - வெற்றிப் பறை முழங்க.

போற்றங்.....ஆகவமல்லன் - போற்றங் கரையிலுள்ள கொப்பம் என்னுமிடத்தில் தன்னுடன் வந்து எதிர்த்த ஆகவமல்லன் என்பது; போறு எனபதனை இப்பொழுதுள்ள கிருஷ்ணைநதி என்பர்.

படப்பொருது - மடியும்படிச் சண்டை செய்து:

பாதது நிகழ - பூமி நிரம்பும்படி; பசும் பிணம் - புதியபிணம்; அவன் - ஆகவமல்லன்; புற்கிட்டு - புறக்கிட்டு, முதுகுகாட்டி.

பெண்டு பண்டாரம் - பெண்களின் ஆடையாபரணங்கள்; அகப்படப் பிடித்து - ஆனை, குதிரை, பெண்டுபண்டாரம், ஒட்டக முதலியன அனைத்தையும் பிடித்து; திசையது நிகழ - நாற்றிசையும் விளங்க. நிகழ்தல் - விளங்குதல்.

வீரர் அபிஷேகம் பண்ணி வீர
சிம்மா சனத்து வீற்றிருக் கருளிய
கோப்பர கேச ..... ரான
உடையார்ஸ்ரீ ராசேந்ர தேவர்க்கு யாண்டு —

கூவது, அதிராசராச மண்டலத்து வெங்காலனூட்டு கணவதி நல்லூர் கீழ்ப்பாக்கெல்லை எருத்துக் குளத்துக்கு மேற்கும், வடபாக் கெல்லை காட்டுப் பெருவழிக்குத் தெற்கும், தென்பாக் கெல்லை ஆற்றுக்கு வடக்கும், மேல்பாக் கெல்லை இராஜமகேந்ரன் வதிக்குக் கிழக்கும் இன்னான் கெல்லைக் குட்பட்ட நில நஞ்சை புஞ்சை கிருவாலிலை மகாதேவற்கு வேண்டும் நிமந்தங்களுக்குத் திருமுமத்துக் காணியாக உடும்

வீரர் அபிஷேகம் பண்ணி = வீரர் கனைப் பட்டங கட்டி; வீர சிம்மாசனம் - வெற்றிச் சிம்மாசனம்; கோப்பரகேசரி = பரகேசரி வர்மர். இது இராசேந்திரதேவன் பட்டப் பெயர்.

அதிராசராசமண்டலம் = இது கொங்குமண்டலத்திற்கு இடப் பட்டபெயர். அக்காலத்தில் மண்டலம் பல நாடுகளாகவும், ஒவ் வொரு நாடும் பல ஊர்களாகவும் வகுக்கப்பட்டிருந்த தென்பது 'அதிராசராச மண்டலத்து வெங்காலனூட்டு கணவதி நல்லூர்' என்ற தொடரால் விளக்கும்.

கணவதி நல்லூர்: இது கொங்குமண்டலத்திலுள்ள ஒரு ஊர். கிழக்கே எருத்துக் குளத்தையும், வடக்கே காட்டுப் பெருவழியை யும், தெற்கே ஆற்றையும், மேற்கே இராசமகேந்திரன் வதியையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. இராசேந்திரதேவன் ஆட்சியின் ஒன்பதாவது ஆண்டில் அவன் இதனைத் திருவாலிலை சிவன் கோயில் செலவுக்காகக் கொடுத்தான்.

கீழ்ப்பாக்கு - கீழ்ப்பக்கம்; பாக்கு - பகுதி, திசை. வதி - வழி, நில நஞ்சை புஞ்சை - நஞ்சை புஞ்சை நிலம்.

திருவாலிலை மகாதேவன் - திருவாலிலை என்னுமிடத்து கோயில் சிவபெருமான். வேண்டும் நிமந்தம் - வேண்டிய செலவு.

திருமுமத்துக் காணியாக - கோயில் நிலமாக; காணி - நிலம்.

போடி ஆமைதவழ்புற்று எழுந்த இடம், கற்றுப்புல் பொகூ முற்றாடடும் இறுப்பதாக நம் ஓலை சூடுக்க திருவாய்மொழிந் தருளினாலென்று திருமந்திரவோலை சுகுத்திரிய சிகாமணி வள நாட்டு, பனையூர் நாட்டு கேர்வாயிலுடையான் காழி திருப் பனங் காடு உடையாளுன வானவன் பல்லவதரையன் எழுத்து. திருமந்திரவோலை நாயகம் இராஜராஜனுன தொண்டைமான் எழுத்து. ஊரான் உத்தமசோழனுன இராஜராஜ பிரஹ்மாதிராயன் எழுத்து. அரையன் இராச ராசனுன வீராராஜேந்திர ஜெயமூரி நாடாழ்வான் எழுத்து. உடன் கூட்டத்து அதிகாரிகளில் சுகுத்திரிய சிகாமணி வள நாட்டுப் பனையூர்நாட்டு ஜெயங்கொண்ட சோழநல்லூ ருடையார் உதையதிவாகரன் கூத்தாடியானன வீராராஜேந்திர மழவராயன் எழுத்து. இவை பன்மா ஹேச்வர ரனைகூ.

உடும்போடியாமை தவழ்புற்று: உடும்பு, ஆமை இவை தங்கும் மண்புற்று புற்று - எறும்பு புற்று (Ant-hill). எழுந்த இடம் - உண்டான இடம்.

கற்றுப்புல் - கன்று + புல், கன்றுகள் மேய்வதற்கு விடப் பட்ட புல்லுள்ள இடம் (the grass left for the calves.); பொகூ முற்றாட்டு - கிராமத்தாரால் அநுபவிக்கப் பெறும் பொதுவிடம் (Land enjoyed in full by the great village); முற்றாட்டு - தான மாகக் கொடுக்கப்படும் நிலம்,

இறுப்பதாக - அமைவதாக; நம் ஓலை தடுக்க - நாம் எழுதும் படி; திருவாய் மொழிந்தருளினார் - கட்டளையிட்டார்.

திருமந்திர வோலை - அரசாங்கக் காரியதரிசி. (Royal Secretary). திருமந்திர வோலை நாயகம் - தலைமைக் காரியதரிசி (Chief Secretary).

ஊரான் - கிராமத்தான் (Citizen); அரையன் - அரசன்; உடன் கூட்டத்து அதிகாரி - கிராமத் தலைவன்; சோழர் காலத்தில் கிராமச் சபைகள் இருந்தென்று இதனால் தெரிகிறது.

எழுத்து - கையெழுத்து; கணவதி நல்லூர் சாசனத்தில், திரு மந்திரவோலை வானவன் பல்லவதரையன், திருமந்திரவோலை நாயகம் இராசராசனுன தொண்டைமான். அரையன் இராசராச னுன வீராராசேந்திர ஜெயமூரி நாடாழ்வான், உடன் கூட்டத்து அதிகாரி வீராராஜேந்திர மழவராயன் என்னும் ஐவரும் கையெழுத் திட்டனர்.

பந்மா ஹேச்வரர் - சிவனடியார் கூட்டம் (Company of Saiva devotees); ரனைகூ - இடட்சிக்க.

7. பாக்கூர் சாசனம் *

முகவுரை.

பாக்கூர் என்பது ஓர் ஊர்; அவ்வூரைத் திருவாலிலை சிவன் கோயிலுக்குக் கொடுத்த செய்தி பற்றிய சாசனம், 'பாக்கூர் சாசனம்' எனப்பட்டது. இது திருச்சிறுப்பள்ளி தில்லைவைச் சேர்ந்த களரிலுள்ள பசுபதீசுவரர் கோயில் † தெற்குச் சுவரில் காணப்படுகிறது.

இதன் முற்பகுதியில் கூடல் சங்கமம் †† என்னுமிடத்தில் இராசகேசரிவர்மன் என்னும் வீர ராசேந்திரதேவனுக்கும் சாளுக்கிய மன்னனை ஆகவமல்லனுக்கும் நடந்த போரைப் பற்றியும், அப்போரில் ஆகவமல்லனும் அவன் மக்களான விக்கலன், சிங்களன் என்பவர்களும் அடைந்த தோல்வியைப் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. வீர ராசேந்திரதேவன் சாளுக்கியை மூன்றாவது தடவை வென்ற செய்தி இதுவாகும். பிற்பகுதியில் அவன், தன் ஆட்சியின் நான்காவது ஆண்டு × கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து பாக்கூர் என்னும் கிராமத்தைத் திருவாலிலை சிவன் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்த செய்தி காணப்படுகிறது.

இச் சாசனம் எற்பட்ட காலம் கி. பி. 1066ஆம் ஆண்டு என்னலாம்.

---

* இது தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் மூன்றாவது தொகுதியின் முதலாவது பகுதியைச் சேர்ந்தது.

† திருவாலிலை சிவன் கோயில்.

†† இது திருவேங்கை பஞ்சகங்கா (தங்கப் பத்திரை) நதிகள் கூடுமிடம்.

× வீர ராஜேந்திரதேவன் கி. பி. 1063 முதல் 1070 வரை சோழநாட்டை ஆண்டான்.

வீர ராசேந்திர தேவன் : மெய்க்கீர்த்தி.

ஸ்வஸ்தி ஸ்ரீ —

திருவளர் தீர்ள்புயத் திருநில வலையம்
தண்மணிப் பூணனைத் தங்கிப்[1] பன்மணிக்
கொற்றவெண் குடைநிழற் குலலயத் துயிர்களைப்
பெற்ற தாயிலும்[2] பெரிதுற் றுள்ள[3]
அறைகழ லரசர்[4] தன் னடியினி[5] லொதுங்க
உறைபிலத் துடைய்[6]கலி யதுவொதுங்க[7] முறைமையில்
அரும்பெறல் தனையனை முன்வந் தானை
யிரும்புலி புகழ்இராஜ ராஜனென் றொளிர்மணி
முடிசூட்டி தன்றிரு மனைந்த னுகிய
கங்கைகொண்ட சோழனை யெழுபரி யானைச்

ஸ்வஸ்தி ஸ்ரீ: சாசனங்களின் துவக்கத்தில் மங்கலமாக வரும் வடமொழித்தொடர்.

திருவளர் தீர்ள்புயத்து: இது வீராசேந்திர தேவன் சாசனத்தின் தொடக்கத் தொடர். இருநில வலையம் - பெரிய பூமிவட்டம். இரு நிலம் - பூமி; வலயம் - வட்டம். வலயம் என்றும் பாடம்.

மணிப் பூண் - அழகிய ஆபரணம். புயத்து நிலவலயம் பூணனைத் தங்கி என்று முடிக்க. மணி - முத்து.

துவலயம் - உலகம்; உயிர் - உயிரினங்கள். பெற்ற தாயிலும் பொ - பெற்ற தாயினைவிட அதிகமாய்ப் பேணி. பொ - பேணி என்றும் பாடம். அறைகழல் - ஒலிக்கும் வீரக்கழல்.

உறை பிலத்துடைய் கலியது வொதுங்க: நீண்ட பாதாளத்தில் கலிபோய் ஒதுங்க, துன்பம் நீங்க என்றபடி; கலி - துன்பம், தரித்திரம். முறைமையில் - முறையாக.

அரும் பெறல் தனையனை முன்வந்தானை: பெறுதற்கரிய தனையனைய முன்னோனை என்பது; முன் வந்தான் - மூத்த சகோதரன்; அவன் பெயர் ஆளவந்தான் என்பர்.

ஒளிர் - ஒளி; மணி முடி - அழகிய கிரீடம்.

திருமனைந்தன் - எல்லாராலும் விரும்பப் படத்தக்க மகன்.

எழுபரி யானைச் சேனை - எழு உயர்ந்த யானைகளையுடைய சேனை (An army of very tall elephants),

செல்லாக் சோழ பாண்டியனென் றுண்டுபர்
மணிமுடிப் பாண்டிமண் டலங்குடக் கருளிய
வாட்டகை வடிகொண்ட கதிர்வேல் முடிகொண்ட
சோழனை சுந்தர சோழ னெனச்சுடர்
முடிசூட்டி யந்தமில் பெருஞ்சிறப் பருளித்
தன்கிளை வருல கத்தவற்க் குரிய
அகலிடம் வேறுவே றருளி இகல்விளை
விருதொடு மலைக்கும்[8] விக்கலன் றன்னெடும்
வெஞ்சிலைத்[9] தடக்கை[10] மாசா மந்தரைக்
கங்க பாடிக் களத்திடை னின்று[11]
துங்கப் பத்திரிக்கரை புகத்துரந்து[12] அங்கவர்

எல் றுய்ந்து - என்றுகொண்டு; உயர் மணிமுடி - நல்ல மணி முடி; பாண்டி மண்டலம் தருத்தருளிய - பாண்டிய மண்டலத் தைச் செயித்த. வீராசேந்திரதேவன் தன் மூத்த சகோதர னுக்கு இராசராசனென்றும், மைத்தனுகிய கங்கைகொண்ட சோழனுக்குச் சோழபாண்டியனென்றும், மூடிகொண்ட சோழ னுக்குச் சுந்தாசோழனென்றும் பெயரிட்டு தன் நாட்டின் பல பகுதி யையும் ஆளச் செய்தான் என்று தெரிகிறது.

வடிகொண்ட - வடித்துக் கூர்மை யாக்கிய; அந்தமில் - முடிவில் லாத; தன் கிளைவருலகம் - தன் இனத்தவர் கூட்டம்; அகலிடம் - நாடு; இகல் விளை - விளை இகல், போரில்.

விருதொடு மலைதீரும் - வெற்றியோடு போர் செய்யும்; விருது - வெற்றிச் சினனம்; விக்கலன் - விக்கிரமாதித்தான், இவன் ஆகவமல் லன மக்களில் ஒருவன்; இவன் ஆகவமல்லன் படைத் தலைவர்களில் ஒருவன் என்பாரு முளர்.

மாசாமந்தர் - தானைத் தலைவர்; கங்கபாடி களம் - கங்கபாடி யிடத்துப் போர்க்களம்; துங்கப் பத்திரிக்கரை - துங்கபத்திரா நதிக் கரை; இந் நதியும் கிருஷ்ணை நதியும் சந்திக்குமிடத்தில்தான் 'கூடல சங்கமம்' இருந்தது. புகத் துரந்து - செல்லும்படித் துரத்தி.

ஆகவமல்லன், தன் மகன் விக்கிரமாதித்தனை சோழநாட்டு எல்லையைச் சேர்ந்த கங்கபாடி, வனவாசி, சாந்தனிகே, நுளம்ப பாடி முதலிய மாகாணங்களுக்கு அதிகாரியாக நியமித்தான். வீர ராசேந்திர தேவன் தன் ஆட்சியின் இரண்டாவது ஆண்டு (கி. பி.

வேங்கை[13] மூட்டிடை மிண்டவர் வீட்டை[14]
காங்கரும் பெருவலித் தண்டுகடத் துரக்கி
மாதண்ட நாயக்கன்[15] சாழுண்ட ராஜனைச்[16]
சென்றவன்[17] திரத்தினை யழித்து மற்றவ
னெருமக ளாகிய விருகயத்[18] தேவி
காகலி[19] யென்னுங் தோணைகயம் சாயலை
மூகத்தொடு மூக்குவே ருக்கி பகைத்தெதிர்
மூன்றும் விசையினும் மேன்றெதிர் பொருது
பரிபவர் தீர்வதெனைக் கருப்[20] பொருதபுனல்[21]
கூடல்[22] சங்கமத் தாகவ மல்லன்

1064) இவனோடு பொருது பல சாமந்தர்களைக் கொன்று, பகைவனைத் தங்கபத்திவரை துரத்தினன். இத வீராஜேந்திர தேவன் ஆகவமல்லனோடு செய்த முதற் போராகும்.

மீண்டு - கூடி, அவர் வீட்ட - சாளுக்கியர் வீட்டு வைத்திருந்த; பெருவலித்தண்டு - பலமிக்க பெருஞ்சேனை; கெடத் தாக்கி - அழியும் படித் தாக்கி; மாதண்ட நாயகிகன் - மாபெருஞ்சேனைத் தலைவன்; இங்கு, சாழுண்ட ராசனைக் குறித்தது. இவன் வேங்கை நாட்டிடை பெருஞ் சேனையுடன் தங்கியிருந்தான். வீராசேந்திர தேவன் வேங்கைநாட்டில் புகுந்து இவன் சேனையைத் தாக்கி, தலையையும் அறுத்தான். இது வீராஜேந்திர தேவனுக்கும் சாளுக்கிய ஆகவ மல்லனுக்கும் நடந்த இரண்டாவது போராகும்.

மற்றவ னெருமகளாகிய விருகயத்தேவி காகலி: இருங்கை யன் தேவி காகலை என்பாள், ஆகமல்லன் ஒரே மகள் போலும். இவள் அழகு மிக்கவள் என்பது, 'தோணைகயஞ் சாயலி' என்ற தொடரால் விளங்குகிறது. வீராசேந்திரன் இவளைப் பிடித்து மூகம் மூக்கு வேரோக அரிந்து அவமானப் படுத்தினன். தோணை - மயில்; சாயல் - அழகு.

பகைத் தெதிர் மூன்றும் விசையினும் - பகைத்து எதிர்த்து மூன்று வது தடவையும். மேன்று எதிர் பொருது - பொருந்தி எதிர் நின்று போர் செய்து.

பரிபவம் - இழிவு, அவமானம். பொருத புனல் - பொரு புனல், மோதும் அலை நீர்; கூடல் சங்கமம் - திருவேணி பஞ்ச கங்கை நதிகள் கூடுமிடம்.

முதுவி யாகிய மதுவனை கெடஇ[22]
விரித்த தலைவிரி விக்கல் ரேணடச்
மகறகிய[23] விக்கலன் சிங்கள[24]
னென்றிவர் தம்மொடும் மெண்ணில்சா[25] மந்தனை
வென்றது தூசிமுன் விட்டுத்[26] தன்றுணை
மன்னன் தானும்[27] பின்னடுத் திருந்து
வடகட லென்ன வகுத்தவன் தானையை[28]
கடகளி றுன்றுல் கலக்கி யுடல்புரிக்[29]
கோசலச் சிங்களக்[30] கொடிப்படை[31] முன்றுர்த்[32]
தூசுவெண் களிற்றுன்[33] துணித்து கெசுவ[34]
கண்ட நாபக் கண்[35]கேத் தரசன்[36]
கிண்டிறல் மாயன்த்[37] திறற்போத் தயனிகல்[38]
செய்ய[39] பொற்கோ தைமூ வேந்தி[40]யென்
றூர்தடுத் துப்பில[41] னேகசா மந்தனைச்
சின்ன[42] பின்னந் செய்து பின்னை

விக்கலன், சிங்களன் - இவர்கள் இருவரும் ஆகவமல்லன் மக்கள். எண்ணில் - கணக்கில்லாத; சாமந்தர் - தானைத் தலைவர்.

அடுதூசி.....கலக்கி - போர்செய்து அடுதலில் வல்ல தூசிப் யாக வந்த படையை முன்னர் செலுத்தி அதன்பின் தானும், தனக் குத் துணையாக வந்த மன்னர்களும் செல்லும்படி வகுக்கப்பட்ட அச் சேனையை ஒரு யானைப்படையை விட்டுக் கலங்கச் செய்து என்பது. அடுதல் - கொல்லுதல். தூசி - தூசிப்படை, படைவீரர். துணைமன் னன - துணையாக வந்த மன்னன. வடகடல் - வடவைக் காலத்துக் கடல். தானை - சேனை, கடகளிறு - மதயானை. உடலிபுரி - அடல் புரி, போர்செய்யும்.

கோசலச், சிங்களக் - கோசல நாட்டு, சிங்கள நாட்டு; கொடிப் படை - முன்னணிச் சேனை; கொடி படை என்றும் பாடம். முன் னூர்த் - முன்னர்த்.

தூசி வெண்களிற்றென் துணித்து - குதிரை, வெள்களிறு ஆகியவற்றை வெட்டி; தூசி - குதிரை. வெண்களிறு - வெள்களிறு.

கேசவதண்ட.....லநேக சாமந்தரை சின்னபின்னம் செய்து: கேத்தரசன், மாயன், போத்தரயன், பொற்கோதை மூவரத்தி என்று சொல்லப்பட்ட போரில் வல்ல தானைத் தலைவர்களை அழித்து எனபது. சின்ன - சின்ன என்றும் பாடம்.

என்றூர் தடுத்துப்பி லநேக சாமந்தர் - என்று ஆர்த்து அடு தப் பில் அநேக சாமந்தரை எனபது. முதலி - போர்த் தலைவன்.

செருக்கெழுநி[13] லழிந்து சிங்கள [14] ரோட
அண்ணல முதலிக ளனைவரு மமர்பொற்[15]
பண்ணின[16] பகடுழிந் தோட ணண்ணிய[17]
ஆகவ மல்லனு மவற்கு[18]முன் னோடகன்
வேகவெங் களிற்றினை விலக்கி வாகைகொண்
டுங்கவர் தாரமும் அவர்குல தனமும்
சங்குமுன்[19] தொங்கலுந் தாளையும் பேரியும்
மெகட மயமும் வெண்சா மரையும்[20]
காக்கைக்[21] கொடியும் மகரதோ ரணமும்
புஷ்ப கப்பிடி[22] போர்க்களிற் றீட்டமும்[23]
பாய்ப்பரித் தொகையொடும்[24] பறித்த செய்யொளிர்[25]
விசையமணி[26] மகுட மிசையொடும் திசைதொறும்[27]

செருக் கெழிலழிந்து - செருக்கும் எழிலும் அழிந்து; செருக்கு- பெருமை; எழில - அழகு. அண்ணல முதலிகள் - ஆண்மை மிக்க தலைவர்கள்; பொற்பண்ணின - போர்ப்பண்ணிய, போர் செய்த.

பகடுழிந்தோட - யானையைவிட்டு இறங்கியோட; பகடு - யானை, நண்ணிய - போர்செய்த; அவரிந்த முன்னோட - மதுரவணன், விக்கலன், சிங்கணன், எனைய அண்ணல் முதலிகள் இவர்களுக்கு முன் ஆகவமல்லன் ஓட என்பது.

விலக்கி - செலுத்தி; வாகைகொண்டு - வெற்றிகொண்டு.

அவர் தாரம் - அவர்கள் மனைவியர்; தனதனம் - பெருஞ் செல்வம்; சங்கு - சங்கினால் செய்த கைவளைகள்; வெற்றிச் சங்கு எனினுமாம். தொங்கல் - காதணிவகை; தாளையும் பேரியும் - தாளை, பேரி இரண்டும் ஊதும் பெரிய குழல் (trumpets); மெகடமயம் - மேகாடம்பரம், நிழல் செய்யும் மேற்கட்டி. வெண் சாமரை - இராசச் சின்னமாகக் (Canopies) கொள்ளப்படும் கவரி மானின் மயிர்க்கற்றை.

காக்கைக் கோடி - இது மேலைச் சாளுக்கியருக்குரிய கொடி; மகரதோரணம் - மகரவடிவிலுள்ள ஆபரணம்; மகரம் - ஒருவகைமீன்.

புஷ்பகப் பிடி - புஷ்பகம் என்னும் பெயருடைய பிடி; பிடி - பெண்யானை, களிற்றீட்டம் - யானைத் தொகுதி; பரித்தொகை - பரித் தொகை, குதிரைத் தொகுதி. பறித்து - எடுத்து.

விசையமணி மகுடம் - வெற்றிமுடி. மிசையொடும் - மிசைத்து, சூடி; திசைதொறும் - நாற்திசையும், சின்பபுலி - புலிக்கொடி; இது சோழனுக் குரியது.

தினைப்புனி செறுத்திக் குணசெகாரைத் தம்புசவிப்[58]
பொத்தப்பி வேந்தினை வாசீன[59] வசீணகழல்[60]
தொன்றினைத்[61] தாராசா ணைதன்[62] றம்பியைப்
போர்க்களத் தலங்கல் சூழ்ப்[63] பசுந் தலையரிந்து
பொலங்கழல்த் தென்னவனெசி[64] வல்லவன் மகன்சிறுவசீண[65]
பின்னவில் மணிமுடி வீரகே சரிசை
கதகட களிற்ரு லுனைதத்திட்டு மதகொடு[66]
செயித்து வாப்பாகாக்[67] செங்கோல் செலுத்தி
வேத நீதியை[68] விளக்கி மீதுயர்
வீரத் தனிக்கொடித்[69] தியாகக் கொடியொடும்
ஏற்பவர் வருகென்று நிற்றம்ப[70] போர்த்தொழி[71]
வாய்மையில் நெய்த[72] வீற் றிருந்த மேவரு[73]
மறுவினெறி விளங்கிடக்[74] கோஇராசகேசரி பர்ம்மரான[75]
உடையர்ப் பூரீ வீராகேஜந்திர தேவற்கு

தினைகோலுந்தும் புலி - கடிவாளமிட்ட குதிரை; பொத்தப்பி வேந்தன் - பொதுதப்பி நாட்டிற்கு அரசன். பொத்தப்பி நாடு, சித்தூர் சில்லாவிலுள்ள காளத்தியைச் சார்ந்ததென்பர்.

பொத்தப்பி வேந்தனை.....தலையரிந்து: பொத்தப்பி வேந்தன், வாணன், தொண்றன் (சோளன்), தாராசாணைதன் (சனாதன்) தம்பி ஆகிய இவர்களுடன் பொருது, இவர்கள் தலைகளைத் துணித்து எனபது. தாராசணைதன - சக்கரக கோட்ட மண்டலத்தை யாண்ட அரசன் அவன 'தாராவர்சன்' என்றும் அழைக்கப் பட்டான். அலங்கல் - மாலை.

பொலங் கழலி - பொன்னலான கழல்; தென்னன் - பாண்டியன் போலும். கீவல்லவன மகன் சிறுவன் - சிவல்ல பாண்டியன் மகன்; இவன் பெயர் வீரகேசரி என்பர்.

மதகோடு: ஒரு மன்னன் பெயர் என்பர்.

வாப்பாகா - வரம்பாக, முறையாக. வேத நீதியை விளக்கி - வேத நீதிக்கு எடுத்துக்காட்டாய் நின்று; மீதுயர்.....வருகென்று - வீரம், தியாகம் செறிந்தவாகளை வரவேற்று. நிற்றம்ப - நிற்ப.

வாய்மையில் நெய்த - வாய்மையில் கொண்டு; உரிமையில் எய்தி என்றும் பாடம்.

மறு நெறி விளங்கிட - மறுநெறி விளக்கிய என்றும் பாடம்.

செய்தி.

கெங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலுள்ளால் திரு மஞ்சனசாலையில் எழுந்தருளியிருந்து உதகம் பண்ணி அருளின அதிராஜராஜ மண்டலத்து வெங்காலநாட்டுப் பாக் கூர் வெள்ளான் வகையில் விளைமுதல் தவிர்த்து யாண்டு ஈவதுக் கெதிராவது முதல் இவ்வூர் இறையிலி தேவதானம் திருமுகத்துக் காணியாக இறை புரவு சிற்றாயம் வலவை யுகவை மன்றுபாடு தெண்டை குற்றம் உடும்போடி ஆணை தவழ்புற்றும் எழுவன முகோப்பன கற்றுப்புற் பொக்கா முற்

கெங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலுள்ளால் - கங்கை கொண்ட சோழபுரத்து அரண்மனையிலுள்ளே; திருமஞ்சனசாலை - கடவுள், அரசர் முதலியோர் அபிஷேகம் செய்யும் இடம். திருமஞ்சனம் - அபிஷேகம். எழுந்தருளியிருந்து - வீற்றிருந்து; உதகம் பண்ணியருளின - நீர் வார்த்துக் கொடுத்த; அக்காலத்தில் நீர் வார்த்து ஒரு பொருளாக் கொடுத்தல் வழக்கம்போலும்.

பாக்கூர் வெள்ளாண் வகையில் - பாக்கூர் வேளாளர்க்குரிய கிராமப் பங்கு முதலியவற்றில் (That which belongs to the velala class as Lands in a village); இறை முதல் தவிர்த்து - வரி முதலியவை நீங்கி.

யாண்டு ஈவதுக் கெதிராவது - எண்பதாவது ஆண்டு முதல். தேவதானம் - கோயிற்கு விடப்பட்ட இறையில் நிலம். திருமுகத்துக் காணி - தேவதானம், கோயில் நிலம்; அதற்கு அக்கோயில் பெயரிடப்படும்.

இறை - நிலவரி (Revenue); புரவு - குடிவரி (Taxes); சிற்றாயம் - சிறுவரிகள் (small tolls); ஏலவை - ஏலவை, வரிவகை (A Tax); உகவை - காசாயவகை (A Tax in money); இறை, புரவு, சிற்றாயம், ஏலவை, உகவை எனபன அக்கால வரிவகைகளாகும்.

மன்றுபாடு, தண்டா, குற்றம் - இவை அக்காலத்து மூவகைத் தண்டனைகள். மன்றுபாடு - தருமாசனத்திலமுன் இருக்கும் தண்டப் பொருள். தண்டா - தண்டம்; இக்காலத்தில் 'தெண்டம்' என்பர். குற்றம் - அபராதம்.

தவழ்புற்று - தங்கும் மண்புற்று; உடும்பு வாண்ட நிலத்திலும், ஆமை சேற்று நிலத்திலும் தங்குமாதலின் 'உடும்போடியாமை தவழ்

சூட்டும். இவ்வூர் இறைகட்டினை காணிக்கடன் பொன் முன் றாம்வி முதற்சுவையே மஞ்சாடி அரைமாவும், நெல்லு ரூபா வரிசைத்து அதற்று மூப்பத்தொருகலனே தானியமும் இந்த ஊர்த் தருதற்கு திருவாசிலை மஹாதேவற்கு இறுப்ப தாக யாண்டு முதல் இறையிலி தேவதானம் திருமடத்துக் காணியாக வரிபிலிட்டுத் திருவாய் மொழிந்தருளினபடிக்கு, திருவாய் மொழிந்தருளினதென்று திருமந்திரவோலை சுருதத் திவ்ய சிரமணி வளநாடடு, பணையூர் நாட்டு சேர்வாயிலு டையான் கூழி திருப்பனங்காடுடையான் வானவன்பல்லவரையன் எழுநிலையும், திருமந்திரவோலையகம் அச்சுதன் இராஜராஜனென தொண்டைமானும், ஊரான் உத்தம சோழனென இராஜராஜ ப்ரஹ்மாதிராயனும், அரையன் 'இராஜராஜனென வீர ராஜேந்திர ஜபமுனிடாழ்வானும், வீர

புற்று' என்பதற்கு வரண்ட நிலமும், சேற்று நிலமும் எனப் பொருள் கொள்வர்.

எழுவர் - எழுத்து செல்லும் உயிரினங்கள்; மூஷப்பிளை - மரம் புல் பூண்டுகள். கற்றுப்புல் - கன்றுக்கு விடப்பட்ட புற்றரை. பொக்கா மூற்றாட்டு - நிலவரி, குடிவரியாகிய மூற்றாட்டு; மூற்றாட்டு-பூரண அநுபமுள்ள நிலம். இறை கட்டின் - இறையாகச் செலுத்தியது; இறை - வரி.

காணிக் கடன் - காணி வரி; காணி - நிலம். முக்கழஞ்சி - அரையே - மூன்றரைக் கழஞ்சி; கழஞ்சி - 20 மஞ்சாடி எடை. மஞ்சாடி அரைமா - அரைமா மஞ்சாடி; அரைமா - $\frac{1}{20}$; மஞ்சாடி - 2 குன்றிமணி எடை. கலன் - 12 குறுணி; தூணி - 4 குறுணி. 303$\frac{1}{2}$ கழஞ்சியே அரைமா ($\frac{1}{20}$) மஞ்சாடி பொன்னும், 3531 கலனே தூணி நெல்லும் பாக்கூர் கிராம வருமானம் போலும்.

இந்நாட்டு - அதிராசராச மண்டலத்து வெங்கால நாடு; கருவூர்த் திருவாசிலை மஹாதேவர் - கருவூர் பசுபதீசுவரர்; இறுப்பதாக - கொடுப்பதாக; யாண்டு முதல் - நானகாவது யாண்டுமுதல்.

வரியிலிட - வரிப் புத்தகத்தில் எழுதச, (to be entered in the Revenue Register); திருவாய் மொழிந்தருளின் படிக்கு - சொன்னபடியே; 'திருமஞ்சனசாலையி லிருந்து, உதகம்பண்ணி, திருவாய் மொழிந்தருளின படிக்குத் திருவாய் மொழிந்தருளினார்' என்று கூட்டுக. திருமந்திர வோலை - இராசாங்கக் காரியதரிசி, (Royal Secretary); திருமந்திரவோலை நாயகம் - தலைமைக் காரியதரிசி, (Chief Secreary); ஊரான் - ஊரான், நகரவாசி, (Citizen)

ராஜேந்திர மங்கலப் பேரையனும் இவர்களுடன் ஒப்பிட்டுப் புகுந்த கேழ்விப்படியே நம் வரியிலிட்டுக் கொள்க வெங்ளை வீரபத்திரன் நில்லை விடங்கனென வில்லவ ராஜ ராஜன் ஏவ, இவன் ஏனை படியே உடன் கூட்டத்து அதிகாரிகள் சுந்தச்சிரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு ஜயங்கொண்ட சோழநல்லூருடையான் உதைய திவாகரன் கூத்தாடுவானை வீர ராஜேந்திர மழவராயரும், வீர ராஜேந்திர ப்ரஹ்மாதிராயரும், அருமொழிதேவ வள

இவர்களுடன் ஒப்பிட்டு: திருமந்திரவோலை வானவன் பல்லவ ரையன், திருமந்திரவோலை நாயகம் அச்சுதன் (இராச நாராயணன்) தொண்டைமான, ஊரன் உத்தமச்சோழனை இராசராச பிரமாதிராயன், அரையன் இராசராசனை வீராசேந்திர செயமுனி நாடாழ்வான், வீராசேந்திர மங்கலப் பேரையன் ஆகிய இவர்கள் ஐவருடன் சரிபார்த்து; ஒப்பிட்டு - சரி பார்த்து, ஒத்துப் பார்த்து; இங்கு பல்லவரையன், தொண்டைமான், பிரமாதிராயன், அரையன், பேரரையன் என்பன அரசாலிடப்பட்ட பட்டப்பெயர்கள் போலும்.

புதுந்த கேழ்விப்படியே - அறிந்தபடி; எழுதிய எழுத்துப் படியே எனினுமாம். நம்வரியி லிட்டு-நமது வரிப்புத்தகத்திலெழுதி.

ஏவ - கட்டளையிட; இங்கு, வரியிலிட எவியது வீரபத்திரன் நில்லை விடங்கனென விலவ ராசராசன் என்பவனுக்கும், வில்லவ ராச மாசன என்பதும் ஒரு பட்டப்பெயர் உடன் கூட்டத்து அதிகாரிகள்- ஊர்ச் சபைத்தலைவர்கள் (the heads of the Assembly); அரசனது அரையரிலுள்ளார் என்றும் கூறுவர்.

வீர ராஜேந்திர மழவராயன்: இவனுடைய இயற்பெயர் உதைய திவாகரன் கூத்தாடுவான் என்பது. இவன், சத்திரிய சிகாமணி வளநாட்டு, பனையூர்நாட்டுச் செயங்கொண்டசோழநல்லூரிலுள்ளவன். கணவதி நல்லூர சாசனத்தில் கையெடுத்திட்ட ஐவருள் ஒருவனும் இவனே. மழவராயன் - போர்வீர்களுக் குரிய பட்டப் பெயர்; மழவர் = வீரர். பிரமராயன் - பிரமாதிராயன், பார்ப்பன அமைச்சர்களுக்குரிய பட்டப்பெயர். 'தென்னவன பிரமராயன்' என்பது காண்க.

அருமொழி தேவ வள நாடு: இது சோழமண்டலத்தின் உட் பிரிவுகளான ஒன்பது வளநாடுகளில் ஒன்று. மித்த விநோத வளநாடும், சதுரியசிகாமணி வளநாடும் சோழமண்டலத்

[illegible] பிற குடாட்டூர் அரங்கண் நிருக் [illegible] மை யாடையம் ஆடி யங்க வேளாளனும், [illegible] யாகையா கூடி வேகுத்றட்டி பணைக்குடி யூடை யாலை கூடன் ஆரியவேடன் ஜயங்கொண்டசோழ மும்முடி பணையபரும், வினைய ராஜர் குருவளர் காட்டு புலியூர் காட்டுப் பூஞ்சூடையான் அக்காணிச் சியாருரன் முடிவிழுப் பணை யனும், ப.....இராஜேந்திரப் பட்டரும், இராஜராஜப் பாண்டி குலவளநாட்டு உத்தமசோழவளநாட்டு முள்ளி னாட்டு திகிலி சோழநாட்டு மதிமங்கலத்து கொச்சாக்காற் புறத்து வின்னைவ ராயணபட்டனும், வினையில் அதி காரிகள் உய்யக்கொண்டானும் இப்படி.....கத் திருவாய் மொழிந்தருளின படிக்கு நம் வரியிலார் வரியிலே இட்டு

வதற் சேர்ந்ததே யாகும். மூவேந்த வேளாண்: அரசரால் இடப்படும் பட்டப் பெயர்களில் இது ஒன்று. விழுப்பரையன் - தமிழரசர்க்குக் கீழ்ப்பட்ட தலைவர்களில் ஒரு சாராருக்கும், கோயிலில் சுவாமி திரு மூன்பு கணைக்கு வாசிக்கும் உரிமையுடைய ஒருசார் மரபினருக்கு மூரிய பட்டப் பெயர் இது.

பட்டர்: கோயில் அருச்சகன் அல்லது புலவனுக்குரிய பட்டப் பெயர்; இங்கு, இராசேந்திரப் பட்டர், வின்னைவ ராயணபட்டன் என இருவர் குறிக்கப்படுகின்றனர். வினையில் அதிகாரிகள் - அரசன் ஆணையை விடுக்கும் அதிகாரிகள் (Officers who issue the Royal orders). இச்சாசனத்தில் வரும் வினையிலதிகாரி பெயர், உய்யக் கொண்டான் என்பது.

இப்படி.....கத் திருவாய்மொழிந்தருளின படிக்கு: உடன் கூட்டத்து அதிகாரிகள் வீராராசேந்திர மழவராயர், வீராராசேந் திர பிரமாதிராயர், வானவன் மூவேந்த வேளான், செயங்கொண்ட சோழ விழுப்பரையர், அக்காணிச் சியாருரன் முடி விழுப்பரையன், இராசேந்திரப் பட்டன், வின்னைவ ராயணப் பட்டர், வினையில் அதிகாரிகள் உய்யக்கொண்டான ஆகிய இவர்கள் எழுவரும் சொல் லபடியே. திருவாய் மொழிதல் - சொல்லுதல்.

வரியிலார்: வரி வாங்கும் அதிகாரிகள் (Revenue Officers); வரியிலே இட்டு - வரிப்புத்தகத்தில் எழுதி.

இணறிவி கேவுதாஸ் திருவுத்ரிக் கலெரிபாஷ் சிறுவ கிவி மறை பிரயுத்த பிரிவிவி அறிதாறு கோதத்துக்குக் கெடுபிரிவாய் பெரிவிவி கொடுத்த

இப்படிக்கு தொண்டைமான் எழுத்து. இப்படிக்கு மான் எழுத்து. இப்படிக்கு தொண்டைமான் ராஜப்பிற் மாதிரையன் எழுத்து. இப்படிக்கு வரையன் வீரராஜேஜ .....ன்ஜபதூரி காடாழ்வான் எழுத்து. இப்படிக்கு வீரராஜேந்திர மங்கலப் போரையன் எழுத்து. இப்படிக்கு அதிகாரி சுந்தரிய திகாமணி வளநாட்டு பினாடூர் நாட்டு ஜயங்கொண்ட சோழ நல்லூருடையான் உதைய திவாகரன் கூத்தாடுவான் வீரராஜேந்திர மழவராயன் எழுத்து. இப்படிக்கு வானவன் மூவேந்தவேளான் எழுத்து. இப்படிகுகு ஜயங்கொண்ட சோழ விழுப்பரையன் எழுத்து. இப்படிக்கு

அவிபெலி அர்சனபோகம்: தேவர்க்குக் கொடுக்கு முணவுக்காக கோயில் அர்ச்சகர்களுக்கு விடப்பட்ட நிலம்; அவிபெலி - அவிப்பெலி, தேவர்க்குக் கொடுக்கு முணவு; அற்சனு போகம் - அர்ச்சனுபோகம், கோயில் அர்ச்சகர்களுக்கு விடப்பட்ட மானியம்.

செம்பிலும் கல்லிலும் வெட்டிக்கோள்க: அரசன் கட்டளை யைச் சரிபார்த்தாலும், சரிபார்த்துக் சொல்லுதலும், அறைவரியி லார் வரிப்புதகத்தில் எழுதி, பின் கல்லிலும் செம்பிலும் எழுது வதும் ஆண்டை வழக்கமென்று இதனால் தெரிகிறது. எனவே கல்வெட்டு, கல்வில்மட்டுமல்லாமல், செம்பிலும் வெட்டப்பட்ட தென்பது வெளிப்படை.

அற்சுதன் இராசநாராயணன் தொண்டைமான்: இவன் பெயர் முன்னர் 'திருமந்திரவோலைநாயகம் அச்சுதன் இராசராசனை தொண்டைமான்' என்று குறிக்கப்பட்டுள்ளது. பாக்கூர் சாசனத்தை ஒப்பிட்டுப் பார்த்தவர்களில் இவன் ஒருவன். தொண்டைமான் - இது முன்னர் அரசர் சிலருக்குரிய பட்டப் பெயராக வழங்கி வந்துள்ளது.

அற்சுதன் இராச நாராயணன் தொண்டைமான், ஐராவன் உத்தமச் சோழனை இராசராசப் பிரமாதிராயன், அரையன் வீர ராசேந்திர செயமூரி காடாழ்வான், வீராசேந்திர மங்கலப் போ ரையன், அதிகாரி உதைய திவாகரன் கூத்தாடுவானை வீராசேந் திர மழவராயன், வானவன் மூவேந்த வேளான், ஜயங்கொண்ட சோழ விழுப்பரையன், அத்தானிச் சியாரூரன் மூடிவிழுப்பரையன், விடையதிகாரி உய்யக்கொண்டான் என்னும் பெயருடைய ஏனைதின்

அக்ராணி.....விழுப்பரையன் எழுத்து. இப்படிக்கு யிவடயதிகாரி உய்யக் கொண்டான் எழுத்து. இது என் மாதெறன்வ ரனைகும். இத்தண்மம் சோக்குவான் ஸ்ரீபாதம் என் தலைமேலே.

(பாட பேதம்) 1. தயங்கப். 2. தாயினும். 3. மற்றள. 4 அரையர். 5 அடிநிழல். 6. தொடை 7. யொதுங்க. 8. விறைமலர்த் தெரியல் 9 வரிசிலைத். 10. தடக்கை. 11. சினமுக். 12 தூங்கப் பத்திரை புகத்துரத்தி. 13. வேங்கைகள். 14. மீடுமவர். 15. நாயகன். 16. ராயனைச். 17. செற்றவன். 18. இருகையன. 19. நாகலை. 20. தீர்வெனைக் கருதிப். 21. பொருபுனற். 22. கூடல. 23. மக்களாகிய. 24. சிங்கணை. 25 தம்மொடு மென்னில். 26. ஞாலமுனை. 27. மன்னருத்தாணும். 28. வதுத்த வத்தானையை. 29. யடல்பரித். 30. சிங்கனை. 31. தொழுபட. 32. முன்னர்த். 33. வெங்களிற்றெருத். 34. தூணித்துக் கேசவ. 35. நாயகன். 36. தார்த் தேத்தலையன் 37 மாரயன். 38. சினப்போத் தலையனிரச் சயனிகல். 39 செய் 40. மூவதித்தியென 41. ஜர்த்தடுதப்பி. 42. சென்ன 42. முதலியான மதவணைதொட. 43. செருத்தொழில். 44. சிங்கணன். 45. அண்ணன் முதலியரனவரு மமர்போர்ப். 46. பண்ணிய. 47 கண்ணிய. 48. அவர்க்கு. 49. சங்குந் 50 வெண் சாமரையும் மேகடம்பரும். 51. சுகாக். 52. புஷ்பகப் பிடியும். 53. பொருகளிற் றீட்டமும். 54. பாய்பரித் தொகையொடும் 55 பறித்தச் சேயொளி. 56 . விசய மணி. 57 மேய்ந்தே யெழில் கொள். 58 .....தத்துமாப் புவிப். 59 வாரண. 60 வண்கழல் 61. கோளனை தன்னைச். 62 சனநாதன்றன். 63 அலங்கல் சூழ். 64. தென்னனைச்சிரீ. 65. மகன் சிறுவன். 66. மதவரையொணரு

மரும் பாக்கூர் சாசனத்தில் கையெழுத் திட்டவராவர். இச்சாசனத்தில் வரும் வானவன் அச்சுதன், உடையான, அரையன், வீரபத்திரன், காடன, அத்தாணி, அதிகாரி எனறும் பெயர்கள் அக்காலத்தியர் குலப் பெயர்கள போலும்.

விடையதிகாரி - விடையில் அதிகாரி, அரசன் ஆணையை விடுக்கும் அதிகாரி. பன்மாஹேஸ்வரர் - சிவனடியார் கூட்டம்; ரக்ஷை - இட்சிக்க. தன்மம் - தானம, தருமம். நோக்குவான் - பாதுகாப்பவன; ஸ்ரீபாதம் என் தலைமேலே - பாதங்களுக்கு என் வணக்கம் என்றபடி.

லுணைப்பித் துதலையிற். 97. செய்து வரம்பாகச். 68. மேதினி விளக்கி. 69. தனிக்கொழு. 70. திற்பப். 71. போர்த் தொழில். 72. உரிமையில் எய்தி. 73. யாசு வீற்றிருந்து. 74 மறுகெறி விளக்கிய. 75. வர்மரான.

---

8. சிறுபழுவூர் சபையோர் நிலவிக்கிய பத்திரம். *

முகவுரை.

சிறுபழுவூர்ச் சபையினர் ஒரு நிலத்தை விற்ற கிய பத்திரம் பற்றிய சாசனம் 'சிறுபழுவூர் சபையோர் நிலவிக் கிய பத்திரம்' எனப்பட்டது. பத்திரம் – சாசனம். இது திருச்சிறுப்பள்ளி சில்லாவிலுள்ள கீழப்பழுவூர் † என்னும் கிராமத்து வாட்டமூலேசுவர்க் கோயில் இரண்டாவது பிராகாரத்தின் மேலைச்சுவரில் காணப்படுகிறது.

இதன் முற்பகுதியில் குலோத்துங்கன்†† வெற்றிகளையும், கன்னியாகுமரி முதல் துங்கபத்திரை வரையுமிருந்த அவன்

---

* இச்சாசனம் தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் மூன்றாவது தொகுதியின் இரண்டாவது பகுதியைச் சேர்ந்தது.

† இதுவே முற்காலத்தில் சிறுபழுவூர் எனப்பட்டது போலும்.

†† இவனுடைய இயற்பெயர் இராசேந்திரன் என்பது. இவன் முதலாம் இராசேந்திர சோழன் என்னும் கங்கைகொண்ட சோழன் மகள் அம்மங்காதேவிக்கும், கீழைச்சாளுக்கிய மன்னனை இராசராசேந்திரனுக்கும் பிறந்தவன். இராசராசேந்திர சோழன் மக்களான இராசாதிராசன், இராசேந்திரதேவன், வீராசேந்திரன் ஆகியவர்களில், இராசேந்திரதேவன் மகன் இராசமகேந்திரன் இளவரசனையிருந்த பொழுதே (கி. பி. 1062) இறந்துவிட்டான். வீராசேந்திரன மகன் அதிராசேந்திரதேவன் சிலகாலம் (கி. பி. 1070) சோழநாட்டிற்கு அரசனையிருந்து, உரிமையில்லாததால் தள்ளப்பட்டான். எனவே அவனுக்குப் பின சாளுக்கிய இராசேந்திரனே தாய்வழி உரிமை பாராட்டி, பட்டத்திற்கு வந்து குலோத்துங்கன் என்ற பெயரோடு சோழநாட்டை கி. பி. 1070 முதல் 1119 வரை ஆண்டான். இரண்டாம் இராசேந்திரன் என்றும் இவன் அழைக்கப்பட்டான்.

சாட்டுப் பெருக்கினையும் கூறும் மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது. குலோத்துங்கன்–கங்கமண்டலம், சிங்கணம், பாண்டிநாடு முதலியற்றைச் செயித்து, அவைகளில் அவனது வெற்றித் தூண்களை நாட்டினான் என்று சொல்லப்படுகிறது. பிற்பகுதியில் சிறுபழுவூர்ச் சபையோர் ஒரு சிறு நிலப்பகுதியை ஒருவனுக்குக் கிரயமாகக் கொடுத்த செய்தி காணப்படுகிறது. இது சோழமன்னனை இராசகேசரிவர்மன் என்னும் முதலாவது குலோத்துங்கன் ஆட்சியின் இருபதாவது ஆண்டில் கடைபெற்றது.

எனவே, இச் சாசனம் எற்பட்ட காலம் கி. பி. 1090 ஆம் ஆண்டு என்னலாம்.

முதற் குலோத்துங்கன் : மெய்க்கீர்த்தி.

ஸ்வஸ்தி ஸ்ரீ —

புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியிற்
பொன்மேரு[1] யளவுந் தன்மேரு[2] நடப்ப
விளங்கு ஜெய[3]மகளோ யிளங்கோப் பருவத்துச்
சக்கர கோட்டத்து[4] விக்ரமத் தொழிலாற்

புகழ் சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியில்: இது முதற் குலோத்துங்கன் கல்வெட்டுகளின் தவக்கத் தொடர். இவனுடைய கல்வெட்டுகளில் சில 'புகழ்மாது விளங்க செயமாது விரும்ப' என்றும், வேறு சில 'திருமன்னி விளங்கும்' என்றும் தொடங்கும்.

புணரியகழ் - கடலாகிய அகழி; புணரி - கடல். புகழ் சூழ்ந்த புவி, புணரி யகழ்சூழ்ந்த புவி என்ற கூட்டுக.

பொன்மேரு யளவும் — பொன்மலையளவையும்; பொன்மலை - மேருமலை. தன்மேரு - தன் ஆணை; மேரு - ஆஞ்ஞாசக்கரம்.

விளங்கு ஜெயமகள் - புகழ் விளங்கும் வெற்றி; இங்கு வெற்றியைப் பெண்ணாக உருவகம் செய்துள்ளது. இளங்கோப் பருவத்து - இளவரசனாயிருந்த காலத்தில்.

சக்கர கோட்டம்: இது மத்திய மாகாணத்திலுள்ள வத்ஸகாச்சியத்தில் உள்ளது. இதனை, இந்திராவதி நதிக்கரையில் இப்போதுள்ள 'சித்ராக் கூடம்' என்பர். இதைத் தலைநகராகக் கொண்

புதுமணம்[5] புணர்ந்து மதவரை யிட்டம்
வயிர காத்து வாரி யயிறுரைக்[6]
கொற்ற வரைசர்[7] தற்ற மிரிய
வாளுறை கழித்துத் தோள்வலி காட்டிப்
போர்ப்பரி நடாத்தி[8] கீர்த்தினை நிறுத்தி
வடதிசை வானை சூடித் தென்றிசை[9]

டது சக்காக்கோட்ட மண்டல மாகும். இராசேந்திரன் என்னும் குலோத்துங்கன் இளவரசனாயிருந்த காலத்தில், திக்கு விசயம் செய்தற் கெண்ணி வடபுலம் நோக்கிச் சென்று, இதை யாண்ட தாராவர் ஷனைச் செயித்து, திறை செலுத்தச் செய்தான் என்பது வரலாறு, வீகீரமத் தொழில் – வீரத்தொழில்; விக்ரமம் - வீரம்.

புதுமணம் புணர்ந்து - சயமகளை இளங்கோப் பருவத்து புதுமணம் புணர்ந்து எனறபடி. அஃதாவது, குலோத்துங்கன இளவரசனாயிருந்த காலதது வடபுலம சென்று தன் வீரத் தொழிலால் சக்காக்கோட்டம் முதலிய புதிய ராதகளைச் செயித்து என்பது. மதவரை யிட்டம் - யானைகளின் தொகுதி; வரை - மலை; மலைபோன்ற யானை 'மதவரை' எனப்பட்டது.

வயிராகாத்து வாரி - வயிராகரம் என்னும் இடத்தில் கைப்பற்றி; வயிராகரம் என்பது, மத்தியமகாணத்திலுள்ளதோரூர். அங்கு யானைகளும், வைரச்சுரங்கங்களும் அதிகம் உண்டு என்பர். குலோத்துங்கனதன வடபுல யாத்திரையில அவ்வூரிலுள்ள எண்ணிறந்த யானைகளைக் கைப்பற்றினான் என்று தெரிகிறது; அயிறுரை - அயிர்மணல, கூரிய மணல; இங்கு, வான் மணலைக் குறித்தது.

கொற்ற வரைசர்தம் - சாளுக்கிய அரசர்களுடைய; கொற்றளம் - மேலைச் சாளுக்கிய ராண்ட நாடு. குலோதுங்கன வடபுல யாத்திரையில சாளுகியராண்ட பகுதியையும் தாகினான் என்று இதனால் தெரிகிறது. தளம் - சேனை; இரிய - பின்வாங்க.

வாளுறை கழித்து - வாளெடுத்து; தோள்வலி காட்டி - போர் செய்து; போர்ப்பரி நடாத்தி - போர் செய்யும் குதிரையில் சென்று.

வடதிசை வானை சூடி - வடக்குத் திசையில் பகைவர்களை வென்று வெற்றிமாலைச் சூடி; மத்திய மாகாணத்திலுள்ள வயிராகத்தை எரியூட்டி அதிலுள்ள யானைகளைக் கைப்பற்றியதும், சக்காக் கோட்ட மண்டலத்தையாண்ட தாரா வர்ஷனைச் செயித்துத் திறை

தமருகமலப் பூமகள் பொதுவுமையும்
பொன்னி பரடையும் கன்னிலைப் பாவை[10]
நனிமையுந் துணிர[11] வங்கு புனிதத்[12]
திருமணி மகுட முரிமையிற்[13] சூடி
தன்னடி[14] யிரண்டுந் தடமுடி பாகத்
தொன்னில[15] வேந்தர் சூட முன்னின
மனுவாறு பெருக[16] கலியாறு வறுப்ப[17]
செங்கோல் திசைதோறுஞ்[18] செல்ல வெண்குடை

கொண்டதும், கொங்களர் சேனையை முறியவழித்ததும் குலோத்துங்கன் வடநிலையில் கொண்ட வெற்றிகளாகும். தெந்நிசை - தென்றிசையிலுள்ள சோழநாட்டில்.

தேமருகமலப்.....நிலையும் தவிர: வீராசேந்திரன் இறந்த பின்னர் சோழநாட்டை ஆளுதற்குரியார் இல்லாமல், உள் நாட்டுக் கலகங்கள் உண்டாகத் தலைப்பட்டன; தெற்கே பாண்டிய மன்னர் போரிட்டு தங்கள் அடிமைத் தளையை நீக்க முயன்றனர். இவ்வாறு பொதுமையிலும், தனிமையிலும் கிடந்து வாடிய சோழ இராச்சியத்திற்குத் துணை செய்வான்வேண்டி வேங்கிநாட்டை யாண்ட இரண்டாம் இராசேந்திரன், தாய்வழி உரிமை பாராட்டி குலோத்துங்கன் என்னும் பெயரோடு சோழநாட்டிற்கு அரசனான். அச்செய்தியை இவ்வடிகள் புலப்படுத்துகின்றன.

தேமருகமலப் பூமகள் - இலக்குமி; இங்கு சோழ ராச்சியமாகிய செல்வத்தைக் குறித்து நின்றது. பொதுமை - பொதுத் தன்மை. பொன்னி - காவிரி; காவிரி நதி பாயப்பெற்ற சோழ நாடு 'பொன்னியாடையும் கன்னிலப் பாவை' எனப்பட்டது. தனிமை - உதவியற்ற நிலை; தவிர - நீக்க.

உரிமையிற் சூடி-உரிமை கொண்டாடி முடி சூடி; குலோத்துங் கன் முதலாம் இராசேந்திர சோழனுக்குப் பௌத்திரனும், வீரா சேந்திரனுக்கு மருமகனுமாவானதலின் சோழராச்சியத்திற் குரிய வரில்லாத நிலையில், தாய்வழி யுரிமை கொண்டாடி முடிசூடினன்.

தந்நடி.....வேந்தர் சூட: தன் பாதங்களில் நிலவேந்தர் பலர் விழுந்து வணங்க; தடமுடி - கிரீடம், முன்னை - ஆதி.

மனுவாறு - மனு நெறி; கலியாறு வறப்ப - தன்மையாகிய தொடர் குறைய, கலியாறு துன்பக்கடல் எனினுமாம்.

செங்கோல் - ஆட்சி; திசைதோறும் - நாற்றிசையும்.

இருநில வினாக[18] மெங்கணுஞ் கனகு[19]
திருநிழல்[20] வெண்குடை வெண்ணிலாத்[21] திகழ வொருகாற்
யேருழித் புவிவீன யாட வார்கடற்
றீவாந் தாத்து[22] பூபாலர் திறைவிடுக்க[23]
கலஞ்சொரி களிறுமுறை முறை[24] நிற்ப விலங்கிய
தென்னவன்[25] கருந்தலை பருந்தலைத் திடத்தைக்[26]
பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப இந்நாள்[27]
பிற்குலப் பிறைபோல் நிற்பிழை[28] யென்னுஞ்
சொல்லெதிர்க்[29] கோடிற் றல்லது தற்கை[30]

இருநில விளாகம் - உலகம். இருநில விளாகம் எங்கணும் வெண்குடை திருநிழல் வெண்ணிலா வெனத் திகழ என்று கொள்க.

ஒருதனி மேரு - ஒப்பற்ற மேருமலை; புலி விளையாட - புலிக் கொடி பறக்க; புலிக்கொடி சோழருக் குரியது.

வார்கடற் றீவாந் தாத்து பூபாலர்: கடல் சூழ்வுளதாய தீவு களிலுள்ள அரசர்கள்; வார்கடல் - நீண்ட கடல். திறை விடுத்த - திறையாகச் செலுத்திய.

கலஞ்சொரி களிறு - மதக் களிறு; கலஞ்சொரி - கலமளவாக மதத்தைச் சொரியும். முறை முறை நிற்ப - வரிசை வரிசையாக நிற்ப; விலங்கிய-புகழ் விளங்கும்; பகைத்து வேறுபட்ட எனினுமாம்.

தென்னவன் - பாண்டியன்; கருந்தலை - பெரிய தலை; பருந் தலைத்திட - பருந்து உண்ணும்படித் துணித்து என்பது.

பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப: தென்னவன் கருந்தலை பொன்னகர்ப் புறதிடை பருந்தலைத்திடக் கிடப்ப என்பது. பொன்னகர் என்பது, கங்கைகொண்டசோழபுரத்தினைப் போலும். இது சாளுக்கிய விக்கிரமாதித்தனுக்குத் துணையாக திரிபுவன பாண்டியனுடன் குலோத்துங்கன் சடாததிய போராய் இருத்தல் வேண்டு மென்றும், அவனுடைய ஆட்சியின் ஐந்தாவது ஆண்டில் நடந்திருத்தல் வேண்டுமென்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். இந்நாள் - இதே சமயத்தில்.

பிற்குலப் பிறைபோல் - இளம் பிறைச் சந்திரனைப் போல, நிற்பிழை - நிலையான குற்றம். சொல்லெதிர்க் கோடிற்றல்லது - சொல்லுக்குமாறுகக் கோடிற்று அல்லாமல்; அஃதாவது நிற்பிழை என்னும் சொல் பிழைபட்டதல்லாமல் என்பது.

வில்லெதிர்[31] கோடா விக்கலன் கல்லதர்[32]
கற்சிலை தடங்கி மணலூர் நடுவிர்[33]
நீர்ச் சுரத்தினை யளவுற்று வங்கணும்[34]
பாடாணிவங் கனிறும்[35] விட்டகற்[36] மானைமுன்
கூறிய[37] வீரமும் கிடப்ப வேறிரு[38]
மலைகளு முதுகு நெளிப்ப விழுந்த
நதிகளுஞ் சுழன்றுடைக் தோட வீழுந்த
கடல்களுந் தலைவிரித் தலமர[39] குடதிசைத்
தந்நா ளுகந்து தாறும் தாணையும்[40]
பன்னா ளீட்டமும்[41] பலபல முதுகும்
பயந்தெதிர்[42] மாறிய ஜெயபெருந்[43] திருவும்

தந்தை வில்லெதிர் கோடா விக்கலன் - கணவனுடைய கை வில் வின் குறிதவறுத விக்கலன்; விக்கலன் - விக்கிரமாதித்தன். கல் லதர் - குன்றாருஞ் சுரத்திடையிலுள்ள பாதை (Rocky roads); அதர் - வழி.

நங்கிலி தடங்கி மணலூர் நடுவிர்: குலோத்துங்கன் ஒரு படை யுடன் வடக்கு நோக்கிச் சென்று விக்கிரமாதித்தன் தம்பி செயசிங் கன் ஆண்டுவந்த வனவாசியைக் கைப்பற்றினான்; அதனால் விக் கிரமாதித்தன் கோலார் சில்லாவிலுள்ள நங்கிலி என்னுமிடத்தில் அவனை எதிர்த்துப் போர் புரிந்தான். போரில் குலோத்துங்கன் வெற்றிகொண்டு விக்கிரமாதித்தனைத் தங்கப்பத்திலைக்கு அப்பால் போகத் தாக்கிச் சென்றான். அங்ஙனம் தாக்கிச் சென்றவன் இடையுள்ள மணலூர், அளத்தி முதலான இடங்களில் மீண்டும் அவ னைப் புறங்கண்டான் என்பது. இப்போர் குலோத்துங்கனது ஆட்சி யின் பதினென்றும் (கி. பி. 1081) ஆண்டில் நடைபெற்றிருக்க வேண்டுமென்பர்.

தூங்கப்பத்தினை யளவுற்று எங்ஙனும்: நங்கிலி தடங்கித் தங்கப் பத்திலை அளவாகவுள்ள எல்லா இடங்களிலும் என்பது. இது இற கியில் தங்கப்பத்திலை நதிக்கரையில் நடந்த போரைப் பற்றியது.

பட்ட வேம்பரி: இறந்துபட்ட யானைகள்; விட்ட தந் மானப் - அவமானம்; கூறிய வீரமும் கிடப்ப - வீரக் கூற்றும போர்க் களத்தே நிற்க; எறிய மலைகளும் முதுத நெளிப்ப - எறிச் சென்ற மலைகளிலெல்லாம பாறைகள் உண்டாக. இழிந்த நதிகள் - சேனை கள் இறங்கிய நதிகள்.

கடல்களுஞ் தலைவிரித் தலமர - கடல்கள் ஒலிக்க; இங்கு சேனைத் தின்னைக் குறிக்கும்.

குடதிசைத் தந்நா ளுகந்து.....கைக்கொண்ட மண்டிய புக ழொடு: தங்கப்பத்திலைக் கரையில் நடந்த போரில், விக்கிரமாதித் தனும் அவன் தம்பி சயசிங்கனும் தோல்வியுற்று ஓடி ஒளிந்தனர்.

பழியிகுந்து குடுத்த[44] புகழின் செல்வியும்
வானர மரண்தன் மடந்தையர் ஈட்டமும்
மீனாது குடுத்த[45] வெங்கரி நிரையும்
கங்கமண் டலமும் சிங்கண மடந்தும்[46]
பாணி யிரண்டு மொருவினைக் கைக்கொண்டு[47]
இணவியம்[48] புகழோடும்[49] பாண்டி மண்டலம்
கொள்ள[50] திருவுளத் தடைத்தருளி வெள்ள[51]
வருபரி[52] தரங்கமும் பொருபரிக் கலிங்கமும் பொல்[53]
தந்திர வாரியும் முடைத்தாயி வந்து[54]
வடகடல் தெற்கடல்[55] படர்வ தேபோல்[56]

பொருட் குவியலும், மடந்தையர் ஈட்டமும், எண்ணிறந்த யானைகளு மன்றி, கங்கமண்டலம், சிங்கணம் என்னும் இருநாடுகளும் குலோத் துங்கன் வசமாயின என்பது.

குடதிசைத்து - மேலைத்திசையில்; பந்நாளீட்டமும் பலபல ழுதுதும் - பல நாட்களாகப் புறங்காட்டிய வீரர்களும்; பயந்தெதிர் மாறிய - பயந்து பின் வாங்கிய; ஜயபெரும் திரு - வெற்றி, வானர ரொண்கண் மடந்தையர் - வாள்போன்ற கூரிய கண்களையுடைய பெண்கள். ஈட்டம் - கூட்டம், தொகுதி; மீனாது கொடுத்த - மீட்க இயலாது விட்ட; வெங்கரி நிரை - யானைக் கூட்டங்கள். சிங்கணம் - சிங்கணம் என்னும் நாடு; இதனைக் கொண்கானம் என் றும் கூறுவர். பாணி இரண்டும் - நாடுகள் இரண்டையும்.

இணவிய - பொருந்திய, நிறைந்த. திருவுளத் தடைத்தருளி - எண்ணங் கொண்டு; வெள்ளவரு பரி தரங்கமும் - வெள்ளமாய் வரும் குதிரைகளாகிய அலைகளும்; வெள்ளம் - கூட்டம். பொரு கரிக் கலிங்கள் - போர் செய்யும் யானைகளாகிய கலங்களும்; கலம் - மரக்கலம். தந்திரவாரியும் - போர் வீரர்களாகிய கடலும். இங்கு குலோத்துங்கன் காலாட்படை கடலாகவும், குதிரைப் படை அக் கடலிடை எழுமபும் அலைகளாகவும், யானைப்படை மரக்கலங்களா கவும் உருவகிக்கப்பட் டுள்ளன.

வடகடல் தெற்கடல் படர்வதுபோல் - வடகடல், தென்கடல் மேல் படர்வது போல, வடக்கேயுள்ள சோழர்படை தெற்கேயுள்ள பாண்டியர்படைமேல் பாய்ந்து என்பது.

தன்பெருஞ் சேனையை யேவிப்[57] பஞ்சவர்
ஐவருஞ் பொருத போர்களைக்[58] தஞ்சி
வெருவிகொளிக்[59] கோழி யாணைப்[60] புக்க
காடறுத் தடைத்து நாட்டடிப்[61] படுத்து
மற்றவர் தன்மை வசைசார்[62] திரியும்
பொச்சை[63] வெஞ்சுர மேற்றி[64] கொற்ற
விஸ்சய தைதம்பம்[65] திசைதொறும் நிறுத்தி
மூத்திச் சிலாபமு மூத்தமிழ்[66] பொதியிலும்
மத்தகவெங் கரிபடு மையச் சையப்பமும்[67]
கன்னியுங்[68] கைக்கொண் டருளி தென்காட்[69]

பஞ்சவர் ஐவரும் பொருத: வீராபிஷேகத்திற்கு வேண்ட காலம் வரை சோழமன்னர்களின் ஆட்சிக்குட்பட்டு திறை செலுத்தி வந்த பாண்டியர்கள், அதிராசேந்திரன் பட்டமெய்தியதும், சுயாதீனமடைந்து பாண்டிய நாட்டை ஐந்து பிரிவுளாப் பிரித்து தனித்தனி யாட்சி புரிந்து வந்தனர். அவர்களே 'பஞ்சவர் ஐவர்' எனப்பட்டனர். அவர் களோத் தன்னடிப்படுத்த குலோத்துங்கன் கி பி. 1084 ஆண்டு பலட எடுத்து வாளா குடிஞன். பாண்டியர் ஐவரும் புறங்காட்டி ஓடி ஒளிந்தனர். குலோத்துங்கன் தான வென்ற பகுதிகளில் வெற்றித் தூண்களே நாட்டிஞன். கோட்டாறு என்னும் இடத்தில் தன் படை கள் தங்குவதற்கு ஒரு படைவீடு அமைத்தான். இப்பொரில் இவன் கைப்பற்றிய நாடுகளுள் மூத்தச்சலாகத்திற்குரிய மன்னர் குடாக் கடலேச் சார்ந்த நாடும், பொதியில் கூற்றமும், கன்னியாகுமரிப் பகுதியும் சிறந்தவைகளாகும்.

வெருவி - பயந்து; நெளித்தோடி - புறங்காட்டி ஓடி; அர ணைநப் புக்க காடு அறத் துடைத்து - தக்க காவல் என்று புகுந்த காட்டை அழித்து; நாட்டடிப் படுத்து - நாட்டைத் தனக்கு அடி மைப் படுத்தி.

வனசரர் - வேடர்; பொச்சை வெஞ்சுரம் - சிறு குன்றுகளை யுடைய பாலைவனம்; ஏற்றி - நாட்டி; கொற்ற விஸய ஸ்தம்பம் - வெற்றித் தூண்கள்.

மூத்தமிழ் பொதியிலும்: மூத்தமிழ் பேசப்படும் பொதியில் கூற்றமும்; கூற்றம் - நிலப்பகுதி. மத்தவெங் கரிபடு - யானைகள் நிறைந்த; மையச் சையப்பமும் - மேலத தொடர்ச்சி மலைப்பகுதியும்; சையம் - மலை.

கன்னி - கன்னியாகுமரிப் பகுதி; தென்னட் டெல்லை காட்டி - கன்னியகுமரியைச் சோழநாட்டினை தெற்கு எல்லையாகக் காட்டி என்பது.

டலைக் காட்டி குடமலை காட்டுள்ள[70]
சாவெ[71] றெல்லாக் குரி[72]ஷசும் பேற
மாவெ றியதுக்[73]வருகினிக் குலவனை[74]
குறைகலர் குலைய[75] கோட்டா றுள்ப்பட[76]
நெறிதொறு நிலைகள்ளிட் டருளி[77] திறல்கொள்
ஷீரஸிம் றராஸரம்[78] திரியவிட் டருளி
பொங்கொளி[79] ஆரமுக் கிருப்புயத் தலங்கலும் பொல்[80]
ஷீரமுக் கியாகமும் ஷளங்க பார்மிசை[81]
மேலர் வணங்க ஷீரஸிம் றராஸரத்து[82]
அவநி[83]முழு துடையாளொடும் ஷீற்றிருக்கருளிய

குடமலை நாடு - கொங்கு நாடு; சாவெறு - சாவேறு, பகையை சினைச் சூழ்ந்து காக்கும் படைமீது ஒரு முகமாய்ப் பாய்ந்து ஊடறுத்துச் செல்ல முயன்று அங்கிலையில் உயிர் துறத்தலையே விரதமாகக்கொண்ட வீரர்தொகுதி (heroes); தனிவிசும்பேற - மடிய.

மா - குதிரை; வருதினித் தலைவரீ - படைத் தலைவர்; நெருகலர் - தலைய - பகைவர் அழிய; கோட்டாறு - கன்னியாகுமரியை யடுத்த ஒரு நகர்; இதில் குலோத்துங்கன் படைவீடு ஒன்றிருந்தது.

நெறிதொறு நிலைகள்ளிட்டருளி: குலோத்துங்கன் படை எதிர்ச்சென்ற வழிதோறும் படைவீடு அமைத்து என்பது. திறல் கோள் - வெற்றி கொண்ட; திரிய - விளங்க. ஆரம் - முத்துமாலை. அலங்கல் - பூமாலை; ஆரமும் அலங்கலும் போல வீரமும் தியாகமும் விளங்க என்றபடி.

பார்மிசை - உலகில்; மேவலரீ - பகைவர்

அவநி முழுதுடையாளோடும் - பட்டத்தரசியோடும் என்பது. குலோத்துங்கன மனைவியருள் பட்டத்தரசியாக விளங்கியவனைப், 'புவனமுழுதுடையாள்' என்றும், மற்றையோரை 'எழுலகுடையான்' 'திரிபுவன முடையாள்', 'உலகுடையாள்' என்றும் அக்காலத்தில் சொல்லி வந்தனரென்று கல்வெட்டுகளால் தெரிகிறது. அவன மனைவியர் மூவருள் மதுராந்தகி என்பான் அவளுட்சியின் இருபத் தாறாம் ஆண்டளவும் பட்டத்தரசியாயிருந்து இறந்தனள். அவளுக்குப் பின அவன மனைவி தியாகவல்லி என்பவள் பட்டத்தரசி யாயினள். இக்கல்வெட்டு அவளுட்சியின் இருபதாம் ஆண்டதாதலால், இங்கு குறிக்கப்படுபவள் மதுராந்தகி என்பான் என்று அறிக.

கோராஜ கேசரி வர்மரான[84] திரிபுவனச் சக்கரவத்திகள்[85] ஸ்ரீ கொலாத்துங்க[86] சோழதேவர்க்கு யாண்டு—

செய்தி.

இருபதாவது, உத்தொங்க தொங்க வளநாட்டுக் குந்றக் கூற்றத்து ப்ரஹ்மதேயம் சிறுபழுவூர் ஸபைபோம். விருத ராஜ பயங்கர வாணகோ வனையர் தங்கள்ளாச்சி சோழகுல சுந்தரக் விச்சாதிரியாழ்வார்க்கு ஸபை விலையாக விற்றுக் குடுத்த நிலமாவது —

ராஜேந்திரசோழ வாய்க்காலுக்கு வடக்கு, பவித்ர மாணிக்க வதிக்குக் கிழக்கு — முதல கண்ணேற்று இரண்டாம் சதுரத்து நிலம் ஆலுமாவில் வடக்கடைப்பு நிலம் ஒருமாவில்

ராஜகேசரி வர்மன்: இது குலோத்துங்கன் பட்டப்பெயர். இவனுக்குமுன் முடிகுடிய அதிராஜேந்திரன் பரகேசரி என்று அழைக்கப்பட்டான்.

திரிபுவன சக்கரவத்திகள் - சோழ அரசர்கள் பெரும்பாலும் உடையார் என்றே அழைக்கப்படுவர். குலோத்துங்கன் காலமுதல் அவர்கள் 'திரிபுவன சக்கரவர்த்திகள்' என்றும்மை அழைக்கப் பட்டனர். திரிபுவனம் என்பது சேர, சோழ, பாண்டிய நாடுகளைக் குறிக்கும்.

குந்றக் கூற்றம் = குன்றக் கூற்றம்; கூற்றம் - வளநாட்டின் பகுதி; இது நாடு என்றும் அழைக்கப்படும். ப்ரஹ்மதேயம் - பிரா மணருக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட ஊர்; இங்கு சிறுபழுவூர் ஒரு ப்ரமதேயமாக இருந்தது போலும்

விருதராஜ பயங்கர வாணகோவனையர்: விருதராச பயங்கன், வாணகோவனையன் எனபன குலோத்துங்கன் பட்டப் பெயர்கள். தங்கள்ளாச்சி - தக்களாட்சியிலடங்கிய, சோழகுல சுந்தரவிச்சாதிரி யாழ்வார் - இவன் சேர்ழநாட்சிக் குட்பட்ட ஒரு தலவன போலும். இவனே சிறுபழுவூர் சபையினரிடம் நிலம் விலக்கு வாங்கியவன.

ஸபை - சபையோர்; விற்றுக் குடுத்த - விலையாகக் கொடுத்த.

வதி - வழி; கண்ணேறு - நீர்ப்பாசன வாய்க்கால்; நஞ்செய் நிலப் பிரிவு எனினுமாம் இரண்டாம் சதுரத்து நிலம் — இரண்டா வது சதுர நிலம்; சதுரமென்பது, அக்காலத்திய புஞ்சை நிலப் பிரிவின் ஒரு பெயர் போலும.

கீழ்க்கடைப் நிலம் அரைமாவும், இவ்வதிக்குக் கிழக்கு, இவ் வாய்க்காலுக்கு வடக்கு-இரண்டாங் கண்ணாற்று இரண்டாம் சதிரம் நிலம் காலுமாவில் வடக்கடைப் நிலம் ஒருமாவில் மேற்க்கடைப் நிலம் அரைமாவும் ஆக நிலம் ஒருமா. இந் நிலம் ஒருமாவும் இவருக்கு விற்றுக் கொள்வதாக எம்மிலி னைசுந்த விலைப்பொருள் அந்நாடு னல்க்காசு ஒன்று. இக்காசு ஒன்றும் ஆவணக்களியை கைச் செல்லறக்கொண்டு விற்று விலையாவணம் செயிது குடுத்தோம் ப்ரஷ்மதேயம் சிறு பழூர் ஸபையோம். இந்நிலம ஒரு மாவுக்கும் இதுவே விலையோலை ஆவதாகவும், இதுவே பொருள் மாவறுதிப் பொருள் சிலவோலை யாவதாகவும், இதுவல்லது வேறுபொ ருள் மாவறுதிப் பொருள்ச் சிலவோலை காட்டக் கடவர் அல் லாதாராகவும், இப்படி. இனைசுந்த இக்காசு ஒன்றும் கொண்டு இந்நிலம் ஒருமாவும் விலக்கற விற்று பொருளறக் கொண்

மா - ஒரு நிலஅளவை; $\frac{1}{20}$ வேலி; 100 குழி: வடக்கடைப் - வடபக்கம்; கீழ்க்கடைப் - கீழ்ப்பக்கம். இவ்வதிக்குக் கிழக்கு - பவித்திர மாணிக்க வதிக்குக் கிழக்கு; இவ்வாய்க்கால் - இராசேந் திரசோழ வாய்க்கால். இரண்டாங் கண்ணாறு - இரண்டாவது நீர்ப்பாசன வாய்க்கால் சதிரம் - சதுரம்.

மேற்கடைப் - மேலைப்பக்கம். விற்றுக் கொள்வதாக - விலைக் குக் கொடுக்க; எம்மில் இனைசுந்த விலைப்பொருள் - யாம விரும்பிய விலை. அந்நாடு னல்க்காசு ஒன்று - காளொன்றுக்குப் பொற்காசு ஒன்று; காசு எனபது ஒரு பழைய பொன் நாணயம்.

ஆவணக் களியை - ஆவணக் களரியில், பத்திரம் பதிவு செய்யு மிடத்தில், கைச் செல்லறக் கொண்டு - கையால் கொடுக்கப் பெற்று; விலையாவணம் செயிது - விலைப்பத்திரம் எழுதி; ஆவணம் - பத்திரம்.

விலையோலை - விலைப்பத்திரம். பொருள் - நிலப்பொருள், மாவறுதிப் பொருள் - ஒரு மா நிலத்தின் முழுந்த விலைப்பொருள். சிலவோலை - சிலையோலை, கல்வெட்டுச் சாசனம்

இப்படி இனைசுந்த - இவ்வாறு சம்மதித்து விலைக்கற விற்று பொருளறக் கொண்டோம் - ஒரே விலைக்கு விற்ற விற்ற பொருள் முழுவதையும் பெற்றுக் கொண்டோம்.

அக்காலத்தில் ஒரு நிலத்தை விற்பதற்கு, ஆவணக்களரியின் மூலம் விலைப்பொருள் பெற்று, ஆவணம் செய்து கல்லில் வெட்டுவது

டோம் சிறுபழுவூர் ஸபையோம். இவர்கள் பணிக்க இப் பிர மாணம் எழுதினேன். மத்தியஸ்தம் பழுவூருடையாள் ஆயிரத் திருநூற்றுவர்முடி கொண்டானேன் இவை என்னெழுத்து. இப்படிக்கு சாந்தமங்கலத்து பாலாசிரியன் இலக்குவணன் கூத்தப்பன்னேன் இவை என்னெழுத்து. இப்படிக்கு பழுவூர் சவாந்தி சாரணனென் இவை என்னெழுத்து. இது சாந்தி பாலாசிரியன் வீரசாரணனது. இது சாவாந்தி சாரணன் மாறன் பிப்படி. அறிவேன் இவ்வூர் வீரசோழ விண்ணகாழ்வார் கோயில் திருவாசரதனை பண்ணும் சாரணன் திருவாயிக் குலமுடையானேன். இப்படி அறிவேன் இவ்வூர் கருமான். இது பன்மா ஹேஸ்வராகைகூ. உ.

வழக்கம் என்று இச்சாசனத்தால் தெரிகிறது.

இவர்கள் பணிக்க - சிறுபழுவூர்ச் சபையினர் கட்டளையிட; பிர மாணம் - பத்திரம் மத்தியஸ்தம் - மத்தஸ்தனாதான் சிறுபழு வூர் சபையோர் நிலவிக்கிய பத்திரம் எழுதியவன் அவ்வூர்ச்சபை மத்தியஸ்தனை ஆயிரத்திருநூற்றுவன் முடிகொண்டான் என்பவ னுவான். கையொப்பமிட்டவர்கள் சாந்தமங்கலம் பாலாசிரியன் இலக்குவணன் கூத்தப்பன், சிறுபழுவூர் சவாந்தி சாரணன், சாந்தி பாலாசிரியன் வீரசாரணன், சாவாந்தி சாரணன மாறன், சாரணன் திருவாய்க்குல முடையான், அவ்வூர் கருமான் ஆகிய அறுவராவர்.

சவாந்தி - சாந்தி, சாந்தி யடிகள் கோயில் பூசகன் (Temple Priest) என்பது பொருள். இது சாவாந்தி என்றும் வழங்குகிறது. பாலாசிரியன் - பாலர்க்குக் கற்பிக்கும் ஆசிரியன் (Teacher of Children); 'சாந்தி பாலாசிரியன்' என்ற தொடரால் அக்காலத்தில் கோயில்களில் பூசைசெய்பவனே பாலர்களுக்குக் கல்வி கற்கும் தொழிலும் மேற்கொண்டிருந்தான் என்று தெரிகிறது.

வீரசோழ விண்ணகாழ்வார் கோயில்: இது சிறுபழுவூரிலி ருந்த விஷ்ணுகோயிலின் பெயர். இப்பொழுது வாட்ட மூலை வார் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இதிலிருந்து அக்காலத் தில் பூசைசெய்து வந்தவன் சாரணன் திருவாயிக்குல முடையான் என்போன. திருவாய்க்குல முடையான் என்பது, அக்காலப் பட்டப் பெயர்களில் ஒன்றுபோலும்.

கருமான் - கருமகன், கொல்லன்; பன்மா ஹேஸ்வராகைகூ - அடியார் கூட்டம் காக்க.

(பாட பேதம்) 1. பொன்னேமி 2. தன்னேமி 3. சயமகூ 4. சக்கரக்கோட்டத்து 5. புதுமனம் 6. யயிர்முனைக் 7. கைக்கனை வசசர 8. நடாத்திக் 9. கென்றிசை 10. னைனிலப் பாலை 11. தவிரப் 12. புக்கதற் 13. சூடித் 14. தன்னடி 15. தொண்ணில 16. பெருகக் 17. வறப்பச் 18. திசை தொறுஞ் 18. வனக 19. தறுத 20. ..... 21. வொருதனி 22. நீபாந் தரத்துப் 23. நிறைவிடு 24. ..... 25. தென்னவன் 26. நிடதத் தன் 27. விற்காள் 28. நிற்பிழை 29. சொல்லெதிர் 30. தன்னை 31. வில்லது 32 வேள்குலத் தரசர் 33. கடுவின் 34. 'கங்கிலி தடங்கி ..... எங்கணும்' எனபதற்குப் பதிலாக, 'அளத்தியிலிட்ட களிற்றின நீட்டமும்' என்ற பாடம் சில பிரதிகளில் காணப்படுகிறது. 35. வெம்களியும் 36. விட்டதன் 37. கூறின 38. வேறின 39. தலமரக் 40. தாணும் தானையும் 41. பண்ணெனிட்ட 42 பயத்தெதிர் 43. சபப்பெருந் 44. கொடுத்த 45. கொடுத்த 46. மென்னும் 47. னைக்கொண் 48. மண்டியு 49. புகழொடு 50. கொள்ளத் 51 தடைத்து வெள்ளம் 52. வருபரித் 53. கலங்களும் 54. மூடைத்தாயி வந்து 55. தென்கடல் 56. போலத் 57. தன்பெருஞ் சேனைய யேவிப் 58. போர்க்களத் 59. வெரிகளித் 60. யானைனைப் 61. காட்டில் 62 வனசார் 63. பொற்றை 64. மேற்றிக் 65. விசயத்தம்பன் 66. மூத்தின் சிலாபமும் மூத்தமிழ்ப் 67. மய்யச்சையமும் 68. கன்னியுங் 69. தனைரட் 70. டெலலை காட்டிக் கடனமலை நாட்டின 71 சாவே 72. தனி 73. மாவேறிய தன் 74. தலவனைக் 75 குலயக் 76 கோட்டாறட்பட 77. நிலகளிட்டருளித் 78. வீரசிம்மாசனங் 79. ..... 80. போல 81. விளக்கப் பார்தொழச் 82. வீரசிம்மாசனத்து 83. அவனி.

---

9. வில்லவராயன் சாசனம். *

முகவுரை.

வில்லவராயன்† என்போன், ஒரு நிலத்தை விலைக்கு வாங்கியதைப்பற்றிய சாசனம் 'வில்லவராயன் சாசனம்' எனப்

---

* இச்சாசனம் தென்னிந்திய சாசனத்தொகுதிகளில் மூன்றாவது தொகுதியின் இரண்டாவது பகுதியைச் சேர்ந்தது.

† இவனுடைய முழுப்பெயர் மூனையன் அருண்மொழித் தேவனென வில்லவராயன் என்பது. வளம்பகுடி அரையன் என்பது இவனது தந்தை பெயர்; இவனுக்குச் சொந்த ஊர் செயசிங்க குலகாலவளநாட்டு, மீசெங்கினி நாட்டு வளம்பகுடி என்பதாகும்.

[illegible] திருப்பெயர்ச்சி அருகிலுள்ள சம்புகேசு [illegible] || இரண்டாவது [illegible] வரையப்படுகிறது.

இவன் முற்பகுதியில் குலோத்துங்கன் வெற்றிகளையும், கன்னியாகுமரி முதல் திருக்கயிலாயம் வரை இருந்த அவனது காட்டுப் பிரதேசங்களையும் மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது. [illegible] திருப்புறம்பியில் விக்கிரமனை வென்றான், கோயில் நிலங்களில் சிலவற்றை வாங்கி, அதன் வருமானத்திலிருந்து கோயிலை தொழுவதற்கு வேண்டும் திருமஞ்சனம் திருவமுதுக்கு [illegible], இடபவாகனதேவர் சமபிராட்டியோடும் இரண்டு திருவாளிலுமம் இரண்டு கால் திருவிழாவும் [illegible] திருநந்தாவிளக்கு எரிக்கவும் ஆகும் செலவுகளைக் கொடுத்துவந்த செய்தி கூறப்படுகிறது. சோழ அரசனான முதலாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின் நாற்பத்தேழாவது ஆண்டில் இது எடை பெற்றது.

எனவே, இச் சாசனம் எற்பட்ட காலம் கி. பி. 1117 ஆம் ஆண்டு என்னலாம்.

முதற் குலோத்துங்கன்: மெய்க் கீர்த்தி

ஸ்வஸ்தி ஸ்ரீ —

புகழ்சூழ்ந்த புனரி பகழ்சூழ்ந்த புவியிற்

---

††இதன் மூந்திய பெயர் திருவானைக்கா என்பது. ஆனை - யானை; கா - சோலை.

‖ இதன் மூந்திய பெயர் திருவெண்ணெல் என்பது.

ஸ்வஸ்தி ஸ்ரீ: இது சாசனங்களில் மங்கலம் குறித்து வரும் வட மொழித் தொடர்.

புகழ் சூழ்ந்த புனரி பகழ் சூழ்ந்த புவியில்: முதலாம் குலோத்துங்க சோழனது சாசனங்களில் சிலவற்றில் வரும் மெய்கீர்த்தியின் தொடக்கம் இது. புனரி - கடல்; அகழ - அகழி.

பொன்றேமி[1] யளவுஞ் சுன்றேமி[2] சுடைப்ப
னினங்கு சயமகளி னினங்கோட் படுவத்து[3]
சுக்கர கோட்டத்து[4] விக்கமத்[5] தொழிலோர்ந்
துதுமணைம் புணர்ந்து மதவை யிட்டம்
வயிரா கதத்து வாரி யயிர்மூனைக்
கொந்தள வாசர் தந்தள மிரிய
வாளுறை கழித்து[6] தோள்வலி காட்டிப்
போர்ப்பரி கூடத்திக் கிர்த்தினை நிறுத்தி
வடதிசை வாகை சூடித் தேந்திசைத்[7]
தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொந்தி[8] யாடை கண்டிலப்[9] பாவையின்
தனிமையுந் தவிரப் புனிதத் திருமணி
மகுட முரிமையிற் சூடித்
தந்நடி[10] யிரண்டுந் தடமுடி யாகத்

பொன்றேமி யளவும் - பொன மலையாகிய மேருவனையும்; சுன்றேமி - தன் ஆணை; சயமகள் - வெற்றி யென்னும் பெண; இளங் கோப்பருவம் - இளவரசனையிருந்த காலம்.

சுக்கர கோட்டம்: இது மத்திய மாகாணத்திலுள்ள வத்ஸ ராச்சியத்திலுள்ளது; இதனைக் குலோத்துங்கன காலத்திலாண்ட வன தாராவர்கன் என்பவனுகும். விக்கமத் தொழில் - வீரத் தொழில.

புதுமணைம் புணர்ந்து - வெற்றிகொண்டு; மதவை யிட்டம் - யானைகள்; வயிராகதம்: இது சக்காக்கோட்ட மன்னடலத்தை யடுத்திருந்த ஒரு ஊர்; குலோத்துங்கன இதனை எரியூட்டி, இங்குள்ள யானைகளைக் கைப்பற்றினன.

கொந்தளவாசர் - சாளுக்கியமன்னர்; மேலைச் சாளுக்கிய மன்னனன விக்கிரமாதித்தன் ஆட்சிக்குட்பட்ட பல சிற்றரசுகள் இருந்தனர்; அவர்களில் கொந்தள அரசர்களும் ஒரு சிறந்த பரம்பினராகும். இவர்களுள் நுளம்ப பாடியை ஆண்ட பாணடிய மன்னர் என்பர்; இக்கால ஆராய்ச்சியாளர்.

தேமரு கமலப்பூமகள் - சோழ ராச்சியம்; பொந்தியாடை நன் நிலப்பாவை - காவிரி நதி பாயும் சோழநாடு

மதுடம் உரிமையில் சூடி: சோழ கட்டிற்குரிய மகுடத்தைத் தாய்வழி உரிமையாகச் சூடி. தந்நடி..... வேந்தர் தூட: தனது

தொன்றில்[11] வேந்தர் சூட முன்னோ[12]
மறுவமா றுபெருக[13] கலியா றுவறப்ப[14]
செஞ்சோல் திசைதொறுஞ் செல்ல வெண்குடை
இருநில வளாக மெங்கணுந் தனது[15]
திருநிழல் விண்ணிலாத்[16] திகழ வொருதனி[17]
மேருவிற் புலிவிளை யாட வார்கடற்
றீவாய் தாத்துப்[18] பூபாலர் திறைகொடுக்க[19]
கலஞ்சொரி களிறுமுறை நிற்ப விலங்கிய
தென்னவன்[20] கருந்தலை பருந்தலைத் திடக்கம்[21]
பொன்னகர்ப்[22] புறத்திடைக் கிடப்ப விசாள்[23]
பிற்குலப் பிறைபோல் நிற்பிழை யெண்ணுஞ்[24]
சொல்லெதிர் கோடிற் றல்லது தன்கை[25]
வில்லது கோடா வெளகுலத் தரசர்
அளத்திய[26] விட்ட களிற்றின திட்டமும்

ஆட்சியினை வேந்தர் பலர் எற்றித் திறை செலுத்த; முந்நீர மனுவாறு: ஆதி மனுவெறி. இருநில வளாகம் - உலகம்.

மேருவில் புலி விளையாட: மேரு மலையில் புலிக்கொடி பறக்க; அதாவது மேருமலை வரை தன் ஆட்சி நடக்க என்பது. தீவாந்தரத் துப் பூபாலர்: கடலில தீவுகளிடையிருந்து ஆளும் அரசர்கள். கலந் சொரி களிறு - மதயானை.

விலங்கிய தென்னவர்: தன்னுணையை மறுத்த பாண்டியன். பருந் தலைத்திட - பருந்துகள் உண்ண. தென்கை வில்லது கோடா வேழ துலத் தரசர்: வில் வலத்துக்குறி தவறு தெய்யும் சாளுகிய குல மன் னர் என்பது. வேழ குலமென்பது, வேள்குல மென்றும், வேளகுல மென்றும் சாசனங்களில் காணப்படுகிறது.

அளத்தியலிட்ட - அளத்தியிலிட்ட; அளத்தி என்னுமிடத்தில் விட்டுப்போன. கங்கிலி என்னுமிடத்தில் நடந்த போரில் சூலோத் துங்கன் விக்கிரமாதித்தனைத் துங்கபத்திரை நதிவரைத் துரத் திச் சென்றான். அங்ஙனம் துரத்திச் சென்றவன், இடையிலுள்ள மணலூர், அளத்தி முதலான இடங்களிலும் அவனைப் போரில் புறங்கண்டான் என்பது வரலாறு.

பட்டவெம் பரியும் விட்டதன்[27] மானமுங்
கூறின வீரமும் கிடப்ப வேறின
மலைகளு முதுகு நெளிப்ப விழுந்த
நதிகளுஞ் சுழற்றுணைடன் தோட[28] விழுங்க
கடல்களுந் தலைவிரித் தலமர[29] குடதிசைத்
தங்கா ளுகன்[30] தாறும் தாயையும்[31]
பன்ன[32] ளிட்ட பலபல முதுகும்
பயந்தெதிர் மாறின[33] ஜயப்பெருந்[34] திருவும்
பழியுகந்து[35] குடுத்த புகழின்[36] செல்வியும்
வாளா ரொண்கண் மடந்தைய ரீட்டமும்
மீளாது குடுத்த[37] வெங்கரி நிரையும்
கங்கமண் டலமும் சிங்கண மெந்தும்[38]
பாணி யிரண்டு மொருவிசைக் ணைகக்கொண்
டூண்டிய புகழொடு பாண்டி மண்டலங்
கொள்ளத் திருவுளத் தடைத்து வெள்ள[39]
வருபரித் தானங்களும் பொருபரிக் கலங்களும்
தந்திர வாரியு முடைத்தாய் வந்து

வெம்பரியும் - கொடிய குதிரைப்படையும்; வீரமும் கிடப்ப - மானத்தோடு வீரமும் சொல்லளவில் நிற்ப. மலைகளும் முதுகு நெளிப்ப - நதிகளோடு மலைகளும் கடந்து செல்வதற்கு இடம் கொடுப்ப.

எழுந்த கடல்களுந் தலைவிரித் தலமர - எழுந்த சேனைத் திரளும் தோலவியுற்று வருந்த. பன்னாளிட்ட பல பல முதுதும் ... ... ஜயப் பெருந்திருவும்: பல காட்களாக போரில் புறங்காட்டிய பல வீரர்கள் பயந்து எதிரி பக்கமாகச் சேர்ந்ததாகிய வெற்றியும் என்பது.

மீளாது குடுத்த - மீட்க இயலாது விட்டு விட்ட. நிரை - கூட்டம், தொகுதி. பாணி - காடு; ஒரு விசை - ஒரே தடவையில். ஈண்டிய - மிகுந்த; திருவுளத்தடைத்து - எண்ணங்கொண்டு; வெள்ளவரு - வெள்ளம்போல வருட, மிகுதியாக வரும். தானங்கம் - அணி; பொருபரி; இஃது 'பொருகரி' என்றிருத்தல் வேண்டும்; போர் செய்யும் யானை எனபது இதன் பொருள். கலம் - மரக்கலம்.

தந்திரவாரி - காலாட் படையாகிய கடல்; தந்திரம் - காலாள் படை; வாரி - கடல்.

வடகடல் தென்கடல்[40] படர்வது போலத்
தன்பெருஞ்[1] சேனையை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருத போர்களத் தஞ்சி
வெருவெளித் தொடி[42] யாணைகப்[3] புக்க
காடறத் துடைத்து நாட்டடிப்[44] படுத்து
மற்றவர் தன்மை வரைசார் திரியும்
பொச்சை[45] வெஞ்சுர மேற்றி[46] கொற்ற
விசய ஸ்தம்பம்[47] திசைதொறும் நிறுத்தி
முத்திங்[48] சலாபமும் முத்தமிட்[49] பதியிலும்
மத்தவெங் களிபடு மய்யச் சையமும்[50]
கன்னியுங்[51] கைக்கொண்டு புனிதத்[52] தெந்நாட்[53]
டெல்லைக்[54] காட்டிக் குடமலை நாட்டுள்ள[55]

வடகடல் தென்கடல் படர்வது போல - வடகடல் தென்கடல் மீது பாய்வது போல; வட கடலும் தென கடலும் கலப்பதுபோல எனினுமாம்.

பஞ்சவர் ஐவர்: இதற்குரிய குறிப்புரையை மூன்றிய சாசனக் குறிப்புரையிடத்துக் காண்க. வெரு - வெருவி, பயந்து; நெளித்து-பின் வாங்கி.

காடறத் துடைத்து - காடு முழுவதையும் அழித்து. நாட்டடிப் படுத்து - நாட்டைத் தன்வசப்படுத்தி. வனசரர் - வேடர்; வனத்தில் வேடமாடுபவர் என்பது இதன் சொற் பொருள்.

பொச்சை - பொற்றை, சிறு குன்று; வெஞ்சுரம் - பாலை நிலப் பகுதி. ஏற்றி - தரத்தி. கோற்றம் - வெற்றி.

விசயஸ்தம்பம் - வெற்றிக் கறிகுறியாக நாட்டும் தூண்கள்; கன்னி - கன்னியாகுமரிப் பகுதி.

முத்தின் சலாபமும்..... கன்னியும் கைக்கோண்டு: போண்டிய நாட்டுப் போரில் குலோத்துங்கன் முத்துச்சலாபத்திற்குரிய மன்னர்களுடைய கடலுச்சார்ந்த நாட்டையும், பொதியில் கூற்றத்தையும், மலைமலைத் தொடர்ப் பகுதியையும், கன்னியாகுமரிப் பகுதியையும் கைக்கொண்டான என்பது. களிபடு மய்யச்சையம் - யானைகளுடைய பசுமையான மலைமலைத்தொடர்ப் பகுதி. சையம் - மலை.

புனிதத் தென்னாட்டெல்லை நாட்டி: புனிதமிக்க கன்னியாகுமரியைத் தென்னெட்டின் எல்லையாகக் குறித்து என்பது.

குடமலை நாடு - கொங்கு நாடு; சாவேறு - சாவர், வீரம் மிக்க வர்கள்; தந்தி விசும் பேற - மடிய; மாவேறிய - குதிரையின்மீது ஏறிப் போர்செய்த. வருதினி - படை; தானைகலர் - பணைவர்.

சாவெ றெல்லாஞ்[56] கஞ்சிசும்[57] பேற
மாவெ றியதஞ்[58] வருதினித் தலைவனைக்
குறுகலர் குலைய[59] கோட்டா றட்பட
வெறிதொறு நிலைகளிட் டருளித் திறல்கொள்
வீரஸிம் ஹாஸநம்[60] திரியவிட் டருளிப்
பொங்கொளி[61] ஆழமுந் திருப்புயத் தலங்கலும் பொல்[62]
வீழமுந் தியாகமும் விளங்கப் பார்தொழச்
சிவநிடத் தணைமெயைதத்[63] தியாக வல்லி
உலகுடை யாளிருப்ப[64] அவளுடன்[65]
கங்கைவீற் றிருந் தென[66] மங்கையர்திலத
மேழிசை வல்லபி ஏழுலக முடையாள்[67]
வாழி மலர்ந்திநி திருப்ப[68] ஊழியுந்

கோட்டாறுட்பட-கோட்டாறு முதல்; இது கன்னியாகுமரியை யடுத்ததோர் ஊர்; இங்கு குலோத்துங்கன் ஒரு படைவீடு அமைத்திருந்தான. நெறிதொறும் நிலைகளிட்டருளி: செல்லுமிடங்களிலெல்லாம் வெற்றித்தூண்கள் நாட்டி என்பது; நிலைகள் - தூண்கள்.

ஆழமுந் திருப்புயத்..... வீழநந் தியாகமும் விளங்க: ஆழம் - மூத்துமாலை; அலங்கல் - பூமாலை; வீரம் ஆடத்திற்கும், தியாகம் அலங்கலுக்கும் உவமை. பார் தொழ - உலகத்தவர் வணங்க.

சிவநிடத்.....உலகு முடையாளிருப்ப: மதுராந்தகிக்குப்பின், குலோத்துங்கன் இரண்டாவது மனைவியான தியாகவல்லி என்பாள் பட்டத் தரசியாவாள். அவள் பெருமையும், அரசன்பால் அவள் கொண்டிருந்த மதிப்பும் 'சிவநிடத் தணைமெயைதத் தியாகவல்லி உலகுமுடை யாளிருப்ப' என்ற தொடரால் விளக்கமுறும்.

அவளுடந் கங்கை ..... மலர்ந்திநிதிருப்ப: குலோத்துங்கனுடைய மூன்றாவது மனைவியின் பெயர் ஏழிசை வல்லபி என்பது. இவள் 'மங்கையர் திலதம்' என்றும், 'ஏழுலகமுடையாள்' என்றும், 'தியாகவல்லியுடன் கங்கை வீற்றிருந்ததென' என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிறாள். கங்கை - கங்காதேவி; கங்கையும் உமையும் சிவனுடைய மனைவியர் என்பது புராண வரலாறு.

ஊழியும் - ஊழிக் காலத்தும்; ஆகம் - மார்பு; திருமகள் - இலக்குமி. 'ஊழியும் திருமா லாகத்துப் பிரியா தென்ற திருமகளிருந்தென..... உலகுமுடையாளொடும் வீற்றிருந்தருளிய' என்ற அடியால் இவள் பட்டத்தரசி என்று தெரிகிறது.

இவரை வாகத்தும் பிரிய விகற்று[69]
அரிதுடை அரிந்தன ஈரலிட றுணைக்கு[70]
உலந்த புலையரொடு விறறி நக் குருளிய[71]
கொல்யாஜு வெலரி பம்மயான[72] த்ரிபுவந்ச சக்கவற்தியன்[73]
ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு —

ஸெய்தி.

சமள ஆவகை பாண்டி குலாசனி வளநாட்டு மீகொணழு தேவகுல பரவற மதேதபம நிநூவாணக்காவில் திருவண்ணலவல் கீழ் இருந்தருளிய த்ரிபுவனபதிக்கு மூலப்புருத்யராகிய

கோவிராஜ கேலரி பந்மயான த்ரிபுவந் சக்கவர்த்திகள்: குலோத்துங்கனது சிறப்புப் பெயர்களில், இராசகேசரி, த்ரிபுவன சக்கரவர்த்திகள் என்பன பரம்பரையாக வந்த பட்டப்பெயர்கள். இவை அவனுடைய எல்லாச் சாசனங்களிலும் பொருந்தி வரும். கோ என்ற சொல், தமிழகத்தில் போசர்களாய் ஆண்ட பண்டைய மன்னர்களைக் குறித்தது; கோப்பெருஞ் சோழன், கோகெடுமாறன் என்ற பெயர்களைக் காண்க. சோழ ராச்சியத்தை யாண்ட போசர்களை இராசகேசரி வர்மன், பரகேசரி வர்மன் என்ற பட்டங்களுடன் 'கோ' என்ற சொல்லையும் சேர்த்து வழங்கி வந்தனர். அம்முறையில் குலோத்துங்கன் 'கோவிராசகேசரி' எனறழைக்கப் பட்டான்.

பாண்டி குலாசநி - பாண்டிய குலத்திற்கு இடி போன்றவன்; அசனி - இடி. இது குலோத்துங்கனது சிறப்புப் பெயர்களில் ஒன்று போலும். இப்பெயரால் ஒரு வளநாடு 'பாண்டிய குலாசநி வளநாடு' எனப்பட்டது. மீ கொழு - மீ கொள், மேலாகக் கொள்ளும் என்பது.

தேவ தானம்: கோயிலுக்கு விடப்பட்ட இறையிலி நிலம்; பிரம்ம தேயம் -- பிராமணருக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட வரி.

திருவாணைக்கா: இது இப்பொழுது சம்புகேசுவரம் என்றழைக்கப்படுகிறது; திருச்சிராபள்ளி நிலையத்துக்கு அருகிலிருக்கிறது திருவெண்ணெலவல் கீழ்: இந்த இடம் இப்பொழுது சம்புகேசுவரசுவாமி ஆலயமெனத் திகழுகிறது. சம்பு - நாவல்மரம்.

த்ரிபுவனபதி: இது சம்புகேசுவர ஆலயத்தில் வீற்றிருக்கும் கடவுளின் ஆதிப்பெயர்; இப்பொழுது 'சம்புகேசுவரசுவாமி' என்று அழைப்படுகிறார்.

சண்டெஸ்வரன் ஆதேசம் ஜயசிங்க குலகால வளநாட்டு மீகிசங்கினி நாட்டு வளம்பகுடி அரையமகன் மூனையர் அரு மொழி தேவரான வில்லவராயனுக்கு நாம் விற்றுக் குடுத்த நிலம் நிலமாவது —

உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமாற் தேவ நாகம் தென்கரை ஊர்களில் பாண்டிகுலாசனி வளநாட்டு மீகைாணை ஆளீகுடியில் இவனுக்கு விற்றுக்குடுத்த நிலத்துக் கிளைந்த கீற்பார்க்கெல்லை பிள்ளை கொள்ளி வாய்க்காலுக்கு மேற்கும், தென்பார்க் கெல்லை களத்தில் வடக்கிலகையும் வாய்க் காலுக்கு வடக்கும், மீபார்க்கெல்லை உத்தமசீலிச் சருப்பெதி மங்கலத்து தெருபிடாகை புதுக்குடி எல்லைக்கு கீழுக்கும், வட

மூலப்பிருத்தியர் - மூலப்பிருத்தியன்; மூலதானத்துச் சேவகன்; சேவகன் — தொண்டன், அடிமை. சண்டேஸ்வரன்: சாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவன்; இவனுடைய அரிய சேவைக்குப் பரி சாக சிவபெருமான இவனுக்குச் சண்டேசுவரபதம் அளித்தானென் பர்; அதாவது அடியார் கலவலையும் மூலதானத்திருந்து சிவபெருமா னுக்குரியவற்றை இவனே பெற்று அருச்சிக்கும் பதத்தை இவன் பெற்றான் எனபது.

ஆதேசம் - கட்டளை; அக்காலத்தில் கோயில் நிலங்களை, அந்தத் தக் கோயில் மூலப் பிருத்தியனை சண்டேஸ்வரன் கட்டளைப் படி விற்றதாகக் கூறுவது வழக்கம் போலும்.

நாம் விற்றுக்குடுத்த நிலம்: சண்டேஸ்வரன் உள்ளிட்ட கன்மிக ளாகிய நாம் வில்லவராயனுக்கு விற்றுக்கொடுத்த நிலம் என்பது.

உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமான்: திருவானைக் காவில் திருவெண்ணாவல் கீழ் அமர்ந்தருளிய திரிபுவனபதியைக் குறிக்கும்; உடையார் - சுவாமி.

தென்கரை ஊர்களில்: முன்னர்த் 'தென்கரை நாட்டு' என வந்திருத்தலும் இதனையே குறிக்கும் போலும். நிலத்துக்கிளைந்த - நிலத் தோடு பொருந்திய. பிள்ளை கொள்ளி வாய்க்கால்: இது பிள்ளை கொல்லி வாய்க்கால் என்றிருத்தல் வேண்டும் என்று தெரிகிறது.

களம் - திட்டு நிலம்; மீபார்க்கெல்லை - மேலைப்புற எல்லை. தென் பிடாகை - தென்பக்கத்துச் சிற்றூர். புதுக்குடி என்பது, உத்தமசீலிச் சருப்பெதி மங்கலத்துக்குத் தென்பக்கத்திலுள்ள ஒரு சிற்றூராகும்.

பார்க்கல்லை தெந்நாற்றங்கணைப் பெருவழிக்கு தெற்கு ஆக இவ்வினைசந்த பெருநாச் கெல்லையுள்பட்ட நிலம் சா தை. இந் நிலம் நாலெழுக்காலும் இத்தெவர்க்கு யாண்டு நாற்பத்தேழா வதுவரை பயிரிலி புந்செய்யாய்க் குட்டமு மண்ணுமிட்டு கிடந்தமையி லந்நிலம் முனையங் அருமொழிதேவரான வில்லவராயனுக்கு விற்றுக் குடுத்துக்கொள்வதாக எம்மிலி னைசந்த விலைப்பொருள் அங்ஙடு நற்காசு சபீ. இக்காசு நாலேமாகாணியும் கைக்கொண்டு திருவாணைக்காவுடைய எம் பெருமான் ஸ்ரீபண்டாரத்து ஓடுக்கி முனையங் அருமொழி தேவரை வில்லவராயனுக்கு விற்றுக்குடுத்து இவர் உடை யார் திருவாணைக்காவுடைய எம்பெருமான் கொயிலில் இடங் கைநாயகரென்று எழுந்தருளுவித்த இஷப வாஹந தேவர்க் கும் நம்பிராட்டியார்க்கும் திருமஞ்ஜநங்களுக்கு திருவமிர்து படிக்கு இரண்டு திருநாளிலும் இரண்டுநாள் திருவிழா எழுந் தருளுகைக்கு உள்ளிட்டு வெண்டும் நிமந்தங்களுக்கு இந்நில நா தை கல்லித் திருத்தி ஸ்ரீ பண்டாரத்து புந்செய் வரிசையால்

இவ்வினைசந்த - இப்படிப்பட்ட; நிலம் சா தை - நாலே முக்கால் குழி நிலம். பயிரிலி புந்செய்யாய்-பயிர் விளையாத புன்செய் நிலமாய். குட்டமு மண்ணுமிட்டுக் கிடந்தமையில் - பள்ளமு மேடுமாய்க் கிடந்த தால். குட்டம - குழிந்த நிலம்; மண் - மண்திட்டு.

எம்மிலிசைந்த - யாம் சம்மதித்த; அங்ஙடு - காளொன்றுக்கு; நற்காசு - பொற்காசு. கைக்கோண்டு - பெற்று.

ஸ்ரீ பண்டாரம் - கோயில் பண்டாரம்; ஓடுக்கி - சேர்த்து; விற் றுக்குடுத்து - விலைக்குக்கொடுத்து, இடங்கை நாயகர் - இடங்கை குலத்தவருக்குத் தலைவர்; இடங்கையர் என்பார் சோழருக்குள் மரி யாதை செலுத்து முறைமையின் காரணமாகப் பிரிந்த ஒரு குலப்பிரி வினர் என்பர். வில்லவராயன் அக்குலத்தவரு யிருந்து, சம்புகேசு வராலயத்தில் இடங்கை நாயகர் என்ற பெயருடன் இடபவாக னரை எழுந்தருளப் பண்ணினதாகத் தெரிகிறது.

இஷபவாஹந தேவர் - சிவபெருமான்; இஷபம் - இடபம். திருமஞ்சனம் - அபிடேகம்; திருவமுது - நிவேதன உணவு. நிமந்தம் - கோயில் செலவு. கல்லித் திருத்தி - வெட்டித் திருத்தி.

வேலி ஒன்றுக்கு நெல் ஐங்கலமாக ராஜகேஸரி மரக்காலால் இக்கிலம் காலேழுக்காலுக்கும் அளப்பதாக ஐ உயிந

ங; இந்நெல் இருபத்து முக்கலமே இருதூணிக் குறுணியும் அளக்குமிடத்தில் கார்பாதி பசாரம்பாதி அளப்பதாகவும் இதில் மிருதிகொண்டு இவர் இடங்கை ராயகமென்று எழுந் தருளுவித்த இஷபவாஹந தேவர்க்கும், நம் பிராட்டியார்க் கும், திருமஞ்சன படிகளுக்கும், திருவமுதுபடிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டு காளைழுந் தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டு நிமந்தங்களுக்கு நிமந்தஞ் செய்து குடுத்தோம். மூணயங் அருமொழி தேவராண ஷில்லவராயநுக்கு திருவாணைக் காவுடைய எம்பெருமானுக்கு மூலப்புருத்தியராகிய சண்டெஸ் வரர் உள்ளிட்ட கங்மிகளோம். இது பங்மாஹேஸ்வர ரக்ஷை.

(பாட பேதம்) 1. பொன்னேமி 2. தன்னேமி 3. பருவத்துச் 4. சக்கரக்கோட்டத்து 5. விக்கிரமத் 6. கழிக்குத் 7 தென் றிசை 8 பொன்னி 9. கண்ணிலப் 10, தனைடி 11. தென் னில 12. முன்னை 13. பெருகக் 14 வறப்பச் 15. தரு து 16 வெண்ணிலாத் 17. வொருதனி 18 தீபாந்தரத்துப் 19. திறை

ராஜகேசரி மாங்கால்: இது ஆண்மனை மரக்கால்; இராச ராசசோழன சாசன முதலியவற்றிலும் இப்படியர் வந்திருத்தல் காண்க.

ஐ உயிந ங - நெல் இருபத்து முக்கலனே இருதூணிக குறுணி; ஐ - நெல்; உயிந - இருபத்துமூனறு; - கலம்; - இருதூணி; ங - குறுணி.

காரி - கார் காலத்தில் விளையும் நெல்; கார்காலம் - மழைக் காலம்; பசாரம் - பசான் என்னும் ஒருவகைச் சம்பா நெல்; இது சித்திரை மாதத்தில் அறுவடையாகும்.

இதில் மிருதிகொண்டு - இதைக்கொண்டு. திருமஞ்சனபடி - அபிடேகம் செய்ய ஆகும் செலவு; படி-செலவு. எழுந்தருளுகைக்கு - உலா வருவதற்கு; உள்ளிட்டு - சேர்த்து. நிமந்தம் செய்து குடுத் தோம் - கோயில் ஊழியத்திற்கு ஏற்பாடு செய்து கொடுத்தோம்.

உள்ளிட்ட - முதலிய; கங்மிகளோம் - கோயில அதிகாரிகளாகிய யாம். பங்மாஹேஸ்வரி ரக்ஷை - அடியார் கூட்டம் காக்க.

வித 20. தென்னவன் 21. திடத்தன் 22 பொன்னகர்ப் 23. விக்கட 24. யென்றுஞ் 25. தன்னக 26. அளத்தியி 27. விட் டதன் 28. சுழன்று சுழனற 29. தலமகட் 30 தக்காரருகத்து 31. தாளும் தாளையும 32. பண்ணை 33. பயத்தெதிர மாறிய 34 சயப்பெருக் 35. பழியி ருக்க 36 கொடுக்க புகழினை 37. கொடுத்த 38. மென்றும் 39. கெள்ளாம் 40 தென்ன கடவு 41. தன்பெருஞ் 42. வெளிகளித்தீதாழ் 43. யரணைப் 44 காட் டிப் 45. பொற்றை 46. மேற்றிக் 47. விசயத்தம்பக் 48. மூத் தின் 49. மூத்தமிழ்ப் 50 சையமும் 51. கனனியும் 52. கைக் கொண்டருளிக் 53 தென்னுட் 54. டெல்லை 55. காட்டுள 56. சாலவெறல்லாக் 57. தனிவிசும 58. மாவேறியதன் 59 குலை யக் 60. வீரசிமமாசனக் 61. ..... 62. போல 63. சிவனி டந்துணைமெனத் 64 உலக முடையா ளிருப்ப 65. அவருடனே 66 வீற்றிருக்கென 67. பேழுலகுமுடையாள் 68. மலாதினி திருப்ப 69 பிரியாதென்றும் 70. வீரசிம்மாசனத்து 11. வீற்றி ருக்குருளை 72. கோவிராசகேசரி வன்மரான 73. திரிபுவனச் சக்கரவர்த்திகள்.

---

10. மணிமங்கலம் சபையோர் சாசனம்.*

முகவுரை.

மணிமங்கலம் என்பது ஓர் ஊர்; அவ்வூர்ச் சபையினால் ஏற்பட்ட சாசனம் 'மணிமங்கலம் சபையோர் சாசனம்' எனப்பட்டது. இது செங்கல்பட்டு சில்லா, காஞ்சீவரம் தாலூகாவிலுள்ள மணிமங்கல மென்னுமூர் † இராசகேசரி பரகேசரி கோயில் †† மண்டபத்தின் மேலைச்சுவரில் காணப்படுகிறது.

---

* இச்சாசனம் தென்னிந்திய சாசனத்தொகுதிகளில் மூன்றாவது தொகுதியின் முதற்பகுதியைச் சேர்ந்தது. இப்பெயருடைய மற்றொரு சாசனம் இராசாதிராசன் காலத்தில் ஏற்பட்டிருத்தலும் காண்க.

† இது இராசாதிராசன் காலத்தில் செயங்கொண்ட சோழ மண்டலத்து செங்காட்டுக் கோட்டத்து மாகனூர் நாட்டில் இருந்ததாகவும், இதன் மற்றொரு பெயர் ராஜ சூளாமணிச் சதுர்வேதிமங்கலமென்றும் சொல்லப்படுகிறது. குலோத்துங்கன் காலத்தில் இது பாண்டியனை இருமடிகொண்ட சோழ சதுர்ப்பெதிமங்கலம் என்று அழைக்கப்பட்டுள்ள

†† இது இராசாதிராசன் காலத்தில் ஸ்ரீமத் த்வாசாபதியான ஸ்ரீ காமகோடி வண்ணகராழ்வார் கோயில் என்றழைக்கப்பட்டுள்ளது; குலோத்துங்கன் காலத்தில் வண்டுவாகவதி எம்பெருமான் கோயில் எனப்படுகின்றது.

இதன் முற்பகுதியில், பாண்டியரும் சோரும் முதலாம் குலோத்துங்கன் ஆட்சியின்கீழ் இருந்தவந்த செய்தி காணப் படுகிறது; பிற்பகுதியில், ஒருவன் || பலரிடமிருந்து 1050 குழி நிலத்தை வாங்கி, அதை மணிமன்கலம் கோயில் சுவாமியை பௌர்ணமிதோறும் ஊர்வலம் கொண்டு செல்வதற்காகும் செலவுக்காக அக்கோயிலுக்குக் கொடுத்தான் என்று சொல் லப்படுகிறது. இது சோழ அரசனை இராசகேசரிவர்மன் என்றும் முதலாம் குலோத்துங்கன் ஆட்சியின் நாற்பத்தெட் டாவது ஆண்டு கும்பாயற்று (மாசிமாதம், பூர்வபட்சத்து (வளர்பிறை காலம்), துவிதியையும் (இரண்டாவது திதி), வெள்ளிக்கிழமையும் கூடிய சதையநாளில் (24 வது நாள்) எழுதப்பட்டது.

எனவே, இச் சாசனம் ஏற்பட்ட காலம் கி பி. 1118 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 25 ஆம் நாள் ஆகும்.

முதற் குலோத்துங்கன் : 2 ஆம் மெய்க்கீர்த்தி.

ஸ்வஸ்தி ஸ்ரீ —

புகழ்மாது விளங்கச் சயமாது விரும்ப

நிலமகணிலவ மலர்மகள் புணர

உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி.

|| இவன் பெயர் நுளப்பியாறு கிழான் வேளான் போயிரு டையானென தண்டக நாடுடையான் என்று தெரிகிறது; இவனுடைய ஊர் இராசேந்திர சோழ வளநாட்டு அம்பத்தூர்நாட்டு நுளப்பியாறு என்பதாகும்.

புகழ்மாது விளங்கச் சயமாது விரும்ப: இது முதற் குலோத் துங்கனது இரண்டாவது சாசனத்தின் தொடக்கத் தொடர். புகழ், சயம் ஆகியவை இவ்வடியில் பெண்களாக உருவகிக்கப்பட் டுள்ளன.

நிலமகள் நிலவ - இராச்சியம் விளங்க; மலர்மகள் - இலக்குமி; இங்கு செல்வத்தைக் குறித்தது. உரிமையில் சிறந்த - உரிமையோடு கூடிய. இம்முதற் குலோத்துங்கன் தாய் வழி உரிமை கொண்டாடி சோழராஜ்யத்திற்கு அரசனை வாலாற்றைப் புலப்படுத்துகிறது.

மீநவர்[1] மிலெகெட வில்லவர் குலெதா
ஏனை மன்னவ ரிரிதரிற்[2] சுழிதரத்[3]
திக்கனைத் தும்தன் சக்கர நடாத்தி
விஜயாபி ஷேகம்பண் ணி[4]வீரஸிம் ஹாஸனத்து[5]
உலகுடை யாளொடுமன் னி[6]வீற்றிருந் தருளிய
கோவிராஜ கேஸரி பர்ம ரான[7]
திரிபுவன[8] சக்ரவர்த்திகள்
ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு[9] யாண்டு-

செய்தி

சயஅ வது குலோத்துங்க சோழ வளநாட்டுக் குன்றத் தூர் நாட்டு மணிமங்கலமான பாண்டியனை இருமடி வென் கொண்ட சோழ சதுர்ப்பெதிமங்கலத்து மஹா ஸபையோம் எழுந்து

மீநவர் - மீன கொடியையுடைய பாண்டியர்; வில்லவர் - வில் கொடியையுடைய சேரர்; குலதா - நடுங்க. ஏனை மன்னவர் - பிற மன்னர்கள்.

இரிதரில் - இரிதர, தோற்றோட; சுழிதர - வெட்கமடைய; திக்கு - திசை; சக்கர நடாத்தி - ஆணை செலுத்தி.

விஜயாபிஷேகம் பண்ணி - வெற்றி முடி சூடி. உலகுடையா ளொடுமன்னி - பட்டத்தரசி யொடும் பொருந்தி; இங்கு பட்டத் தரசி என்றது, நியாகவல்வினையைக் குறிக்கும்.

குலோத்துங்க சோழ..... குன்றத்தூர் நாட்டு: இது இராதி ராசன் காலத்தில் 'செயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்காட் டுக் கோட்டத்து மாகனூர் நாடு' என்று அழைக்கப்பட்டுள்ளது.

பாண்டியனை இருமடி வெண்கொண்ட சதுர்ப்பெதி மங்கலம்: இது மணி மங்கலத்திற்குரிய மற்றொரு பெயர்; இராசாதிராசன் காலத்தில் இது இராசகுளாமணி சதுர்ப்பேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டது.

நம்மூர் வண்டுவாவதி எம்பெருமான் கோயிலில் ஸ்ரீகாரியம் செய்கிற அள்ளூர்க் கேசவபட்டனும், அரணை புறத்து திருவாய்க் குலபித்தன் கண்டு பாண்டு சபை-வது கும்பராயற்றுப் பூர்வபக்கத்து த்விதியையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சதயத்து நாள். இவ்வாண்டு முதல் அமாவாஸி சந்திராதித்தவரை எழுந்தருளுகைக்கு ராஜேந்திர சோழவளநாட்டு அம்பத்தூர் நாட்டு நுளப்பியாற்று நுளப்பியாறு கிழான் வேளான் பேராயிர முடையானான தண்டக நாடுடையான், குண்டர் தோணையக் கிராமவித்தன் பக்கல் ஆனைமேட்டில் விலைகொண்டுடைய குழி நூற்றிருபத்தஞ்சும், இக்கே மத்தி

நம்மூர் - மணிமங்கலம் என்னும் ஊர்; வண்டுவாவதி எம்பெருமான் கோயில்: இது இராசாதிராசன காலத்தில் ஸ்ரீமத் காமக்கொடி விக்கண்ணை நாழ்வார் கோவில் எனும் அழைக்கப்பட்டது. இப்பொழுது இராசகோபாலசுவாமி கோயில் என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீ காரியம் செய்கிற - கோயில் காரியத்தை மேற்பார்வை செய்யும். கேசவப்பட்டன்: கேசவன் என்பது சோழருக்குரிய பெயர்; பட்டன - கோயில பூசகன; கண்டு - கானை; தும்ப நாயிறு - மாசி மாதம். சதயத்து நாள் - சதய நட்சத்திரத்தில்.

அமாவாஸி - அமாவாசிப்புறம், அமாவாசிக் காலத்தில் எழுந்தருளுகைக்கு ஏற்படும் செலவு வகை; சந்திராதித்தவரை - சந்திர சூரியருள்ள காலம் வரையும். அமாவாவி - சந்திரனும் சூரியனும் கூடி நிற்கும் திதி; எழுந்தருளுகைக்கு - உலாப்போதற்கு. ராஜேந்திர சோழ வளநாடு: இராசேந்திரன் என்பது குலோத்துங்கனது இயற்பெயர்.

தண்டக நாடுடையான்: இவனுக்கு நுளப்பியாறு கிழான் வேளான் பேராயிரமுடையான் என்ற சிறப்புப்பெயர் உண்டு இவன் வண்டுவாபதிக் கோயில் ஸ்ரீ காரியம் செய்துவந்த அள்ளூர் கேசவப்பட்டன், அரணைபுறத்து திருவாய்க் குலபித்தன் ஆகிய இருவர் முன்னிலையில், பலரிடமிருந்து 1050 குழி நிலம் வாங்கி அமாவாசை தோறும் சுவாமி உலாவுவதற்கு மணிமங்கலமென்னுமூர் சபையோரிடம் கொடுக்க அவர்கள் அதை ஏற்றுக்கொண்டனர். விலை கொண்டுடைய - விலைக்குக்கொண்ட.

பஸ்தன் உறப்போந்தாணும் தம்பிமாரும் பக்கல் விலை கொண் டுடைய குழி நூற்றொருபத்தஞ்சும், இராயூர் திருப்பொரிக் கிரமவித்தன் பக்கல் பாதிரிக்கழனி மேலகாலுக்குக் கிழக்கு விலைகொண்டுடைய குழி நூற்றிருபத்தைமூன்றும், இங்கே யிராயூர் விஷ்ணு திருவேங்கடக் கிரமவித்தன் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற்றொருபத்தேழும், இங்கே ஐயக்கி வண்டுவராபதி பிச்சர் பக்கல் விலைகொண்டுடைய குழி நூற் றொருபதும், இங்கே இராயூர் யஜ்ஞநாராயணக் கிரமவித்தன் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற்றிருபத்தேழும், ஆல வதிக்கு வடக்கு இரண்டாங் கண்ணூற்று வீரவலி திருவரங்க மூடையான் ஸஹஸ்ரான் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற் றிருபதும், இங்கெய் மூன்றுங் கண்ணூற்றில் இராயூரான் னந்திக் கிரமவித்தன் பக்கல் வடக்கடைய கொண்டுடைய குழி நூற்றெட்டும், அரிவாள் வதிக்குக் கிழக்கு, முதற்கண் ணூற்று.....க்காரம்பிச் செட்டு நாணமாலைக் கிரமவித் தன் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற்றொருபத்தஞ்சும் ஆக குழி ஆயிரத்தைம்பதும் அமாவாஸிப்புறம் சந்திராதித்

கிரமவித்தன்: இது வேதத்தின் கிரமபாடத்தில் வல்ல பார்ப் பாரது பழைய பட்டப்பெயர்; மதியஸ்தன் - ஊர்க்காணத்தான். திருப்பொரிக்கிரம வித்தன்: திருப்பொரி யென்பது ஓர் அங்க வீசே டம்; அவ்வீசேடம் படைத்தவன் 'திருப்பொரிக் கிரம வித்தன்' எனப்பட்டான் போலும்.

வண்டுவராபதி - துவரைக்கு இறைவனாகிய கண்ணன்; 'ஐயக் கி வண்டுவராவதி பிச்சர்' என்பவன், அவ்விறைவன் அடியார்களில் ஒருவன் போலும்; வதி - வழி; கண்ணூறு - நீர்ப்பாசன வாய்க்கால்; ஓரளவு தண்ணீர் பாயும் நஞ்செய் நிலப் பகுதி என்பாருமுளர்.

வடகீடையை கொண்டுடைய: பிற இடங்களிலெல்லாம் விலை கொண்டுடைய என வந்திருத்தல் காண்க. காம்பிசீசெட்டு: இது விவசாயத் தொழிலுக்குரிய கருவிகளை விற்கும் வியாபாரிக்குரிய பெயர்.

ஆக குழி ஆயிரத் தைம்பதும்: குண்டூர் தோணாயக் கிரமவித் தன் பக்கல் 125 குழி; மத்தியஸ்தன் உறப்போந்தானிடத்தும் அவன் தம்பிமாரிடத்தும் 115 குழி; இராயூர் திருப்பொரிக் கிரமவித்தன் பக்

தவற் செல்வதாக இறை விழுத்துணைக்குக் கியமமாக இவர் பக்கல் ஸபையோமாக வேண்டும் பொன்கொண்டு இன் நிலத்துக்கு வந்த இறை ஸபையோமெ இறுக்கக் கடவோ மாக இசைத்த இறை இழிச்சிக் குடுத்தோம். இப்படி கல் லிலும் செம்பிலும் வெட்டிச் சந்திராதித்தவற் செல்வதாக இறை இழிச்சிக் குடுத்தோ மவராஸபையோம். ஸபையுள் நின்று ஐயக்கி வண்டுவராபதிப் பிச்சர் பணிக்க பணியால் எழுதினேன் இவ்வூர் மத்தியஸ்தன் மணி மங்கலமுடையான் வேளான் பொான் (இவை என) எழுத்து.

(பாடபேதம்) 1. மினவர் 2. நியலுற் 3. நிதிதா 4. விசயா பிடேகம் பண்ணி 5. வீரசிம்மாசனத்து 6. ..... 7 கோவி ராசகேசரி வன்மரான 8 ..... 9. தேவர்க்கு.

கல் 123 குழி; இராயூர் விஷ்ணு திருவேங்கடக் கிரமவித்தன் பக்கல் 117 குழி; ஐயக்கி வண்டுவராபதி பிச்சர் பக்கல் 110 குழி; இராயூர் யஜ்ஞ நாராயணக் கிரமவித்தன் பக்கல் 127 குழி; வீரவலி திருவ ரங்கமுடையான ஸகஸ்ரன் பக்கல் 120 குழி; இராயூரான் நந்திக் கிரமவித்தன் பக்கல் 108 குழி; காரம்பிச்செட்டு காணமாலைக் கிரம விக்தன் பக்கல் 115 குழி ஆக ஒன்பதின்மரிடத்து வாங்கின நிலம் குழி 1050. (இத்தொகையில் 10 குழி குறைவாயிருத்தல் காண்க. எனவே நூற்றிருபதென்பது, நூற்றொருபதென் றிருத்தல் வேண்டும் போலும்)

அமாவாஸிப்புறம் - அமாவாசிக் காலத்தில் எழுந்தருளுதலைக்கு ஏற்படும் செலவு வகை (Provision for Procession); புதுக்குப்புறம் என்ற தொடருக்குரிய பொருளோடு இதனை ஒப்பிடுக. சந்திராதித் தவற் செல்வதாக - சந்திர சூரியருள்ள காலம் வரை நடப்பதாக. இறை விழுதது நைந்த - வரி நீக்குவதற்கு; ஸபை யோமாக - சபை யினராகிய யாம்; இறை - நிலவரி; இறுக்க - வரி முதலியன கொடுக்க. இறை இழிச்சி - வரி நீக்கி.

கல்லிலும் செம்பிலும் வெட்டி: சாசனங்களைக் கல்லிலும், செம்பிலும் வெட்டுதல் வழக்கம் என்பது இதனால் விளக்க முறுகின் றது. செல்வதாக - நடக்க.

ஐயக்கி வண்டுவராபதிப் பிச்சர்: இவர் சபைத்தலைவர் போலும்; இவரிடம் விலைக்குக்கொண்ட நிலம் 110 குழி. பணிக்க - சொல்ல; பணியால் - கட்டளைப்படி.

எழுதினேன்: மணி மங்கலம் சபையோர் சாசனம் எழுதியவன் அவ்வூர் மத்தியஸ்தன் வேளான் போான் என்பதனைக்கும்.

11. அருளாளப் பெருமான் கோயில் சாசனம்*

முகவுரை.

அருளாளப் பெருமாள் கோயில் என்பது, சின்ன காஞ்சீவரத்திற் குள்ளதோர் விஷ்ணு வாலயம். அக்கோயிலில வைணவ ஆழ்வார்களான பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார்களின் பிறந்த நாள்†† கொண்டாடடம் நடைபெறுவதற்குச் செய்த ஏறபாட்டைப் பற்றிய சாசனம் 'அருளாளப் பெருமாள் கோயில் சாசனம்' எனப்பட்டது. இது அக்கோயிலில் மேலை என்று சொல்லப்படுமை படிக்கல் மேனடையின் (Stone platform) மேல்புறச் சுவரில் காணப்படுகிறது.

இதன் மூற்பகுதியில், விக்கிரமச்சோழ தேவனது கலிங்கப்போரைப்பறறிய குறிப்பினையுடைய மெய்க்கீர்த்தி அமைந்துள்ளது; பிற்பகுதியில், வைணவ ஆழ்வார்களான பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார்களின் பிறந்த நட்சத்திரத்தினறு அருளாளப்பெருமாள் எழுந்தருளி திருமஞ்சனமும் திருவமுதும செய்வதறகான கூறப்பட்டுளளது. அதாவது, அக்கோயிலுக்கு 780 கலம நெல் கொடுத்து, அந்நெல்லுக்கு வட்டியாக வரும் 390 கலம நெலலைக்கொண்டு அருளாளப பெருமாள் ஆணடுக்குப் பதின்மூன்று தடவை (திருக்கேட்டை நாள் முதறுக) எழுந்தருளி, திருமஞ்சனமும் திருவமுதும் செய்தருள ஏற்பாடு செயத செய்தி கூறப்படுகிறது இது விக்கிரமச் சோழன் ஆடசியின்‖ ஒனபதாம் ஆணடில ஏறபடடது.

எனவே, இச்சாசனம் ஏற்பட்ட காலம் கி. பி. 1127 ஆம் ஆண்டு எனலாம்.

---

* இச்சாசனம் தெண்ணிதிய சாசனத தொகுதிகளில மூனறாவது தொகுதியின இரணடாவது பகுதியைச் சேரந்தது.

† இது ஆதியில ஐயங்கொண்ட சோழ மண்டலத்து எயில் கோட்டத்து எயிலாட்டுத் திருவத்தியூர் எனப்பட்டது போலும.

†† பூதத்தாழ்வார் பிறந்த நாள் அவிட்டம்; பொய்கையாழ்வார் திருவோண நாளில பிறந்தார். ஆனால இச் சாசனத்தில் அவரகள இருவர பிறநத நாளும் கேட்டை என்று கூறியிருப்பது காண்க.

‖ விக்கிரமச் சோழதேவன் குலோத்துங்கனுக்குப்பின் கி. பி. 1117 முதல் 1134 வரை சோழ நாட்டை ஆண்டான். இவன் கி. பி. 1120 முதல் 1136 வரை ஆண்டான் என்பாருமுளர்.

விக்கிரமச் சோழ தேவன்: மெய்க்கீர்த்தி.

ஸ்வஸ்தி ஸ்ரீ —
பூமாது புணரப் புவிமாது வளர
நாமாது விளங்க[1] ஜயமாது[2] விரும்பத்
தன்திரு[3] பதமலர் மன்னவர் சூட
மன்னிய உரிமையால்[4] மணிமுடி சூடிச்
செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப
வெங்கலி நீங்கி மெய்யறம் தழைப்பக்
கலிங்க மிரியக் கடமலை யடர்த்து
வலங்கொ ளாழி வையாழி நிழற்ற
இருசுட ரனைவு மொருகுடை நிழற்ற

பூமாது புணரப் புவிமாது வளவ: இது விக்கிரமச் சோழ தேவனது சாசனத்தினை தொடக்கத் தொடர; இவனுடைய மற்றொரு சாசனம் 'பூமாலை மிலடந்து பொன்மாலை திகழ்' என்று தொடங்குகிறது. பூமாது - இலக்குமி; புவிமாது - நிலமகள்.

நாமாது - கலைமகள்; ஜயமாது - சயமகள். செல்வம், நாவு, கல்வி, வெற்றி இவை ஒருக்கே யமைய என்றபடி. தன் நிருபத..... தூட: அரசர்கள் தனை வணங்கித் திறைசெலுத்த என்பது.

மன்னிய உரிமையால் - நிறைந்த தகுதியோடு; இவன் தன்தை யான குலோத்துங்கன தாய்வழி உரிமை பாராட்டி சோழ மன்னரு யிரனை; ஆதலால், இவனும் அவ்வுரிமையோடு முடி சூடினனை எனபது.

செங்கோல் - ஆணை; திசை தொறும் வளர்ப்ப - நாடெங்கும் விளங்க; வெங்கலி - துன்பம்; மெய்யறம் - தருமம; கலிங்க மிரிய - கலிங்க சேனை பயந்தோட; விக்கிரமச்சோழ தேவன் இளவரசரு யிருந்தகாலையில் கருணாகரத் தொண்டைமானுடன சென்று கலிங்கப் போர் நடாத்திய செய்தி இவ்வாறு குறிக்கப்படுகிறது கடமலை - மதயானை; கடம் - மதம்.

வலங்கொளாழி: ஆழி வலங்கொள்; ஆழி - கடல்; வையாழி - சக்கரவாளகிரி, மேருமலை. ஆழிசூழ் உலகத்தின நடுவில் மேருமலை இருக்கிற தனைபது புராண வரலாறு. திரிய - செல்ல. இருகுட ரளவும் - சூரிய சந்திரருள்ள வரையும். ஒரு துடை நிழற்ற - தனியாட்சி புரிய.

விஜயாபிஷேகம்[5] பண்ணி வீரஸிம் ஹாஸனத்து[6]
மூக்கோக் கிழாஅடிக ளொடும்[7] வீற்றிருந்தருளிய
கோப்பர கேசரி பந்மாற[8] த்ரிபுவந்ச் சக்ரவர்த்திகள்[9]
ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு —

செய்தி.

ஒன்பதாவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற் கொட்டத்து எயில் நாட்டுத் திருவத்தியூ நாழ்வானைப் பாடியருளின ஸ்ரீ பூதத்தாழ்வாரும், ஸ்ரீ பொய்கையாழ்வாரும் பிறந்த திருக்கேட்டை நாள், அருளாளப் பெருமாள் புறப்

விஜயாபிஷேகம் பண்ணி: வெற்றி மூடி சூடி; மூக்கோக் கிழா நடிகள்: இவள் விக்கிரமச் சோழன் முதல் மனைவி; பட்டத்தரசியா யிருந்தவள். வீற்றிருந்தருளி - ஆட்சி புரிந்து.

கோப்பரகேசரி பந்மாறந்திரிபுவனச் சக்ரவர்த்திகள்: பரகேசரி, திரிபுவன சக்கரவர்த்திகள் எனபன விக்கிரமச் சோழ தேவனுக குரிய பட்டப் பெயர்கள். இவன் தந்தை முதலாம் குலோத்துங்கன் 'கோவிராசகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்' என்ற ழைக்கப்பட்டிருப்பது இங்கு நோக்கத் தக்கது.

திருவத்தியூராழ்வார் — திருவத்தியூரில் எழுந்தருளியுள்ள பெரு மாள் எனபது. இவரைப் பூதத்தாழ்வார், பொயகையாழ்வார் இரு வரும் பாடியுள்ளனர்.

ஸ்ரீ பூதத்தாழ்வாரும்... திருக்கேட்டை நாள்: 'இவ் வாழ்வார்கள் இருவருடைய பிறந்த நாளும் திருக்கேட்டை எனபது அகக்கால வழக் கம் போலும். ஆனல் பொய்கையார்க்குத் திருவோணமும், பூதத் தார்க்கு அவிட்டமும் பிறந்த நாட்களாக குருபரம்பரைகளில் காணப் படுகின்றன. திருவாட்டை நாள் என்பது திருக்கேட்டை நாள் என்று சாசனம் வஸ்தக்தாரால் தவறி எழுதப்பட்டதோ எனறு கருதவும் இடம தருகின்றது' என்பர் சாசனத் தமிழ்கவி சரிதம் எழுதிய உயர்திரு மு. இராகவையங்காரவர்கள். திருக்கேட்டை நாள் எனபது, திருச் செவிட்ட நாள் என்றிருத்தல் வேண்டுமென்பர் இவ்வறிய ஆராய்ச்சியாளர்.

பட்டருளி ஏகாசீதி திருமஞ்சனமும், பெருந்திரு வமுதும் செப்தருளத் திருமஞ்சனத்துக்குத் திருமூலை சார்த்த தீரு மூலைப்பாலிகை முப்பத்தாறுக்குப் பாலிகை ஒன்றுக் கடிக் கீழட்ட நெல்லு உரியாக நெல்லுப் பதக்கிரு நாழியும், திரு மூலைப் பீசங்கொள்ள அரிசி ஞநாழியும், புண்ணியாஹதக்ஷி ணைக்கு அரிசி அறுநாழி உழக்கும், பலித்ரவ்யத்துக்குக்கு அரிசி இருநாழி உரியும், திருமூலைக்குத் திருநந்தாவிளக்குக்கு

புறப்பட்டருளி - உலாப்போந்து; ஏகாசீதி திருமஞ்சனம் - எண் பத்தோரு கலம் வைத்துப் பூசித்து அபிஷேகம் செய்வது. ஏகாசீத்- எண்பத்தொன்று; ஏகம் - ஒன்று; அசீதி - என்பது. திருமஞ்சனம் - அபிஷேகம்; பெருந்திருவழுது - பெரிய உணவு; அதாவது வடை, பாயசம், காய்கறி முதலியன பொருந்திய உணவு.

திருமூலை சார்த்த: பாலிகை கொட்ட; அதாவது திருவிழா, திருமண முதலிய விசேட காட்சிகளில் தானிய மூலைகளை வளர்த்து நீர்வாடு கலக்கும் ஒருவகைச் சடங்கு. திருமூலைப் பாலிகை - தானிய மூலை வளர்க்கப் பெறும் மண் பாலிகை; பாலிகை - மண்பாண்டம்.

அடிக் கீழட்ட - அடிக்கட்ட, கண்முகப் புனைத்த: நெல்லு உரி யாக - ..... பதக்கிரு நாழியும்: உரி - அளைப்படி; பதக்கு-இரண்டு மரக்கால்; இருநாழி - இரண்டு படி.

திருமூலைப் பீசங்கொள்ள - பாலிகையில் தானியங்களை முளைக்க வைக்க; பீசம் - விதை, தானியம். நாநாழி - நான்கு படி.

புண்ணியாஹ தக்ஷிணைக்த: புண்ணியாஹம் - சுத்தி செய் யும் சடங்கு விசேடம்; தக்ஷிணை - தட்சணை; குரு முதலிய பெரு யோர்க்குக் கொடுக்கும் பொருள்; இங்கு புண்ணியாகச் சடங்குகளைச் செய்யும் ஆசாரியருக்குக் கொடுக்கும் பொருளைக் குறித்தது.

உழக்கீத - கால்படி; பலித்ரவ்யம்; யாக முதலியவற்றில் தேவர், பிதார் முதலியோரை உத்தேசித்து இடும் உணவுப்பொருள்; காக்கை முதலிய பிராணிகள் உண்ணுதற்கு இடும் சோறு எனினுமாம்.

திருமூலைக்குத் திருநந்தா விளக்குக்த: திருமூலை பாலிகைகளுக் குப் பக்கத்தில் நின்று எரியும் திருநந்தா விளக்கு; இரவும் பகலும் அவியாது நின்று எரியும் விளக்கு 'நந்தா விளக்கு' எனப்படும். நந்துதல் - அவிந்துபோதல்.

நாளொன்றுக்கு எண்ணை உழக்காக காளஞ்சுக்கு எண்ணை காழி உழக்கும், க்ருதஹோரோஹணத்துக்கு நெய் மூவுழக் காழாக்கும், திருமஞ்சநத்துக்குக் கலசம் எண்பதற்கு அடிக்கீழ் நெல்லு ஐங்குறுணி உரியும், தும்ப காலுக்கு நெல்லு காகாழியும், திருச்சுண்ணக் கலசமொன்றுக் கடிக் கீழரிசி இரு காழியும், கலசஞ்சூழக் காணவிலையின் புடலை பதிற்றொன்றும், கலசஞ் சுற்ற நூலரைப்பலமும், திருமஞ்ச நத்துக்கு நெய் மூன்றுழியும், தேநாழியும், பால் மூன்றுழியும், தயிர் மூன்றுழியும், ஸ்நபந த்ரவியங்கள் வேண்டுவகவும், பஞ் சலோகமும், பஞ்சரத்நமும், திருச்சுண்ணத்துக்கு நாடன் மஞ்சள் நாற்பதின் பலமும், திருவிளக் கெண்ணை உரியும்,

---

எண்ணை நாழி உழந்தும் - எண்ணெய் $1\frac{1}{4}$ படியும்.

க்ருத ஹாரோஹணம்: நெய் கொண்டு அபிசேகம் செய்வது. க்ருதம் - நெய்; அரோகணம்-அபிசேகம்; மூவுழக் காழாக்கு - $\frac{7}{8}$ படி. திருமஞ்சனத்துக்குக் கலசம் - திருமஞ்சனத்திற்குரிய கலசம்.

நெல்லு ஐங்குறுணி உரியும் - நெல் $40\frac{1}{2}$ படி. குறுணி - 8 படி; உரி - $\frac{1}{8}$ படி. தும்பம் - மத்தியில் வைக்கும் குடம். திருச்சுண்ணம் - விழா முதலிய காலங்களில் மக்களின்மேல் தூவும் கந்தப்பொடி.

காணவிலையின் புடலை - காண விலையுள்ள புடலை: காணம் என்பது அக்காலத்துப் பொற்காசு காணயங்களில் ஒன்று என்று தெரிகிறது. புடலை - சேலை. கலசஞ் சுற்ற - திருமஞ்சனக் கலசத் தைச் சுற்றிக் கட்டுவதற்கு; மூன்றுழி - மூன்று படி. தே நாழி - தேன் ஒரு படி.

ஸ்நபநத்ரவியங்கள் - ஸ்நபன த்ரவியங்கள், மந்த்ர பூர்வமாகச் செய்யப்படும் அபிசேகச் சடங்கிற்குரிய பொருட்கள்

பஞ்சலோகம்: பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்பன; பஞ்சரத்நம் - செம்மணி, வைடூரியம், வைரம், பச்சை, நீலம் என்பன; நாடன் மஞ்சள் - மஞ்சள் வகை; நாற்பதின் பலம் - பலம் 40. திருவிளக்கெண்ணை - திருவிளக்குக்கு எண்ணெய்; திருவிளக்கு - கோவில் விளக்கு.

ஹோமத்துக்கு நெய் யுரியும், சாத்தி அருளச் சந்தன முக்கும், கற்பூர மாறு மாவும், அகில ரைக்கழஞ்சும், கஸ்தூரி மஞ்சாடியு மிரண்டு மாவும், புழுகுநெய் யிரண்டு மஞ்சாடியு நாலு மாவு, மாத்திரைக்கரிசி நாலு நாழியும், பெருந்திருவமுதுக்கு அரிசி முக்கலனை குறுணியும், பருப்புப் படிக்கிருநாழி உரியும், பலவற்கத்துக் கறி நிறை எண்ணூற்றிருபத்தைதம் பலமும், கறியமுதுக்கு உப்பு நானாழியு, மிளகு உரியும், கடுகு ஆழாக்கே இரு செவிடரையும், சீரக மாழக்குஞ், சற்கரை இருபதின் பலமும், நெய் யுரியும், அமுதில் படைக்க சற்கரை முப்பத் திருபல வரையும், நெய் பதிநொரு நாழி ஆழக்கும், வாழைப்பழ மைம்பத் தஞ்சும், தயிர் தூணியும், கண்ட சற்கரை முக்கசும், திருக்கண்ணமுது மடைக்கரிசி இரு நாழியு,

---

ஹோமம் - ஓமம், வேள்வித்தீயில் நெய் முகலியன சொரிவது. சாத்தி அருள - பூசுவதற்கு. சந்தநம் - சந்தனம். முக்கு - முக்கழஞ்சு; கழஞ்சு - கால் பலம். கற்பூரம் - கர்ப்பூரம்; மா - $\frac{1}{20}$ எடை; களஞ்சு - 2 பண எடை. மஞ்சாடி - இரண்டு குன்றி மணி எடை.

மாத்திரைக்கரிசி - நாள்தோறும் கோயிலில் பூசைத் தொடக்கத்தில் கடவுள் அளிப்பதாக அருச்சகர்களுக்குக் கொடுக்கும் அமுதுப்படி;

பல வற்கத்துக் கறி - பலவகைக் காய்கறி; கறியமுது - சமைத்த கறியாகச்சுவாமிக்குப் படைக்கும் உணவு; சற்கரை - சர்க்கரை; உப்பு, மிளகு, கடுகு, சீரகம், சர்க்கரை ஆகியவை கறியமுதில் சோத்து சமைக்க வேண்டிய பொருட்கள் போலும். செவிடு - $\frac{1}{5}$ ஆழாக்கு; அல்லது 360 தானியம்; இரு செவிடரையும் = $2\frac{1}{2}$ செவிடும்; தூணி - 4 மரக்கால்; மரக்கால் - குறுணி.

கண்ட சற்கரை - சர்க்கரை வகையில் ஒன்று. மகிழ்ச்சிக் குறியாக அக்காலத்தில் சர்க்கரை முதலிய இன் பண்டம் வழங்குதல் வழக்கம் போலும்.

திருக்கண்ணமுது மடை - அரிசி, சர்க்கரை, வாழைப் பழங்களால் ஆக்கப்பட்ட ஒரு வகை இனிய உணவு; இதனை இக்காலத்தவர் "பாயசம்" எனபர்; பாயசம்(திருக்கண்ணமுது) வேறு, திருக்கண்ணமுது வேறு என்றறிக.

நெய் யுழக்கும், சர்க்கரை யிருப்பதின் பலமும், வாழைப்பழம் பத்தும், அப்ப அமுதுக் கரிசி பதக்கும், நெய் யிருகாழி உரியும், சர்க்கரை எண்பதிற் பலமு, மிள காழாக்கும், சீரக மிருசெவி டரையும், விறகுகட்டு மூன்றும் குசக்கல உரு வுக்கு நெல்லுக் கலமும், தண்ணீ ரமுதுக் கேல மொரு செவி டரையும், அடைக்காய் அமுதுக்கு பாக்கு காநூற்றைம் பது, வெள்ளிலைப்பற் றொன்பதும், திருவிளக் கெண்ணை காழி உரியும், திருவிளக் குடையார்கள் குழாய் பன்னிரண்டுக் கெண்ணை முந்காழியும், பாவை விளக்கெண்ணை இரு காழி யும் ஆக இவையிற்றுக்கு நிமந்தமாகச் செல்வதாக இட்ட சமவிலைப் படியாலிக்கோயில் சில வளக்கு மருமொழி நங்கை மாக்காலால் திருக்கோட்டை நாளொன்றுக்கு நெல் மூப்ப

அப்ப அமுது - அப்ப நிவேதனம்; அப்பம் - அடை; பண்ணி காரவகை என்பாரு முளர். அரிசி, நெய், சர்க்கரை, மிளகு, சீரகம் முதலியன அதற்குரிய பொருள்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

குசக்கல உருவுக்கு - மண் விக்கிரகத்துக்கு படைக்க என்பது; குசக்கலம் - மட்பாண்டம்; உருவு - விக்கிரகம். தண்ணீரமுது : தண்ணீர்ப் பானம்; இதில் எலமிட்டுவைப்பது அக்கால வழக்கம் போலும்.

அடைக்காயமுது - வெற்றிலைப் பாக்கு; அடை - இலை; காய் - பாக்கு; வெள்ளிலை - வெற்றிலை; பற்று - கட்டு; நூறு வெற்றிலையு டையது. திருவிளக்குடையார்கள் - கோயிலில் விளக்கேற்றுவோர்; குழாய் - விளக் கேற்றும் கருவி போலும்.

பாவை விளக்கு - பிரதிமை விளக்கு (Lamp with a damsel-shaped stand); நிமந்தம் - கோயிலின் ஏற்பாடு; கோயிலமுதிய மெனினுமாம். சமவிலை - ஏற்றமில்லாத நடுத்தர விலை. சில வளக்கும் - செலவிற்கு நெல் அளக்கும்.

அருமொழி நங்கை மாக்கால்: அருண்மொழி நங்கை என்பது வீர ராசேந்திரதேவனுடைய பட்டத்தரசி பெயர்; அவள் பெயரால் ஏற்பட்ட மாக்கால் 'அருமொழி நங்கை மாக்கால்' எனப்பட்டது. இராசராசன் காலத்திலிருந்த மாக்கால் இராசகேசரி மாக்கால், அருமொழித் தேவர் மாக்கால் எனப் பட்டுள்ளமையை முன்னர்க் காண்க

திருக்கோட்டை நாள்: இது திருச்செவிட்ட நாள் என்றிருத்தல் வேண்டுமே; ஏனெனில் பூசகத்தாழ்வார் பிறந்த நாள் அவிட்டமாகும்.

பதிக் கலமாக ஓராட்டை சாலைக்கு வேண்டுவதாக நெல்லு மூன்னூற்றுத் தொண்ணூற்றுக் கலத்துக்கும், சோழ மண்டலத்து விருதராஜ பயங்கர வளநாட்டு மண்ணி நாட்டு வங்க மூழையூர் மூழையூருடையான் வெண்காடன் ஆதித்த தேவ நாக வங்கத் தரையன், இத்தேவர் பண்டாரத்துக்கு திலவளக்கு மருமமாழி சங்கை மரக்காலால் அளந்த நெல்லு எழுநூற்றெண் பதிக் கல, மிந்நெல் லெழுநூற்றெண்பதிக் கலத்துக்கு மாஸக் தோறும் நெல்லு மூப்பத்திரு கலமே தூணிப் பதக்காக

ஓராட்டை நாள் - ஓராண்டில் வரும் 13 அவிட்ட நாட்கள். வேண்டுவதாக - வேண்டும்; விருதராசப்பயங்கர வளநாடு; விருதராச பயங்கரன், உலகுய்ய வந்தான் என்பன குலோத்துங்கனுடைய சிறப் புப்பெயர்கள். முன்னர் இராசேந்திரசோழ வளநாடு எனப்பட்டது. குலோத்துங்கன் காலத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மேற்கி லுள்ள பகுதி 'உலகுய்ய வந்த சோழ வளநாடு' எனறும், கிழக்கி லுள்ள பகுதி 'விருதராச பயங்கர வளநாடு' என்றும் அழைக்கப் பட்டது. இது காவிரிக்கும், சிதம்பரத்திற்கு வடபால் ஓடும் வெள்ளாற்றுக்கும் இடையிலுள்ள பிரதேசம் எனபர்.

மண்ணி நாடு: கும்பகோணத்திற்குப் பக்கத்திலுள்ள திருவிச லூருக்கு வடபாற்பட்ட பகுதி; மிழலை நாட்டுக்குக் கீழ்ப்பக் கத்திலுள்ளது.

மூழையூருடையான் - மூழையூர்ப் பகுதியிலுள்ளான், வெண் காடந் ஆதித ... ... வங்கத்தரையந்: இவன், விக்கிரமச் சோழ தேவன் ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டில் கோயிலதிகாரிகளிடம் 780 கலம் நெல கொடுத்து, அதிலிருந்து ஆண்டு தோறும் வட்டியாகவரும் நெல் 390 கலத்தையும் கொண்டு மாதந்தோறும் பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் ஆகிய இருஆழ்வார்களின் சென்மநாளான திருக் கேட்டை நாளில் அருளாளப்பெருமாள் புறப்பட்டருளி திருமஞ்சன மும், திருவமுதும் செய்ய ஏற்பாடு செய்தான்.

இத்தேவர் - விக்கிரமச் சோழதேவர்; மாஸந்தோறும் ..... மூப்பதிந் கலநே தூணிப் பதக்காக: மாதம் கலம் 32, தூணி 1, பத க்கு 1 ஆக எனபது. கலம் - 3 தூணி; தூணி - 2 பதக்கு; பதக்கு - 2 குறணி; குறணி - 8 நாழி.

யாண்டு வஃை கலம்* அரைப் பொலிசையால் பலிசை பொலி வதாக நெல்லு மூந்நூற்றுத் தொண்ணூற்றுக் கல, மிந்நெல்லு மூந்நூற்றுத் தொண்ணூற்றுக் கலத்துக்கும் அருளாளப் பெருமான் மாலைத்தோறும் திருக்கேட்டை நாள் புறப்பட் டருளி திருமஞ்சனமும் பெருந்திருவமுதும் செய்தருள வேண்டுவ வையிற்றுக்கு இந் நிமந்தப்படியே பண்டாரத் திலே விட்டுச் சந்திராதித்தவத் நிமந்தமாகச் செய்யக் கடவ தாகச் சிலாலேகை செய்வித்துக் குடுத்தோம், இக்கோயில் ஸ்ரீகோயில் வாரியம் புண்டவத் தரத்து ராஜராஜக் கிரமவித்த நும், தூதவுறி நின்ற நாராயணக்கிரம வித்தநும், ம்ருஹஸ்த லத்து பாண்டவதூதக் கிரமவித்தநும், புண்டவத்தரத்து இளைய கோக் கிரமவித்தநும், தூதவுறி வெண்ணெக் கூத்தக் கிரம வித்தநும், தூதவுறி இளையருளாளக் கிரமவித்தநும்,

---

யாண்டு வஃை - ஆண்டு தோறும், கலம் அரைப்.....பலிசை பொலிவதாக: கலம் நெல்லுக்கு ½ கலம் வட்டியாக வருகின்ற. என்பது. பொலிசை-பலிசை, வட்டி; பொலிதல் - மிகுதல், இலாப மாக வருதல்.

* சாசனங்களில் கலத்துக்கு வழங்கும் குறி என்பது.

கலத்துக்கு அரைக்கலம் நெல் வட்டியாக 780 கலம் நெல் லுக்கு மாதம் 32 கலம், 1 தூணி, 1 பதக்கு நெல்லு; ஆண்டுக்கு 390 கலம் நெல்லு. இந்நெல் 390 கலமும் திருக்கேட்டை நாள் ஒன்றுக்கு 30 கலமாக, ஒரு ஆண்டில் வரும் 13 நாட்களுக்கும் செலவிடப் பட்டது.

இந் நிமந்தப்படியே - இவ்வேற்பாட்டின்படி; நிமந்தம் - ஏற்பாடு; பண்டாரத்திலே விட்டு - கோயில் பண்டாரத்திலே வாங்கி வைத்து; சிலா லேகை செய்வித்துக் கொடுத்தோம் - கல்லில் வெட்டிக கொடுத்தோம்.

ஸ்ரீ கோயில் வாரியம் - கோயிலில் மேற் பார்வை செய்யும் உத்தியோகம். ஸ்ரீ கோயில் வாரியம், தூதவுறி, கோயில் கணக்கு என்பன கோயில் சம்பந்தப்பட்ட உத்தியோகங்களாகத் தெரிகிறது. புண்டவத்தரம், மிருஹஸ்தலம் என்பன அக்காலத்தவர் குடிப் பெயர்கள் போலும்.

கோயிற் கணக்கு உத்திர மேலூருடையாகாக எட்டி திருக் காளத்தி உடையாளும் இவ்வகைவோம். இப்படிக்கு இவை உத்திர மேலூர் ருடையான் எட்டி திருக்காளத்தியுடையான் எழுத்து. உ.

(பாடபேதம்) 1. விளங்கச் 2. சயமாது 3. தன்னிரு 4. மன்னிய உரிமையான் 5. விசயாபிடேகம் 6. வீரசிமாசனத்து 7. மூக்கோக் கிழானடிகளோடும் 8. கோப்பரகேசரி வன்மரான 9 திரிபுவன சக்கரவர்த்திகள்.

---

12. தீக்காலிவல்லம் கோயில் சாசனம்*

முகவுரை.

தீக்காலிவல்லம் என்பது, செங்கல்பட்டு சில்லாவிலுள்ள ஒரு சிவதலம். இது ஆதியில் வாணபுரம் என்று அழைக்கப் பட்டது; இப்பொழுது 'திருவல்லம்' என்று வழங்குகிறது. இவ்வூர் பில்வாரண்யேசுவரர் ஆலயத்திற்கு விடேல் விடுகு விக்கிரமாதித்திய சதுர்வேதி மங்கலம் என்னு மூரைத் தானமாகக் கொடுத்த செய்தி கூறப்படுவதால், இச் சாசனம் 'தீக்காலி வல்லம் கோயில் சாசனம்' எனப்பட்டது. செங்கல் பட்டு சில்லாவிலுள்ள பாலாற்றின் கிளைநதியான நீவா† நதி

எட்டி: இது அக்காலத்திய வணிகர்க்கு அரசன் சிறப்பாகக் கொடுக்கும் பட்டப்பெயர்; எனவே, எட்டி திருக்காளத்தியுடையான் வணிகரை யிருத்தல்வேண்டு மென்பது வெளிப்படை.

வெண்காடன் ஆதித்த தேவனை வங்கத்தரையன் தந்த 780 கலம் நெல்லையும் ஏற்று, திருக்கேட்டை நாள்தோறும் அருளாளப் பெருமாள் எழுந்தருளுவதாகிய விழாவை நடத்துவதற்கு ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டவர்கள் - இராசராச கிரமவித்தன், நாரா யணக் கிரமவித்தன, பாண்டவதூதக் கிரமவித்தன், இலையகோக் கிரமவித்தன், வெண்ணெக்கூத்தக் கிரமவித்தன், இளையருளாளக் கிரமவித்தன், எட்டி திருக்காளத்தியுடையான் என்னும் அறுவரா வர். அதை எழுதியவன் எட்டி திருக்காளத்தியுடையான்.

* இச் சாசனம் தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் மூன்று வது தொகுதியின முதற்பகுதியைச் சேர்ந்தது.

† நீவா என்பது நூவர் என்றிருத்தல் வேண்டுமென்று சேக்கி ழார் வாக்கால் விளங்குகிறது.

யின் (வெள்ளாறு) மேலக்கரையிலுள்ள திருவல்லமென்னு மூர்ப் பில்வகாதேசுவரா ராலயத்து மகாமண்டபத்தின் வடக் குப்புறச் சுவரில் இது காணப்படுகிறது.

இதில், வாணராபனை[1] விக்கிரமாதித்தன்[2] வேண்டிக் கொண்டபடி, படுவூர்க்கோட்டத்து மீயாறு நாட்டு ஜம்பூனி, விளத்தூர், அமருன்றிமங்கலம் ஆகிய மூன்று ஊர்களையும் ஒன்றாகச் சேர்த்து 'விடேல்விடுகு[3] விக்கிரமாதித்திய சதுர் வேதி மங்கலம்' என்னும் பெயரோடு திக்காலிவல்லம் பில்வ காதேசுவரா ராலயத்திற்குக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. இதன்படி இவ்வூர்ச் சபையோர் கோயில் பூசை முதலியன நடப்பதற்கு நெல் கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். இது பல்லவ அரசனை விஜயநந்தி விக்கிரம வன்மனது ஆட்சி யின் 17 ஆம் ஆண்டில் கடைபெற்றது.

இச் சாசனம் எற்பட்ட காலம் கி. பி. 9 ஆம் நூற் றாண்டு என்னலாம்.

---

[1] மகாபலிச்சக்கிரவர்த்தியின் மாபில் வாணகுல வழிவந்தவர் களான வாணர்கள் சங்ககால முதலே தமிழ்நாட்டில் பலம் பொருந் திய சிற்றரசர்களாகயிருந்தனர். கி. பி. 4ஆம் நூற்றாண்டில் கதம்ப குலத்தவர் அரசாட்சி பெற்றபோது, அவர்கள் இவர்களுக்குக கப் பங் கட்டி வந்ததாக வரலாறு கூறுகின்றது. கி. பி. ஐந்தாம் நூற் றாண்டிலிருந்து இவர்கள் தமிழ்நாட்டிற்கும் தெலுங்குநாட்டிற்கும் இடைப்பட்ட வடுகவழி பன்னீராயிரம் என்ற பகுதியை ஆண்டு வந்தனர். இப்பகுதியை 'மகதம்' என்றும் கூறுவர். இவர்கள் மூத லில் பல்லவர்களிடம் சிற்றரசர்களாயிருந்து, பிறகு சோழவரசர்களுக் குட் பட்டனர். முதலாமபராந்தகன இவர்களைத் தன்னடிக கீழ்ப் படுத்தினை என்று தெரிகிறது. அக்காலத்தில் இவர்கள் ஆண்ட நாடு 'பெரும்பாணர்பாடி' என்று அழைக்கப்பட்டது. சாசனங்களில் இவர்கள் வாணதிராயர் என்றும், இலக்கியங்களில் 'மகதேசர்' 'அறைக்காவலர்' என்றும் அழைக்கப்படுகின்றனர்.

[2] இவன் விசயநந்தி விக்கிரமப் பல்லவன் காலத்தில் (கி. பி. 830—854), அரசுகட்டில் ஏற்றுவந்த வாண அரசனாவான்.

[3] இது பல்லவ அரசர்களில் சிலருக்குரிய சிறப்புப் பெயர். 'பல்லவாதி ஆணை' என்று இதற்குப் பொருள் கொள்வாருமுண்டு.

சாசனம்.

ஸ்வஸ்திஸ்ரீ. திருமண்டப மிழிச்சி யெடுப்பதற்கு முன் புள்ள சிலாலேனைகப்படி. கோ விஜயநந்தி விக்கிரம பர்மர்க்கு வாணராயனை விக்கிரமாதித்தன் பல்லவமன்னருக்குட்பட்ட ஒரு சிற்றாசனதலின், பேராசரின் சிறப்புப்பெயரையும் உடன் சேர்த்து 'விடேல்விடுகு விக்கிரமாதித்தன்' என்று பெயரிட்டுக் கொண்டான் போலும்.

திருமண்டபம் - கோயில் மண்டபம்; இழிச்சி - இடித்து; எடுப்பதற்து - கட்டுவதற்கு.

முன்புள்ள சிலாலேனைப் படி: ஒரு கோயிலை இடித்துக் கட்டும்போது அதிலுள்ள கல்வெட்டுகளையெல்லாம் படியெடுத்து, கட்டி முடிந்தபின் மீண்டும் முன்போலவே எடுத்த படிகளை அந்தந்த இடங்களில் செதுக்குவது வழக்கம். அம்முறைப்படி இச் சாசனம் படியெடுத்து கல்லில் செதுக்கியதென்பது இத்தொடரால் விளங்குகிறது. இவ்வாறே மாதவக்கிரமவித்தன் சாசனம், வாணமஹா தேவியார் சாசனம் என்பனவும் படியெடுத்துப் புதிதாக வெட்டியனவேயாகும். சிலாலேனை - கல்வெட்டு.

கோ விஜயநந்தி விக்கிரம பர்மர்: இவன் தந்திபோத்தரையன் மகன்: இவனுடைய தாய் கதம்ப அரசகுலத்தில் பிறந்த அக்கள நிம்மடி என்பவள். கி. பி. 830 முதல் 854 வரை இவன் பல்லவ ராச்சியத்தை ஆண்டான். இவனுக்கு வடக்கே இராஷ்டிர கூட மன்னரும், தெற்கே பாண்டியரும் பகைவராயிருந்தனர். பாண்டிய மன்னனை வரகுண பாண்டியனைத் தெள்ளாறு என்னுமிடத்தில் வென்று, 'தெள்ளாறெறிந்த நந்திவர்மன்' என்ற சிறப்பையடைந்தான. 'நந்திக் கலம்பகம்' இவனைச் சிறப்பித்துப் பாடிய ஒரு பிரபந்தம். இவன் காலத்துப் பெரும்புலவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவராவர். அவனி நாராயணன், மல்லமேவந்தன், விடேல் விடுகு என்பன இவனுக்குரிய சிறப்புப் பெயர்கள். இவன காலத்தில் எற்பட்ட சாசனங்கள் பலவாகும். இவனை மூன்றும் நந்திவர்மப் பல்லவன் என்பர்.

படுவூர்க் கோட்டம்: இது இப்பொழுது செங்கல்பட்டு சில்லா என்று வழங்குகிறது. தீக்காலி வல்லழகையா பாமேஸ்வரர்: தீக்

யாண்டு யெ ஆவது, படுவூர்க்கோட்டத்து மீயாறு நாட்டுத் தீக்காலி வல்லமுடைய பரமேஸ்வரர்க்கு, இன்னாட்டு ஐம் பூணியும், விளத்தூரும், இத்தேவர் தேவதானம் அமருன்றி மங்கலமும் விடெல்விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வ்வேதி மங்கல' மென்னும் போல் ஏகக் கிராமமாக மாவலி வாண ராயனை விக்கிரமாதித்த வாணராயன் விண்ணப்பத்தாலும், காடுபட்டித் தமிழப் போரயன் ஆணத்தியாலும் ஏகக் கிராம மாக்கி இவ் வமருன்றிமங்கல மூன்னித் தீக்காலிவல்ல மூடைய பரமேஸ்வரர்க்கு இறுத்த வருகினற ஜ இரண்டாயிரக் காடி யும். பொன் னிருபதின் கழஞ்சு மிவ் விடெல்விடுகு விக்கி மாதித்தச் சதுர்வ்வெதி மங்கலத்துச் சபையார் இறுப்பா

காலிவல்லத்தில் எழுந்தருளிய சிவபெருமான் பெயர்.

இன்னாட்டு - படுவூர்க் கோட்டத்து மீயாறு நாட்டு என்றபடி.

ஐம்பூணி: இவ்வூர் இப்பொழுது 'அம்மூண்டி' என்று அழைக் கப்படுகிறது; தீக்காலிவல்லத்துக்குச் சமீபத்திலுள்ளது.

இத்தேவர் தேவதானம் அமருன்றிமங்கலம்: இச் சிவன் கோயி லுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட அமருன்றிமங்கலம் என் னும் ஊர் என்பது; இதனால் அமருன்றிமங்கலம் இயற்கைவே கோயில் தேவதானமாக இருந்ததென்று தெரிகிறது.

ஏகக் கிராமமாக: ஐம்பூணி, விளத்தூர், அமருன்றிமங்கலம் ஆகிய மூன்றையும் ஒரே கிராம மாக்குவதற்கு எண்ணி என்பது.

விண்ணப்பம்: வேண்டுகோள்; அக்காலத்தில் அரசன் தான மிடக் கருதின், உடனிருக்கும் மந்திரியோ அல்லது சிற்றரசரோ வேண்டவும், ஆணத்தி கட்டளை பிறப்பிக்கவும் கடைபெறும் என் பது. காடுபட்டி: இது பல்லவர்க்குரிய ஒரு பட்டப் பெயர். இவ 'காடு வெட்டி' என்றிருத்தல் வேண்டும். ஆணத்தி - கட்டளை: அர சனது கட்டளையை நிறைவேற்றுபவனும் 'ஆணத்தி' எனப்படுவான்.

மூன்னித் தீக்காலி வல்லமுடைய: மூன்பு இத்தத் தீக்காலிவல்ல மென்னும் தலத்தி லெழுந்தருளிய. இறுத்து வருகின்ற - கொடுத்து வருகின்ற. ஜ: இது சாசனங்களில் நெல்லுக்கு வழங்கும் குறி.

காடி: இது அக்காலத்திய முகத்தலளவைகளி லொன்று; தானியங்களைப் பெரும்பாலும் இவ்வளவையிலேயே அளப்பர். கழஞ்சு - 12 பண எடை: இது ஒரு நிறுத்தலளவை; பொன் முதலி யன இதனால் நிறுக்கப்படும்.

இவ் வமருன்றியங்கலம்.....இறுப்பாராகவும்: முன்பு தீக்காலி வல்லம் தேவதானமாயிருந்த அமருன்றிமங்கலத்துச் சபையா

காகவு, மின்னெல்லில்த் திருவமிர்துக்கு நெல்லு அறுநூற்றுக் காடியும், திருவுண்ணுழிகை யுள்ளாராதித்தப் பாசரிக்கும் சிவ ப்ராஹ்மணர்க்கு நெல்லு ஐந்நூற்றுக் காடியும், ஸ்ரீபலி கொட்டுவார்க்கு நெல்லு ஐந்நூற்றுக் காடியும், திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும், திருப்பதியம் பாடுவா ருள்ளிட்ட பலபணி செய்வார்க்கு நெல்லு நாநூற்றுக் காடியும், திரு நொந்தா விளக்குக்கும், திருமெய்ப் பூச்சுக்கும், சிதாரிக்கு,

---

கொடுத்துவந்த 2000 காடி நெல்லையும், 20 கழஞ்சு பொன்னையும் இனி இம்மூன்று ஊர்களும் சேர்ந்த சபையினர் கொடுத்துவர வேண்டு மென்பது.

திருவமுது - நிவேதனவுணவு. திருவுண்ணுழிகையுள்ளாராதித் துப்பாசரிக்கும் - திருவுண்ணுழிகை உள்ளார் ஆதி துப்பு ஆசரிக் கும் எனபது. திருவுண்ணுழிகை - கோயில சாமான்களை வைக்கும் தனி பறை; இதனைக் கருப்பக்கிருக மென்பாரும், கோயில் பண்டாரம என்பாரு முளர். உள்ளாராதி - உள்ளவர் முதலிய; இவர்களில் குருக்கள், பரிசாரகர் முதலியோரும் அடங்குவர். துப்பு ஆசரிக்கும் - உணவுப்பொருள் தயாரிக்கும். சிவப்ராமணர் - சைவப் பிராமணர்கள்.

ஸ்ரீபலி கொட்டுவார் - நித்திய உத்சவத்தின்போது வாத்தியம் கொட்டுபவர்கள். ஸ்ரீபலி - கோயில் வாதியம; நித்திய உற்சவம் எனபாருமுளர்

திருப்பள்ளித்தாமம்: கோயில் மூர்த்திகளுக்குச் சாத்தப்படும் மாலை அதற்குப் பூப் பரிப்பார், கட்டுவார் ஆனைவரும் 'திருப்பள் ளித் தாமம் பறிப்பார்' எனப்பட்டனர்.

திருப்பதியம் - தேவாரம். திருப்பதியம் பாடும் வழக்கம் இராச ராசன காலதிற்கு முனபே இருந்துள்ளது என்பது இதனால் விளக் கமுறும்

பணி - கோயில் திருப்பணி: திருமெய்ப்பூச்சு - அபிசேகம். சிதாரி (சீதம் + அரி) - தட்பவெட்பம்; இங்கு அத்தன்மைகளைக் கொடுக்கும் தாபதீபத்தைக் குறித்தது. இதற்குச் 'சந்தனம்' என்று பொருள் கொள்வாருமுளர்.

மற்றும் கண்ட ஸ்புடித நவ கர்மாதிகளுக்கும்மாகப் பொன் இருபதின் கழஞ்சும் ஆக இன்னெல்லும், இப்பொன்னும் இத்தேவர்க்கு சந்தாதிக்தவல் விறுப்பார்களாகவும். இப் பரிசு நிவந்தமாகச் செய்து குடுத்தோம். இதற்தர்மம் பர்மரெஹஸ்வரர் ரணகூடி.

---

13. மகாவலி வாணராயர் சாசனம்.*

முகவுரை.

மஹாவலி வாணராயர் என்பார், பல்லவ ராட்சிக்குட் பட்டு வடுகவழிபன்னீராயிரம் என்ற பகுதியை ஆண்ட வாணகுல சிற்றரசராவர். இவரால் உறுதிப்படுத்தப்பட்ட நிவந்தம் பற்றிய சாசனம் 'மஹாவலி வாணராயர் சாசனம்' எனப்பட்டது. செங்கல்பட்டு தில்லாவிலுள்ள பாலாற்றின் கிழைதியான நீவாநதியிடைக் கிடந்ததொரு பெரிய குண்டுப் பாறையின் மேற்றளத்தில் இது செதுக்கப்பட்டுள்ளது. அப் பாறை திருவல்லத்திற்கு வடகிழக்கே ஒரு மைல் தூரத்தி லுள்ளது.

இதில், ஊற்றுக்காட்டுக் கோட்டத்து அளிங்கண பாக் கத்து கீழகத்து அரிதீரன் என்னுந் தட்டானொருவன், அழிந்

கண்டஸ்புடிதம் - பழுது பார்த்தல் (repairing breaks and cracks); நவ கர்மாதி - புதுப்பித்தல் முதலிய காரியங்கள்.

இத்தேவர்க்கு - தீக்காவிவல்லமுடையார்க்கு. இப்பரிசு - இவ் வாறு நிவந்தம் - ஏற்பாடு

திருவமுதுக்கு நெல் 600 காடி: திருவுண்ணாழிகையுள்ளா ராதி தப்பு ஆசாரிக்கும் சிவப்பிராமணர்களுக்கு நெல் 500 காடி; பூசபலி கொட்டுவார்க்கு நெல் 600 காடி; திருப்பள்ளித்தாமம் பறிப் பார், திருப்பதியம் பாடுவார் முதலிய திருப்பணி செய்வார்க்கு நெல் 400 காடி ஆக நெல் 2000 காடி. இனி, திருநந்தா விளக்கு, திருப் பூச்சு, தூபதீபம், பழுதுபார்த்துப் புதுப்பித்தல் ஆகியவற்றுக்கு பொன் 20 கழஞ்சு என்க.

* இச் சாசனம் தென்னிந்திய சாசனத் தொகுதிகளின் மூன்றா வது தொகுதியின் முதற்பகுதியைச் சேர்ந்ததாகும்.

சிற்களம்பட்டி என்னும் நிலத்தை வீலக்கு வாங்கி வாண புரத்து வடசிகரக் கோயிலுக்குத் தேவதோகமாக விட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. இது பல்லவ அரசனை விஜய சந்தி விக்கிரமவர்மன் ஆட்சியின் 62ஆம் ஆண்டில் கடைபெற்றது.

இச் சாசனம் எற்பட்ட காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு†† என்னலாம்.

---

† இவன் இரண்டாம் நந்திவர்மப் பல்லவமல்ல வென்; இரண்டாம் பரமேச்வரனுக்குப்பின் இவன் பட்டத்துக்கு வந்து கி. பி. 717 முதல் 779 வரை பல்லவ நாட்டை ஆண்டான். இவன் தந்தை பெயர் இரண்யவர்மன் எனறும், பரமேச்வரனுக்குப் பிள்ளையில் லாததால் மந்திரிகள் முதலியோர் இவனையே அரசனாகத் தெரிந் தெடுத்தார்களென்றும் கூறுவர். இவனுடன் முதல் முதல் எதிர்த் துப் போர்செய்தவர்களை பரமேச்வரன் மகனை சித் திரமாயனும், கோச்சடையனது மகனை அரிகேசரி மாறவர்மன் என்னும பாண்டியனுமாவர். இவன் தன் பகைவர்களையெல்லாம் வென்று கி. பி. 738ல் அசுவமேத யாகமொன்று செய்ததாகக் கூறு வர். இடைக்காலத்தில் இவன் மேலைச்சாளுக்கிய மன்னர்களுடன் ஓயாது போர்செய்து வந்ததாகத் தெரிகிறது. இவன் காலத்தில் தோன்றிய கல்வெட்டுகள் பல. அவற்றுள் உதயேந்திர சாசனம், காசாக்குடி சாசனம், தண்டன் தோட்டச் சாசன முதலியன இவன் வரலாற்றை விளக்குவனவாகும். இவன் வைணவ சமயத்தவனா யிருந்து திருமங்கையாழ்வாரால் சிறப்பித்துப் பாடப்பெற் றுள்ளான். பராங்குசபாண்டியன், அவன் மகன் பராந்தக பாண்டியன், நந்தி வர்மன் என்னும் இராஷ்டிர குல மன்னன், சிவமாறன் என்னும் கங்கை குல மன்னன், மகாவலி வாணராயர் என்னும் வாண அர சன முதலியோர் இவன் காலத்து அரசர்களாவர்.

†† இச் சாசனம் எற்பட்ட காலம் ஆராயற்பாலது. இது நந்தி வர்மப் பல்லவனது 6வது ஆண்டு கல்வெட்டு எனவே, இவ்வரசன் இரண்டாம் நந்திவர்மப் பல்லவனே (கி. பி. 717-779) யன்றி, மூன் றாம் நந்திவர்மப் பல்லவனாய் (கி. பி. 830-854) இருக்கமுடியாதென் பது வெளிப்படை. எனவே, இச் சாசனம் எற்பட்ட காலம் கி. பி 779 என்னல் வேண்டும்.

சாசனம்.

ஓம் நமச் சிவாயம். ஸ்வஸ்திஸ்ரீ. கோவிசைய நந்தி விக் கிரம பருமற்கு யாண் டுறுபத்திரண்டாவது ஸகல ஜகத் த்ர யாபிவந்தித ஸ்ராஸ்ராதீச பரமேஸ்வர பிரதி ஹாரீகிருத மஹாவலி குலோத்பவ ஸ்ரீமாவலி வாணராயர் வடுகவழி பன் னீராயிரமும் ஆள வாணபுரத்து வடசிகர கோயில் புதுக்

ஓம் நமச்சிவாயம்: இது சிவ வணக்கமாகக் கூறப்படும் ஒரு தொடர்; பிற சாசனங்களிலெல்லாம் 'ஸ்வஸ்தி ஸ்ரீ' எனனும் தொடர் மங்கலமாய் வந்திருப்ப, இச் சாசனம் 'ஓம் நமச்சிவாயம் ஸ்வஸ்திஸ்ரீ' என்ற தொடங்குவது குறிப்பிடத்தக்கது. பின் வரும் அரிகேசரி தேவர் சாசனம் 'சுபமஸ்து' என்னும் தொடரையும், பராக்கிரம பாண்டியதேவர் சாசனம், வாலகீகாமயர் சாசனம இரண்டும் 'சுப மஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீ' என்னும் தொடர்களையும் முதலில் மங்கலமாகக் கொண்டுள்ளன.

கோவிசைய நந்தி விக்கிரம பருமற்கு: இவன் இரண்டாம் நந்திவர்மப் பல்லவ மல்லனாகும். கி. பி 717 முதல் 779 வரை பல் லவ ராட்சியத்தை இவன ஆண்டான்.

ஸகல ஜகத்.....குலோதபவ: இது ஒரு வடமொழித் தொடர். 'மூன்று உலகத்தவராலும வணங்கப்படுபவரும், தேவ சுர்களுக்கு இறைவருமாகிய பரமேசுவரனல் துவாரபாலகனாக்கப் பட்ட மாபலியின் வழித் தோன்றலான' என்பது இதன பொருள். ஸகல ஜகத்ராயம் - சுவர்க்கம், மத்திபம், பாதாளமாகிய சகல உல கங்கள்; அபிவந்திதம் - வணங்கும்; ஸ்ராஸ்ராதீசன் - தேவ சுர்களுக்கு இறைவன்; பிரதிகாரி - துவார பாலகன், வாயிற் காப் போன்.

ஸ்ரீ மகாவலிவாணராயர்: இவன் நந்திவர்மப் பல்லவ மல்ல னைச்சிக்குட்பட்டு, தமிழ் நாட்டிற்கும் தெலுங்கு நாட்டிற்கும் இடைப்பட்ட 'வடுகவழி பன்னீராயிரம்' என்ற பகுதியை ஆண்ட வாணர்குலச் சிற்றரசனவான. ஆள - ஆளும் காலத்தில்.

வாணபுரம்: இதன் மற்றொரு பெயர் 'திக்காவிவல்லம்' என் பது; இப்பொழுது 'திருவல்லம்' எனறழைக்கப்படுகிறது. இது அக்காலத்தில் வாணருடைய தலைநகரமா யிருந்தது.

வடசிகரகோயில் - வடபக்கத்துக் கோயில்; வடபக்கத்தில் கோபுரத்தையுடைய கோயில் எனினுமாம்.

புதுக்கிவித்து - பழுதுபார்த்து: இதைப் புதுக்குவித்து அழிந் சிற்களமபட்டு என்னுமூனை இதற்கு விலக்தமாகக் கொடுத்தவன ஊற்றுக்காட்டுக் கோட்டத்து அளிங்கணபாக்கத்து கிழகத்து அரி தீரனென்னும் தட்டாரவன்.

குவித்து இதற்கு இளங்கிழுவர் மகன் மன்றாடிடை அழிஞ் சிற் களம்பட்டி விலக்கு கொண்டு குடுத்தேன். ஊற்றுக் காட்டுக் கோட்டத்து அளிங்கண பாக்கத்து கீழகத்து தட் டான் மாதங் மகங் அரிதான் குடுத்த தேவர் போகம் மஹா வலி வாணராயர் பிடாகை வலஞ்செய்து கொடுத்தார். இது காத்தார் அடி என் முடி மேலன. இது அழித்தான் கடிகை எழா இருவரையும் கொன்ற பாவத்து படுவான். இது

இளங்கிழுவர் மகன் மன்றடிடை: இளங்கிழுவர் என்பவருடைய மகனை மன்றாடி என்பவனிடத்து. மன்றாடி - டோராசன்.

அழிஞ்சிற்களம்பட்டி: இது ஒரு சிறு கிராமம்; இதனை அரி தரன் விலக்கு வாங்கி, தீக்காவிவல்லம் கோயிலுக்குத் தேவதோக மாகக் கொடுத்தான்.

பிடாகை வலஞ்செய்து கொடுத்தார் - உறுதிப்படுத்தினர்; தான சாசனத்தை ஒரு பெண்யானையின்மீது ஏற்றி, தானம் செய்த ஊரின் எல்லைகளைச் சுற்றி வருவது பிடாகை வலஞ்செய்து கொடுப் பதாகும்; இங்கு இச் சாசனத்தை மகாவலிவாணராயர் அவ்வாறு செய்து உறுதிப்படுத்தினர். பிடாகை - சிற்றூர்.

தேவர் போகம்: கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்படும் நிலம்.

இது காத்தார் அடி என் முடிமேலன்: இது காத்தார் அடி யேன் முடிமேலன என்றும் பாடம்.

கடிகை எழா இருவரையும்: இத்தொடருக்குப் பலரும் பல வாறு பொருள் கூறுகின்றனர். 'ஊர்ச்சபையின் நிலையான இரு உறுப்பினர்' என்பர் சிலர்; கடிகை - ஊர்ச்சபை; இருவர் என்பது, தாய் தந்தையைக் குறிக்கு மென்பா ருமுளர். இனி, 'எழா இருவர்' என்பதை 'எழாயிரவர்' எனக்கொண்டு, 'ஊர்க் குடிகள் எழாரவர்' என்றும், 'கற்றறிந்த பெரியோர் எழாயிரவர்' என்றும் பொருள் கொள்வர். கடிகை - கல்விகற்குமிடம்.

இது அழித்தான்.....வாணபுரத்தோம்: இக்கத் தருமத்தை அழித்தால் வரும் பாவத்திற்கு அஞ்சானையின். ஆயிரம் பொன் அபராதம் விதிக்கப்படும் என்பது.

அடித்தான் இப்பாவத்துக்கு அஞ்சாறுயில் அன்றாள் கோயி லுக்கு ஆயிரம் காணம் தண்டப் படுவோம் வாணபுரத் தேம்.

பஹ்ர் பிர் வஸ்ர்தா தத்தா ராஜபி ஸகராதிபி
ர்ப்ய ர்ப்ய பூமி தர்ய தர்ய தா பலம்.

---

14. மாதவக் கிரமவித்தன் சாசனம்.*

முகவுரை.

மாதவக் கிரமவித்தன் என்பவன், தீக்கவிவல்லம் சிவன் கோயிலுக்குக் கொடுத்த தானம் பற்றிய சாசனம் 'மாதவக் கிரமவித்தன் சாசனம்' எனப்பட்டது. இது செங்கல்பட்டு சிலலா திருவல்லம் பில்வநாதேசுவரர் கோயில் மகாமண்ட பத்தின் வடக்குச் சுவரில் காணப்படுகிறது.

இதில், மாதவக் கிரமவித்தன் என்னும் ஒரு அந்தணன் திருவல்லம் சிவன் கோயில் அதிகாரிகளிடம் 25 கழஞ்சு பொன் கொடுத்து அதன் வட்டியிலிருந்து காளொன்றுக்கு

அண்றாள் கோயில் - அப்பொழுது ஆளுகின்ற அரசன் அமைத்த; நீதிமன்றம். காணம் - பொற்காசு. தண்டப்படுவோம் - அபராதம் கொடுப்போம்; தண்டம் - அபராதம். வாணபுரத்தேம் - வாணபுரம் சபையோம்.

பஹ்ர் பிர்.....தா பலம்: இது ஒரு வட மொழிச் சுலோகம். இச் சுலோகங்கொண்டு முடியும் பல்லவச் சாசனங்கள் பல உள்ளன. இதன் பொருளைப் பலரும் பல கருத்துப்படக் கூறியுள்ளனர். சகர் முதலிய அரசர்களிலேலே எராளமான தானங்கள் செய்யப்பட்டன; எவரெவர் எத்துணை நிலங்கள் தானம் செய்தனரோ, அத்துணை யளவிற்கு அவர்கள் பலனை அடைகின்றார்கள்' என்பது இதற்கு ஒரு சாராரர் கூறும் பொருள். இனி மற்றொரு சாரார், 'பல சேனைகளையுடைய அரசர்களால் தானம் கொடுக்கப்பட்டாலும், எந்தெந்தக் காலத்தில் பூமி யார் யாருடையதோ அவர்களுக்கு அதன் பயன் பகுதிக ளெ கொடுக்கப்படும்' என்று பொருள் கொள்வர்.

* இச்சாசனம் தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் மூன்றாவது தொகுதியின் முதற்பகுதியைச் சேர்ந்ததாகும்.

உழக்காழக்கு எண்ணெய் இட்டு சுவாமி முன்னர் திருஉத்தா வினக்கு ஒன்று எரிப்பதற்கு ஏற்பாடு செய்த செய்தி கூறப் படுகிறது. இது மகாவலி வாணராயன் என்னும் வாணர் தலைவனது ஆட்சியில் சகம் 810 ஆம் ஆண்டு † கடைபெற் றது.

எனவே, இச் சாசனம் எற்பட்ட காலம் கி. பி. 888 ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ. ஸகல ஜகத்தியாபி வந்தித ஸ்ரீராஸ்ரா தீசபுர பரமேஸ்வர பிரதி ஹாரீகிருத மஹாபலி குலொத்பவ மஹாபலி வாணராஜர் சகர் யாண்டு எண்ணூற் றெருபதா வது, படுவூர்க்கோட்டத்து காரைநாட்டு வன்னிபெடாகிய இரண விக்ரமச் சதுர்வ்வேதிமங்கலத்து ஸபையோம் இக் கோட்டத்து மீயாறுநாட்டுத் தீக்காலிவல்லத்துத் திருத்

---

† சகர் = சகம், சகாப்தம்; அதாவது சாலிவாகன சகாப்தம் என்பது. சாலிவாகனன் என்னும் அரசன் பெயரால் வழங்கும் ஆண்டு மானம். அதன் தொடக்கம் கி பி. 78.

ஸகலஜகத்...துலோத்பவ: 'மூன்று உலகத்தவாலும் வணங் கப்படுபவரும், தேவாசுரர்களுக்கு இறைவருமாகிய பரமேசுவரனால் துவாரபாலக ரூக்கப்பட்ட மாபலியின் வழித்தோன்றலான' என் பது இதன் பொருள்.

மஹாபலி வாணராஜர்: இது ஒரு பாணர் தலைவன் சிறப்புப் பெயர். இவனுடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. பேரரசர்களன்றிச் சிற்றரசர்களும் பிறரும் கோயிலுக்குத் தானம் செய்து வந்தனர் என்பதை இது விளக்குகின்றது. பாணர் பல் லவ சாட்சியினின்று சுயேட்சையடைந்த காலம் இது என்பாருமுளர்.

சகர் யாண்டு எண்ணூற்றெருபது: சக ஆண்டு 810; அதாவது கி. பி. 888 என்பது.

படுவூர்க் கோட்டம்: தொண்டைமண்டலத்து 24 கோட்டங் களுள் இது ஒன்று. பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது; மீயாறு நாடு, காவை நாடு முதலியன அக்கோட்டத்தைச்சேர்ந்த நாடுகளாகும். காவை நாடு, இராணிப்பேட்டைக்கு வடகிழக்குள்ள தென்பர்.

வன்னிபெடு: இது வாலாஜாபாத்துக்குத் தெற்கே ஒரு மைல் தூரத்திலுள்ள ஒரு ஊர். இதன் மற்றொரு பெயர் இராணவிக்கிர மச் சதுர்வேதிமங்கலம் என்பது. இக்கோட்டத்து - படுவூர்க்கோட் டத்து.

தீக்காலிப் பெருமாநடிகளுக்கு சந்தாதித்தவல் ஒரு திரு நுந்தா விளக்கு எரிப்பதற்கு நிசதம் உழக்காழக்கெண்ணெ யட்டுவதற்கு இக்கோட்டத்துக் காவிரிப்பாக்கமாகிய அவநிநாராயணச் சதுர்வேதிமங்கலத்துக் கீழ்வடசேரி எட்டுக்கூர் மாதவக்கிரமவித்தன் பக்கல் தன்ம கட்டளைத் துளா நிறை இருபத்தைஞ் கழஞ்சு பொன்கொண்டு சந்தாதித்தவல் எரிப்பதாக இத்தன்மம் முட்டாமை செலுத்துவோமாநாம ஸபையோ, மித்தன்மம் முட்டில் தனமாஸநத்திலெ நிசதம் ஐங்கழஞ்சு பொன் பந்மாஹேஸ்வரோ மன்றப் பெறுவ

திருத்தீக்காலிப் பெருமா நடிகள்: இது தீக்காலிவல்லதத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் பெயர்: இப்பொழுது பில்வ நாதேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

சந்திராதித்தவல் - சந்திர சூரியருள்ளவரை. திருநுந்தா விளக்கு - கோயிலில் எப்பொழுதும் எரித்துகொண்டிருக்கும் விளக்கு. நிசதம் - நாள்தோறும். உழக்கீராழக்கு - உழக்கும் ஆழாக்கும், நீபடி. அட்டுவதற்கு - கொடுப்பதற்கு.

காவிரிப்பாக்கம்: இது பதினூர்க் கோட்டத்திலுள்ளது. இதன் மற்றொரு பெயர் அவநிநாராயணச் சதுர்வேதிமங்கலம் என்பது. அவநி நாராயணன் என்பது, விசயநகர விக்கிரமப்பன்மருக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்று.

கீழ்வடசேரி: வடகிழக்குத் திசையிலுள்ள சேரி: சேரி - மூல்லை நிலத்தூர். அந்தணர் வாழுமிட மெனினுமாம்.

எட்டுக்கூர்: இது வன்னிபேடென்னும் அவநிநாராயணச் சதுர் வேதிமங்கலத்திற்கு வடக்கிலுள்ளதோர் ஊர்.

தன்ம கட்டளை: தருமம் செய்வற்கென்று ஏற்படுத்திய தலாக் கோல்: தன்மாசனத்தவரால் முத்திரையிடப்பட்ட தலாக்கோலெனி னுமாம். தன்மாசனம் - நீதிமன்றம்.

துளாநிறை - துளைப்பொன், புடமிடப்பட்டு வழங்கும் சுத்தத் தங்கம்; இது அரசாங்கத்தவரால் பார்வையிடப்பட்டு துளையிடப் படுதால் பெற்ற பெயர் போலும். கழஞ்சு - 12 பணை எடை.

இத்தன்மம் முட்டாமை - இத் தருமம் குறையாமல்; தடை படாமல் எனினுமாம். முட்டில் - தடைபடின்.

தன்மாஸநத்தில் - நீதி மன்றத்தில்; பந்மாஹேஸ்வரர் - சிவனடி யார்கள்; மன்றப்பெறுவதாகவும் - மன்றபூட்டைக் கொடுப்போமாக

தாகவும் இம் மன்றுபாடிறுத்தும் இத் திருநூற்தாவிளக்கு முட்டாமைச் செலுக்துவோ மாகவும். வன்னி பெடாகிய ரணவிக்கிரமச் சதுர்வ்வேதி மங்கலத்துச் சபை யோம். இதற்கு விரோதஞ் செய்தார் கெங்கையிடைக், குமரியிடைச் செய்தார் செய்த பாவங் கொள்வார். இது பம்மாவெறவ் வரசர் சாசனம்.

---

15. வான மஹாதேவியார் சாசனம்.*

முகவுரை.

வான மஹாதேவியார்[1] என்பவள், வாணவித்தியாதர ராபணை வாணராயன் பட்டத்தரசியாகும். இவள் திருவல் லம் கோயிலுக்குச் செய்த திவந்தம் பற்றிய சாசனம் 'வான மஹா, தேவியார் சாசனம்' எனப்பட்டது. இது செங்கல் பட்டு சில்லா திருவல்லம் பில்வநாதேசுவரர் கோயில் மேலைப் புறச் சுவரில் காணப்படுகிறது.

வும். மன்றுபாடு - அபராதம். மன்ற னைகொண்டு, நிச்சயமாக என்று பொருள் கொள்வாருமுளர். இத்தருமம் செய்யத் தவறினால் நாளொன்றுக்கு 5 கழஞ்சு பொன் கொடுக்கக் கோயில் அதிகாரிகள் சம்மதித்தது இங்கு குறிப்பிடத் தக்கது.

மன்றுபாடிறுத்தும் - அபராதம் கொடுத்தும்: விரோதம் செய் தார் - தடை செய்தவர்கள்.

கெங்கையிடைக் குமரியிடை.....கொள்வார்: கங்கையிடத்தும் குமரியிடத்தும் செய்தவர்கள் பாவம் செய்தவராவர். இனி இத் தொடருக்கு, 'கங்கை நதிக்கும் குமரிக்கும் இடைப்பட்ட குடிகள் அத்தனைபேரும் செய்த பாவம் செய்தவராவர்' என்று பொருள் கொள்வாருமுளர். குமரி - கன்னியாகுமரி.

'இதற்கு விரோதம் செய்தார் கங்கையிடைக் குமரியிடைச் செய்தார் பாவம் கொள்வர்' என்பது இச் சாசனத்தை கடைசிவரைக் காப்பு.

இச் சாசனம் தென்னிந்திய சாசனத் தொகுதிகளில் மூன்று வது தொகுதியின் முதற் பகுதியைச் சேர்ந்ததாகும்.

1. இவளது இயற்பெயர் குந்தவை என்பது.

2. இவன் கி. பி. 854-880 வரை ஆண்ட முதலாம் பிருதி விபதி ஆவன்; திருப்புறம்பியம் என்னுமிடத்தில் நடந்த போரில் இவன் இறந்தான். சிவமகாராசப் பெருமானடிகள் எனபது இவ னது தந்தை பெயர்.

இதில், பாண அரசனை வாணவித்தியாதரன் பட்டத் தரசியாரும், மேலைக்கங்க அரசனை பிருதிவிபதியின்[2] மகளாரு மான வாண மகாதேவியார் திருவல்லம் ஊர்ச்சபையாரிடம் 20 கழஞ்சு பொன் கொடுத்து, கோயில் கருப்ப கிருகத்தில் திருநந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு ஏற்பாடு செய்த செய்தி கூறப்படுகிறது.

இச் சாசனம் ஏற்பட்ட காலம் கி. பி. 9ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது.

சாசனம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ. ஸ்ரீவிமானம் இழித்துவதற்கு முன்புள்ள சிலா லேகைப்படி ஸகல ஜகத்த்ராயாபி வந்தித ஸ்ரீரா ஸ்ரீரா தீச பரமேஸ்வர ப்ரதிஹாரீக்ருத மஹாவஷி குலொத்பவ வாண வித்தியாதர ராயரான வாணராயர் மஹாதேவியார் கொங் குணி தர்ம்ம மஹாராஜா குணிலபுர பரமேஸ்வரரான ஸ்ரீசாத ஸ்ரீமச் சிவ மஹாராஜப் பெருமானடிகள் மகனார் ப்ரதிபதி

ஸ்ரீவிமானம் - கோயில் கருப்பகிருகத்தின்மேல் கட்டப்படும் விமானம்; கருப்பகிருகம் எனினுமாம்.

ஸ்ரீவிமானம்.....சிலாலேகைப்படி - இச் சாசனம் கருப்ப கிருகத்தின மேலச் சுவரில் இருந்தது என்றும், அது படியெடுத்துப் புதிதாய்ச் செதுக்கப்பட்டதென்றும் தெரிகிறது. இழித்துவதற்கு - புதுப்பிப்பதற்கு. சிலாலேகை - கல்வெட்டு.

ஸகலஜகத்.....த்ரலோத்பவ - 'மூன்று உலகத்தவராலும் வணங்கப் படுபவரும், தேவாசுரர்களுக்கு இறைவருமாகிய பரமேசு வரனால் தவராபாலக ரக்கப்பட்ட மாபலியின வழித்தோன்ற லான' என்பது இதன் பொருள்.

வாண வித்யாதர ராயர்: மகாபலி வமிசத்துத் தோன்றிய ஒரு அரசன்; இவன் முதலாம் பிருதிவிபதியின் மகளான குந்த வவ்வையை மணந்தவன்.

கோங்குணி தர்ம்ம மஹா ராஜ: இத்தொடர் மேலைக்கங்க அர சர்களுக்குரிய பட்டப்பெயராக வழங்கி வந்தது.

குணிலபுர பரமேஸ்வர.....னடிகள்: குணிலபுரத்தவர்களுக் குத் தலைவனான சிவமகாராசப் பெருமானடிகள் என்பது. குவலய புரம் என்பதன் திரிபே குணிலபுரம் என்பது; இது இப்பொழுது கோலார் (மைசூரிள்ளது) என்று அழைக்கப்படுகிறது; கங்குல அர சர்களது பழமையான தலைநகர் இது.

அரையர் மகளார் வாணமஹா தேவியார் தீக்காலிப் பெருமா னடிகளுக்கு நொந்தா விளக்கு ஒன்றினுக்கு இத்தீக்காலி வல்லத்து ஸபையார்க்குக் குடுத்த செம்பொன் இருபதின் கழஞ்சு இப்பொன்னுக்குப் பொலியூட்டு நிசதம் உரிப் நெய் ஒரு விளக்குக்கு அட்டுவோமாஞ்ஞம் ஸபையோம். இன்னெய் சந்தா நித்தவற் முட்டாமை அட்டுவோமாஞ்ஞம், முட்டில் பந்மாஹேஸ்வரே நிசதி ஐங்கழஞ்சு பொன் மநற வொட் டிக் குடுத்தோம். இத்தண்டப்படடும் நெய் முட்டாமை அட்டுவோமாஞ்ஞம் ஸபையோம். இதன்றெண்ணும்

பரமேஸ்வரர் - தலைவர்; ஸ்ரீநாத, ஸ்ரீமச்: இவைகளில் முன் னது ஸசன மதத்தவர் பெயர் முன்னும், பின்னது ஆடவர் பெயர் முன்னும் வைத்து வழங்கும் மரியாதைச் சொற்களாகும். எனவே, சிவ மகாராசப் பெருமானடிகள் ஸசன மதத்வொன்று கருத இட மிருக்கிறது.

ப்ருதிபதி அரையர்: இவனே முதலாம் பிருதிவிபதி என்னும் அரசன் என்பர் இவன் கி. பி. 854 முதல் 880 வரை ஆண்டான். இருபதின்மன் இவன் காலத்தில் வாழ்ந்த சாளுக்கிய மன்னனவன்.

வாண மஹா தேவியார்: இவளது இயற்பெயர் குந்தவை என் பது. இவள் விந்தியாதர வாணராயனுடைய பட்டத்தரசியாயிருந் தீக்காவிவல்லம் கோயிலில் திருநந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு, அவ்வூர்ச் சபையினரிடம் 20 கழஞ்சு பொன் நிவந்தமாகக் கொடுத் தாள்.

தீக்காலிவல்லம் பெருமானடிகள்: இது தீக்காலிவல்லம் கோயி லில் எழுந்தருளிய சிவபெருமான் பெயர். இருபதின் கழஞ்சு - 20 கழஞ்சு.

பொலியூட்டு - வட்டி பெற்று; உரிப் - ஆ படி; அட்டுவோமா ஞ்ஞம் - கொடுக்கச் சம்மதித்தோம்.

முட்டில் - குறைவு பட்டால்; பந்மாஹேஸ்வரர் - சிவனடியார் கள்; நிசதி - நிசதம், காளொன்றுக்கு. ஐங்கழஞ்சு பொன் மநற - பொன் 5 கழஞ்சு அபராதம்.

ஒட்டித்தொடுத்தோம் - சேர்த்துக் கொடுத்தோம். இத்தண் டப்பட்டும் - இவ் வபாரதத்தைத் தொடுத்தனும்.

இதன்றெண்ணும் - இது அன்று என்னும், இது செய்ய மறுத்த யாம் கெங்கையிடை.....கொள்வார்: கங்கையிலும் குமரி

கெங்கையிடைக் குமரியிடைச் செய்த பாவங் கொள்வார். இத் தர்ம்மம் பர்மாதேறஸ்வரனைசூழ். இத்தர்ம்மம் ரக்ஷித்தாரடியென் முடிமேலன.

---

16. அதவோடு தோட்டம் சாசனம்.*

முகவுரை.

அதவோடு தோட்டம் என்பது திருவாங்கூர் இராச்சி, யத்தில் சுசீந்திரத்தை யடுத்தொரு நிலப்பகுதி; வீரபாண் டியன் இதனை சுசீந்திரம் கோயிலுக்குத் தானமாகக்கொடுத்த செய்தி பற்றிய சாசனம், 'அதவோடு தோட்டம் சாசனம்' எனப்பட்டது. இது, சுசீந்திரம் தாணுமாலயசுவாமி கோயில் முதல் பிராகாரத்திலுள்ள ஒரு இயற்கையான பாறையின்மீது காணப்படுகிறது. அச் சாசனம் முதலில் வரிசையாகக் கோடி டப்பட்டு, இரு கோடுகளுக்கிடையில் எழுத்துக்கள் அமை யும்படிச் செதுக்கப்பட்டுள்ளது.

இதன் முற்பகுதியில், பாண்டிய அரசனை வீரபாண்டிய தேவனின்† முன்னோர்களுடைய சிறப்புகளுடன் அவன் மலை நாடு வென்ற செய்தியைக் கூறும் மெய்க்கீர்த்தி அமைந்துள் ளது. பிற்பகுதியில் அவன் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோயிலுக்கு அதவோடு தோட்டமென்னும் நிலத்தைத் தான மாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது.

இச் சாசனம் எற்பட்ட காலம் கி.பி. 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது.

யிலும் பாவம் செய்தவர் பாவம் பெறுவர்; இனி, கங்கைக்கும் கும சிக்கும் இடையிலுள்ளவர் செய்த பாவத்தினைப் பெறுவர் என்று பொருள் கொள்வாரு முளர்.

இத்தர்மம்..... ...முடிமேலான: இவை இச்சாசனத்தின் காப்பு நிலையாகும்

* இச் சாசனம் திருவாங்கூர் புராதனபொருளாராய்ச்சித் தொகுதி களில் இரண்டாவது தொகுதியின் முதற் பகுதியைச் சேர்ந்ததாகும்.

† பெருந்தொகைக் குறிப்புரையில் 'இப்பாண்டியன் கி. பி. 1254ல் பட்டம் பெற்றவனென்பர்' என்றிருக்கிறது.

வீரபாண்டியன்: மெய்க்கீர்த்தி

ஸ்வஸ்தி ஸ்ரீ —

பூமடந்தையும் ஜயமடந்தையும் பொலிந்துதிருப் புயத்திருப்ப
பார்முழுதுங் குடைநிழற்ற பராக்ரமத்தால மூடிசூடி
தென்மது ராபுரித் திருவிளையாட் டத்திற்கண்டு
மன்னரெல்லாம் வந்திறைஞ்ச மலைநாடு கொண்டருளி
மாபாரதம் பொருதருளி மன்னவற்குத்தூ துசென்றருளி
தேவாசுர மதுகைதரித்தி தேனுருமாயுங் கொண்டருளி

பூமடந்தை - பூமாது; ஜயமடந்தை - சயமாது; பொலிந்து - திருப்புயத்திருப்ப - நாடும் வெற்றியும சேர்ந்து விளங்க என்பது. பார் - உலகம்; குடைநிழற்ற - ஆட்சிபுரிய. பராக்ரமம் - வீரம்.

தென்மதுராபுரி.....புரிந்தருளி: பாண்டிய மன்னருடைய மெய்க்கீர்த்திகளில் அரசர் தங்கள் வெற்றிகளோடு தங்கள் முன்னோர்களின் பெருமைகளையும் கூறி வந்துள்ளனர். மலைநாடு கொண்டதானதே வீரபாண்டியன் வெற்றியாகும். தென்மதுராபுரித் திருவிளையாடல் கண்டது, பாரத யுத்தத்தில் துணை நின்று போர் செய்தது, தேவாசுர யுத்தத்தில் தூது சென்றது, திருமணம் யோகியது, வடவரையில் கயல் பொறித்தது, இந்திரன் அளித்த ஆத்தைப் பூண்டது, குறுமுனிபால் தமிழ் நூல் கற்றது முதலியன அவனுடைய முன்னோர் செயல்களாகும்.

தென்மதுராபுரி - பாண்டிய நாட்டுத் தலைநகரான மதுரை. இங்கு, சிவபெருமான் 64 திருவிளையாடல்கள் புரிந்தா ரென்பர். திருவிளையாட்டத்தில் கண்டருளி என்பதற்கு, 'திருவினை விளைவிக்கின்ற போரில் வெற்றி கண்டு' என்று பொருள் கொள்வாருமுளர்.

மலைநாடு கொண்டருளி - சேரநாட்டை வென்று; இதன் வரலாறு இப்பொழுது விளங்கவில்லை.

மாபாரதம் பொருதருளி: மகாபாரத யுத்தத்தில் பாண்டவர்க்குத் துணை நின்று பாண்டியனொருவன் போர் செய்தான் என்பர்.

தேவாசுர மதுகை தரித்தி மன்னவர்க்குத் தூதுசென்றருளி: தேவாசுரர்களின் வலிமையைக் கெடுத்து மன்னவர்க்காகத் தூது சென்று என்பது இவ்வாறு சென்றவன் பாண்டியன் மாகீர்த்தி என்பர். மதுகை - வலிமை; தரித்தி - அழித்து.

தேனுரு மாயுங்கொண்டருளி - தேன் நாறும் மறையும் கொண்டருளி, தெய்வத்தன்மை பொருந்திய வேதத்தையும் கற்று என்பது.

வடவரையிற் கயல்பொறித்து வானவர்கோ ரரம்பூண்டு
நீடவாசகக் கூறுமுனிபால் செந்தமிழ்நூல் தெரிந்தருளித்
தளிரிருங்கை மாதுரிமைச் செங்கோலெங்கும் திசைநடாத்தி
மன்னிய வீர விம்மூரா ஸகத்திற்
த்ரைலோக்ய முழுதுடையா ரோடும்வீற் றிருந்தருளி

வடவரையில் கயல் பொறித்து - இமயத்தில் தன் மீன் இலச்சினையைச் செதுக்கி. கொடி நட்டதனும், இலச்சினையைப் பொறித்தலும் வெற்றிக்கு அறிகுறியாகும். வடவரை - இமயமலை; விந்திய மலை எனினுமாம்.

வானவர்கோ ரரம் பூண்டு - தேவேந்திரன் தந்த முத்தாரத்தைத் தரித்து; வானவர்கோன் என்பதற்கு, 'சேர மன்னன்' என்று பொருள்கொள்வாரு முளர்.

நீடவாசகத் தூறு முனிவர்பால் செந்தமிழ்நூல் தெரிந்தருளி: பாண்டிக்கோவையில் 'அன் றரத்நியன் வர, யுலைதரு நிக்தமிழ் கேட்டோ னுசிதன்' (887) என வரும் தொடர் இதனுடன் ஒப்பிடற் பாலது.

தளிர் இருங்கை மாது உரிமைச் செங்கோல் - தளிர்போன்ற அகன்ற கையினையுடைய உமாதேவியாருக்கு உரிமையான செங்கோல், உமாதேவி, தாடதகைப்பிராட்டி என்னும் பெயரோடு பாண்டியநாட்டை ஆண்ட செய்தி இங்கு நினைக்கற்பாலது.

எங்தும் திசை நடாத்தி - எல்லாத் திசையும் செலுத்தி. மன்னிய - பொருந்திய.

த்ரைலோக்யமுழுதுடையாரோடும் வீற்றிருந்தருளிய - திரை லோக்கிய முழுதுடையாரெனுபாள் வீரபாண்டியன் பட்டத்தரசி; அரசன் அரசியோடு வீற்றிருந்தானென்பது, அரசியின் கருத்தையும் அறிந்து கோடற்கென்க. இவ்வாறு தன் தேவிமாரோடும் அரசன் வீற்றிருந்தானென்று கூறுவது அக்கால வழக்கம் போலும். முன்னர், முதற் குலோத்துங்கன் "அவனி முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய' (சாசனம் 8), 'உலகுடையாளொடும் வீற்றிருந்தருளிய' (சாசனம் 9, 10) என்றும், விக்கிரமச் சோழதேவன் 'முக்கோக்கி ழானடிகளோடும் வீற்றிருந்தருளிய' (சாசனம் 11) எனறும், பின்னர் அரிகேசரி என்னும் பராக்கிரம பாண்டியன் 'உலக முழுதுடையா ளோடும்..... வீற்றிருந்தருளிய' (சாசனம் 18) என்றும் வந்திருத்தல் காண்க.

மாமுதல்மதிக் குலம்விளக்கிய கோமுதல்கொற் றவன்மரான
தீரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீவீர பாண்ட்யதேவர்—

செய்தி.

அபிஷேக காலத்தில் ராஸிதாகோத்ரத்து ஆஸ்வலாயந ஸூத்ரத்து நாராயணன சேந்தனை இடையாற்று மங்கலத்து நம்பியும், திருப்புத்தூர் ஆழ்வாரும, பிள்ளையார் வீரசேகரன தேவரும், உத்தரமந்திரிகள் வீரகேரளப்பாண்டியக்

மாமுதல் மதிக்குலம் விளக்கிய: பெருமைக்கு முதன்மையான சந்திரகுலத்தை விளங்கும்படிச் செய்த. மா - இலக்குமி என்பாடு மூளர் கோமுதல் கொற்றவன்மர் - அரசர்களுக்கு அரசனை.

த்ரிபுவனச் சக்ரவர்த்திகள்: சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்குத் 'த்ரிபுவனம்' என்று பெயர். அம்மூன்று நாடுகளையும் ஆளுவோர் 'த்ரிபுவனச் சக்ரவர்த்திகள்' எனப்படுவர். இப்பெயர் பெற்றவர்கள் முதற் குலோத்துங்க சோழன் (சாசனம் 8), விக்ரமச் சோழ தேவன் (சாசனம 14), வீரபாண்டியன் (சாசனம் 16) குலசேகரப்பாண்டியன் (சாசனம் 19) முதலியோராவர்.

அபிஷேகங்காலத்தில் - முடி சூடிய தினத்தில்; வீரபாண்டியன் கி. பி. 1254ல் முடி சூடினன் என்பர்.

ராஸிதா.....நம்பியும் - ராசிதா கோத்திரத்தில் பிறந்தவனும், ஆசுவலாயனச் சூத்திரத்தை மேற்கொண்டவனும், நாராயணனுக்கு மகனுமான சேந்தன் என்னும் பட்டப்பெயரையுடைய இடையாற்று மங்கலத்து நம்பியும் என்பது.

ராஸிதா கோத்ரம்: இது ஒரு குடிப்பெயர். ஆஸ்வலாயந ஸூத்ரம்: இது ஆசுவலாயன முனிவர் என்பவரால் எழுதப்பட்ட ஒரு சூத்ர நூல். இல்லற வொழுக்கங்களையும், வேத வொழுக்கங்களையும்பற்றிக் கூறுவது. இந்நூலாசிரியரே முதல் முதல் இருக்கு வேதப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தியவர்.

நாராயணன் சேந்தன் - நாராயணன் மகன் சேந்தன் என்பது.
இடையாற்று மங்கலம்: இஃது ஓர் ஊர். மங்கலமென்பது, சில ஊர்ப் பெயர்களுக்குப்பின் இணைக்கப்படும் ஒரு துணைச்சொல். சீவரமங்கலம், திருமங்கலம் என்பன காண்க.

பிள்ளையார்: இது ஒரு ஆண்பாற் சிறப்புப்பெயர்; அரசிளங்குமாரர் என்று பொருள் கொள்வாருமுளர். உத்தரமந்திரிகள் - முதல் மந்திரி நம்பி, ஆழ்வார், தேவர், நாயனார், என்பன அக்காலப்

கோணரும் நிக்க, இடையாற்று மங்கலத்து கம்பியோடும் திருவாய் மொழிந்தருளி பெருமானுக்கு திருவாயுஷ் யார்த்த மாக ஸுசித்ரமூடைய நாயனார்க்கு பெருமாள் தானம் பண் ணிக் குடுத்தருளின பூமி தென்கூற்றுப் புறத்தாரட்டுப் பூசன்குடிப்பா லதுவோடு தோட்டம். இவ்வதுவோடு தோட் டத்துக்கு பெருநான் கெல்லை. கீழுல்லை பாதிரித்தோட் டத்து நீர்நக்கல், தென்னெல்லை கல்க்குழிக்கு வடக்கு, மேலெல்லை புல்லாங்குறிச்சிக் கர்கறை வயலில் ஒற்றுவாயல் கிணற்றுக்கு கிழக்கு, வடவெல்லை கறடி கும்பல் கடம்புக்கு தெற்கு, எரி இரண்டிலுல் விளைநிலமும் காடு மூள்ப்பட நிலமு மேழு வேலி. இன்னில மேழு வேலியும் இறையிலிகாணி

பட்டப் பெயர்களாயிருத்தல் கூடுமென்று தெரிகிறது. நிக்க - நிற்க, காண என்றபடி.

திருவாய் மொழிந்தருளி - பேசி; பெருமானுக்குத் திருவா யுஷ் யார்த்தமாக - அரசனுக்கு நீண்ட ஆயுளுண்டாக.

ஸுசிந்தாமூடைய நாயனார் - சுசீந்திரம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்; சுசீந்திரம் என்பது, திருவாங்கூர் நாட்டிலுள்ள. கன்னியாகுமரிக்கு வடக்கே எட்டு மைல் தூரத்தி லுள்ளதொரு சிவதலம். பெருமாள் - அரசன்; பூமி - நிலம்.

அதவோடு தோட்டம்: இது ஒரு நிலத்தின் பெயர்; தென் கூற் றில், புறத்தாரட்டைச் சேர்ந்த பூசன்குடிப்பகுதியி லுள்ளது; இரண்டு எரிகளின் பாய்ச்சலை யுடையது. விளை நிலமும் காடு மூடை யது. ஏழு வேலி நிலம் கொண்டது. கிழக்கே பாதிரித் தோட் டத்து நீர்நக்கலையும், தெற்கே கல் குழியையும், மேற்கே புல்லாங் குறிச்சிக் கர்கறை வயல் ஒற்றுவாயல் கிணற்றையும், வடக்கே கறடிக் கும்பல் கடம்பையும் எல்லைகளாக வுடையது. இதனை வீர பாண்டியன் சுசீந்திரம் சிவன்கோயிலுக்குத் தானமாகக் கொடுத் தான்.

பூசன்குடிப்பால் - பூசன்குடி என்னும் ஊர்ப்பகுதியி லுள்ள. நீர்நக்கல் - எரியின உள்வாய்நீர் தேங்கும் எல்லையிடம் (Limit of water-spread of a tank); வாய்க்கால் என்பாருமுளர்.

கல்க்குழி - கல்லெடுத்த குழிந்த நிலப்பகுதி போலும்; மலைச் சாரல் பகுதி எனினுமாம். புல்லாங்குறிச்சி; - குறிச்சி என்பது, குறி ஞ்சிநிலத் தூர். கடம்பு - காடு.

எரி இரண்டிலுல் - இரண்டு எரிப் பாய்ச்சலிலுள். விளை நிலமும் காடு மூட்பட - கருஞ்செய் நிலமும் புஞ்செய் நிலமும சேர்ந்த. வேலி - ஒருநில அளவு (6 74 எக்கர்).

இறையிலி காணிமையு மூட்பட - இறையிலியும் காணிமை மூட்பட. அதாவது அரசாங்கத்தாருக்குக் கொடுக்கவேண்டிய இறை

மையு முட்பட ஸைலசிந்த்ர முலைடைய காயிலுற்கு தானம் பண்
ணினர் பெருமான் முன் னுடையாரும் பழம்பேரும் நீக்கி
இப்படிக்கு பெருமான் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்
குடுக்கவென்று திருவாய் மொழிந்தருளி திருமந்திரவோலை
முறப்புநாட்டு மறவனூரம்பலவன் வேளானை நித்த விநோத
மூவேந்த வேளாமுழுதுதிலை ப்ரஸாதத்ந் செய்தருளிய
ஸ்ரீமுகத்திலும், ஸேனாபதிகள் வெண்பைக்குடி நாட்டு
இளவெண்பைச் சந்திரசேகரானை வீரபாண்டிய மூவேந்த
வேளார் கணடியீட்டிலும், பூவுவரி திணைக்கள நாயகம்

யும் நிலச் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டிய நிலக்கிரயமும
உட்பட நீக்கி என்பது. இறையிலி - வரி நீக்கப்பட்ட நிலம்
காணாண்மை - நிலத்தைப் பயிரிடும் உரிமை; ஒரு பழைய வரி என்பா
முமுனர். நாயிறுற்ற - நாயனற்கு, இறைவனுக்கு.

பெருமாள் - பெருமையை யுடையவன், அரசன். 'உடையார்' என்ற பெயரைப் போல, இப்பெயர் இறைவனுக்கும் அவன் அடியா ருக்கும் வழங்கும் இடமு முண்டு.

முன்னுடையாரும் பழம்பேரும் நீக்கி - முன்பு இதற்கு உரிமை யுடையார் உரிமையையும், இதன் பழம்பெயரையும் நீக்கி. இப்ப டிக்கு பெருமான் - இப்படிக்கு அரசன்.

கல்லிலும் செம்பிலும் வெட்டிக்குடுக்க வென்று; கல் லில் வெட்டுவதைச் செம்புப்பட்டயத்திலும் எழுதிக்கொளளும் பழக்கம் அக்காலத்தில் உண்டு என்பதை இத்தொடர் விளக்குகின்றது. இவ் வாறே முன்னருள்ள பாக்கூர் சாசனம் (7), மணிமங்கலம் சபையோர் சாசனம் (10) அதவோடு தோட்டம் சாசனம் (16) அரிகேசரி தேவர் சாசனம (18), பராக்கிரம தேவர் சாசனம் (19) முதலியவற் றிலும் வந்திருத்தல காண்க.

திருவாய் மொழிந்தருளி - கட்டளையிட்டு; திருமந்திரவோலை - அரசாங்கக் காரியதரிசி; வேளானை - வேள் என்னும் பட்டப் பெயர் தரித்த.

ப்ரசாதம் செய்தருளிய - அனுக்கிரகித்த, அளித்த. ஸ்ரீமுகம் - திருமுகம், அரசனது சாசனம்; கட்டளை எனினுமாம்.

ஸேனாபதிகள் - படைத்தலைவன்; கணடியீடு - கீழதிகாரியின் உத்தரவு; கையெழுத்து என்பாருமுளர். பூவுவரி திணைக்கள நாய கம் - அரசிறை மேலதிகாரி (Superintendent of revenue accounts); பூவுவரி திணைக்கள மென்பது, அரசிறைக் கணக்கு வைப்போர் கூடும் அலுவலகம்.

மலை கூற்றத்து விளத்தூர் நாராயணன் சேசவனை தென் னவ திகாமணி மூவேந்த வேளாரெழுத்திலும், முகவெட்டி நாயகம் செம்பில் நாட்டு அணையனேரி தாயன் பொன்னனை குறும்பிலுடையா னெழுத்திலும், கூற்றுக்கு கூறு திரு வழுதி வளநாட்டு சோட்டூர்ப் போருளாளன் சற்றன் குடியா னவானவன் வழுதிச்சோன் ச.....ட்டின் உள்வரி படியாலும் நித்த விநோத மூவேந்த வேளாரெழுத்திலும் ப்ரஸாதம் செய்தருளிய பூரீமுகத்தாலும் வீரபாண்டிய மூவேந்த வேளார் கடையீட்டாலும், புரவுவரியா னெழுத்திட்ட உள்வரி யாலும், இக்காலமுதல் திருப்படிமாற்றுள்ளிட்டன செலுத் துவதாகச் சொணேணும் ஸ்ரீகிந்த நாழுடைய நாயனுற்கு.

---

17. கன்னி பகவதியார் சாசனம்*

முகவுரை.

கன்னி பகவதியார் என்பது, கன்னியாகுமரிக் கோயில் தெய்வத்தின் திருப்பெயராகும். அப் பகவதியாருக்குக் கொடுக்கப்பட்ட நிலம் பற்றிய சாசனம் 'கன்னி பகவதியார் சாசனம்' எனப்பட்டது. இது கன்னியாகுமரிக் கோயில் முதல் பிராகாரத்தின் கீழைச் சுவரில் காணப்படுகிறது.

முகவெட்டி நாயகம் - புரவுவரித் திணைக்களத்தில் இருக்கும் முகவெட்டி என்னும் உத்தியோகத்தர்களுக்குத் தலைவன். திருவழுதி வளநாடு - பாண்டிய நாட்டிற்குரிய மற்றொரு பெயர்.

உள்வரி - ஒரு சிறு வரி, புரவுவரியார் - அரசிறைக் கணக்கன்; திருப்படி மாற்று - கோயில் மூர்த்திகட்கு நிவேதிக்கத் தகும் அரிசி முதலிய பண்டம்.

இச் சானத்தில் புறத்தா நாடு, மூப்பு நாடு, வெண்பைக் குடி நாடு, செம்பில் நாடு, திருவழுதி வள நாடு முதலிய நாட்டுப்பெயர் களும் - இடையாற்று மங்கலம், திருப்புத்தார், பூசனகுடி, புல்லாங குறிச்சி, மறவனூர், இளவெண்பை, விளத்தூர், அணையனேரி, சோட் டூர் முதலிய ஊர்ப்பெயர்களும் வந்திருத்தல் காண்க.

* இச்சாசனம் திருவாங்கூர் புதைபொருளாராய்ச்சித் தொகுதி களில் முதற்றொகுதியைச் சேர்ந்ததாகும்.

இதன் முற்பகுதியில், 'திருவளரச் செயம் வளர' என்று தொடங்கும் ஸ்ரீ பராந்தகதேவ பாண்டியன் † மெய்க்கீர்த்தியமைந்துள்ளது. பிற்பகுதியில் அவன் தன் பிறந்த நாளானதைப் பூசத் தன்று, அதைக் கொண்டாடுவதற்குக் கோயிலில் செலவாகும் செலவுகளுக்கு ஒரு நிலத்தைத் தானமாகக் கொடுத்த செய்தி காணப்படுகிறது. இது அவனுடைய ஆட்சியின் ஒன்பதாவது ஆண்டில் கடைபெற்றது.

இச் சாசனம் ஏற்பட்ட காலம் கி. பி. 12 அல்லது 3 ஆம் நூற்றாண்டு எனலாம்.

பராந்தக பாண்டியன்: மெய்க்கீர்த்தி.

ஸ்வஸ்திஸ்ரீ—

திருவளரச் செயம்வளரத் தென்னவர்தம் குலம்வள ர
வருமறைநான் கவைவளர வனைத்துலகுந் துயர்நீங்கத்
தென்மதுரா புரிதோன்றித் தேவெந்திரனே டினிதிருந்து
மன்னர்பிரான் வழுதியர்கோ னவ மம்பலம்ப நின்றருளி
மால்கடலே யெறிந்தருளி மலையத்துக் கயல்பொறித்துச்

---

† இவன் முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியின இறுதிக் காலத்திலும், விக்கிரமச்சோழ னுட்சியின் தொடக்கத்திலும் இருந்து பாண்டிய நாட்டை ஆண்டான். எனவே, இவன் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். "இவன் வென்றதாகச் சொல்லப்படும் தெலுங்க வீமனை, விக்கிரமச் சோழனும் வென்றதாக அவன் மெய்க்கீர்த்தியில் சொல்லப்பட்டிருப்பதால், இவர்கள் இருவருமே சேர்ந்து தெலுங்கவீமனைப் போரில் வென்றிருத்தல் வேண்டு" மென்று கூறுவர் உயர்திரு: சதாசிவ பண்டாரத்தாரவர்கள்.

திரு – செல்வம்; செயம் - வெற்றி; தென்னவர் - பாண்டியர்; அருமறை நான்கு - அரிய நான்கு வேதம்; அலைவயாலன இருக்கு, இயசுர், சாமம், அதர்வணம்.

தென் மதுரா.....கயல் பொறித்து: தேவேந்திரனே டினிதிருந்தது, கடல் தன்னை வணங்க நின்றது, மால் கடல் எறிந்தது, மலையத்துக் கயல் பொறித்தது முதலியன பராந்தக பாண்டியனது முன்னோர் செயல்களாகும்.

தென் மதுரை - பாண்டிய நாட்டின் தலைநகரமான மதுரை; மன்னர் பிரான் வழுதியர்கோன் - போரசனான பாண்டிய மன்னன்;

சேரலனைச் செருவில்வென்று திறைகொண்டு வாகைசூடிக்
கூபகர்கோன் மகட்கொடுப்பக் குலவிழிஞருங் கைக்கொண்டு
கன்னிப்போர் செய்தருளிக் காந்தளூர்ச்சாலை கலமறுத்து

வடிம்பு அலம்ப - கால் நுனி நனைய; பாதங்களில் வந்து வணங்க. 'ஆழி வடிம்பலம்ப நின்றனை' என நளவெண்பாவில் வந்திருத்தலுங் காண்க. மால் கடல் - கரிய கடல். எறிதல் - நிலைகுலையச் செய்தல்; மதுரையை யழிக்க வந்த கடல் சுவறிப் போகும்படி உக்கிரகுமார பாண்டியன் வேல் விட்ட வரலாறே 'மால்கடலை யெறிந்தருளி' என்று கூறப்படுகிறது. மலையத்து - வடவரையில்; இமயத்தில். கியல் பொறித்து - தன்னுடைய கயல்மீன் இலச்சினையைச் செதுக்கி என்றபடி.

சேரலனைச்.....கலமறுத்து: சேர மன்னனை வென்று திறைகொண்டது, கூபகத்தரசன் மகளை மணந்து விழிஞம் என்ற நகரைக் கைப்பற்றியது, காந்தளூர்ச் சாலையிற் கலமறுத்தது முதலியனை பராந்தகன் வெற்றிகளாகும். பின்னர்த் 'தெலிங்க வீமன் குளங் கொண்டு, தென்கலிங்கம் அடிப்படுத்தது' விக்கிரமச் சோழனுக்குத் துணைபோய் என்க.

சேரு - போர். திறை - கப்பம்; வாகை சூடி - வெற்றி மாலை யணிந்து. கூபகர் கோன் - கொல்லத்தைத் தலைநகராகவுடைய தென் திருவாங்கூர் நாட்டிற்கு அரசன். மகட் கொடுப்ப - மகளை மணஞ்செய்து கொடுக்க. தலவீழிநம் - சிறப்பமைந்த விழிஞம் என்னும் ஊர்; இது திருவனந்தபுரத்திற்குத் தெற்கே பத்து மைல் தூரத்திலுள்ள ஒரு துறைமுகப்பட்டினம். இதனை முன்னர் முதற் குலோத்துங்க சோழன் பிடித்து, 'குலோத்துங்கசோழன் பட்டினம்' என்று பெயர் வைத்துள்ளான். கைக்கோண்டு - தன்னாட்சிக் குட்படுத்தி.

கன்னிப்போர் - முதல் முதல் செய்யும் போர்; இளவரசரை இருந்து செய்யும போர் என்றும் கூறுவர்.

காந்தளூர்ச்சாலைக் கலமறுத்து: இச் செயலை, சோழ மன்னரில் முதல் இராசராசன் (சாசனம் 1, 2), இராசாதிராச தேவன் (சாசனம் 7) ஆகிய இருவரும், பாண்டியரில் பராந்தகனும் (சாசனம் 16) புரிந்துள்ளனரென்று தெரிகிறது. சாலை என்பதற்கு, கடற் றுறை பட்டினம் என்றும், உணவுச்சாலை என்றும், கலாசாலை என்றும் பலரும் பல கருத்துப்படப் பொருள் கூறுவர். விளக்கம் மூன்றிய குறிப்புரைகளில் காண்க.

மன்னுபுகழ் மறையவர்த மணியம்பலத்து ளினிதிருந்து
ஆயிரத் தெண்மர் அவிரோதம் பணிப்பணியால்
மறைபோர்த்துக் கல்காட்டிப் பண்டுள்ள பேர்தவிர்த்து
நிறுப்பனவும்அளப்பனவுங்கயலெழுதி அனந்தபுரத்திதம்மாற்கு

மன்னுபுகழ் - நிலையான புகழ்; மறையவர்தம் மணியம்பலம்: அந்தணர் கூடும் மணியம்பலம் எனபது. இது காந்தளூரிலுள்ள சபையின் பெயர்; இதன ஆங்கத்தினர் 1008 பேர். வேதாகமங்களோ ஆராய்தலும், உலகத்தில். தருமத்தை நிலைநிறுத்துதலும இவர்கள் தம் கடமையாகக் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது.

ஆயிரத் தெண்மர் அவிரோதம் பணிப்பணியால் - மணி மங்கலம் சபையிலுள்ள ஆயிரத்து எட்டு பேரும் தம்முள் கருத்து வேறுபாடின்றிக் கேட்டுக்கொண்டபடி. அவிரோதம் - விரோதமின்மை; பணிப்பணியால் - வேண்டுதலால்.

மறைபோர்த்துக் கல் நாட்டி: பராந்தகன் வேதாகமங்களிலுள்ள விசேடப் பயிற்சிக்குரிய பகுதிகள் இன்னின்னவைகளென்று அறிவில் பெரிய அந்தணர்களைக்கொண்டு தேர்ந்தெடுத்து அவைகளைக் கல்லில் எழுதி நாட்டுவித்தான் என்பது. இனி, இத்தொடரின் பாடபேதமாக 'பறை போர்த்துக் கல்நாட்டி' அல்லது 'பறைகொட்டிக் கல்நாட்டி' என்று கொண்டு, இறந்த வீரர்களின் அரிய செயல்களைக் கல்லில் எழுதி நாட்டி, பறைகொட்டி விழாக் கொண்டாடி என்று பொருள் கொள்வாரு முளர்.

பண்டுள்ள பேர் தவிர்த்து: பராந்தகன் தான் வென்ற ஊர்களுக்கு முன்பிருந்த பெயரை நீக்கிப் புதுப்பெயர்களைப் புனைந்து என்றபடி. இவ்வாறு அரசர் தாம் வென்ற இடங்களுக்குப் புதிய பெயரிடுவதைச் சோழ மன்னரது சாசனங்களிலும் காணலாம்.

நிறுப்பனவும் அளப்பனவும் கயலெழுதி: பராந்தகன் தன் காலத்தில் போலியாக வழங்கிய நிறுத்தல், முகத்தல் முதலிய அளவைகளைப் பரிசோதித்து, அவைகளில் தன் கயல்மீன இலச்சினையைப் பொறிக்கச் செய்தான் என்பது.

மறை போர்த்துக் கல் நாட்டியது, ஊர்களுக்குப் பண்டுள்ள பெயர்களைத் தவிர்த்தது, நிறுப்பன அளப்பனவற்றிற்கு சுடல் பொறித்தது முதலியன பராந்தகன் செய்த சீர்திருத்தங்கள் என்னலாம்.

நிலவியபொன் மணிவிளக்கு நின்றெரியப் பத்தமைத்து
ஆங்கமைந்த தாயநல்லூர் அடதென்னுட் டுரையனென
அறிவகையால் அறிந்துணர்த்து தென்னவர்தங் குலதெய்வம்
தென்குமரி கன்னியார்தம் திருநாள் விளாவதனிற்
தைப்பூசட் பிற்றை நான்று
வந்திரந்தோ ரெல்லாற்கும் மாற்றுதே தியாகம்இட
அறத்தால் விளங்கிய ஆய்ந்த கேள்விப்
புறத்தாய நாடு பூமகட் களித்துத்

அனந்தபுரத் தம்மான் - திருவனந்தபுரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன். பராந்தக பாண்டியன் திருவனந்தபுரத்து விஷ்ணு கோயிலுக்குப் பத்துத் திருநந்தா விளக்குத் தானமிட்டான் என்பது, 'அனந்தபுர.....பத்தமைத்து' என்ற அடியால் விளங்கும். நின்றெரிய - நிலையாய் நின்று எரிய.

ஆங்கமைந்த தாய நல்லூர் - அங்குள்ள தாயநல்லூர்; ஆங்குள்ள தான நல்லூர் எனினுமாம்; அட - அழிய.

தென்னுட்டையய வென்ன - தான் தென்னுட்டிற்கு (பாண்டிய நாட்டிற்கு) அரசன என்று. அறிவகையால் அறிந்துணர்த்து - எல்லாரும் அறியும் வகையில் அறிவுறுத்தி.

தென்னவர் தம் - பாண்டியர்களுடைய; தென்குமரி கன்னியார் தம் - தெற்கே கன்னியாகுமரி என்னும் பதியில் எழுந்தருளியுள்ள கன்னி பகவதியாருடைய. கன்னிபகவதியார், பாண்டிய மன்னர்களின் குல தெய்வமாகும்.

திருநாள் விளாவதனில் - திருநாள் உற்சவத்தில்; தைப் பூசப் பிற்றை நான்று - தைப்பூசத்துக்கு மறுநாள் என்றபடி. பராந்தக பாண்டியன் பிறந்த நாள், ஐத மாதத்துப் பூச நாளாகும். 'நாம் பிறந்த தைப்பூசத் திருநாளுக்கு' எனப் பின்னர் இச் சாசனத்தில் வருதல் காண்க. அரசன் பிறந்த நாளில் கோயிலில் விழா எடுத்தித் தானம் செய்வது அக்கால வழக்கம் என்று இதனால் தெரிகிறது.

இரந்தோர் - யாசித்தவர்; மாற்றுதே - மறுக்காது வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுக்க.

அறத்தால்.....பூமகட் களித்து: புறத்தாநாடு இராசராசப் பாண்டிநாட்டு, உத்தமச் சோழ வளநாட்டின் கண்ணுள்ளது அதாவது இப்பொழுது இருக்கும் கன்னியாகுமரிப் பகுதியே அந்நாடு.

தெலிங்கவீய்மங் குளங் கொண்டு தென்கலிங்க மடிப்படுத்து திசையனைத்து மூடனுண்ட பூரீபராந்தக தேவற்குயாண்டு—

செய்தி

சுதாவது ராஜராஜப் பாண்டிநாட்டு உத்தம சோழ வள நாட்டுப் புறத்தாயநாட்டுக் குமரிக் கன்னிபா பகவதியார் தேவதானத்துக்குப் பெருநான் கெல்லை. வடவெல்லை நாஞ்சி நாட்டு அதியனூரும், மின்னூட்டுப் பெருங்குடி மலையுட்பட

எண்ணலாம். அந்நாட்டினர் அறம் செய்தலிலும், கலவிக் கேள்வியிலும் மேம்பட்டிருந்தனர் என்பது 'அறத்தால் விளகிய ஆய்ந்த கேள்விப் புறத்தாய நாடு' என்ற தொடரால் விளங்குகிறது. பராந்தகன் அந் நாட்டைக் கன்னிபகவதியாருக்குத் தானம் செய்தான். பூமகள் - கன்னிபகவதியார்.

தெலிங்க வீய்மங் குளங்கொண்டு: தெலிங்கவீமன்குளம் என் பது ஓர் ஊர்; இது, தென்கலிங்க நாட்டை யாண்ட தெலிங்க வீமன் பெயரால் பெற்ற பெயர்; தெலிங்க வீமனுக்குரிய குளம் என்பாரு மூளர் பராந்தகன் இதனைத் தென் கலிங்கப் போரில் பிடித்தான் போலும். தென் கலிங்க மடிப்படுத்து: தென கலிங்கத்தை ஆண்ட வன் தெலிங்க வீமன்; பராந்தகன இவனை வென்று இவனுட்டைத் தன்னடிப் படுத்தினன் என்பது. இஃது அவன விக்கிரமச் சோழனுக்குத் துணைபோய் கொண்ட வெற்றியாகும்.

திசையனைத்தும் உடனுண்ட - எல்லாத் திசையிலுமுள்ள நாடு களையும் ஒன்று சேர்த்து ஆண்ட.

ராஜராஜப் பாண்டிநாடு: இது பாண்டிய நாட்டிற்குரிய மற்றொரு பெயர். முதலாம் இராசராசன் இதனை வென்று, இப் பெயர் இட்டதாகத் தெரிகிறது. புறத்தாய நாடு: இது இக்காலத் திலுள்ள கன்னியாகுமரிப் பிரதேசமாகும்

குமரிக்கன்னியர பகவதியார் தேவதானம்: கன்னியாகுமரிக் கன்னுளள்ள கன்னி பகவதியார் கோயிலுக்குத் தானமாகக் கொடுக் கப்பட்ட நிலம்.

நாஞ்சிநாட்டு அதியனூர்: நாஞ்சில் நாடு, இப்பொழுது மலை யாளம் சில்லாவின் ஒரு தாலூகாவாக விளங்குகிறது. நாஞ்சில் வள்ளு வனை என்ற சங்ககாலப் புலவர் தோன்றியதும் இங்கேடை. அதிய னூர், மணற்குடி முதலியன இங்நாட்டைச் சேர்ந்த ஊர்களாகும்.

பணைகுடி நீங்கலாக மூன்றுங் கூடின மலையிற் சந்தேச தேசப் பிரமாணம் ஆனை மலையும், மணுக்திரப் பாறையும், தோரண குழியும், பிடாரனேரிக் கொழுக்குத்தும், கண்டனேரிக் கொழுக்குத்தும், வாழையாற்று வடவாறும், காவாயும், கோடிக்களாவும், விறகடு குப்பையும், ஓழுக்கந் தாழ்வும், இன்னெட்டு வட கீழ் மூலை கருங்குளமும், அள்ளியூரும், பூசன் குடியும் கூடின பிரமாணமான புக்கூழ்குழியும், கிராதக் தக்குளமும், சிதற்றைப் பாறையும், கொடுவாளி குழியும், மேற்கு நோக்கின நீர்வீழ் தாழ்வும், விளக்கன் குழி நீர் கொள்ளியும், இரட்டைக் கிணறும், ஆதனூர் தறை நீர்வீழ் தாழ்வும், பால்பாடும், நெடுங்களரும், உசிலோடு குழியும, ஆனை அடிப் பாறையும், கறடி மணலும், இரட்டை நாம்பும், கறிம்பாடும், ஆனைக்கல்லும. இவ்வெல்லையில் கிழக்குக் கருங்குளவளநாட்டு விசாபுரியும், இருக்கன் தறைக்குக்

மூன்றுங்கூடின மலையில்: காஞ்சினெட்டு அதிகனூர், மின்னெட்டுப் பெருங்குடி, பணைகுடி ஆகிய மூன்று ஊர்களும் சேர்ந்த இடத்திலுள்ள மலைப்பகுதியில் என்றபடி. சந்தேச தேசப் பிரமாணம் - தேசத்தின் குறிப்பிட்ட அளவு.

கொழுக்குத்து - எல்லையைக் குறிப்பதற்கு நிலத்தில் நடப்பட்ட கொழு: கொழு - மூலை. விறகடு குப்பை - விறகெரிக்கும் குப்பை மேடு போலும். ஓழுக்கந்தாழ்வு - நீர்வீழ்ச்சி; நீரோடை எனினுமாம்.

இன்னெட்டு.....பிரமாணம்: இன்னெடு என்பது, மின்னெடு என்னும் பகுதியை. அங்காட்டிற்கு வடகிழக்குத் திசையிலுள்ள கருங் குளம், அள்ளியூர், பூசனைகுடி ஆகிய மூன்று ஊர்களையும் சேர்ந்த குறிப்பிட்ட நிலத்தில் என்றபடி.

நீர்வீழ் தாழ்வு - நீர் வீழ்ச்சி; நீர்கோள்ளி - வாய்க்கால்; நீரைக் கொள்ளும் வரி எனினுமாம. நெடுங்களர் - களர் நிலப்பகுதி. கறடி மணல் - பெருமணல் மேடு; இரட்டை நாம்பு: இது சேற்று நிலப்பகுதி போலும். நாம்பு - சேறு.

இவ்வெல்லையில் கிழக்கு - இந்த இடத்திற்குக் கிழக்கே; கருங் குள வளநாடு: இது திருநெல்வேலிக்குத் தெற்கிலுள்ளதான நாடு என்பர். விசாபுரி. இங்காட்டிலுள்ளதோர் ஊர்.

தென்கீழ் மூலையும், தென் எல்லை கிழக்குப் பாருசமே போந்து இக்காட்டுத் தென்மேல்மலை கோளன்குறிச்சியான கோளன் குடியும், சாஞ்சிணுட்டு மணற்குடியும் கூடின சந்தேசப் பிரமாணம் கோளங் குடிக்குத் தென்மேல் மூலை பெ.....ணையும், கட.....மபன்றி தலை விளை.....ற்கும்.....கடுவிளையும், மாணைக்கண்குழிக் கீழ்விளிம்பும், கங்கை கிணறு..... தாகச் சுழிந்தாரும், கோளன் குறிச்சியும்..... வழியும், தேவி குளத்தில் நீர் கொள்ளியும், ஆறுண்ணி வட கொம்பில் .....க்குப் பாறையும்,..... பாப்பான் குழியும், ...பாறையும், வடக்கு நோக்கின நீர்வீழ்க் காடு வெளளெலுப்பைத் தாழ்வும், பள்ளிச்சந்த நீங்கலாக குருந்தை.....ளற் பொற்றையும், மலையே பொழுங்காகப் போந்து தேரூர்க்குக் கீழ்மலை க.....னையும, உருண்டப் பொற்றையும், ஓழுங்காக ஊசி மலையும், ஓழுங்காகப போந்து ஆனை மலையாக இவ்விசைந்த பெருமான மகல்லை யுட்பட்ட.....தங்களும் அமிர்தபடி சாந்துப்படியுஞ் சந்தனங் கற்பூரத்துக்கும் நாம பிறந்தனைப்பூசத் திருநாளுக்கும் செல்வித்தாக இறையிலி தேவதானமாக நமக்குடையபடி நீர்வார்த்துக் குடுதோம் குமரிக் கன்னிப் பகவதியாற்கு.

கோளன் குறிச்சி: இது மின்னட்டிலுள்ளதோர் ஊர்; இதனைக் கோளனகுடி என்றும் கூறுவர்.

ஆறுண்ணி வடகோம்பு - ஆறுண்ணி என்பது ஒரு எரியின் பெயர் போலும்: அதன் வடகோடியில் என்பது இதன பொருள்.

நீர்வீழ்க்காடு - நீர்வீழ்ச்சி.

பள்ளிச்சந்தம் - சைன பௌத்தக் கோயில்களுக்கு விடப்பட்ட நிலமம். பொற்றை - சிறுமலை; அதனைக்கொண்ட ஊர் எனினுமாம்.

அமிர்துபடி சாந்துப்படி - தினசரி அமுதுக்கும் சந்தனத்துக்கும் கொடுக்கப்படும பொருள்.

நாம் பிறந்த தைப் பூசத் திருநாளுக்கும்: [பரந்தக பாண்டியன் பிறந்த நாளான தை மாதப் பூசதனறு கோயிலில் நடக்கும் விழாவிற்கு என்றபடி. செல்வித்தாக - செலவுக்காக.

நமக்குடையபடி - நாம் எண்ணியபடி. நீர்வார்த்துக் கொடுத்தோம்: அரசன் தானம் செய்யுங்கால் தாரை வார்த்துக கொடுத்தல் அக்கால வழக்கம என்று இதனால் தெரிகிறது.

கிழக்குப் பாருசமே போந்து - கிழக்குப் பக்கமே போய். இக்காட்டு - மின்னட்டு என்பது. பெருங்குடி, பணைகுடி, கருங்குளம், அள்ளியூர், பூசன்குடி, கோளன்குடி முதலியன இக் காட்டிலுள்ள ஊர்களாகும.

18. அரிகேசரிதேவர் சாசனம்*

முகவுரை.

அரிகேசரி தேவர் என்பது, பராக்கிரம பாண்டியனுக்குரிய மற்றொரு பெயர். அவன் திருநெல்வேலி சில்லாவைச் சேர்ந்த தென்காசி விசுவநாதசுவாமி கோயிலுக்குத் தானஞ் செய்த செய்தி பற்றிய சாசனம், 'அரிகேசரி தேவர் சாசனம்' எனப்பட்டது. இது, தென்காசி விசுவநாதசுவாமி கோயில் நடுவிடத்துக் கருப்பக்கிருகத்தின் மேலைப்புற அடிச்சுவரிலும, தெற்குப்புற அடிச்சுவரிலும் காணப்படுகிறது.

இதன் முற்பகுதியில், அரிகேசரி தேவர் வெற்றிகளையும், அவன் செய்த தருமங்களையும் பற்றிக் கூறும அவனது மெய்கீர்த்தி அமைந்துள்ளது. பிறபகுதியில் அவன் மேற்கூறிய கோயில நான் பூசைகளுக்கு வேண்டிய செலவுகளுக்காக சில நிலமங்களைத் தானமாகக் கொடுத்த செய்தி காணப்படுகிறது. இது, அவனுடைய ஆட்சியின் இருபத்தெட்டாவது ஆண்டு மேடமாயிற்று (சித்திரை மாதம்) பௌர்ணமியும் பஞ்சமியும் கூடிய திங்கட்கிழமை நாடெ பெற்றது.

எனவே, இச் சாசனம் எற்பட்ட காலம் கி.பி. 1450 ஆம் ஆண்டு †† என்னலாம்.

---

* இச் சாசனம திருவாங்கூர்ப் புராதனபொருளாய்ச்சித் தொகுதிகளின் முதற்பகுதியைச் சேர்ந்ததாகும்.

† அரிகேசரி - பராக்கிரம பாண்டியன் கி. பி. 1422 முதல் 1463 வரை பாண்டிய நாட்டை ஆண்டான். இவன் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் என்றும் அழைக்கப்படுவான்.

†† இச சாசனத்தில் 'ஸ்ரீ அரிகேசரி பராக்கிரம தேவர்க்கு யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது' என்றிருத்தலால், இது பராக்கிரம பாண்டியன் ஆட்சியின் இருபத்தொன்பதாவது ஆண்டு நடைபெற்றிருத்தல் வேண்டும். அது 1451 ஆம் ஆண்டு ஆகும்.

அரிகேசரி - பராக்கிரம பாண்டியன் மெய்க்கீர்த்தி.

சுபமஸ்து—

பூமிசை வனிதை மார்பினிற் பொலிய
நாமிசை கலிமகள் நலனுற விளங்கப்
புயவரை மீது சயமகள் புணரக்
கயலினை புலகின் கண்ணென திகழுச்
சந்திர குலத்து வந்தவ தரித்து
மூன்றையோர் தவத்தின் மூவெயன் வளர்ந்து
தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து
மன்பதை புரக்க மணிமுடி புனைந்து
சங்கர சரண பங்கயஞ் சூடிச்
செய்கோ லோச்சி வெண்குடை நிழற்றி

சுபமஸ்து: கடிதம் முதலியவற்றின் தொடக்கத்திலும் இறுதியிலும் வாழ்த்துதலாக வரும் ஒரு வடமொழித்தொடர். 'மங்கள முண்டாகுக' என்பது இதன் பொருள்.

பூமிசைவனிதை - திருமகள்: நாமிசை கலிமகள் - சரசுவதி: நலனுற - நன்றாக. புயவரை - புயங்களாகிய மலை. சயமகள் புணர - வெற்றி பொருந்த. செல்வம், கல்வி, வெற்றி இவை ஒருங்கே யமைய என்றபடி.

கயலினை - இணையான இரு கயல்கள். பாண்டிய மன்னரது கொடிகளில் இணையான இரு கயல்கள் வரையப்பெற்றிருக்கும்; அவை, உலகத்திற்கே இரு கண்களெனத் திகழும் என்பது.

சந்திரகுலம்: சோழ சோழ பாண்டிய மன்னர்கள் மூவரையே அக்கினி குலத்தையும், சூரிய குலத்தையும், சந்திர குலத்தையும் சேர்ந்தவர்கள். மூந்தையோர் - மூன்றோர். மூவா - தோன்றல்; தென்கலை - தமிழ் நூல் பயிற்சி; வடகலை - வடமொழி நூற் பயிற்சி.

மன்பதை - உலகத்து மக்கள். சங்கர சரண பங்கயஞ் சூடி - சிவபெருமானிடத்தில் பக்தி கொண்டு என்றபடி; சங்கரன் - சிவன்; சரணம் - பாதம்; பங்கயம் - தாமரை.

செங்கோலோச்சி வெண்குடை நிழற்றி: செங்கோல், வெண்குடை இரண்டும் அரசனது ஆணையையும் ஆளுகையையும் குறிக்கும். ஓச்சி - செலுத்தி; நிழற்றி - நடாத்தி.

வான வாரியு மன்ணருள் வாரியும்
தான வாரியுந் தப்பா தளித்து
மறக்களை பறித்துநல் லறப்பயிர் விளைத்துச்
சிங்கையி லஞ்ஞையி லிராசையிற் செண்டையில்
விந்தையி லறந்தையில் மூதலியில் வீரையில்
வைப்பாற் ெ..... மன்னரை வென்கண்
டெப்பாற் றிசையு மிசைவிளக் கேற்றிப்

வான்வாரி - மழை; அரசன் அறவொறி நிற்பின் மழை பெய்யு மென்பதுபற்றி, அரசனே வானவாரி அளித்தான் என்று கூறப் பட்டது. மன் அருள்வாரி - நிலையான கருணை; தானவாரி-கொடை: வாரி என்றது, இங்கு மிகுதியைக் குறித்து நின்றது.

மறக்களை பறித்துநல் அறப்பயிர் விளைத்து: மறத்தைக் களை யாகவும், அறத்தைப் பயிராகவும் இவ்வடியில் உருவகித்துள்ளது. மறம் - தீமை; அறம் - தருமம்.

சிங்கையில்..... மிசை விளக்கேற்றி: சிங்கை, அஞ்ஞை, இராசை, செண்டை, விந்தை, அறந்தை, மூதலி, வீரை, வைப்பாறு இவ்விடங்களில் பகை மன்னரை வென்று எல்லாத்திசையிலும் தன் புகழைப் பரப்பி என்றபடி.

சிங்கை - விக்கிரமசிங்கனூர்; நாங்குனேரியை யடுத்த சிங்கி குளம் என்பாரு முளர். அஞ்ஞை: இது எந்த இடமென்று இப் பொழுது விளங்கவில்லை.

இராசை - சங்கரநயினார்கோயில்; இது சங்கரநயினார்கோயில் தாலூகாவிற்குத் தலைநகர் செண்டை: இது சண்பகவனம் என்னும் திருக்குற்றாலத் தலமாகும். நாங்குனேரியை யடுத்த சண்பகராச புரம் என்பாரு முளர்.

விந்தை: விந்தனூர்; இது தென்காசியை யடுத்த செங்கோட் டைப் பகுதியிலுள்ளது பராக்கிரம பாண்டியன் சதுர்வேதிமங்க லம் என்றும் இதற்கு ஒரு பெயர் உண்டு. இப்பொழுது விந்தைக் கோட்டை என்று வழங்குகிறது. அறந்தை: இவ்வூர் எந்த இடத்தில் உள்ள தென்று இப்பொழுது விளங்கவில்லை.

மூதலி - மூதலிக்குளம் என்னும் ஊர். இது நாங்குனேரித் தாலூகாவி லுள்ளது. வீரை: வீரகேரளம்புதூர்: செங்கோட்டைப் பகுதியிலுள்ளது.

பதினெண்.....கடம் போற்றப்
பதினெண் பாஷைப் பார்த்திவ ரீனவரும்
திறையுஞ் சின்னமு முறைமுறை கொணர்ந்து
குறைபல விரந்து குரைகழ லிறைஞ்ச
அவரவர் வேண்டிய தவரவர்க் கருளி
அந்தண ரேனகர் சென்றழ லோம்ப
விந்தை முதலகர மைந்திடத் தியற்றிச்
சிவநெறி யோங்கச் சிவாற்சனை புரிந்து
மருதூ ராற்கு மண்டப மமைத்து

வைப்பாறு - வைப்பாற ஓடும் பகுதி: இது தென்காசி வழியே ஓடும் ஒரு நதி. வென்கண்டு - வெற்றிகொண்டு: எப்பாற்றிசையும் - எல்லாத்திசையும்; இசை விளக்கேற்றி - புகழ் பரப்பி.

பதினெண் பாஷைப் பார்த்திப ரீனவரும் - பதினெண் மொழி வழங்கும பதினெண் நாட்டு அரசர்களும். திறையும் சின்னமும் - திறைப்பணமும் அடையாளப் பூ முதலியனவும். முறை முறை - வரிசையாக.

குறைபல விரந்து - தமக்குண்டான பல குறைகளையும் கூறி. குரைகழ லிறைஞ்ச - பாதங்களில் விழுந்து வணங்க. வீரக்கழல் அணியும் பாதமாதலின், அரசன் பாதம் 'குரைகழல்' எனப்பட்டது.

சிங்கை, அனுரை, இராஷை, சென்னை, விந்தை, அறந்தை, முதலை, வீரை முதலிய இடங்களில் பகைமன்னரை வென்றதும், பதினெண் மொழி வழங்கும் பதினெண் நாட்டு அரசர்களிடத்தும் திறை வாங்கியதும் பராக்கிரம பாண்டியன் வெற்றிகளாகும்.

சேந்தழலோம்ப - யாகம் வளர்க்க; விந்தைமுதல் அகரம் ஐந்தீ தீடத் தியற்றி - விந்தனூர் முதலிய ஐந்து இடங்களில் அந்தணர் தங்கி வாழ்வதற்கு அகரங்கள் ஏற்படுத்தி என்பது. விந்தை - சென் கோட்டைப் பகுதியிலுள்ள விந்தனூர். விந்தை முதல் என்றது, விந்தனூர், அறந்தை, முதலை, வீரை, மைப்பாறு ஆகிய ஐந்திடங் களைக் குறிக்க என்க. அகரம் - அக்கிரகாரம், அந்தணர் தங்கு மிடம்.

சிவநெறி - சைவம்; சிவாற்சனை - சிவபூசை. அந்தணர்களைக் கொண்டு சைவ சமயம் வளரும்படிச் சிவபூசை முதலியன செய்தது என்பது.

மருதூராளர் - திருப்புடைமருதூரில் எழுந்தருளிய சிவபெருமான்: திருப்புடைமருதூர் அம்பாசமுத்திரம் தாலுகாவிலுள்ளது.

மூன்றெரு தூர்மூங் கிலுள்புக் கிருந்த
சிற்பரர் தம்மை திருவத்த சாமத்துப்
பொற்கலத் தமுது பொலிவித் தருளிச்
சண்பக வனத்துச் சங்கரர் தமக்கு
மண்டப மமைத்து மணிமுடி சூட்டி
விழாவணி நடாத்தி விளைப்புன லாடல்
வழாவகை நடாத்த கின்மன் னருள்தலை
வற்ரு வருவியும் வற்றி வற்கடம்
உற்றகிக் காலத் துறுபுனல் நல்கென
வேண்டியப் பொழுதே வேறிடத் தின்றிச்
சேண்டரு புனலிற் செழும்புன லாட்டி

அங்குள்ள கோயில் மண்டபத்தைப் பராக்கிம பாண்டியன் கட்டி னன்.

மூன்றெரு..... சிற்பரர்: மூன்றெரு காலத்தில் மூங்கிலடியில் எழுந்தருளிய சிவபெருமான் என்பது இது திருவெல்வேலித் தலத்துச் சிவபெருமானைக் குறிக்கும். தூர்மூங்கில் - மூங்கில் தார், மூங்கிலடி; அத்த சாமம் - நள்ளிரவு; பராக்கிம பாண்டியன், திருவெல்வேலியில் எழுந்தருளிய சிவபெருமானது அர்த்தயாம வழிபாட்டிற்கு நிபந்தங்கள் விட்டான் என்பது.

சண்பகவன்த்துச் சங்கரர்: சண்பகவனமென்னும் திருக்குற்ரூலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். பராக்கிம பாண்டியன் இங்குள்ள சிவன் கோயிலுக்கு மண்டப மமைத்ததுமன்றி, திருமஞ்சனமாட்டுதல் முதலிய திருவிழாச் சிறப்பும் செய்வித்தான். விழாவணி - திருவிழா. விளைப்புனலாடல் - திருமஞ்சனமாடுதல். வழாவகை - தவருதபடி.

வற்ரு அருவி - குறையாத நீர்வீழ்ச்சி. வற்கடம் உற்ற இக் காலத்து - பஞ்சம் உண்டான இந்த நாளில்; கின்மன் அருள் தலை(வீ) ஏல் உறுபுனல் நல்கேன் - உனது நிலையான கருணையால் நல்ல நீர் பெற அருள் வாய் என்று வேண்ட என்றபடி. வேண்டியப் பொழுதே - உறுபுனல் நல்கென வேண்டிய அப்பொழுதே.

சேண்டரு புனலில் - சேணிடத்திருந்து கொண்டுவரப்பட்ட நீரில்: சேண் - சேய்மை, தூர இடம். 'கின்மன் னருள்தலை வேறிடத்தின்றி' என்பதால், இங்கு மழையைக் குறிக்கும் போலும். செழும்புனலாட்டி - திருமஞ்சனம் செய்து.

1670/2

மின்கால் வேணி விசுவநா தர்க்குத்
தென்கா சிப்பெருங் கோயில் செய்து
நல்லா கமவழி நைமித் திகமுடன்
எல்லாப் பூசையு மெக்கோ யிலிலும்
பொருள்முத லனைத்தும் புரையற வடாத்திக்
திருமலி செம்பொற் சிங்கா சனமிசை
உலக முழுது முடையோ ருடனே
இலகு கருணை யிரண்டுரு வென்ன
அம்மையு மப்பனு மாயினைத் துயிர்க்கும்
இம்மைப் பயனும் மறுமைக் குறுதியும்
மெம்பட நல்கி விற்றிருந் தருளிய
ஸ்ரீ அரி.....தேவரான
பராக்ரம பாண்ட்ய தேவர்க்கு யாண்டு —

மின்கால்வேணி - மின்னலைக் கக்குகின்ற சடை. விசுவநாதர்: இது தென்காசிப் பதியில் எழுந்தருளிய சிவபெருமான் பெயர். தென்காசிப் பெருங்கோயில் - தென்காசிப் பதியிலுள்ள பெரிய கோயில்.

ஆகமவழி - ஆகமநூல் கூறு முறை; நைமித்திகம் - விசேஷ காலங்களில் நிகழ்வது; பொருள் முதல் அனைத்தும் - எல்லாவற்றையும். புரையற - குற்றம் நீங்க.

திருமலி - திருமகள் பொலிந்த; உலக முழுதுமுடையார்: இது பராக்கிரம பாண்டியனது பட்டத்தரசியைக் குறிக்கும். இலகு கருணை யிரண்டுரு வென்ன - விளங்கும் கருணையே இரண்டு உரு வெடுத்தாற் போல; இது உலக முழுதுமுடையாருடன் பராக்கிரம பாண்டியன் வீற்றிருத்தலைக்கு உவமை.

அம்மையு மப்பனுமாய் - தாயும் தந்தையுமாக. இம்மைப் பயன் - புகழ்; மறுமைக்குறுதி - முத்திநெறி.

விந்தை முதல் ஐந்திடங்களில் அந்தணர்களைக் குடியேற்றுவித்துச் சிவார்ச்சனை புரிவித்தது, மருதூராற்று மண்டப மமைத்தது, மூங்கிலடியிலெழுந்தருளிய சிற்பார்க்கு அர்த்தயாமத்து வழிபாட்டிற்குரிய நிபந்தமளித்தது, சண்பகவனத்துச் சங்கர்க்கு மண்டப மமைத்துத் திருமஞ்சன மாட்டுதல் முதலிய திருவிழா நடத்துவித்தது, தென்காசிப் பெரிய கோயிலைக் கட்டி, பூசை முதலியன செய்வித்தல் முதலியவை பராக்கிரம பாண்டியன் செய்த திருப்பணிகளாக அவன் மெய்க்கீர்த்தியில் காணப்படுகின்றன.

செய்தி

இருபத்தெட்டாவதின் எதிராவது.....ற்று இருபத் தொன்றுந் தியதியும் பூர்ணையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சோதிநாள், தென்வாரிநாட்டு சித்ராநதி உத்தர தீரத்தில் தக்கிண காசியிலே உடையார் விஸ்வநாதனுக்கு அபிநவமாக உபாநாதி ஸ்தாபி பய்யந்தழும் திருப்பணி செய்து உடையார் விஸ்வநாதனையும் பிரதிஷ்டித்து அர்த்த மண்டபம், இடைநாழிகை, மஹாமண்டபம், லோபாநம் இவையுந் திருப்பணி செய்து, திருப்பள்ளி அறை நாச்சியார் முதலாக உள்ள

யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது - இருபத்தொன்பதாவது ஆண்டு; தியதி - தேதி. பூர்ணை - பௌர்ணமி, பதினைந்தாவது திதி. சோதி நாள் - பதினைந்தாவது நாளான சுவாதி நாள்.

பராக்கிரம பாண்டியன் அவன் ஆட்சியின் இருபத்தொன்பதாவது ஆண்டு..... இருபத் தொன்றுந் தேதி பௌர்ணமியும் வெள்ளிக்கிழமையும் கூடிய சோதி நாள் தென்வாரி நாட்டுச் சித்திரா நதியின் வடகரையிலுள்ள தென்காசிப் பதியில் விசுவநாத சுவாமிக்குக் கோயில் கட்டி, சுவாமியின் திருவுருவத்தை அதில் பிரதிஷ்டித்தது மன்றி, மண்டபங்களும் கட்டி விசேஷ பூசை, திருநாள் செலவுகளுக்கு பல ஊர்களைத் தானமும் செய்தான் என்பது.

தென்வாரி நாடு - இது பாண்டிய நாட்டின் தென்பகுதி போலும். சித்ரநதி உத்தர தீரத்தில்-சித்ரா நதியின் வட கரையில்; சித்ரா நதி தென்காசி வழியாக ஓடும் ஒரு சிற்றாறு. உடையார் விஸ்வநாதர் - இது தென்காசிப் பதியில் எழுந்தருளிய சிவன் பெயர். அபிநவமாக - புதிதாக

உபாநாதி ஸ்தாபி பய்யந்தழும் - அடி முதல் முடி வரையும். திருப்பணி செய்து-கோயில் கட்டிமுடித்து. விஸ்வநாதனையும் பிரதிஷ்டிசது - விசுவநாதசுவாமியின் படிவத்தையும் உள்ளே வைத்து; அர்தத மண்டபம் - கருப்ப கிருகத்தைச் சார்ந்த மண்டபம்.

இடைநாழிகை - அர்த்த மண்டபத்திற்கும் மஹா மண்டபத்திற்கும் இடைப்பட்ட இடம்; மஹா மண்டபம் - அர்தத மண்டபத்தையடுத்துள்ள பெரிய மண்டபம். லோபாநம் - படிக்கட்டு, தாழ்வாரம் எனினுமாம். திருப்பள்ளி அறை - கோயில் பூசித்தி இரவில் பள்ளிக்கு எழுந்தருளும் அறை. நாச்சியார் - பெண் தெய்வம்.

திருவுடம்புகளும் எறியருளப் பண்ணுவித்து, ஆவரண கோபுராதிகளும் ஆரம்பித்து மேல் உடையார் விஸ்வநாதந் பூஜைக்கு அமுதுபடி சாத்துப்படி திருமாலைத் திருப்பரி வட்டம் திருவிளக்கு உட்பட்ட பல நித்ய நியமங்களுக் கும் பல விசேஷ பூஜை திருநாட் செலவுக்கும் முன்னூள் இரண்டாவதின் எதிர் இருபத்து மூன்றுவது முதலுக்கு நாம் தேவதானமாக விட்ட பற்றுகளில் தென்வாரிநாட்டுத் தென்காசிப் பெருநான் கெல்லையாவது – கீழ் எல்லை புலியூற் பற்றுனை காராண் குளத்தில் நீர்நக்கலுக்கும், பரிம்புக்கும், புலியூர் அகரப்பற்றில் புஞ்சைக்கும், நாராயண ஸ்ரீபாதங்கள் மடப்புறத்தில் மேல் எல்லைக்கு மேற்கும், தென் எல்லை

திருவுடம்புகள் - விக்கிரகங்கள். எறியருளப் பண்ணுவித்து - எழுந்தருளும்படிச் செய்து. ஆவரணம் - சுற்றுமதில்; கோபுராதி - கோபுர முதலிய. ஆரம்பித்து - தொடங்கி; எனவே, இவன் கோபுரம் கட்டிமுடிக்க வில்லை என்று தெரிகிறது. மேல் - அதன் பின்பு.

திருப்பரி வட்டம் - தெய்வத்துக்குச் சாத்தும் ஆடை; நித்திய நியமம் - தினசரி செய்ய வேண்டுவன; முன்னூள் - இருபத்தொன் பதாவது ஆண்டுக்கு முன்பு. இரண்டாவதின் எதிர் - மூன்றுவது; அதாவது இருபத்தி ஆறுவது ஆண்டு என்றபடி. முதலுக்கு - இரு பத்தாறுவது ஆண்டு முதல் என்பது.

பற்று - பல கிராமங்களையுடைய நாட்டுப் பகுதி. தென்காசிப் பெருநான் கெல்லை - தென்காசிப் பற்றுக்கு நான்கு எல்லையாவது. புலியூர்: இது தென்காசித் தாலூகாவிலுள்ளது: இராச குல ராம சுல்லூர் என்பது இதன் மற்றொரு பெயர்.

புலியூர் பற்றன காராண்.....நீர்நக்கலுக்கும் - புலியூர்ப் பற்றைச் சேர்ந்த காராண் குளத்து நீர் நக்கலுக்கும் என்றபடி. நீர்நக்கல் - எரியின் உள்வாய் நீர் தேங்கும் பகுதி: வாய்க்கால் எனினுமாம். பரிம்பு - காராண் குளத்து நீர் நக்கலையடுத்த பரிம்பு. பரிம்பு - பழ் நிலம்: இக்காலத்தில் 'பரம்புக்காடு' என்பர்.

புலியூர் அகரப்பற்று - புலியூர் அக்கிரகாரம் என்பது நாராயண ஸ்ரீபாதங்கள்: இவர் ஒரு வைணவ அடியார் என்று தெரிகிறது. இவர் வாழ்ந்த மடம் 'நாராயண ஸ்ரீ பாதங்கள் மடம்' எனப்பட்டது. மடப்புறம் - மடத்திற்குத் தானமாக விட்ட நிலம்.

சித்ர ரதிக்கு வடக்கு. மேல் எல்லை குன்றக்குடிப் பரிம்புக் குக் கிழக்கும், வ..... சென்னப்ப் பொற்றைக்கும் குத்துக் கல்லுக்கும் தெற்கும் ஆக இன்னன் கெல்.....ட்ட பற் றாம், இந்த ரதிக்கு நகுஷிண தீரத்தில் வாயுளான் குடிப்பற் றுக்குப் பெரு கான்கெல்லையாவது – கீழ் எல்லை புலியூர் அணைக்கும் திருச்சாலைக்குடிப் பற்றுக்கும் ஆழங்காலுக்கு மேற்கும், தென் எல்லை திருசாலைக்குடிப் பற்றுக்கும் பாகா ரம பாண்டிய சதுர்வேதிமங்கலத்து பட்டகள் அகரப் பற்றில் வட வெல்லைக்கும் உடையார் திருக்குற்றலமுடைய நாய னர் பழந்தேவதானத்துக்கு வடக்கும், மேல் எல்லை வாயுளான் குடி அணைக்குக் கிழக்கும், வட எல்லை சித்ர ரதிக்குத் தென்

குன்றக்குடிப் பரிம்பு: இது தென்காசிப் பற்றுக்கு மேல் எல் லையாக அமைந்துள்ளது. கீழே, குன்றக்குடிப் பற்று என்று ஒரு நிலப்பகுதி கூறப்பட்டுள்ளது: அதனை யடுத்துள்ளது போலும் இக் குன்றக்குடிப் பரிம்பு.

தென்காசிப் பற்று - கிழக்கே புலியூர்ப் பற்றிலுள்ள காரான் குளம் நீர்நக்கல், அதனையடுத்த பரிம்பு, அங்குள்ள அகரப்பற்று நஞ்சை நிலம், நாராயண ஸ்ரீபாதங்கள் மடப்புறம் ஆகியவற்றையும், தெற்கே சித்திரா நதியையும், மேற்கே குன்றக்குடிப் பரிம்பையும், வடக்கே செந்நாய்ப் பொற்றை, குத்துக்கல் ஆகியவைகளையும் எல் லைகளாக உடையது.

இந்த நதிக்குத் தகுஷிணதீரத்தில் - சித்திரா நதிக்குத் தென் கரையில். ஆழங்கால்: இது ஓர் ஊரின் பெயர்.

பாகிகிரம பாண்டிச் சதுர்வேதிமங்கலம்: இது செங்கோட் டையை யடுத்த விந்தனூரு ருக்குரிய மற்றொரு பெயர். பட்டகள் அக ரப்பற்று - பட்டர்கள் வாழும அக்கிரகாரம் போலும், உடையார் திருக்குற்றலமுடைய நாயனார் - சண்பகவனத்துச் சிற்பர். பழந் தேவதானம் - முன்புள்ள தேவதானம்.

வாயுளான் குடிப்பற்று - கிழக்கே புலியூர் அணை, திருச்சாலைக் குடிப்பற்று, ஆழங்கால் ஆகியவற்றையும், தெற்கே திருச்சாலைக் குடிப்பற்று, விந்தனூர், பட்டகள் அகரப்பற்று, குற்றாலம் சிவன் கோயில் தேவதானம் ஆகியவற்றையும், மேற்கே வாயுளான்குடி அணையையும், வடக்கே சித்திரா நதியையும் எல்லைகளாக உடையது.

கும் ஆக இன்னன் கெல்கைக் குட்பட்ட பற்றும், குன்றக் குடிப் பற்றுக்குப் பெருமான் கெல்கையாவது - கீழ் எல்கை இடைமலைப் பரிம்புக்கு மேற்கும், தென் எல்கை சித்தா ரதிக்கு வடக்கும், மேல் எல்கை செங்கோட்டை பிடாரியார் கோயிலுக்கும் இலத்தூற்குப் போகிற பெருவழிக்குக் கிழக்கு, வடஎல்லை கடமர் குளத்துக்குத் தெற்கு ஆக இன் னன் கெல்லைக்குக்பட்ட பற்றில் உடையார் திருக்குற்ரு லமுடைய நாயனார் தேவதானமான நிலம் ஒன்பதுமா மூந் திரிகையின் மூனறுமா மூக்காணியும் நீக்கலாக உள்ள பற்றும், பராக்கிரம பாண்டிய நல்லூர் பற்றுக்குப்பெரு மான்கெல்கை யாவது - கீழ் எல்கை இலுப்பைத் தொண்டி ற பெருவழிக்கு மேற்கும், தென் எல்கை இக்குளத்தின் நீர்க்கலுக்கு வடக்கும், மேல் எல்கை உடையார் திருக்குற்ரு லமுடை..... .....ய பழந் தேவதானமான திருச்சாலைக்குடிப் பற்றுக்குக் கிழக்கும், வட எல்கை சித்தா.....தெற்கும் ஆக இன்னன் கெல்கைக்குட்பட்ட பற்றில் இருங்கிண்டி. ஸ்ரீபத்மநாபன் தான இறையிலி நில மிரண்டுமாவும் நீக்கலாக உள்ள பற்று,

---

இலத்தூர்: இது செங்கோட்டையை யடுத்ததோர் ஊர்.

மா - $\frac{1}{20}$ வேலி, 100 குழி நிலம்; மூந்திரிகை - $\frac{1}{320}$; காணி - $\frac{1}{80}$; நிலம் ஒன்பதுமா மூத்திரிகையின் மூன்றுமா மூக்காணியும்-599½ குழி.

தன்றகத்துடிப் பற்று: இது செங்கோட்டைப் பகுதியிலுள்ளது. கிழக்கே இடைமலைப் பரிம்பையும், தெற்கே சித்திரதையையும், மேற்கே செங்கோட்டைப் பிடாரியார் கோயிலுக்கும் இலத்தூருக் கும் போகிற பெருவழியையும், வடக்கே கடமர் குளத்தையும் எல்லை களாக உடையது. இவ்வெல்லைக்குட்பட்ட நிலத்துள் ஒன்பதுமா மூந்திரிகையின மூன்றுமா மூக்காணி நிலம், திருக்குற்ரு லம் சிவன் கோயில் தேவதானமாகும்.

இக்குளத்தின் - இலுப்பைத் தொண்டிக் குளம் போலும். திருச் சாலைக்குடிப் பற்று: இது திருக்குற்ரு லம் சிவன் கோயில் தேவ தானம்: பராக்கிரமபாண்டியநல்லூர்ப் பற்றுக்கு மேற்கெல்லை யாகவும், வாயுனான்குடிப் பற்றுக்குக் கிழக்கெல்லையாகவும் வெற் கெல்லையாகவும் உள்ளது. இருங்கிண்டி - இது ஓர் ஊரின் பெயர்.

பராக்கிரமபாண்டிய நல்லூர்ப் பற்று: இது பராக்கிரம பாண் டியன் பெயரால் பெற்ற பெயர்; கிழக்கே இலுப்பைத் தொண்டில்

ஈல்லூர் பற்றில் வள்ளை மூட்டமும், இக்குளத்தில் நீர்பாயு நிலமாய்வடவூற் பற்றில் நின்றுங் கூட்டின நிலம் மூன்றுமா வரையும் ஆக இப்பற்றுக்குப் பெருநான் கெல்லையாவது — கீழ் எல்லை காடேற்றிப் பற்றுக்கு மேற்கும், தென் எல்லை வடவூர் பற்றில் செங்குளத்தில் நீர்பாயு நிலத்துக்கும் தஞ்சா வூற் பெருங்காலுக்கும் அணுபோக மழகியான் குளத்தில் நீர் பாயும் பற்றுக்கு வடக்கு, மேல் எல்லை இக்குளத்தில் நீர்டிக் கலுக்கும், தவணை பற்றுக்குங் கிழக்கு வட எல்லை தஞ்சா வூரில் நின்றும் தவணைக்குப் போகிற பெரு வழிக்குத் தெற் குங் ஆக இன்னான் கெல்லைக் குட்பட்ட பற்றும், வடவாரி நாட்டுப் பைம்பொழிற் பற்றில் ஈல்லாண் பிள்ளைப் பெற்று ளுக்குங் விஸ்வநாதப் பேரோரிக்கும் பெரு நான் கெல் லையாவது — கீழ் எல்லை செங்கோட்டைப் பிடாரி யார் கோயிலுக்கும் இலத்தூருக்கும் இவ்வூரில் நின்றும் இலத்தூற்குப்

பெருவழியையும், தெற்கே இலுப்பைத்தொண்டிக் குளத்து நீர்க்க லையும், மேற்கே திருக்குற்ற ல முடையார் கேவஸ்தானமான திருச் சாலைக்குடிப் பற்றையும், வடக்கே சித்திராகதியையும் எல்லைகளாக வுடையது. இப்பற்றில் இரண்டுமா நிலம், இருங்கிண்டி ஸ்ரீ பத்ம நாபன் கோயில் தேவதான மாகும்.

நல்லூர்ப்பற்றும், வடவூர்ப் பற்றும் சேர்ந்த நிலம்: இது கிழக்கே காடேற்றிப் பற்றையும், தெற்கே வடவூர்ப் பற்றில் செங்குளத்து நீர்பாயும் நிலம், தஞ்சாவூர்ப் பெருவகால், அணுபோகமழகியான் குளத்து நீர பாயும் பற்று ஆகியவற்றையும், மேற்கே நல்லூர்ப் பற் றுக் குளத்தின் நீர்க்கல், தவணைப்பற்று ஆகியவற்லையும், வடக்கே தஞ்சாவூரினின்று தவணைப் பற்றுக்குப் போகிற பெருவழியையும் எல்லைகளாக வுடையது.

பைம்பொழில்: இது தெண்காசித் தாலூகாவிலுள்ள நூர் ஊர்: இவ்வூரையடுத்த பகுதி 'பைம்பொழில் பற்று' எனப்பட்டது. இப்பற்றின் ஒரு பகுதி - கிழக்கே செங்கோட்டைப் பிடாரியார் கோயிலுக்கும் இலத்தூருக்கும் போகிற பெருவழியையும், தெற்கே ஆறையும், மேற்கே பைம்பொழிலின்று நல்லூருக்குப் போகும் வழி, முழுங்கால் முட்டிப் பாறை ஆகியவற்றையும், வடக்கே தேனீடு பொற்றையையும் எல்லைகளாகவுடையது.

செங்கோட்டைப் பிடாரியார் கோயில் பெருவழி: இது குன்றக் குடிப் பற்றுக்கு மேல் எல்லையாகவும், பைம்பொழில் பற்றுக்குக் கீழ் எல்லையாகவும் உள்ளது.

போகிற பெருவழிக்கு மேற்கு, தென் எல்லை ஆற்றுக்கு வடக்கு, மேல் எல்லை பைம்பொழிலில் நின்றும் கல்லூற்குப் போகிற பெருவழிக்கு முழங்கால்மூட்டிப் பாறைக்குங் கிழக்கு, வட எல்லை தேனிடு பொற்றைக்குத் தெற்கு ஆ.....ன் கெல்லைக் குட்பட்ட பற்றும், முப்பதாவது மேஷ ஞாயிற்று இருபத்தெ.....திபதியும் பூர்வ பக்ஷத்து பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற புனர் பூசத்து நாள நாம் முன்பு விட்ட பற்றுக்கள் நீக்கலாக நாளது பூஜைஜச் சிலவுக்கு விட்ட தென்வாரி நாட்டு இராசகுல ராம நல்லூரான புலியூர் பற்றுக்கும், வீரபாண்டியநல்லூர்ப் பற்றுக்கும் பெருநான் கெல்கையாவது --புலியூர்ப் பற்றுக்குப் பெருநான் கெல்லைக் - கீழ் எல்லை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக் குறிச்சிப் பற்றுக்கும் மேற்கு, தென் எல்லைச் சிற்றூற்றுக்கு வடக்கு, மேல் எல்லை பழந்தேவதானமான தென்காசிப் பற்றுக்குக்

முப்பதாவது - யாண்டு முப்பதாவது; மேஷ ஞாயிறு - சித்திரை மாதம்; பூர்வ பக்ஷம் - வளர்பிறைக் காலம். பஞ்சமி - ஐந்தாவது திதி. புனர்பூசத்து நாள் - ஏழாவது நட்சத்திரம்; பராக்கிரம பாண்டியன் ஆட்சியின் முப்பதாவது ஆண்டு மேஷ ஞாயிற்று .....தேதி, பூர்வபட்சத்துப் பஞ்சமியும் திங்கட்கிழமையும் கூடிய புனர்பூசத்து நாள் என்றபடி.

நாம் முன்பு விட்ட பற்றுக்கள் - தென்காசிப் பற்று, வாயு ளான்குடிப் பற்று, குன்றக்குடிப் பற்று, கல்லூர்ப் பற்று, பைம்பொழில் பற்று என்பன. நாளது பூஜைஜச் செலவுக்கு - மேல் வரும் பூஜைச் செலவுக்கு.

மடப்புறம் - மடத்திற்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம்: பாட்டக் குறிச்சிப் பற்று: இது திருவெண்காட்டு முதலியார் மடத்துக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம்: புலியூர்ப் பற்றுக்குக் கீழ் எல்லையாயுள்ளது. பழந்தேவதானமான தென்காசிப் பற்று: இது முன்னுள் பராக்கிரம பாண்டியனால் தென்காசிக் கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம்.

புலியூர்ப்பற்று: இதன் மற்றொரு பெயர் இராசகுல ராம நல்லூர் எனபது இது தென்வாரி நாட்டைச் சேர்ந்தது. கிழக்கே பாட்டக்குறிச்சிப் பற்றையும், தெற்கே சிற்றூற்றையும், மேற்கே தென்காசிப் பற்றையும், வடக்கே ஆயக்குடிப் பற்றையும் எல்லை

கிழக்கு,வட எல்லை ஆயக்குடி பற்றுக்குத் தெற்கு ஆக இன் னுன் கெல்லைக் குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்ரு லமுடைய நாயனர் தேவதானமும், உடையார் விக்ரமப் பாண் டூஸ்வரமுடைய நாயனர் தேவதானமும், நயினர் திருவிருந்த பெருமாள் திருவிடையாட்டமும், ஸ்ரீ க்ருஷ்ணர் திருவிட யாட்டமும், பாக்காமபாண்டிய நல்லூரில் நயினர் திருவேங் கட நாதன் திருவிடையாட்டமும், முகந்தானத்து நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறமும், ஆகப் பற்றும் தீங்கலாக இன் னுன் கெல்லைக் குட்பட்ட பற்றிய, வீரபாண்ட்ய நலலூருக்குப் பெருமான் கெல்லை யாவது - கீழ் எல்லை தட்டான் குளத்துப் பரிம்புக்கு மேற்கு, தென எல்லை திருச் சிறறம்பலத்துக்குக் காலான இராச குலா.....

.....காலுக்கும் நயினர் திருவிருந்த பெருமாள் திருவிட யாட்டமான ஆகவாம.....துக்கும வடகு மேல எல்லை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட் டுக் குறிச்சிப் பற்துக்குக் கிழக்கு வட எல்லை விந்தலூர்ப் பெருவழிக்குத் தெற்கு ஆக இன்னுன் கெல்லைக் குடபட்ட பற்றும் ஆக இப்பற்றுக்களில் பெருமான் கெல்லைக்குட்

களாக வுடையது இதில, திருக்குற்ரு லமுடைய நாயனர் தேவ தானம், உடையார் விகரமப் பாண்டூஸ்வர நாயனர் தேவதான ய, நயினர் திருவிருந்தப் பெருமாள் திருவிடையாட்டம, ஸ்ரீ கிருஷ்ணன திரு விடையாட்டம், நயினர் திருவேங்கடநாதன திருவிடையாட் டம, முகநதானத்து நாராயண ஸ்ரீ பாதங்கள மடப்புறம், ஆகப் பற்று ஆகியவையும அடங்கி இருந்தன.

தேவதானம் - சைவ, வைணவக் கோயில்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம்: திருவிடையாட்டம் - தேவதான மானிய ய; இது வைணவ கோயில்களுகுக் கொடுக்கப்படுவது போலும். அந் ராப்பற்று - அந்தணர் வாழுமிடம்.

வீரபாண்டியநல்லூர்ப் பற்று: இது கிழக்கே தட்டான் குளத் துப் பரிம்பையும், தெற்கே திருச்சிற்றம்பலத்துக் கால், திருவிருந் தப் பெருமான் திருவிடையாட்டம் ஆகியவற்றையும், மேற்கே பாட் டுக் குறிச்சிப் பற்றையும், வடக்கே விந்தலூர்ப் பெருவழியையும் எல்லைகளாக வுடையது.

பட்ட பற்றும் ஆக இப்பற்றுகளில்ப் பெரு நான் கெல்லைக்குட்பட்ட நஞ்செய், புஞ்செய், மாவடை, மாவடை, பட்டடை, கொடித்தோட்டம், செக்கிறை மற்றுமுள்ள ஸமஸ்த ப்ராப்திகளும் மூப்பதாவது பசான முதலுக்குத் தேவதானமாக விட்ட அளவுக்கு இம்மரியாதியிலே இவ்வோலை பிடிபடாகக் கொண்டு ஆசந்த்ர தாரவத் இவ்வாலயம் உள்ள அளவும் கையாண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிப் பூசையுந் தாழ்வுற நடத்திப்போதவும் பாற்க. இவை கிடாரத்தூருடையான் எழுத்து உதுல்யம்.

நஞ்செய் - நெல் முதலியன விளையும் கல்ல நிலம்; புஞ்செய் - நஞ்செய் யல்லாத நிலம்; மாவடை - நிலத்திலடங்கிய விலக்குகள்; கிராமத்தில் கால் வடை அடையும் இடம் எனினுமாம். மாவடை - நிலத்திலடங்கிய மாங்கள்; மாங்களுக்குரிய வரி எனினுமாம்.

பட்டடை - இறைப்புப் பாசானத்தால் பயிரிடப்படும் நிலம்; குடிவாரம் எனினுமாம். கோடித் தோட்டம் - படர்கொடித் தோட்டம்; வெற்றிலத் தோட்டம் என்பாருமுளர். செக்கிறை - செக்காட்டி எண்ணெய் எடுப்பதற் கேற்பட்ட வரி.

ஸமஸ்த ப்ராதிகளும் - சகல அனுபவங்களும். மூப்பதாவது பசான முதலுக்கு - மூப்பதாவது ஆண்டு பசான முதலாக. பசான்ம்: சித்திரை மாதத்தில் அறுவடையாகும் ஒரு வகை நெல்; எனவே, இங்கு சித்திரை மாதம் முதலாக என்றபடி.

இம்மரியாதியிலே - இந்த முறையில்; இவ்வோலை பிடிபாடாக - இந்தப் பத்திரம் ஆதாரமாக; பிடிபாடு - ஆதாரம். ஆசந்த்ர தாரவம்: இது சாசனங்களில் வழங்கும் ஒரு தொடர்: சந்திரனும் கட்சத்திரங்களும் உள்ளவரை என்பது இதன் பொருள். இவ்வாலயம் - பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்ட தென்காசிப் பெரிய கோயில்.

கையாண்டு - அனுபவித்துக் கொள்ளும்படி என்க. தாழ்வற தடையின்றி. நடத்திப் போதவும் பாற்க - நடத்திவரும்படிக் கவனித்துக் கொள்ளவும் என்றபடி.

கிடாரத்தூருடையான்: இவன் அரிகேசரி தேவர் சாசனத்தை எழுதியவன்: இவனுக்குச் சொந்தவூர் கிடாரம் போலும். துல்யம் - சரி; கையொப்பம் எனினுமாம். அரசன் கொடுத்த சாசனமாயின் 'அரசன் கையொப்பம்' என்று பொருள்படும்.

19. பராக்கிரமபாண்டிய தேவர் சாசனம்*

முகவுரை.

பராக்கிரம பாண்டிய தேவர் என்பது, குலசேகர பாண்டியனுக்குரிய மற்றொரு பெயர். இவன் செய்த தர்மம் பற்றியது சாசனம் 'பராக்கிரம பாண்டிய தேவர் சாசனம்' எனப்பட்டது. இது திருநெல்வேலிச் சில்லாவிலுள்ள தென்காசித்துப் பங்கத்திலுள்ளதும், திருவாங்கூர் இராச்சியத்தைச் சேர்ந்ததுமான செங்கோட்டை எனுமிடத்திலுள்ள இவன் கோயில் மடுவிடத்துக் கருப்பகிருகத்தின் தெற்குச் சுவரில் காணப்படுகிறது.

இதில், பராக்கிரமபாண்டியன் என்னும் குலசேகரப் பாண்டியன்† சில நிலங்களைச் செங்கோட்டைச் சிவன் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. இது சக வருடம் 1467க்குச் சமமான விசுவாவசு ஆண்டு ஐபசி மாதம் அமாவாசித்திதி வெள்ளிக்கிழமையன்று எண்டெபெற்றது.

எனவே, இச் சாசனம் ஏற்பட்ட காலம் கி.பி 1545ஆம் ஆண்டு என்னலாம்.

சாசனம்.

சுபமஸ்து. ஸ்வஸ்திஸ்ரீ புவநேக வீர சந்த்ரகுல ப்ரதீப கோ ஜடிலவர்ம்மத்ரிபுவநச்சக்ரவர்த்தி கொநேரின்மைகொண்

---

* இச்சாசனம் திருவாங்கூர்ப் புதைபொருளாராய்ச்சித் தொகுதிகளில் முதற்றொகுதியைச் சேர்ந்ததாகும்.

† இவன அபிராம பராக்கிரம பாண்டியனுடைய முதற் புதல்வன்: சடிலவர்மன், திரிபுவனச் சக்கரவர்த்தி, கோநேரின்மை கொண்டான் என்னும் சிறப்புப் பெயர்களையுடையவன்; இவனுடைய கல்வெட்டுகள் கி.பி 1543 முதல் 1552 வரையில் உள்ளன என்று கூறுவர்.

புவநேக வீர - புவ ஏக வீர, உலகத்தை ஒரே வீரனே; சந்த்ர குல ப்ரதீப - சந்திர குலத்தில் தோன்றிய விளக்கான; கோ ஜடில வர்ம்ம - கோமனனை சடையவர்மன். ஜடிலம் - சடை: சோழ அரசர்கள் பராகேசரி, இராசகேசரி என்னும் பட்டப் பெயர்களைத் தமக்குள் மாறி மாறி வழங்கியது போல, பாண்டிய மன்னர்கள் சடையவர்மன், மாறவர்மன் என்னும் பட்டப்பெயர்களைத் தமக்குள் மாறி மாறி வைத்து வழங்கி வந்தனர்.

கோநேரின்மை கொண்டான்: இது சோழ மன்னரும் பாண்

டான் பெருமாள் அபிராம பராக்ரம பாண்ட்ய தேவர் கல் தரான ஸ்ரீபெருமாள் குலசேகர தேவரான பராக்ரம பாண்ட்ய தேவற்கு யாண்டு சகாப்தம் தசாதாயன-ல் மூன்றுவது விஸ்வாவஸு வர்ஷம் அற்பசி மாஸம் மூப்பதாந் திகதியும் அபரபக்ஷத்து ஏகாதசியும் சுக்ரவாரமும் வைத்ருதியோகமும் ஸிம்ஹகரணமும் பெற்ற உத்திராத்து நாள், தென்னரி நாட்டு

டிய மன்னரும் தம் பெயர்களுக்குமுன் சிறப்பாகத் தரித்துக் கொள்ளும் ஒரு பட்டப் பெயர். 'தனக்கு ஒப்பான அரசனை இல்' எனபது இதன் பொருள்.

பெருமாள் அபிராம 'பராக்கிரமபாண்டிய தேவர்: இது குல சேகரப் பாண்டியனுடைய தந்தையின பெயர். பெருமான் என்பது உடையார் என்பது போன்று; அரசர் பெயர்களுக்கு முன் சிறப்பாக வழங்கும் ஒரு சொல். நந்தநார் - மகனார்.

யாண்டு.....மூன்றுவது: 'குலசேகரப் பாண்டியனது ஆட்சியின் மூன்றுவது ஆண்டு; அது சக வருடம் 1467 ஆம் ஆண்டு என்பது. இனி, சாலிவாகன சகாப்தம் 1467ல் மூன்றுவது தடவை யாகச் செய்த தருமம் என்பாருமுளர். சகாப்தம் - சாலிவாகன சகாப்தம்: அது கி. பி. 78 முதல் தொடங்கும் ஒரு ஆண்டுமானம்.

விஸ்வாவஸு வர்ஷம் - விசுவாவசு ஆண்டு; இது அறுபது ஆண்டுகளில் மூப்பத்தொன்பதாவது ஆண்டு. அபர பக்ஷம் - கிருஷ்ண பட்சம், தேய்பிறைக் காலம்.''

ஏகாதசி - முதலாவது திதி: திதி என்பது - திதி, வாரம், நாள், யோகம், காரணம் என்னும் பஞ்சாங்கங்களுள் ஒன்று. சுக்கிரவாரம் - வெள்ளிக் கிழமை. வைத்ருதி யோகம் - வைருதி யோகம், இருபத் தேழு யோகங்களில் ஒன்று. ஸிம்ஹகரணம் - பதினோரு கரணங் களுள் ஒன்று. உத்திரத்து நாள் - இருபத்தேழு நாட்களுள் பன் னிரண்டாவது நாள், உத்தர நாள் என்பது.

இச் சாசனத்தில், சாசனம் தோன்றிய காலத்தைக் குறிக்குமி டத்து, முதலில் அரசனது ஆட்சியின் ஆண்டும், அதன்பின் அதற் குச் சரியான சகவருடமும், அதன்பின் தமிழ் ஆண்டுடன் மாதம், தேதி, பட்சம், திதி, வாரம், நாள், யோகம், கரண முதலியனவும் சொல்லியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தென்னரி நாடு: இது பாண்டிய நாட்டுப் பிரிவுகளில் ஒன்று: தென்வாரி நாடு என்று இருத்தல் வேண்டும் போலும்.

செங்கோட்டையில் உடையார் குலசேகரமுடையநயினற்கு தேவதானம் பாட்டமாக குடுத்த நிலம் அரைமாவுக்கு நாம் சேர்த்துக் கொடுத்த நிலமாவது, மேற்படி நாட்டு மேற்படியூரில் மேற்படியார் அஞ்சாலியில் மேல்வாரம் தவிர்த்துக் குடுத்த குளப்புரவு பதினொன்றுங் கண்ணுறு தடி ஆறு நிலம் அரைக்காணி முந்திரிகை, பன்னிரண்டாங் கண்ணுறு தடி எட்டு நிலம் அரைக்காணி முந்திரிகை, பதின்மூன்றுங் கண் ணுறு தடி அஞ்சு நிலம் அரைக்காணி இதுவும் ஆக நிலம் அரை மாவும் நாளது முதலுக்கு நாங் கொள்ளுமுறை பாடு எப்பேர்ப்பட்டதும் நம் வரியிலார் கணக்கிலும் தவிர்

உடையார் குலசேகரமுடைய நயினார்: இது செங்கோட்டைச் சிவன்கோயில் சுவாமியின் பெயர். தேவதானம் பாட்டமாக குடுத்த - கோயில் பாட்டமாகக் கொடுத்த; தேவதானம் வைத்த, இங்கு கோயிலையும், அதன் அதிகாரிகளையும் குறிக்கும்; பாட்டம் - குத்தகை, ஒரு வகை வரி எனினுமாம்.

அரைமாவுக்கு - அரை மா நிலத்திற்கு. மா - 100 குழி நிலம். நாம்: இங்கு குலசேகரப் பாண்டியனைக் குறிக்கும். மேற்படி..... மேற்படியார் - மேலே கூறிய தென்னாடு செங்கோட்டை உடையார் குலசேகர நயினார். அஞ்சாலி - வரி வகை: நிலவரு வாயில் ஐந்தில் நான்கு பங்கைக் குடிகள் தருவது எனினுமாம்.

மேல்வாரம் - விளைவிலிருந்து சொந்தக்காரருக்குக் கொடுத் தற்குரிய தானியம். தவிர்த்து - நீக்கி. குளப்பாவு - குளத்தின் நீர் பாய்ந்து சாகுபடியாகத்தகுந்த நிலம். கண்ணுறு - பாசன வாய்க்கால்; நன்செய்ப் பிரிவு எனினுமாம்.

பதினொன்றுங் கண்ணுறு தடி ஆறு - பதினொராவது கண் ணுற்று ஆறாவது வயல் என்றபடி. தடி - வயல். அரைக் காணி - $\frac{1}{160}$; முந்திரிகை $\frac{1}{320}$;

ஆக நிலம் அரைமாவும்: பதினொன்றும் கண்ணுற்று ஆறாவது வயல் நிலத்தில் $\frac{3}{320}$ மாவும், பன்னிரண்டாம் கண்ணுற்று எட்டா வது வயல் நிலத்தில் $\frac{3}{320}$ மாவும், பதின்மூன்றும் கண்ணுறு ஐந்தா வது வயல் நிலத்தில் $\frac{1}{160}$ மாவும் ஆக அரை மா($\frac{1}{40}$) நிலமும் என் றபடி.

நாளது முதலுக்கு - நாளது தேதி முதல்: அதாவது குலசேகர பாண்டிய தேவற்கு ஆண்டு மூன்றாவது முதல் என்றபடி. நாங் கொள்ளும் முறைபாடு - நாம் வாங்கும் வரி; முறைபாடு - அரசிறை.

த்து ஆசந்த்ர காரவற் செம்பிலும் கிலெயிலும் வெட்டி கைப்பாண்டு கொள்ளவும். தல்பம். பாற்க. இவை.....

---

20. வாலக்காமையர் சாசனம்*

முகவுரை.

வாலக்காமையர் என்பது, முதல் விசய நகர மன்னர் வமிசத்தைச் சேர்ந்த இறுதி அரசனுட்சிக் குட்பட்ட ஒரு மண்டலத் தலைவன் பெயர். இவனுடைய மற்றொரு பெயர் அக்கலராசன் என்பது. இவன் மகாமண்டலேசுவரன் என்னும் பட்டப் பெயருடையவன்; சோழ மன்னருக்குள் பீமன்' என்று தன்னைக் கூறிக் கொண்டவன். இவன், திருவானைக்கா கோயிலுக்குச் செய்த தானம் பற்றிய சாசனம் 'வாலக்காமையர் சாசனம்' எனப்பட்டது. இது திருச்சிறுப்பள்ளி சில்லாவிலுள்ள திருவரங்கத்தையடுத்த திருவானைக்கா சம்பு கேசுவரர் என்னும் சிவன் கோயில் இரண்டாவது பிரகாரத்தின் வடபுறச்சுவரில் காணப்படுகிறது.

இதில், மண்டலாதிபனான அக்கலராசன் என்னும் வாலக்காமையர்[1] வடகரை வெண்கோன்குடி என்னும் கிராமத்திலுள்ள ஒரு வேலி நிலத்தைத் திருவானைக்கா சிவன் கோயிலுக்குக் கொடுத்த செய்தி கூறப்படுகிறது. இது சக வருடம் 1403 க்குச் சரியான பிலவ ஆண்டு கும்பராயிற்று (மாசி மாதம்) பௌர்ணமியும் ஞாயிற்றுக் கிழமையும் கூடிய மகா மகத்து நாளன்று ஏற்பட்டதாம்.

எனவே, இச் சாசனம் ஏற்பட்ட காலம் கி.பி. 1482 ஆம் ஆண்டு[2] எனலாம்.

ஆசந்த்ரதாரவம் = சந்திர நட்சத்திரங்கள் உள்ள அளவும். தாரவம் = தாரகை, நட்சத்திரம். செம்பிலும் கிலெயிலும் வெட்டி = செம்பிலும் கல்லிலும் வெட்டி; சிலை = கல். கைப்யாண்டு = அனுபவித்து. தலயம் = இலை சரி; கையொப்பம் எனினுமாம்.

இச் சாசனம் திருவாங்கூர்ப் புராதனப்பொருளாராய்ச்சித் தொகுதிகளில் முதற்றொகுதியைச் சேர்ந்ததாகும்.

[1] இவனுடைய இயற்பெயர் சோழகோனாடனன் என்பது இவன் உறையூரை ஆதியிருப்பிடமாக வுடையவன்.

[2] சக வருடம் 1403 எனவே, இச் சாசனம் ஏற்பட்ட காலம் கி. பி. 1481 (1403+78) என்றிருத்தல் வேண்டும.

சாசனம்.

சுபமஸ்து. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1403 இதன்மேல் செல்லாநின்ற பிலவ ஸம்வத்ஸரத்து கும்ப மாயற்று பூர்வ பக்ஷத்து பூறுவிணையும் ஆதித்த வாரமும் பெற்று மகத்து நாள் ஸிம்ம பிரஹஸ்பதி மஹா மக புண்ய காலத்திலே ஸ்ரீமன் மஹா மண்டலேச்வரர் சோழர் பிமன் சோழ நாராயணன் உரையூர் பூர்வ ராதீச்வரர் வாலக்காமயர் ஆன அக்கலராசர்,

---

சுபமஸ்து ஸ்வஸ்தி ஸ்ரீ: இது இச்சாசனத்தின் தொடக்கத்தில் மங்கலமாக வருந்தொடர். பராக்கிரம பாண்டிய தேவர் சாசனமும் (19) இத்தொடரையே மங்கலமாகக் கொண்டுள்ளமை காண்க.

சகாப்தம் 1403 - சாலிவாகன சகாப்தம் 1403. அதாவது கி. பி. 1481ஆம் ஆண்டு என்பது. இதன் மேல் செல்லா நின்ற - இதற்குச் சமமான.

பிலவ ஸம்வத்ஸரத்து.....பேற்று மகத்து நாள் - பிலவ ஆண்டு மாசி மாதம் வளர்பிறைக்காலத்துப் பௌர்ணமியும் ஞாயிற்றுக் கிழமையும் கூடிய மக நட்சத்திரத்தில்; பிலவ - ஆண்டு அறுபதனுள் முப்பத்தைந்தாவது. ஸம்வத்ஸரம் - சம்வச்சரம், ஆண்டு. குப்ப நாயற்று - மாசி மாதம், பதினோராவது மாதம், பூறுவிண - பௌர்ணமி, வளர்பிறைக் காலத்துப் பதினைந்தாவது திதி. ஆதித்த வாரம் - வாரம் ஏழனுள் முதலாவது, ஞாயிற்றுக்கிழமை. மகத்து நாள் - நாள் இருபத்தேழனுள் பத்தாவது. நாள் - நட்சத்திரம்.

ஸிம்ம பிரஹஸ்பதி .....மகாமக புண்ய காலத்திலே - சிம்மராசியில் வியாழன் வந்து சேருகிற மகாமகம் என்னும் புனித நாளில் என்பது. இது பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாசி மாதம் பௌர்ணமி மக நட்சத்திரத்தில் உண்டாகுமாதலின் 'மக மகம்' எனப்பட்டது போலும் இன்றும் கும்பகோணத்தில் இந்நாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது; அங்குள்ள மகாமகக் குளத்தில் இந்நாளில் கங்கை நீர் வந்து சேருகிற தென்ற கருதி மக்கள் திரள்திரளாக வந்து அதில் நீராடுவர்.

ஸ்ரீமந் மஹா மண்டலேஸ்.....ஆந அக்கல ராசர்: மகா மண்டலத் தலைவனும், சோழர்களுக்குப் பிமன் போன்றவனும், சோழ நாராயண எனனும் இயற்பெயரையுடையவனும், உறையூரை ஆதி யிருப்பிடமாகக் கொண்டவனுமான ஸ்ரீமத் வாலக்காம யர் என்னும் அக்கலராசர் என்பது.

நாயனார் அழகிய திருவாஞைக்காவுடைய நாயனார் கோயில் ஆதி சண்டேச்வர தேவர் கன்மிகளுக்கு குடுத்த தன்ம சாதனப் பட்டயம். நாயனார் அழகிய திருவாஞைக் காவுடைய நாயனார் வடகரை வெண்கோன்குடியில் திருவெட்டை ஆக எழுந்தருளுகிற திருநாள் மண்டபச் சிறப்புக்கும், நாச்சி

ஸ்ரீமந் என்பது, சிறப்பைக் குறிக்க பெரியோர்களுடைய பெயர்களுக்குமுன் வைத்து வழங்கப்படும் ஒரு வடமொழித் தொடர் 'திருவாளர்' என்பது இதன் பொருள்.

மஹாமண்டலம் - பல 'மண்டலங்கள் சேர்ந்த மண்டலம். இங்கு, இது சோழமண்டலத்தைக் குறிப்பதாகக் தெரிகிறது. வாலக்காமயர் விசயநகர மன்ன ராட்சிக்குட்பட்டு, அவர்களுக்குப் பதிலாக இம்மண்டலத்திலிருந்து ஆட்சி புரிந்தான் போலும். அவன், தன்னைச் 'சோழர் பீமன்' என்று சொல்லிக் கொள்வதும், 'சோழ நாராயணன்' என்று பெயர் தரித்திருப்பதும், உறையூரை இருப்பிடமாகக் கொண்டிருப்பதும் இவ்வுண்மையைப் புலப்படுத்தும் சான்றுகளாகும். ஈஸ்வரர் - தலைவர். உரையூர்: இது முன்னாள் சோழ மன்னர்களுக்குத் தலைநகரமாயிருந்த உறையூர் என்னும் பதியாகும்.

நயனார் அழகிய திருவாஞைக்காவுடைய நாயனார்: இது திருவாஞைக்கா கோயில் சிவபெருமான் பெயர்; அதாவது சம்புநாதசுவாமி என்பது.

ஆதிசண்டேச்வர தேவர் கண்மிகள் - கோயில் காரியங்களைப் பார்க்கும் பூசாரிகள்: கோயிலில், கொடுப்பதும் வாங்குவதுமாகிய எல்லாம் சண்டேஸ்வரபதம் பெற்ற சண்டேஸ்வர நாயனார் வழியாகவேதான் நடைபெற வேண்டுமாதலின், இவர்கள் இப்பெயர் பெற்றனர் போலும்.

தன்ம சாதனப் பட்டயம்: தருமத்தைக் குறித்த சாசனத்தையுடைய பட்டயம் எனபது. பட்டய மெனவே, இது முதல்வன் பட்டயத்தில் எழுதப்பட்ட தென்பது வெளிப்படை.

வடகரை வெண்கோன் குடியில் - காவிரி தெற்கு வடகரையிலுள்ள வெண்கோன்குடி என்னும் ஊரில் என்றபடி. இது இப்போது 'வெங்கங்குடி' என்று அழைக்கப்படுகிறது; திருவாஞைக் காவிற்கு வடக்கே ஐந்து மைல் தூரத்திலிருக்கிறது.

திருவெட்டையாக் எழுந்தருளுகிற திருநாள்: இது புரட்டாசி மாதம் விசயதசமியன்று நடைபெறும் ஒரு விழா. இந்நாளில் திருவாஞைக்காவுடைய நாயனார் திருவேட்டைக்கு எழுந்தருளுவார் என்பர்.

மண்டபச் சிறப்புக்கும் - கோயில் மண்டபத்தில் நடைபெறும் சிறப்புகளுக்கும் என்றபடி. நாச்சியார் அருளாண்ட நாயகி - சோழ

யார் அகிலாண்ட நாயகியார்க்குக் காலசந்தியாக அமுது செய் தருளி தன்ம வெச்சமாக நடக்கிற ஒரு தளிகை அமுது படிக்கும், திருமார்கழிச் சிரப்பு அம்முது செய்யவும், திரு நன்தவனம் பயிர் செய்கிற தோப்பு ஆள் இலக்கைக்குமாக சம்முடைய நாயகக் கட்டணமான வடகரை வெண்கொன் குடியில் செத்த இராஜஷிபாடன் நிலம் வேலி. இந்த நிலம் வேலிக்கும் உண்டான கரம் பொன்முதல நெல்முதல் உண்டானது முன் எழுதின வகைப்படியிலே சந்திராதித்த வரையும் அநுபவித்துக் கொள்ளக் கடவராகவும். இந்த தன் மத்துக்கு அநுதம் பண்ணினவன் உண்டாலல் எங்கைக் கறையிலே கோவதையைக் கொன்ற பாவத்திலே போகக் கடவராகவும்.

நாட்டிலுள்ள திருவானைக்கா சிவன் கோயில் இறைவி பெயர் அகிலாண்ட நாயகி என்பது; இறைவன் பெயர் சம்புகேசுவரர். நாச்சியார் என்னும் சொல் பெண் தெய்வத்துக்குச் சிறப்பாக வழங்கும் ஒரு பெயர்.

காலசந்தி - ஒரு நாளின் ஆறு பாகங்களுள் இரண்டாவது பாகங்கள் கூடும் சந்திக் காலங்களில் கோயில்களிலே செய்யும் பூசை முதலியன அழுது செய்தருளி - திருவமுது படைத்து. நன்தவனம் - தருமஞ் செய்வதற்கென்று ஒதுக்கிக் கொடுக்கிறது. தன்மம் - தருமம். எசசம் - மீந்திருப்பது. தளிகை - ஓளவு கொண்ட ஸைவேத்தியப் பிரசாதம். அமுதுபடி - தானிய.

திருமார்கழிச் சிரப்பு - மார்கழி மாதத்தில் கடைபெறும் திரு விழாச் சிறப்பு என்றபடி. தோப்பு ஆள் - தோட்டக்காரன். இலக்கை - மாதச் சம்பளம்; ஆடை வைபாருழார். நாயகக் கட்டணம் - ஒரு அரசரால் ஒரு காட்டுத் தலைவனுக்கு விடப்பட்ட நிலம்; இராஜ விபாடன் நிலம அத்தகையது போலும்.

செத்த - சேர்ந்த, சேர்க்க: இராஜவிபாடன் நிலம் - இராச விபாடன் என்னும் பெயரையுடைய நிலம். அது ஒரு வேலி (2000 குழி) அளவினையுடையது. இராஜவிபாடன் எனபது, வீரிய கர மனைர்களுக்குரிய பட்டப்பெயர் எனபர்.

கரம் - வருமானம். பொன் முதல் நெல் முதல் உண்டானது - பொன்னுவது நெல்லாவது என்றபடி; பொன் முதலியனவும் நெல் முதலியனவும் என்பாருமுளர். அநுதம் - கெடுதல்.

கங்கைக் கரை - கங்கா நதி தீரம். கோவதையைக் கொன்ற பாவம் - பசு வதையாகிய கொலையைச் செய்த பாவம் என்பது.

அரும் பெயர் அகர வரிசை

(எண் — பக்க எண்)

அ

அகரம் 135, 144
அகரப் பற்று 144
அகலை 18, 42
அகுதம் 152
அசுவமேதம் 31
அஞ்சாலி 148
அட்டமி 45
அட்டுவார் 8
அடுத்தமுறை கடவார் 11, 12
அடைக்காய் அமுது 100
அதலோடு தோட்டம் 122
அதிராசராச மண்டலம் 50, 59
அதிராசராச வளநாடு 62
அந்திரர் 34
அநாதேசம் போனர் 11
அநலை 134
அப்பமுது 100
அபிடேக காலம் 121
அபிநவம் 138
அமண்பாக்கம் 45
அமரபக்ஷம் 45, 147
அமருன்றி மங்கலம் 106
அமாவாஸிப் புறம் 91, 92
அமிதபடி 131, 139, 152
அர்த்த மண்டபம் 138
அரிதீன் 111
அருமொழி தேவ வளநாடு 61
அருமொழி தேவன் மரக்கால் 7
அருமொழிநங்கை மரக்கால் 100, 101
அருளாளப் பெருமான் 96, 102
அரைசங்குட்டம் 45
அவிரோதம் 127
அவனிமுழுதுடையான் 73
அவிபலி 63
அவிநாசாயணச் சதுர்வேதி மங்கலம் 144

அளத்தி 80
அளிங்கண பாக்கம் 111
அழிஞ்சில் களம்பட்டி 111
அற்சனைபோகம் 35, 37, 63
அற்பசி மாஸம் 147
அறந்தை 134
அன்ருள் கோயில் 112
அனந்தபுரம் 127

ஆ

ஆகவமல்லன் 29, 43, 49, 55, 57
ஆசந்திர தாரவம் 145, 148
ஆசாரிய போகம் 23
ஆடவல்லான் என்னும் மரக்கால் 11, 24
ஆணத்தி 106
ஆதிசண்டேஸ்வரர் 151
ஆதித்தவாரம் 150
ஆதிகர் 18
ஆதேசம் 85
ஆர்ய தேசம் 24
ஆலாயன் 43
ஆவணக்களரி 75
ஆவாணம் 139
ஆவூர் கூற்றம் 7
ஆளிடுதல் 12
ஆறிலொன்று 34
ஆஸ்வலாயந சூத்ரம் 121

இ

இடங்கை நாயகர் 86, 87
இடபவாகன தேவர்
இடைதுறை நாடு 14
இடைநாழிகை 138
இந்திரதன் 18
இந்திரணம் 15

இட்டபாடி எழுகையிலக்கம் 4, 10, 17, 49
இட்ட மண்டலம் 42
இணசூரன் 19
இணவிக்கிரமச் சதுர்வேதி மங்கலம் 113, 165
இராசகேசரி (மரக்கால்) 11, 87
இராச சூளாமணிச் சதுர்வேதி மங்கலம் 35. 45
இராசபரிச் சின்னம் (சந்தம்) 44
இராசராச பாண்டிகுல வளநாடு 62
இராசராச பாண்டிய நாடு 129
இராசவிபாடன் 152
இராசராசன் 51, 60, 53
இராவிதா கோத்ரம் 121
இராசேந்திர சோழ வளநாடு 91
இராஜை 134
இராமகுடர் 29
இருகயன் தேவி 55
இருங்கிண்டி பத்மநாபன் தானம் 141
இலக்கை 152
இலங்கா சோகம் 22
இலங்கேசரைகிய விக்கிரம பாண்டியன் 31
இலங்கை 44
இலங்கையர்க் கிறைவன் 27, 44
இலங்கையர் கோமான் 30
இலாழுரிதேசம் 22
இளங்கிழவர் 111
இறை 59, 60, 93
இறைகாத்தாட்டு 36, 37
இறை நிரவியம் 8
இறையிலி கராரண்மை 122
இறையிலி தேவதானம் 59, 60, 63
இறையிலி நிலம் 131, 141
இறை விழுத்துணை 93
இறையிழிச்சி 8, 36, 37, 93

ஈ

ஈழத்தரசர் 15
ஈழத்தரசரைகிய சிவல்ல மதனராசன் 32
ஈழம் 31
ஈழமண்டலம் 4, 10, 15

உ

உகலவு 59
உரால் 6
உடன்கூட்டத்து அதிகாரிகள் 51, 61
உடுக்கை வாசிப்போன் 11
உடும்போழியாணை தவழ் புற்று 51, 59
உடையர் 11, 24
உடையார் குலசேகரமுடைய நயினார் 148
உடையார் சர்வ சிவபண்டித சைவாச்சாரியர் 24
உடையார் திருச்சுற்றாலமுடைய நாயனார் 140, 141, 144
உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமான் 85, 86
உடையார் விக்கிரமபாண்டீஸ்வர முடைய நயினார் 144
உடையார் விசுவநாதர் 133, 139
உடையார் வீரராசேந்திர தேவர் 53
உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் 5, 6, 10, 11, 12
உடையார் ஸ்ரீ மகாராஜ தேவர் 34
உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் 23
உடையார் ஸ்ரீ ராஜேந்திர தேவர் 45, 50
உத்தமசிவிச் சருப்பேதி மங்கலம் 55
உத்தம சோழ வளநாடு 129
உத்தம மந்திரிகள் 120
உத்திரத்து நாள் 147
உத்திரவாடம் 20
உத்தொங்க தொங்க வளநாடு 74
உதகம் பண்ணுதல் 59
உபாகரணி ஸ்துபி பரியந்தம் 138
உரோகிணி நாள் 45

உலகமுடையார் 137
உலகுமுடையான் 84, 90
உஞ்ஞாயி 124
உஞ்ஞாற்பண்டாரம் 11, 24

ஊ

ஊர்ச்சபை யோம் 8
ஊர்ச் சாணத்தான் 47
ஊற்றுக்காட்டுக் கோட்டம் 111

எ

எட்டுக்கூர் 114
எயில் கோட்டம் 96
எயில் சாடு 76

ஏ

ஏகாசித்திச் திருமஞ்சனம் 97
ஏகாதசி 147
ஏலவை 59
ஏழிசை வல்லபி எழுவகுடை யான் 83

ஐ

ஐம்பூனி 108
ஐயணர் 33

ஒ

ஒருதேவலி கிலம்
ஒட்ட விசயம் 18

ஓ

ஓதுவார் வட்டி
ஓம் நமச்சிவாயம் 110

க்

க்ருத ஹரோகணம் 98
க்ஷ 99
கங்க மண்டலம் 71, 81
கங்கன் 27
கங்காதரன் 30
கங்காபரணி 3, 10, 54
கங்கை 20, 83
கடாரம் 21, 23
கழுகை 111
கடமீடு 123, 124
கண்ணனூருடான் 7
கண்ணூறு 74, 92, 148
கண்டப்பய்யன் 80
கண்டஸ்புடிதம் 108
கணயதிகல்லூர் 50
கம்பிலிகர் 33
கரபத்திரன் 44
கரம் 152
கருங்குளம் 130
கருங்குள வனசாடு 130
கருவூர் 60
கல்சாட்டி 127
கல்லதர் 70
கல்லித்திருத்தி 86
கல்லில் வெட்டியது 12, 24
கல்லிலும் செம்பிலும் வெட்டியது 93, 123, 145, 148
கலிக்கம் 3, 10, 95
கலிங்கர் மன் 44
கவ்வை 82
கற்றளிப்புல் பொசா மூற்றாட்டு 51, 59
கறியமுது 99
கன்னகுச்சியர் 27, 31
கன்மிகன் 37, 151
கன்னி 71, 82
கன்னி பகவதியார் 129, 131
கன்னிப்போர் 126
காக்கைக் கொடி 57
காடி 106, 107
காடுபட்டி 106
காணம் 98, 112
காணி 141, 148
காணிக்கடன் 60
காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தல் 2, 10, 29, 126

காமக்கவ்வையன் 46
காமக்கோடி விண்ணகாழ்வார்
கார் 87
காராம்பிச்செட்டு 46, 92
காரை நாடு 113
காலசந்தி 152
காவியூர் கோட்டம் 6
காவிரிப் பாக்கம் 114
கிரமவித்தன் 46, 92
கிராம திராவியம் 8
குசக்கலம் 8, 100
குடமலை நாடு 3, 10, 73, 82
குண்டமய்யன் 43
குணிலபுர பரமேஸ்வரர் 116
கும்ப நாயிறு 91
கும்பம் 98
குமரியிடை 115, 118
குலோத்துங்க சோழ வளநாடு 90
குளப்புராவு 148
குற்றம் 59
குறுமுனி 120
குன்றக் குடிப்பற்று 14
குன்றக்கூற்றம் 74
குன்றத்தூர் நாடு 90
கூடல் சங்கமம் 55
கூபகம்
கெங்கைகொண்ட சோழபுரம் 23, 59
கெங்கையிடை 115, 118
கேத்தரையன் 56
கோளன் 16
கோவுதன் 29
கொங்கணர் 33
கொட்டி மத்தளம் வாசிப்பான் 11
கொடிப்படை 56
கொங்தளவரசர் 67, 79
கொப்பம் 42, 49
கொள்ளிப்பாக்கை 15, 30
கோசலநாடு 19, 56
கோட்டாறு 73, 83
கோட்டூர் 124
கோப்பரகேசரி வர்மன் 45, 50, 96
கோயில் கணக்கு 103
கோயில் பண்டாரம்
கோயில் வாரியம்
கோராஜகேசரி வர்மன் 5, 10, 34, 58, 74, 84, 90
கோவிசய நந்தி விக்கிரமன் 105, 110
கோவிந்த சந்தன் 19
கோழி 40
கௌசலர் 33
கௌட தேசம் 24

சக்கரக்கோட்டம் 17, 66, 79
சகஜ மாதவக் கிரமவித்தன் 46
சகர் யாண்டு 113
சகாப்தம் 147, 150
சங்கரசரண பங்கயம் 183
சங்கிராம விசயோத் துங்க வர்மன் 21
சடில வர்மன் 146
சண்டேஸ்வரன் 85, 87
சண்பகவனத்துச் சங்கர் 136
சத்திரிய சிகாமணி வளநாடு 51, 60, 61, 63
சத்தியவ்வை 44
சத்துரு பயங்கரன் (யானை) 44
சதயத்து நாள் 91
சதுரம் 74
சந்திராதித்தவரை 24, 37, 46, 91, 92, 93, 108, 110, 117, 152
சந்தேசப்பிரமாணம் 130, 131
சமரபீரு 30
சமஸ்த ப்ராப்திகள் 145
சயங்கொண்ட சோழ நல்லூர் 51, 61, 63
சயங்கொண்ட சோழ பரஸ்மாதி ராசன் 46
சயங்கொண்ட சோழ மண்டலம் 5, 34, 45, 96
சயங்கொண்ட சோழ விழுப்ப ரையன் 63
சயங்கொண்ட சோழன் 43
சயசிங்கன் 17, 43

சளுக்கி (ஆவலமல்லன்) 42, 43
சளுக்கியர் மாளிகை 33
சாங்கப்பை 44
சாங்கமய்யன் 30
சாந்திமத் தீவு 16
சாந்துப்படி 131, 139
சாமந்தர் 54, 56
சாமுண்டராஜன் 55
சாவேறு 73, 83
சிங்கணம் 71, 81
சிங்களத்தரசன் 32
சிங்களர் 4, 10, 33
சிங்களன் 57
சிங்கை 134
சித்ரகதி 138, 140, 141
சிதாரி 107
சித்தர் 33
சிம்மகரணம் 147
சிம்ம பிரஹஸ்பதி மகாமகம் 150
சிலாலேகை 36, 46, 102, 105, 116
சிவப்ராமணர் 107
சிவமகாராசப் பெருமானடிகள் 116
சிவனிடத் துலமை யொத்து 83
சிற்பர் 136
சிற்ரூயம் 59
சிறுபழுவூர் சபை 74, 75, 76
சிவல்லவன் 58
சுக்ரவாரம் 147
சுசித்ரம் 131
சுசித்ர மூடைய நாயனர் 122, 123, 124
சுந்தரபாண்டியன் 28
சுபமஸ்து 133, 146, 150
செக்கிறை 145
செங்காட்டுக் கோட்டம் 35
செங்கோட்டை 148
செங்கோட்டைப் பிடாரியார் கோயில் 141, 142
செண்பை 134
செம்பில் நாடு 124
செம்பியன் விழுப்பரையன் 24
செம்பிலும் கல்லிலும் வெட்டி 63
செயங்கொண்ட சோழபுரம்

செயசிங்க குலகால வளநாடு 85
சேரலன் 126
சேனபதிகள் 46, 123
சையம்
சோதி நாள் 138
சோபாநம் 138
சோழ நாராயணன் 150
சோழ மண்டலம் 7, 101
சோழர் பீமன் 150
சோழன் திருமாளிகை
ஸ்தபந திரவியம் 98
ஸ்வம் 46

த்ரிபுவனபதி 84
த்ரைலோக்கிய முடையார் 120
த்விதிலை 35, 91
தக்கணலாடம் 19
தசபன்மன் 43
தட்சிணகாசி 138
தடி 37, 148
தடிகைப்பாடி 3, 10
தண்ட நாயகர் 56
தண்டப்படுதல் 112, 117
தண்டபுத்தி 19
தண்டு 4, 10, 23, 30, 55
தண்ணீரமுது
தந்திரவாரி 71, 81
தமிழ் மண்டலம் 31
தமையனை மூன் வந்தான் 53
தர்மம் 118
தளிகை 152
தலைத்தக்கோலம் 22
தலைமாறு 11
தவ்வை 32
தளிரிருங்கை மத்து 120
தன்ம கட்டளைத்துலை 114
தன்ம சாதனப்பட்டயம் 151
தன்ம பாலன் 19
தன்மம் 25, 64, 114, 152
தன்ம வெச்சம் 152
தன்மாசனம் 114
தனியூர் 6

தலை ஞாயிறு 35
தாசரதன் 58
தாழித்திருப்பனங்காடு 51, 60
தானம் 23
திங்கட்கிழமை 143
தியாகம்
தியாகவல்லி உலகுடையாள் 83
திரிபுவன சக்கரவர்த்திகள் 74, 84, 90, 96, 121, 146
திருக்கண்ணமங்கை 99
திருக்கேட்டை நாள் 96, 100, 102
திருச்சாலைக் குடிப்பற்று 140, 141
திருச்சுண்ணம் 98
திருத்திச் செலவு
திருதிக்காலிப் பெருமானடிகள் 113, 117
திருநந்தவனம் 152
திருநந்தாவிளக்கு 97, 107, 114, 115
திருநாள் 86, 87, 128
திருநாள் செலவு 139
திருப்படி மாற்று 124
திருப்பணி 138
திருப்பதியம் 11, 12, 107
திருப்பரி வட்டம் 139
திருப்பள்ளி அறை நாச்சியார் 138
திருப்பள்ளித்தாமம் 107
திருமஞ்சனசாலை 59
திருமஞ்சனம் 86, 87, 97, 102
திருமந்திரவோலை 24, 51, 60, 123
திருமந்திரவோலை நாயகம் 51, 60
திருமந்திரி
திருமார்கழிச் சிரப்பு 182
திருமாலை 139
திருமூலை 97
திருமூலைப்பாலிகை 97
திருமூலைப் பீசும் 97
திருமெய்ப்பூச்சு 107
திருவத்த சாமம் 136
திருவத்தியூராழ்வார் 96
திருவழுந்தூர் 38, 87, 107
திருவழுந்தூர் பழி 86, 87
திருவயோத்தி தேவர் நிலம் 37
திருவழுந்தி வளநாடு 124
திருவாஞ்சியம் 12
திருவாதிலை மகாதேவர் 50, 60, 63
திருவாய்க்கேள்விப்படி 24
திருவாய்மொழித் தருளினபடி 12, 24, 51, 60, 62
திருவாயுஸ் யார்த்தம் 122
திருவானைக்கா 84
திருவானைக் காவுடைய எம் பெருமான் 86, 87
திருவிடை யாட்டம் 144
திருவிழா 86, 128
திருவிளக்கு 139
திருவிளக்குடையார் 100
திருவுடம்புகள் 139
திருவெண்ணுவல் 84
திருவேட்டை 151
திருவோணத்தி நாள் 35
திருவைமத்தூக் காணி 50, 59, 60, 63
திறை 34, 69, 80
திறையும் சின்னமும் 135
தினகரன் 33
தீக்காலி வல்லமுடைய பரமேஸ்வரர் 106
தீக்காலி வல்லம் 106, 113, 117
தீவாந்தரம் 69, 80
துங்கப்பத்திரை 54, 70
துத்தன் 43
துப்பு 107
துல்யம் 145, 148
தூசி 56
தூணி 60, 99
தெத்திரியமரம் 36
தெலிங்கவீய்மங்குளம் 129
தென்கரையூர் 129
தென்கரை நாடு 7
தென்கலை வடகலை 133
தென்காசிப் பற்று 139
தென்காசிப் பெருங்கோயில் 137
தென்குமரி கன்னியார் 128
தென்கூற்றுப் புறத்தாநாடு 122
தென்மதுராபுரி 119, 125
தென்வாரி நாடு 138, 139, 143

தெண்ணவன் 15, 17, 58, 69, 80, 125, 128
தெண்ணாட்டரையர் 128
தென்னாட்டெல்லை காட்டி 73, 82
தென்னி நாடு 147
தேவதானம் 84, 85, 106, 129, 139, 140, 141, 143, 144, 145, 148.
தேவர் பணடாரம்
தேவர் போகம் 111
தேவாசுரம் 119
தேவாரத்துச் சுற்றுக் கல்லாரி 23
தேவியர் 14, 15, 39, 44
தேனூர் நாடு 62
தைபூசத் திருநாள் 131
தைப்பூசம் 128
தொண்டைமான் 51, 63
தொன்றன் 58
தோப்பு ஆள் 152

நகம் 49
நகுகாசி 46
நங்கிலி 70
நந்தனர் 147
நந்திவிக்கிரமன் 105, 110
நம்பிராட்டியார் 86, 87
நயினார் திருவிருத்தப்பெருமாள் 144
நவகாமதேனு 108
நன்னிநுளம்பன் 43
நாகலை 55
நாச்சியார் அகிலாண்ட நாயகியார் 152
நாஞ்சி நாடு 129, 131
நாடன் மஞ்சள் 98
நாமமணைக் கோவை 18
நாயகக் கட்டணம் 152
நாயனார் அழகிய திருவானைக் காவுடைய நாயனார் 151
நாராணன் 33
நாராணன் பாதங்கள் மடப்புறம் 139
நாழி 97, 98
நாணமறையவர் 34
நிஷாதி சோழநாடு 62
நிதம் 7, 8, 11, 12, 113, 117
நிமந்தம் 50, 87, 100, 102
நியாயத்தார் 12
நிலம் 11, 108
நிறப்பணை 127
நீர் நக்கல் 122, 139, 141, 142
நீர் வார்த்துக் கொடுத்தோம் 131
நுளம்ப பாடி 3, 10
நுளம்பியாறு 91
நூறுகாசு 36
நேர்வாயிலுடையான் 51, 60
நெல்மலி நாடு 62
நெறிதொறும் நிலகளிட்டருளி 73, 83

ப்

ப்ரமஸ்தானம் 35
ப்ரஸ்மஸ்தான மண்டபம் 45
பகட்டணசு
பங்களர் 33
பசாகம் 87, 145
பஞ்சப்பள்ளி 18
பஞ்சமி 142
பஞ்சவர் ஐவர் 72, 82
பஞ்சாத்தனம் 98
பஞ்சலோகம் 98
பட்டகள் அகரப்பற்று 140
பட்டடை 145
பண்ணை 21
பண்டாரம் 36, 101
பணிப்பணியால் 35, 47, 127
பதக்கு 87
பதினெண் பாஷை 135
பரமகேஸ்வராஷை 51, 64, 76, 87
பரசுராமன் 16
பராக்கிரம பாண்டிய சதுர்வேதி மங்கலம் 140
பராக்கிரம பாண்டிய நல்லூர் பற்று 141

பரிகலம் 71, 81
பரிதாங்கம் 71, 81
பரிபவம் 42, 55
பல்லவண் 27
பலம 98
பலவற்கக் கறி 99
பலிசை 102
பலித்ரவியம் 97
பழந்தீவு 16
பள்ளிச்சந்தம் 131
பற்று 139, 141, 142, 143
(கடை) 100
பனைபூர் நாடு 51, 60, 61, 63
பாக்கூர் 59
பாட்டம் 148
பாண்டிகுலாசனி வளநாடு 84, 85
பாண்டிமண்டலம் 54, 71, 81
பாண்டியன் இருமடிவென்
கொண்ட சதுர்வேதிமங்கலம் 90
பாணி 71, 81
பாருசம் 131
பாலாசிரியன் 76
பாலிகை 97
பாலைவதுறை வாய்க்கால் 37
பாலைவ விளக்கு 100
பிடாகை 45, 85, 111
பிடிபாடு 145
பிரசாதம் 123, 124
பிரம்மதேயம் 74, 75, 84
பிலம 53
பிலய சம்மதத்சாரம் 150
பிள்ளைநெல்லி வாய்க்கால் 85
பிள்ளையார் 121
பிற்றலைக் கைநாடுபோல் 69, 80
பிறப்பை 21
புட்பகப்பிடி 5, 7
புண்ணியாஹ தகஷிணை 97
புதன் கிழமை 35
புதுக்குடி 85
புதுக்குப்புறம் 4
புரவரித்திணைக்கள நாயகம் 123
புரவு 59
புரவுவரியார் 124
புலகேசி 43
புலம் 46
புலியூர் அகரப்பற்று 139
புலியூர் நாடு 62
புலியூர் பற்று 139
புழுகுநெய் 99
புறத்தாய நாடு 128, 129
புனர்பூசத்து நாள் 142
பூசன்குடி 122, 130
பூசுரர் 19
பூண்டியுடையான் 62
பூமகள் (கன்னி பகவதியார்) 128
பூர்ணை 138, 150
பூர்வபக்ஷம் 35, 91, 143, 150
பெண்டிர் பண்டாரம 20, 49
பெருந்திருவழுது 97, 99, 102
பெருமான் 122, 123
பெருமான் அபிராம பராக்கிரம
பாண்டியதேவர் 147
பெருவழி 86, 141, 142, 143
போர்த்தங்கலை 49
பொங்கொளியாரமும் திருப்
புயத் தலங்களும் போல 73, 83
பொச்சைவெஞ்சாரம் 72, 82
பொத்தப்பி வேந்தன் 58
பொதியில் 72, 82
பொங்கி 68, 79
பொன்மேடி 66, 79
பொலிசை 36, 102
பொலியூட்டு 117
பொற்கோதை மூவேந்தி 56

ம

மகத்நாள் 150
மகாதானம் 57
மகாசபை 35, 45, 46, 90, 93
மகாமகம் 152
மகாமண்டலம் 138
மகாமண்டலேஸ்வரர் 150
மகிபாலன் 19
மஞ்சாடி 60, 99
மடப்புறம் 143, 144

மண்டபச் சிறப்பு 151
மண்டலிய சோழையன் 43
மண்ணிக்கால் 45
மண்ணிநாடு 101
மண்ணைக்கடக்கம் 15
மணலூர் 70
மணிப்புதவம் 21
மணிமங்கலம் 35, 90
மணிமங்கலமுடையான் 93
பணியம்பலம் 127
மத்தியதேசம் 24
மத்தியஸ்தன் 76, 92, 93
மதிமங்கலம் 62
மதிரூதணன் 33
மதுரை யம்பலம் 18
மதுவனேசுவரம் 56
மாவலை 145
மருதாரார் 135
மலைக்கூற்றம் 124
மலைநாடு 119
மலையூர் 21, 23
மறைபோற்றுக் கல் காட்டி 127
மலை 114, [illegible]
மன்றுபாடு [illegible]
மன்றுடி [illegible]
மறு 58, 68, 80
மா 19, 30, 74, 75, 99
மாகணூர் நாடு 35, 45
மாசுணிதேசம் 18
மாத்திரைக்கரிசி 99
மாதண்டநாயகன் 55
மாதர் 111
மாதமர்விங்கம் 22
மாதலக்கிரமவித்தன் 114
மாநக்கவாசம் 22
மாப்பப்பாளம் 22
மாபாதம் 119
மாயிருடிங்கம் 22
மாயன 56
மாவலை 145
மாவலிவாணராயர் 106, 111, 113
மாறபாணன் 28, 44
மின்னெடு 129
மீசெங்கிளி நாடு 85
மீகவர் 33, 90
மீயாறு நாடு 106, 113
முக்கோக்கிழானடிகள் 96
முகவெட்டிநாயகம் 124
முடிகொண்ட சோழன் திருமாளிகை 23
முத்தின் சிலாபம் 72, 82
முதலி 56, 57
முதலை 134
மூக்கிரிணை 141, 148
மூயங்கி 17
மூரப்புநாடு 123
மூல்லையூர் 28
மூலறபாடு 148
மூன்னுடையாரும் பழம்பேரும் கீக்கி 123
மூலபத்திரசாதி 44
மூலப்பிருத்தியம் 84, 87
மூவேந்த வேளான் 123, 124
மெசடமயம் 51
மேடனூயிறு 143
மேருவில் புலி விளையாட 69, 80
மேல் வாசம் 148
மேவலிம்பங்கம் 22
மேலேக்கின மாமும் கீலேக்கின கிணறும் 46
மையச் சையம் 72
மொட்டையன் 43

வ்

வங்கணர் 33
வடகடல் தென்கடல் படர்வது போல 71, 82
வடகரை வெண்கோண்குடி 151, 152
வடசிகாக் கோயில் 110
வடவரையில் கயல்பொறித்து 120
வடவாரி நாடு
வடிவலம்பனின்று 125
வடுகவழிபண்ணீராயிரம் 110
வண்டுவராவதி எம்பெருமான் கோயில் 91
வதி 36, 37, 74, 75, 92

71.2:3/ச 135

வசசர் 72, 82
வயிராகரம் 67
வராகவெங்கொடி 44
வரியிலிட 60, 61, 62
வரியிலார் 62, 148
வரூஉதினித் தலைவர் 73, 83
வல்லவர் 33
வலஞ்செய்து கொடுத்து 111
வழுதியர்கோன் 125
வளம்ப குடி 85
வளவன் 42
வளைப்பந்தூரு 22
வற்கடம் 136
வன்னிபெடு 113, 115
வன்னியரையன் 43
வனவாசி 14
வாணபுரம் 110, 112
வாணமகாதேவியார் 117
வாணராயர் 106
வாணவித்யாதர வாணராயர் 116
வாயுலான் குடிப்பற்று 140
வாலக்காமயர் 150
வாழைப்பழம் 99
வானவர்கோ ரைம் 120
வானவன் 27
வானவன் பல்லவ தரையன் 51,60
வானவன் மூவேந்த வேளான் 63
விக்கலன் 54, 56, 70
விக்கிரமபாகு 30
விக்கிரம வீரர் 17
விக்கிரமாதித்த வாணராயன் 106
விச்சாதிரத் தோரணம் 21
விசயாதித்தன் 30
விசயாபிசேகம் 44, 50, 90, 96
விசயராஜன் திருவளநாடு 62
விசாபுரி 130
விசுவநாதர் 137
விசுவநாதர் பேரோரி 142
விசுவலோகம் 34
விசுவாவசு வர்ஷம் 147
விசையமணி மகுடம் 59
விஜய ஸ்தம்பம் 72, 87
விடையிலதிகாரிகள் 62, 64
விடேல் விடுந விக்கிரமாதித்ய சதுர்வேதி மங்கலம் 106
விந்தை 134, 135
வியாழக்கிழமை 45
விருதராச பயங்கர வளநாடு 101
விருதராசபயங்கர வாணகோ வணையன் 74
விருதர் விக்கி 30
வில்லவர் 27, 29, 33, 90
வில்லவராயன் 85, 86, 87
விலயாவணம் செய்து 75
விலையாலை 75
விளத்தூர் 106; வீரகேசரி 58
வீரகோளண 28
வீரசலாமேகன் 32, 44
வீரசிம்மாசனம் 73, 83, 85, 120
வீரசோழ விண்ணகரழ்வார் கோயில் 76
வீரபாண்டியகல்லூர்பற்று 143, 144
வீரபாண்டிய ளுவேந்த வேளான் 123, 124
வீரை 134
வெங்கால நாடு 50, 59
வெண்ணைபக்குடி நாடு 123
வெள்ளிக்கிழமை 91, 138
வெள்ளான்வகை 59
வேங்கை நாடு 3, 10, 55
வேணாட்டரசர் 28; வேலி 22
வேணுலச்சளுக்கியர் 33
வேளுலத்தரசர் 80
வைப்பாறு 134

ஸ்ரீ

ஸ்ரீ காமகோடி விண்ணகராழ்வார் 35, 45
ஸ்ரீ காரியம் 91
ஸ்ரீ கோயில் வாரியம் 102
ஸ்ரீ பலி கொட்டுவார் 107
ஸ்ரீ பாதம் 64
ஸ்ரீ முகம் 123, 124
ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலம் 6
ஸ்ரீ விமானம் 116